410

# தொலைநிலைக் கல்வி இயக்ககம்

தொடக்க நிலை

## Pre - Foundation Course

த
மி
ழ்

பகுதி – 1

# தமிழ்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை – 625 021.

பதிப்புரிமை : தொலைநிலைக் கல்வி இயக்ககம்

ACL mku
01063.

Reprint at SUN - Year 2010 - 2011 - Copies 1000

# தொலைநிலைக் கல்வி இயக்ககம்

## மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்

அன்புசால் மாணவச் செல்வங்களே!

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தற்குக்
கற்றனைத் தூறும் அறிவு —திருக்குறள்

தமிழக மக்கள் அனைவரும் கல்வி கற்று உலக அரங்கில் உயர்ந்து விளங்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் மதுரை காமராசர் பல்கலைக் கழகம் அஞ்சல் வழிக் கல்வித் துறையைத் தொடங்கி நடத்தி வருகிறது. இடையிலே படிப்பை விடுத்த இளைஞரும் இனிதே கல்வியறிவு பெற்றிட வாய்ப்பளிக்கும் வகையில் திறந்த வெளிப் பல்கலைக் கழகத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது.

அதில் தொடக்கநிலையில் சேர்ந்து ஆர்வத்தோடு கல்வி கற்க முன் வந்துள்ள உங்களை அகமும் முகமும் மரலவரவேற்பதில் ருெமகிழ்வெய்துகின்றோம். முயன்று படித்தால் முடிய—தொன்றில்லை. விருப்புடன் உழைத்தால் வெற்றி உறுதி நன்றாகப் பயிலுங்கள். உயர்கல்விப் பட்டங்கள்பெற்றுச் சிறந்திட எங்கள் உளம் கனிந்த வாழ்த்துக்கள்!

இயக்குநர்

# மதுரை காமராஜர் பல்கலைக் கழகம்

## தொடக்க நிலை – தமிழ் பாடத்திட்டம்

| செய்யுட்பகுதி | | | அடிகள் |
|---|---|---|---|
| **அ. வாழ்த்துப் பகுதி** | | | |
| 1. இறைவாழ்த்து | | (திருவருட்பா) | 4 |
| 2. தமிழ் வாழ்த்து | — | திரு.வி.க.. | 6 |
| 3. நாட்டு வாழ்த்து | — | பாரதியார் | 4 |
| **ஆ. அறவுரைப் பகுதி** | | | |
| 1. திருக்குறள் | | 50 பக்கம் | 100 |
| 2. பழமொழி நானூறு | | 3 பக்கம் | 12 |
| 3. திரிகடுகம் | | 3 பக்கம் | 12 |
| 4. நான்மணிக்கடிகை | | 3 பக்கம் | 12 |
| 5. நீதி நெறி விளக்கம் | | 3 ,, | 12 |
| 6. வெண்பா | | 3 ,, | 12 |
| **இ. தொடர்நிலைப் பகுதி** | | | |
| 1. சிலப்பதிகாரம் | — | வழக்குரை காதை | 81 |
| 2. மணிமேகலை | — | ஆபத்திரன் திறம் அறிவித்த காதை | 115 |
| 3. பெரியபுராணம் | — | மெய்ப்பொருள்நாயனார் | 92 |
| 4. கம்பராமாயணம் | — | சுந்தரகாண்டம் காட்சிப்படலம் | 80 |
| 5. நளவெண்பா | | | 8 |

6. தேம்பாவணி

7. அரிச்சந்திரபுராணம்

## ஈ. பல்சுவைப் பகுதி

| | |
|---|---|
| 1. புறநானூறு | 10 |
| 2. திவ்வியப் பிரபந்தம் | 8 |
| 3. தேவராம் | 4 |
| திருவாசகம்ம | 4 |
| 4. அபிராமி அந்தாதி | 8 |
| 5. மனோன்மணியம் | 39 |

## உ. மறுமலர்ச்சிப் பாடல்கள்

| | |
|---|---|
| பாரதிதாசன், வேழவேந்தன், ச.து.க, யோகியார் வாணிதாசன் பாடல்கள் | 32 |

## மனப்பாடப்பகுதி

| | | | அடிகள் |
|---|---|---|---|
| வாழ்த்துப்பகுதி | — | திருவருட்பா | 4 |
| அறவுரைப் பகுதி | — | (1) திருக்குறள் 5 அதிகாரங்களில் முதல் 5 பாடல்கள் | 50 |
| | | பழமொழி நானூறு(4) | 4 |
| | | திரிகடுகம்(1) | 4 |
| தொடர் நிலைப் பகுதி | — | கம்பராமாயணம் முதல் ஐந்து பாடல்கள் | 20 |
| | | நளவெண்பா(2) | |
| பல்சுவைப்பகுதி | — | புறநானூறு (1) | 10 |
| | | திவ்வியப் பிரபந்தம் | 4 |
| | | திருவாசகம் | 5 |
| | | அபிராமி அந்தாதி | 4 |
| | | | 106 |

## உரைநடைப்பகுதி

1. பெற்றோர் பேணல் : திரு. வி. கலியாணசுந்தரனார்
2. சங்க கால மகளிர் : புலவர் நா. நாகசுந்தரம்
3. கல்விச் செல்வம் : புலவர் கி. கணபதி
4. சமுதாய வாழ்க்கை : புலவர். தி.கி. சுந்தரமூர்த்தி
5. சீவகான் : பேரா. ஐயன்பெருமாள் கோனார்
6. பழந்தமிழர் பண்பாடு : கப. சொக்கலிங்கம், எம் ஏ.,
7. தேசிய விளையாட்டு வாரம : நெ.து. சுந்தரவடிவேலு எம்.ஏ.,
8. நாளிதழின் பணிகள் : இரா.சொ. சீனிவாசன் எம்.ஏ.,
9. வங்கியின் பணிகள் : பண்டித சு.வெ. நடராசன் எம்.ஏ.,
10. காகிதத்தின் வரலாறு : இரமா. சுப்பிரமணியம். பி.ஏ.,
11. படக்காட்சியும் வானொலியும் : புலவர். க. தமிழரசி
12. நேதாஜி சுபாஸ்சந்திரபோஸ் : புலவர் தணிகை உலகநாதன்

## இலக்கணப் பகுதி

அ. (1) எழுத்து : முதல்; காப்பு குறுக்கங்கள், போலி

(2) சொல் : மூவகை மொழி, பகுபதம், ஏவல், வியங்கோள் இடைச்சொல்,உரிச்சொல், சினைவினை, முதல் வினை, இடைப்பிறவரல், ஒன்றொழி, பொதுச் சொல், ஒரு பொருட்பண்மொழி, இரட்டைக்கிளவி அடுக்குத்தொடர்.

(3) யாப்பு : எழுத்து, அசை, சீர், தளை, அடி, வெண்பாஆசிரியப்பாக்களின்இலக்கணம்.

(4). பொருள் : அகம், புறம், முதல், உரி, கரிப்பொருள்கள் திணைகள்.

(5). அணி. : எடுத்துககாட்டு உவமை. இல்பொருளுவமை தற்குறிப்பேற்றம், வேற்றுமை, வேற்றுப்பொருள் வைப்பு வஞ்சப் புகழ்ச்சி.

**ஆ. மொழிப்பயிற்சி**

1. வாக்கிய மாற்றங்கள் : செய்வினை, செயப்பாட்டுவினை, உடன்பாட்டுஎதிர்மறை,நேர்கூற்று; அயற்கூற்று
2. வல்லினம் மிகும், மிகா இடங்கள்
3. வழுஉச் சொற்களைத் திருத்தி எழுதுதல்
4. மரபுத் தொடர்கள், உவமைகள், பழமொழிகள், ஆகியவற்றை வாக்கியங்களின் அமைத்தல்
5. நிறுத்தற் — குறியீடுகள்.

**கட்டுரைப் பயிற்சி**

(1) வருணனை, சமுதாயவியல், கல்வியியல், இளைஞர் இயக்கம் கற்பனை தன் வரலாறு — கட்டுரை வரைதல்.

(2) செய்யுள் திரண்ட பொருள் எழுதுதல்.

(3) திருமண வாழ்த்து, வரவேற்பு மடல்கள் வரைதல்.

(4) கடிதங்கள் வரைதல்

**மொழிபெயர்ப்புப் பயிற்சி**

துணைப்பாட நூல் : "கண்ணகி"

# பாட இணைப்புகள் (units)

| பாட எண் | பாடல் | |
|---|---|---|
| 1. | வாழ்த்துப் பகுதி | |
| 2.3. | திருக்குறள் | |
| 4. | பழமொழி நானூறு, திரிகடுகம், நான்மணிக்கடிகை, நீதிநெறி விளக்கம், நீதிவெண்பா. | |
| 5. | சிலப்பதிகாரம் | |
| 6. | மணிமேகலை | |
| 7. | பெரியபுராணம் | |
| 8. | கம்பராமாயணம் | |
| 9.10. | நளவெண்பா, தேம்பாவணி, அரிச்சந்திரபுராணம் | |
| 11.12. | பல்சுவைப்பகுதி | |
| 13. | மறுமலர்ச்சிப் பாடல்கள் | |
| 14. | உரைநடை | 1,2 |
| 15. | ,, | 3,4 |
| 16 | ,, | 5,6 |
| 17 | ,, | 7,8 |
| 18 | ,, | 9,10 |
| 19. | ,, | 11,12 |
| 20,21 | இலக்கணம் — எழுத்து, சொல் | |
| 22. | யாப்பு | |
| 23. | பொருள் | |
| 24. | அணி | |
| 25,26 | மொழிப்பயிற்சி | |
| 27,28 | கட்டுரைப்பயிற்சி,மொழிபெயர்ப்புப்பயிற்சி, துணைப்பாடக் குறிப்புரை. | |

# பாடம் 1

## செய்யுட் பகுதி

### கடவுள் வாழ்த்து

இங்குள்ள கடவுள் வாழ்த்துப் பாடல் இராமலிங்க அடிகளார் பாடிய திருவருட்பா என்னும் நூலில் உள்ளது.

**இராமலிங்க அடிகளார்**

இராமலிங்க அடிகளார் சிறந்த சைவப் பெரியார் (சிவவெருமானை வழிபடுகின்றவர் சைவர் எனப்படுவர்) இவர் 1823 முதல் 1873 வரை வாழ்ந்தவர். இவருடைய பிறப்பிடம் மருதூர் என்பது. இராமையா பிள்ளை, சின்னம்மையார் என்போர் இவருடைய பெற்றோர். இவர் மக்கள் எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என எண்ணியவர். சிறந்த சீர்திருத்தக் கருத்துக்கள் கொண்டவர். வடலூரில் சத்தியஞான சபையும் சத்திய தருமசாலையும் நிறுவினார். சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தையும் இவர் நிறுவினார். இவருடைய பாடல் அடங்கிய நூல், திரு அருட்பா என்று பெயர் பெறும். இவர் மனுமுறை கண்ட வாசகம், சீவகாருணிய ஒழுக்கம் என்னும் உரைநடை நூல்களையும் எழுதி உள்ளார். இவரை 'வள்ளலார்' என்றும் திருவருட் பிரகாச வள்ளலார் என்றும் வழங்குவர்.

அடுத்தே வருந்தும் துயர்க்கடலுள்

அறியாது அந்தோ விழுந்திட்டேன்!

எடுத்தே விடுவர் தமைக்காணேன்;

எடுத்தாய்! எளியேன் என்செய்தேனே?

கடுத்தேர் கண்டத்து எம்மான் தன்

கண்ணே; தருமக் கடலே! என்

செடித்தீர் தணிக்கை மலைப்பொருளே!

தேனே; ஞானச் செழுஞ்சுடரே!

**தெளிவுரை**

விடம் பொருந்திய கழுத்தினை உடைய எம்முடைய தலைவனது (சிவபெருமான்) கண் போன்றவனே! தருமக்கடல் போன்றவனே! என்னுடைய

துன்பங்களைத் தீர்த்தருளுகின்ற திருத்தணிகைமலையில் எழுந்தருளிய முருகப்பெருமானே! தேன் போன்றவனே! அறிவாகிய நிறைந்த ஒளி போன்றவனே! நெருங்கி வருந்தும் துன்பக்கடலுள் அந்தோ அறியாது விழுந்து விட்டேன்! அதிலிருந்து என்னைக் கரையேற்றி விடுகின்றவர்களைக் காண இயலவில்லை. எம்முடைய தலைவனே! எளியவனாகிய நான் என்ன செய்வேன் (எவ்வாறு கரையேறுவேன்)

(கரு — விடம்; கண்டம் — கழுத்து; செடி — துன்பம்)

## விளக்கம்

கடுத்தோர் கண்டத்து எம்மாள்; தேவர்களும் அசுரர்களும் மந்தா மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பை நாணாகவும் கொண்டு, அமுதத்தைப் பெறும் பொருட்டுத் திருப்பாற்கடலைக் கடைந்தனர். அப்போது வாசுகி விடத்தை கக்கி வெளிப்படுகிறது. அந்த ஆலகால விடத்தின் துன்பத்தைப் பொறுக்க இயலாத தேவர்கள், அதனைச் சிவ பெருமானிடம் சென்று முறை இட்டனர். சிவபெருமான், அந்த விடத்தை உண்ணவே அது அவர் கழுத்திலே நின்றது. அதனால் சிவபெருமான் கடுத்தோர் கண்டத்து எம்மாள் எனக் கூறப்பட்டார். சிவபெருமானுடைய புதல்வரானவர் தணிகைமலைப் பொருள் — திருத்தணிகை மலையில் வீற்றிருக்கும் முருகப் பெருமான்

இராமலிங்க அடிகள் துன்பத்தில் சிக்கி தவிப்பதாகவும், அதிலிருந்து மீளும் வழியை அவரால் அறியமுடியவில்லை என்பதாகவும் இரங்கிக் கூறுகின்றனர். எனவே தமக்கிருக்கும் துன்பங்களை நீக்கியருளும்படி முருகப் பெருமானை வேண்டுகின்றார்.

## இலக்கணம்

செழுஞ்சுடர் (செழுமை சுடர்) பண்புத்தொகை, துயர்கடல் — உருவகம்; அந்தோ வியப்பிடைச்சொல்; விடுவோர் — வினையாலணையும் பெயர்; எடுத்தாய் — விளிவேற்றுமை! செய்கேன் — தன்மை ஒருமை வினைமுற்று.

## தமிழ்த்தாய் வாழ்த்து

கீழ்வரும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் தமிழ் பெரியார் திரு.வி. கலியாண சுந்தர முதலியார் அவர்களால் இயற்றப்பெற்றது. இப்பாடல் உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல் என்னும் நூலில் உள்ளது.

இயற்கையிலே கருத்தாங்கி இனிமையிலே வடிகொடுத்துச்
செயற்கை கடந்து இயலிசையில் செய்நடமே! வளியோரோ?
கனியினிமை காதலிலே இனிமை, பெருந்
தனியரசில் இனிமை என்பர்: தமிழினிமை உணரார்
பன்மொழியில் உளனலைகள் பசுந்தமிழ் உருக்கொள்ள
நன்முயற்சி எழவேண்டும்; நலமுறுவள் தமிழ்த்தாயே!
—திரு.வி. கலியாணசுந்தர முதலியார்.

திரு.வி. கல்யாணசுந்தர முதலியார்

திரு.வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் பெரிய தமிழ்மேதை.சிறந்த தொழிலாளர் தலைவர், தமிழ் மக்களைத்தட்டி எழுப்பித் தமிழ் மீதும் தமிழ் நாட்டின் மீதும் பற்றுக் கொள்ளச் செய்த பெருமை இவருக்கு உண்டு. இவரைத்தமிழகமும் தொழிலாளர் உலகமும் நன்கு அறியும். இவரைப்பொதுவாகத் திரு,வி.கா.என்னும் சுருக்கப் பெயரால் வழங்குவதுவழக்கம். இப் பெயரில் அமைந்த திரு' என்பது திருவாருகைகுறிக்கும் 'வி' என்பது கலியாண சுந்தரனார் என்பதையும் குறிக்கும்.

இவருடைய பிறப்பிடம் சென்னைக்குப் பக்கத்தில் உள்ள துள்ளம்என்னும் சிற்றூர். இவர் 1883 முதல் 1953 வரை வாழ்ந்திருந்தவர்.இவருடைய தந்தையார் விருந்தாளன் முதலியார்; தாயார் சின்னம்மையார்; இவர் தமிழ்ப் பெரும்புலவர்; கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகப் பணிபுரிந்தவர். பின்பு நாட்டுக்கு நல்ல தொண்டாற்றியவர். காந்திய வழியில் இயற்கை வழியில் மிக்க ஈடுபாடுகொண்டவர். பாரதநாடு என்ற பரந்த உள்ளங் கொண்டவர் தமிழ்நாட்டின் மீதும் தமிழ் மொழியின் மீதும் இவர் அளவு கடந்த பற்று உடையவர். பெண்களைத் தாயாகத் தெய்வமாக போற்றியவர் தமிழ்நாட்டின் மீதும் தமிழ் மொழியின் மீதும் இவர் அளவு கடந்த பற்று உடையவர்சிறந்த சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டவர்;சிறந்தபேச்சாளர்; சிறந்த எழுத்தாளர். இவர் முருகன் அல்லதுஅழகுபெண்ணின் பெருமை. மனித வாழ்க்கையும் காந்தியடிகளுமஎன்னுமயர்ந்த உரைநடை நூல்களைஎழுதியுள்ளார்; முருகனஅருந்திருமால் அருள் வேட்டல், சிவன் அருள்வேட்டல், பொதுமை வேட்டல்உரிமை வேட்கை அல்லதுநாட்டுப்பாடல் என்னும் சிறந்தசெய்யுள் நூல்களையும் இயற்றியுள்ளார்.

இவருடையசெய்யுள்கள் இனிமையான ஓசை நயம் கொண்டவைச சிறந்தபொருட்சிறப்பும் அமைந்தவை

**தெளிவுரை**

1. இயற்கையிலேலேய அருள் கொண்டு தோன்றி (இனிமை என்னும் வடிவை எடுத்து செயற்கையினைக் கடந்து இயல்,இசை என்பனவற்றில் நடமாடும் தமிழ்த்தாயே நீ வாழ்க.)

2. தமிழ்மொழியின் இனிமையை அறியாதவர் கனி இனிமையானதுஎன்றும் கரு ்பு இனிமையுடையது என்றும், காதல்இனிமையுடையது என்றும் பெரிய தனியரசு இனிமையானது என்றும் கூறுவர்.

3. பல மொழிகளில் உள்ள கலைகள் எல்லாம் பசுமையான நம் தமிழ் மொழியிலும் அமையும்படி நாம் நல்ல முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அக்கலைகள் எல்லாம் தமிழ் மொழியில் அமைந்தால், தமிழ்லத்தாய் நன்மை அடைவாள்.

(1) இயல் — இயல்தமிழ்: இசை — இசைத்தமிழ்; நடம் — நடனம்; வாழியர் — வாழ்க; (2) உணரார் — அறியாதவர்; (3) உருக்கொள்ள தோன்ற: உறுவன் — அடைவாள்.

**விளக்கம்**

(1) தமிழ்மொழி இயற்கையிலேயே தோன்றியதாகையால் இயற்கையிலே கருத்தாங்கி எனப்பட்டது. இயலிசை என்பது இயல் தமிழையும், இசைத்தமிழையும் குறிக்கது. இயல் தமிழும் இசைத் தமிழும் சேர்நதது நாடகம். ஆதலின் நாடகமும் இயலிசையில் அடங்கும்.

(2) தமிழின் இனிமையை அறியாதவரே, கனி, கரும்பு, காதல், தனியரசு ஆகிய இவை இனிமையுடையன என்பர். எனவே தமிழ் மொழியானது இ... அனைத்தையும் காட்டிலும் இனிமையுடையது என்பது 'பொருள் குழலினிது யாழினிது' என்ப என்னும் குறட்பாவை இங்கே நினைவிற்கொள்க.

(3) பல்வேறு மொழிகளில் அமைந்த கலைகளெல்லாம் தமிழ் மொழியில் இயற்றப்பட்டால் தமிழன்னை நன்மை அடைவாள்(அஃதாவது சிறந்த தோன்றுவாள என்பது பொருள்) பிற நாட்டு நல்ல அறிஞர்களுடைய நூல்கள் தமிழ் மொழியில் ஆக்கப்படல் வேண்டும் என்று கூறும் பாரதியார், பாரதிதாசனார் கருத்துக்களை இங்கே நினைவிற் கொள்க.

# இலக்கணம்

(1) கருத்தாங்கி — இரண்டாம் வேற்றுத்தொகை கடந்து— யெச்சம், இயலிசை உவமைத்தெகை; செய்நடம் — வினைத்தொகை வாழியர் — வியங்கோள் வினைமுற்று.

(2) இனிமை — பண்புப் பெயர்; என்பர் — பலர்பால் வினைமுற்று தமிழினிமை; ஆறாம் வேற்றுமைத் தொகை; உணரார் — வினையாலணையும் பெயர்.

(3) பன்மொழி, பசுந்தமிழல் — பசுமை +தமிழ், நன்முயற்சி — பண்புத்தொகைகள்: உறுவன் — பெண்பால் வினைமுற்று; தமிழ்த்தாய் — உருவகம்; வேண்டும் — வியங்கோள் வினைமுற்று.

## நாட்டு வாழ்த்து

கீழ்வரும் நாட்டு வாழ்த்துப்பாடல், மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களுள் ஒன்றாகும்.

சுப்பிரமணிய பாரதியார்: இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டையாபுரம் என்னும் ஊரில் பிறந்தவர். சின்னச்சாமி ஐயர், இலக்குமி அம்மையார் என்போர் இவருடைய பெற்றோர். தமது கவிபாடுந் திறனால்- இளமையிலே இவர் 'பாரதி' என்னும் சிறப்புப' பெயரைப் பெற்றார். இவர் மதுரையில் சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் மூன்று மாதங்கள் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். பின்பு சுதேசமித்திரன் என்னும் நாளிதழ் துணையாசிரியராகப் பணியாற்றினார். இவர் மிகுந்த நாட்டுப்பற்று உடையவர். சிறந்தவிடுதலை வீரர். இவருடைய் பாடல்கள் இனிமையுங்கருத்தாழமும்கொண்டவை பாரதியாகவிதைகள்பாஞ்சாலி சபதம் என்பன இவர் இயற்றிய நூல்களாகும். நாட்டுப்பற்றின் காரணமாக இவர் தேசியக்கவி என்று போற்றப்பட்டார். இவரது காலம் கி.பி. 1882முதல் 1932வரை.

மன்னும் இமய மலை எங்கள் மலையே;
மாநில மீதிது போற்பிதி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?
பன்னரும் உபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை ஏதொரு நூலிது போலே?
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே;
போற்றுவோம் இஃதை எமக்கிலை ஈடே

சி. சுப்பிரமணிய பாரதியார்

## தெளிவுரை

நிலைபெற்ற இமயமலை எங்கள் மலையாகும். பெரிய இவ்வுலகில் அதுபோன்ற சிறந்தமலை வேறு இல்லை. இனிமையான நன்மையுடைய நீர் பொருந்திய கங்கை ஆறு எங்கள் ஆறேயாகும். இதனுடைய பெருமைக்கு ஈடாகக் கூறக்கூடிய ஆறு வேறு யாது உளது? கூறுவதற்கு அருமையான உபநிடதம் என்னும் நூல் எங்கள் நூலேயாகும். உலகில் இது போன்ற சிறந்தநூல் வேறு எது உளது? அழகு நிறைந்த பாரத நாடு போல் உலகில் வேறு இல்லை. ஆதலின் இதனைப் போற்றுவோமாக!

(மன்னும் — நிலைபெறும்; மாநிலம் — பெரிய உலகம்; சிறந்த உலகம் நறுமை — நன்மை, வாசனை மாண்பு பெருமை; பன்ன அருள் கூறுவதற்கு அரிய, உபநிடதம் வேதத்தின் உட்பொருளைக்கூறும் நூல்; பார் உலகம்; பொன் — அழகுபொன்)

## இலக்கணம்

நறுநீர் (நறுமை+நீர்) இன்னறும் — பண்புத்தொகைகள்; மாநிலம் — உரிச்சொல் தொடர்: பன்னரும் — தொகுத்தல் விகாரம்; மிசை — ஏழாம் வேற்றுமை உருபு: போற்றுவோம் — தன்மைப் பன்மை வினைமுற்று இல்லை — இடைக்குறை இமயமலை — இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

### வினாக்கள்

## சிறுகுறிப்பு வரைக

1. இராமலிங்க அடிகாளார்; திரு.வி. கலியாணசுந்தர முதலியார்; சுப்பிரமணிய பாரதியார்.
2. இராமலிங்க அடிகளார் முருகப்பெருமானை எவ்வெவ்வாறு விளக்குகின்றார்.
3. அவர் தணிகைப் பெருமானிடம் வேண்டுவது என்ன?
4. திரு.வி. கலியாண சுந்தரனார் தமிழ்மொழியின் பெருமைகளாகக் கூறுவன யாவை?
5. தமிழ்த்தாயின் நலத்திற்குத் திரு.வி.க. கூறும் வழி யாது?
6. பாரதியார் பாரதநாட்டை எவ்வாறு பாராட்டுகின்றார்?

1.இடஞ்சுட்டி பொருள் விளக்கம் தருக.

அ) "அறியாது அந்தோ விழுந்திட்டேன்"

ஆ) "பெரும் தனியரசில் இனிமை என்பா"

இ) "பார்மிசை ஏதொரு நூலிது போலே"

ஈ) "இங்கிதன் மாண்பிற் கெதிரெதுவேறே".

2. இராமலிங்க அடிகளாரின் பாடற்பொருளைத் தெளிவாக வரைக.

3. தமிழ்த்தாய் வாழ்த்தாக திரு.வி.க கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

4. பாரத நாட்டின் பெருமைகளைத் தொகுத்துக் கூறுக.

## இலக்கணம்

### 1. பிரித்துக் காட்டுக

துயர்க்கடலுள்; செழுந்தீர்; செழிஞ்சுடரே; கருத்தாங்கி;இயலிசை கரும்பினிமை; தமிழினிமை; பன்மொழி;பசுந்தமிழ்; நன்முயற்சி; நலமுறுவள் பிறிதிலை;இங்கிதன், எதிரெது; பன்னரும்; பொன்னொளிர்; எமக்கிலை.

### தடித்த எழுத்துச் சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு வரைக

துயர்கடலுள்; என் செய்வேன், ஞானச்செழுஞ்சுடரே; கருத்தாங்கி; இயலிசையில்; செய்நடமே; வாழியரே; இனிமை எனபர்; தமிழினிமை உணராரே; பன்மொழியில்; பசுந்தமிழின்; நன்முயற்சி எழ வேண்டும்; நலமுறுவள்; தமிழ்த்தாயே; இமயமலை எங்கள்; மாநில மீத்து இன்னறு நீக்கங்கை; பன்னரும், உபநிட; பார்மிசை போற்றுவம் இகதை

**குறிப்பு:** வாழ்த்துப் பாடல்கள் மூன்றும் மனப்பாடத்திற்கு உரியவை.

# பாடம்.2
# திருக்குறள்

## திருக்குறள்

இத்தொடர் திரு +குறள் எனப்பிரியும். திரு என்பது மேன்மை என்னும் பொருளை உணர்த்தும் அடைமொழி. குறள் என்பது இரண்டு அடிகளால் ஆகிய வெண்பாவை உணர்த்தும், ஈண்டு, அப்பாக்களால் அமைந்த நூலை உணர்த்தியது.

## பிரிவுகள்

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பால்களையும் (பகுப்புகள), 133 அதிகாரங்களையும் கொண்டு விளங்குவது. அதிகாரத்திற்குப் பத்துப்பாடல்களாக ஆயிரத்து முந்நூற்று முப்பபது குறட்பாக்களை உடையது. இது பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று.

## பதினெண் கீழ்கணக்கு நூல்கள்

நாலடியார், நான்மணிக்கடிகை,இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முன்னிலை, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி என்பன 18 கீழ்க்கணக்கு நூல்களாகும்.

## திருக்குறளின் பெருமைகள்

"ஆலும் வேலும் ..ல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் பழமொழி, இந்நூலின் பெருமைய விளக்கும். இதில் இரண்டு என்பது

திருக்குறளைக் குறிக்கும். திருக்குறள் சாத'வேறுபாடு அற்ற நூல் இந்நூல் ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு முதலிய பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## திருக்குறளுக்கு உரிய வேறு பெயர்கள்

முப்பால், உத்திரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுரை வாழ்த்து தமிழ்மறை ,பொதுமறை என்பன இந்நூலின் வேறு பெயர்களாம்

## திருவள்ளுவர்

திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர். இவற்றைப் பற்றிய உண்மை வரலாறு அறியவில்லை. இவருடைய பெற்றோர் ஆதி பகவன் என்றும் துணைவியார் வாசுகி அம்மையார் என்றும் கூறுவர். இவர் தம் பிறப்பிடம் மைலாப்பூர் என்றும் மதுரை என்றும் கூறுவர். இவர் அரசருக்கு ஆலோசனை கூறும் ஓர் உயர்ந்த அலுவலராக (உட்படு கருமத்தலைவர்)இருந்திருக்க வேண்டும் என்று டாக்டர். சோமசுந்தர பாரதியார் கூறுகின்றார். இவரது காலம் கடைச்சங்க காலமாகும். ஆராய்ச்சியாளர் கடைச்சங்க காலத்திற்கு முற்பட்டது இவரது காலம் என்பர்.

## வேறு பேர்கள்

வள்ளுவர் பெருமானுக்கும் பல்வேறு பெயர்கள் உள்ளன. நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர், பொய்யில்புலவர் என்பன இவரது வேறுபெயர்களாம்.

## வள்ளுவரின் பெருமைகள்

வள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்களே அவருடைய பெருமையை இனிது விளக்கும். வள்ளுவரால் தமிழ்நாடும் தமிழ்மக்களும் உலகப்புகழ் பெற்று விளங்கும் நிலை உண்டாயிற்று.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்த
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று பாரதியாரும் வள்ளுவரைப் போற்றுகின்றார்.

# ட. செய்நன்றியறிதல்

(பிறர்க்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை)

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்

வானகமும் ஆற்ற லரிது. (1)

## தெளிவுரை

தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறன் தனக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைமாறாக கொடுத்தாலும் ஈடாக முடியாது.

(வையகம் — உலகம்)

## விளக்கவுரை

முகம் மாறுகளெல்லாம் காரணமுடையனவாதலின், காரணமில்லாத உதவிக்கு ஆற்றாலாயின.

## இலக்கணம்

செய்யாமல் — எதிர்மறை வினையெச்சம்; செய்த — பெயரெச்சம்; வையகமும் வானகமும் — எண்ணும்மை.

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது. (2)

## தெளிவுரை

உற்றகாலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதாயிருந்தாலும் (அக்காலத்தை நோக்க) அஃது உலகத்தைவிட மிகப்பெரிது.

## விளக்கவுரை

காலத்தினால் என்றதனால், காலத்தை நோக்குவதல்லது பொருளை நோக்கலாகாது என்பதாம்.

**இலக்கணர்**

காலத்தினால — உருபு மயக்கம்

பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்

நன்மை கடலிற் பெரிது. (3)

**தெளிவுரை**

ஒருவன் இருவருக்கு இன்னது செய்தால் இது நேரும் என்று ஆராயாமல் செய்த உதவியாகிய அன்புடைமையை ஆராய்தால் அதன் நன்மை கடலை விடப் பெரிதாகும்.

(தூக்கார் — ஆராயாதவர், தூக்கின் — ஆராய்ந்தால்)

**விளக்கவுரை**

இவை மூன்று பாட்டாலும் முறையே காரணமின்றும் செய்ததும் காலத்தினால் செய்ததும், பயன் தூக்காராய்ச் செய்ததும் அளவில்லாதால் கூறப்பட்டது.

திணைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக

சொள்வர் பயன்தெரிலார். (4)

**தெளிவுரை**

ஒருவன் திணையளவாகிய உதவியைச் செய்தபோதிலும், அதன் பயனை ஆராய்கின்றதவர் அதனை அவ்வளவினதாக் கருதாமல் பணையளவாகக் கருதுவர்.

(திணைத்துணை — சிறிது அளவு, பனை அளவு — பெரிய அளவு)

**விளக்கவுரை**

திணை,பனை என்பன முறையே, சிறுமை பெருமைகளைக் காட்டுவன.

## இலக்கணம்

பயன்தெரியார் — வினையாலணையும் பெயர்,

உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. (5)

## தெளிவுரை

கைம்மாறாகச் செய்யும் உதவி முன்செய்த உதவியின் அளவை உடையது அன்று; உதவி செய்யப்பட்டவரின் பண்புக்கு ஏற்ற அளவை உடையதாகும்.

(வரைந்தன்று — அளவை உடையதன்று)

## விளக்கவுரை

சால்பு எவ்வளவு பெரிதோ, உதவியும் அவ்வளவு பெரிதாம் என்பார் சால்பின் வரைத்து என்றார். இவ்விரண்டு பாட்டாலும் கைம்மாறு கருதாத உதவி மாத்திரம் அறிவார்கருச் செய்தவழிப் பெரிதாம் என்பது கூறப்பட்டது.

மறவற்க மாசற்றார் கேண்மை; துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. (6)

## தெளிவுரை

அறிவு ஒழுக்கங்களில் குற்றமற்றவரது நட்பை மறத்தலாகாது துன்பகாலத்து தனக்கு உதவியவர்களது நட்பை எப்பொழுதும் விடலாகாது.

(துப்பு ஆயார் — பற்றுக்கோடாயினார்)

## விளக்கவுரை

இம்மைக்கு உறுதி கூறுவார் மறுமைக்கு உறுதி உடன் கூறினார்.

## இலக்கணம்

மறவற்க, துறவற்க — எதிர்மறை வியங்கோள் வினைமுற்றுகள்
கேண்மை — பண்புப்பெயர்.

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்

விழுமந் துடைத்தவர் நட்பு. (7)

**தெளிவுரை**

தம்முடைய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை, நல்லோர், எழுவகைப் பிறப்பினும் நினைப்பர்.

(உள்ளுவர் — நினைப்பர்)

**விளக்கவுரை**

'எழுமை' என்றது வினைப்பயன் — தொடரும் எழு பிறப்பினை, இவ்விருபாட்டாலும் நன்றி செய்தாரது நட்பினை விடலாகாது என்பது கூறப்பட்டது.

**இலக்கணம்**

எழுமை, பிறப்பும் — முற்றும்மை

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல

அன்றே மறப்பது நன்று. (8)

**தெளிவுரை**

ஒருவர் முன் செய்த நன்மையை மறப்பது அறம் ஆகாது; அவர் செய்த தீமையைச் செய்த பொழுதே மறப்பது அறமாகும்

(அன்றே — அப்பொழுதே)

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த

ஒன்றுநன் றுள்ளக்கெடும். (9)

**தெளிவுரை**

தமக்கு முன்னொரு நன்மை செய்தவர், பின் கொன்றாற் போன்ற இன்னாதவற்றைச் செய்தாராயினும் அவையெல்லாம், அவர் முன்செய்த நன்மையை நினைத்தாலும் அத்துன்பம் நீங்கும்.

(கொன்றன்ன — கொல்வதை ஒத்த: இன்னா — தீமை; உள்ள — நினைக்க)

**விளக்கவுரை**

தினையளவு நன்மை பனையளவாகக் கொள்ளப்படுதலின, அவ்வொன்றே, ஏனைய தீமைகளையெல்லாம் கெடுக்கும் என்பதாகும். இதனால் நன்றல்லது அன்றே மறக்கும் திறன் கூறப்பட்டது.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு. (10)

**தெளிவுரை**

பெரிய அறங்களை அழித்தார்க்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டாகும்; (ஆனால்) ஒருவர் செய்த உதவியை மறந்தவனுக்கு உய்வு இல்லை.

(கொன்றார் – அழித்தார்; உய்வு – நன்மை)

**விளக்கவுரை**

இதனால் செய்ந்நன்றி மறத்தலின் கொடுமை கூறப்பட்டது.

**இலக்கணம்**

கொன்றார் – வினையாலணையும் பெயர்; கொன்ற – பெயரெச்சம் செய்ந்நன்றி – வினைத்தொகை.

## 2. நடுவுநிலைமை

நடுவு நிலைமையாவது பகை, நொதுமல், நட்பு என்னும் மூன்று பகுதியினும

(அளத்தினின்றும் வழுவாமல் ஒப்ப நிற்கும் நிலைமை)

தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட்டொழுகப் பெறின் (1)

**தெளிவுரை**

• பகை, நொதுமல், நட்பு என்னும் பகுதி தோறும் முறையோடு பொருந்தி ஒழுகப் பெற்றால் நடுவுநிலைமை என்று சொல்லப்படும் அறம் நன்மையாகும்.

(பகுதியான் பாற்பட்டு ஒழுகப் பெறின் — பகுதி தோறும் தன் மறைமை விடாது ஒழுகப் பெறின்; நொதுமல் — பகைமையும் நட்பும் இல்லாதவர்கள்)

**விளக்கவுரை**

இதனால் நடுவு நிலைமையது சிறப்புக் கூறப்பட்டது.

**இலக்கணம்**

நன்றே — பிரிநிலை ஏகாரம்.

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து. (2)

**தெளிவுரை**

நடுவுநிலைமை உடையவனுடைய செல்வம் அழிவு இல்லாமல் அவனுடைய வழியில் உள்ளார்க்கும் வலிமை உடையதாகும்.

(செப்பம் — நடுவு நிலைமை; ஆக்கம் — செல்வம்; சிதைவின்றி — அழிவின்றி; ஏமாப்பு — உறுதி, வலிமை)

உடையவன் — வினையாலணையும் பெயர்; சிதைவின்றி — வினை — எச்சம்; எச்சத்திற்கு — ஆகுபெயர்.

நன்றே தரிலும் நடுவிகந்திரம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். (3)

**தெளிவுரை**

நீங்கின்றி நன்மையே தருவதனாலும், நடுவு நிலைமை தவறுவதால்
உண்டாகிற ஆக்கத்தை அப்பொழுதே கைவிட வேண்டும்.

(நடுவிகந்தரம் நடுவு நிலைமை தவறுவதால் உண்டாகின்ற, ஆக்கம் — செல்வம்)

இவை இரண்டு பாட்டாலும் முறையே நடுவு நிலைமையால் வந்த செல்வம் நன்மை தருவதும் ஏனைய செல்வம் தீமை தருதலுக்கும் கூறப்பட்டன.

### இலக்கணம்

நன்றே — ஏகாரம் தேற்றம்; விடல் — அல் ஈற்று வியங்கோள வினைமுற்று.

தக்கார் தகவிலர் என்ப தலைவர்
எச்சத்தாற் காணப் படும்.

(4)

### தெளிவுரை

இவர் நடுவு நிலைமை உடையவர்; இவர் — நடுவு நிலைமை இல்லாதவர் என்பது அவரவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழாலும் பழியாலும் அறியப்படும்.

(தக்கார் — நடுவு நிலைமை உடையவர்; தகவிலர் — நடுவு நிலைமை இல்லாதவர்)

### இலக்கணம்

தக்கார், தகவிலர் — வினையாலணையும் பெயர்கள்,

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. (5)

### தெளிவுரை

தீவினையால் கேடும், நல்வினையால் ஆக்கமும் யாவர்க்கும் முன்னே அமைந்து கிடந்தன என்பதை அறிந்து, நெஞ்சில் நடுவு நிலைமை தவறாமல் இருந்தலே சான்றோர்க்கு அழகாகும்.

இல்லல்ல — உள்ளன; கோடாமை — தவறாமை; அணி — அழகு

**விளக்கவுரை**

கேடும் பெருக்கமும் பழவினை காரணமாக வருவதே அன்றி, தகடுதலான அன்று என்பதை அறிந்து சான்றோர் நடுநிலைமினின்றும்வழுவமாட்டார் என்பதாகும்.

**இலக்கணம்**

கேடு — முதனிலை திரிந்த தொழில்பெயர்; கோடாமை — எதிர் மறைத் தொழிற் பெயர்.

கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின் (6)

**தெளிவுரை**

ஒருவன், தன் நெஞ்சம் நடுநிலலமை நீங்கி, நடுநிலைமை இல்லதாவற்றைச் செய்ய நினைக்குமாயின், தான் கெடப்போகிறேன் என்று அறிய வேண்டும்.

(நடுவொரீஇ — நடுவுநிலைமை)

**விளக்கவுரை**

நினைத்தலும் செய்ததற்குச் சமமாகும் ஆதலால் செயின் என்றார்

**இலக்கணம்**

கெடுவன் — தன்மை ஒருமை வினைமுற்று; நடுவொரீஇ —மெல்லிசை அளபெடை

கெடுவாக வையாது (ஆ) உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு (7)

**தெளிவுரை**

நடுவுநிலையாக நின்று அறவழியில் நிலைத்து நிற்கின்றவனது வறுமையை உயர்ந்தோர் வறுமை என்று கருதமாட்டார்.

(கெடுவாக வையாது — வறுமை என்று கருதமாட்டார்; நன்றிக்கண் — அறவழியில்)

**விளக்கம்**

இவை மூன்று பட்டாலும் முறையே நடுவுநிலைமை தவறுதலான் கேடும் பெருக்கமும் வாரா என்பதும் நடுவுநிலைமை தவறுதல்கேட்டிற்கு

ஏதுவாகும் என்பதும், நடுவுநிலைதவறாதவன் அடைந்த தாழ்வு கேடன்று என்பதும் கூறப்பட்டன.

**இலக்கணம்**

உல்கம் — இடவாகு பெயர்

எண்செய்து சீர்தூக்கும் கோலைபோல் அமைத்தொருபாற்

கோடாமை சான்றோர்க் கணி. (7)

**தெளிவுரை**

முன்னே தான் சமமாக நின்று பின்பு தன்னிடம் வைத்த பொருளை வரையறுக்குத் துலாக்கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

(சமன் செய்து — சமமாக இருந்து; ஒருபால் — ஒரு பக்கமாக; கோடாமை — நடுவுநிலைமை தவறாமை; அணி — அழகு)

**இலக்கணம்**

சமன் ஈற்றுப்போலி; கோடாமை — எதிர்மறைத் தொழிற்பெயர்.

சமன் செய்து சீர் தூர்கதும் கோல் — உவமை;சான்றோர் ஒரு பால் கோடாமை உவமேயம். இப்பாடலில் பயின்று வருவது உவமை அணி ஆகும்.

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒரு கலையா

உட்கோட்டம் இன்மை பெறின்

**தெளிவுரை**

உள்ளத்தில்கோணுதல் இல்லாத தன்மையை உறுதியாகப் பெற்று சொல்லிலும் கோணுதல் இல்லாதிருத்தல் நடுவுநிலைமையாம்

(கோட்டம் — வளைவு, தவறு)

## இலக்கணம

சொற்கோட்டம் — ஏழாம் வேற்றுமைத்தொகை

வாணிகஞ் செய்வோர்க்கு வாணிகம் பேணப்

பிறவும் தம்போற் செயின். (10)

## தெளிவுரை

பிறர் பொருளையும் தம்பொருள்போல் போற்றிச் செய்தால் அதுவே வாணிகம் செய்வோர்க்கு நல்ல வாணிகமாம்.

(பேணி — காத்து; செயின் — செய்தல்)

## விளக்கவுரை

'பிறவும் தம்போற' செய்தலாவது கொள்வது மிகுதியும், கொடுப்பது குறைவும் ஆகாமல் நடுநிலைமையில் இருந்து செய்தல்.

## இலக்கணம்

செய்வார் — வினையாலணையும் பெயர்; பேணி — வினை எச்சம்.

# பாடம் 3

## திருக்குறள் தொடர்ச்சி

### 6. அடக்கமுடைமை

(மெய், மொழி, மனம் தீயவழியில் செல்லாறு அடக்கம் உடையவனாதல்)

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். (1)

**தெளிவுரை**

அடக்கமானது ஒருவனைத் தேவர் உலகத்தில் சேர்க்கும். அடங்காமையாகிய பாவம் இருள் போன்ற தீய வாழ்க்கையில் செலுத்தும்.

(அமரர் — தேவர், ஆரிருள் — அருமை+இருள்)

**இலக்கணம்**

ஆரிருள் — பண்புத்தொகை

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு. (2)

**தெளிவுரை**

உயிர்களுக்கு அடக்கத்தைவிடச் சிறந்த செல்வமில்லை (ஆதலால்)

அவ்வடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றிக் காக்க வேண்டும.

**விளக்கவுரை**

ஈண்டு 'உயிர்க்கு' என்றது மக்கள் உயிர்மேல் நின்றது.

**இலக்கணம்**

காக்க — வியங்கோள் வினைமுற்று; அதனினூஉங்கு — இன்னிசை அளபெடை; இல்லை — குறிப்பு வினைமுற்று.

செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்
தாற்றின் அடங்கப் பெறின் (3)

**தெளிவுரை**

அடக்கமுடைமையே சிறந்த அறிவானது என்று அறிந்து நல்வழியில் ஒருவர் அடங்கி ஒழுகினால் அவ்வடக்கம் நல்லோரால் அறியப்படும் மேன்மை பயக்கும்.

(செறிவறிந்து – நல்லோரால் அறியப்படும சீர்மை – மேன்மை)

**விளக்கவுரை**

இவ்வாழ்வானுக்கு இடக்க நெறியவாது மெய்,மொழி, மனம் மூன்றும் தன்வயத்தவாதல்.

**இலக்கணம்**

சீர்மை – பண்புப்பெயர்; அறிந்து – வினை எச்சம்

நிலையின் திரியா தடங்கியான தோற்றம்
மலையினும் மாணப்பெரிது. (4)

**தெளிவுரை**

இவ்வாழ்க்கையாகிய நன்நெறியின் வேறுபடாது நின்று அடங்கினவானது உயர்வு, மலையின் உயர்வை விட மிகவும் பெரிதாகும்.

மாணப்பெரிது – மிகப்பெரியது)

**இலக்கணம்**

அடங்கியான் – வினையாலணையும் பெயர்; தோற்றம் – தொழிற் பெயர்

எல்லோர்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்கே செல்வம் தகைத்து. (3)

**தெளிவுரை**

பெருமிதமின்றிப் பணிவுடையராக ஒழுகுதல், எல்லோர்க்கும் நல்லதாகும்என்றாலும் அவ்வெல்லாருள்ளும் செல்வமுடைளார்க்கே வேறொரு செல்வமாய் சிறப்பினை உடையது.

**விளக்கவுரை**

இவை ஐந்து பாட்டாலும் பொதுவகையால் அடக்கத்துச் சிறப்புக் கூறப்பட்டது.

**இலக்கணம்**

எல்லோர்க்கும் — முற்றும்மை; பணிதல் — தொழிற்பெயர்; செல்வர்க்கே — பிரிநிலை ஏகாரம்

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. (6)

**தெளிவுரை**

ஒருவன் ஒரு பிறப்பின்கண் ஆமை போல ஐம்பொறிகளையும் அடக்கவல்லவனாயின், அஃது அவனுக்குப் பலபிறப்பிலும் காப்பாகும் சிறப்பு உடையது.

(ஒருமையுள் — ஒரு பிறப்பில; ஏமாப்பு — பாதுகாப்பு)

**விளக்கவுரை**

ஆமை தனது ஐந்து உறுப்புகளுக்கும் துன்பம் நேராமல் ஓட்டிலும் அடக்குதல் போல், ஐம்பொறிகளையும் பாலம் புகாமல் அடக்குதல்; வேண்டும் என்றார். இதனால் மெய்யடக்கம் கூறப்பட்டது.

**இலக்கணம்**

ஐந்து எண்ணவளவை ஆகுபெயர்; ஏமாப்பு — தொழிற்பெயர் உவமை அணி பயின்று வந்துள்ளது.

யாகாவர் ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (7)

**தெளிவுரை**

காக்க வேண்டிய எல்லாவற்றையும் காக்க முடியவில்லையாயினும் நா ஒன்றையாவது காக்க வேண்டும். அதனைக் காக்கத் தவறினால் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.

(யா — எல்லாவற்றையும் நா — நாக்கு சோகாப்பர் — துன்புறுவர்; இழுக்கு — குற்றம்)

**விளக்கவுரை**

'நா' என்றது நாவால் பேசும் பேச்சைக் குறித்தது.

**இலக்கணம்**

நாவாக்க – இரண்டாம் வேற்றுமைத் தொகை; காக்க – வியங்கோல் வினைமுற்று; காவாக்கால் – எதிர்மறை வினையெச்சம்.

ஒன்றாலுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா சாகி விடும். (௮)

**தெளிவுரை**

தீய சொற்களின் பொருளால் பிறக்கும் வரும் துன்பம் ஒன்றாயினும் ஒருவனிடம் உண்டானால், ஆனால் பிற அறங்களால் உண்டானால், நன்மை தீதாய்வடும்.

**விளக்கவுரை**

தீய சொல்லாவன; தீங்கு பயக்கும் பொய், குறளை, கடுஞ்சொல், என்பன.

**இலக்கணம்**

ஒன்றாலும் – இழிவு சிறப்பு உம்மை, தீச்சொல் பண்புத்தொகை பொருட்பயன் மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை.

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. (௯)

**தெளிவுரை**

ஒருவன் (இன்னொருவனை) தீயினால் சுட்டபுண், புறத்தே (உடலில்) வடு இருந்தாலும் மனத்தினுள்ளே ஆறிவிடும். ஆனால் நாவினால் தீய சொல் கூறிச் சுடும் வடு (மனத்தில் எப்போதும்) ஆறாது.

**விளக்கவுரை**

ஆறிப்போவதால் தியினா ) சுட்டதனைப் 'புண்' என்றும் ஆறாது கிடப்பதால் நாவினால் சுட்டதனை 'வடு' என்றும் கூறினார். தீயும் தீய சொல்லும் சுடுதல் தொழிலால் ஒரு தன்மையுடையன வாயினும் ஆறாமையால், தீயசொல். தீயினும் கொடியது என்றார்.

### இலக்கணம்

தீயினால், சுட்டபுண்ணும், தீயசொல்லும் வருத்தும் நிலையில் ஒக்குமாயினும் தீயுணட ஆறும், தீயசொல் (மனத்தின் கண்) ஆறாது என வேறுபடுத்திமிருப்பதால் இதில பயின்று வருவது வேற்றுமை அணி ஆகும்.

(ஒரு செய்யுளில், முதலிய ஒருபொருள்களை ஒப்புமை தோன்றக் கூறி, பின்னர் அவற்றுள் ஒன்று மற்றொன்றிலும் வேறுபட்டது என வேற்றுமை தோன்றக் கூறுவது வேற்றுதமை அணி ஆகும்.)

கதவ்காத்தது கற்றடங்கல் ஆற்றுவான் செல்லி
அறம்பார்க்கும் ஆற்றின் துழைந்து (10)

### தெளிவுரை

மனத்தின் கண் சினம் தோன்றாமல் காத்துக் கல்வி கற்று, அடக்கமுடையவனாக இருக்க வல்லவனது செல்வியை, அவனை அடையும் வழியல் சென்று அறம் பார்த்திருக்கும்.

(கதம் — கோபம்; ஆற்றின நுழைந்து — வழியில் சென்று)

### விளக்கவுரை

அடங்கல் என்பது மனம் புறத்துப் பரவாது அறத்தின் கண்ணே நிற்றல் கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவானை அறம் தானே சென்றடையும் என்பதாகும். இதனால் மன அடக்கம் கூறப்பட்டது.

### இலக்கணம்

கதங்காத்து — இரண்டாம் வேற்றுமைத் தொகை; ஆற்றுவான் வினையாலணையும் பெயர்.

## ஒழுக்கமுடைமை

(தத்தமக்குரிய ஒழுக்கத்தினை உடையவனாதல்)

ஒழுக்கம் விருப்பம் தரலான் ஒழுக்கம்
உமிரிலும் ஓமபப் படும (1)

### தெளிவுரை

ஒழுக்கம் எல்லோர்கும் சிறப்பினைத் தருதவான், அவ்வொழுக்கம் உயிரைவிட மேம்பட்டதாகப் பாதுகாக்கப்படும்.

(விழுப்பம் — சிறப்பு ஓம்பப்படும் — பாதுகாக்கப்படும்)

**விளக்கவுரை**

உயிர் எல்லாப் பொருளினும் சிறந்ததாயினும் ஒழுக்கம் போல விழுப்பம் தாராமையின் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும் என்றார்.

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கத் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை. (2)

**தெளிவுரை**

அறங்கள் பலவற்றையும் ஆராய்ந்து தெரிந்தாலும், ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்குவதால் அவ்வொழுக்கத்தினை எவ்வகையானும் (அழிவுபடாமல்)பேணிகாக்க வேண்டும்.

(பரிந்தோம்பி வருந்திப்பேணி; தெரிந்து ஓம்பித் தேரினும் (அறங்கள் பலவற்றையும்) ஆராய்ந்து)

**விளக்கவுரை**

இவை இரு பாட்டாலும் ஒழுக்கத்தின் சிறப்புக் கூறப்பட்டது.

**இலக்கணம்**

ஓம்பு — வினையெச்சம்; காக்க — வியங்கோள் வினைமுற்று

ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். (3)

**தெளிவுரை**

ஒழுக்கம் உடையவராக வாழ்வதே உயர்குடிப்பிறப்பின் தன்மையாகும். அவ்வொழுக்கத்தில் தவறுதல் இழிக்குடிப்பிறப்பின் தன்மையாகி விடும்.

(இழுக்கம் — ஒழுக்கம் தவறுதல்)

**விளக்கவுரை**

பிறப்பால் மக்கள் ஒரு தன்மையுடையரேனும், அவரவர் நலலொழுக்க நியொழுக்கத்திற்கேற்ப முறையே உயர்க்குடிப்பிறப்பினராக கருதப்படுபவர் என்பதாம.

**இலக்கணம்**

இழிந்த — பெயரெச்சம்

மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும் (4)

**தெளிவுரை**

ஒருவன் தான் கற்ற வேதத்தினை மறந்தானாயிலும் மீண்டும் அதனை அவன் ஓதிக் கற்றுக் கொள்ள முடியும். ஆனால் மறை ஓதுபவனுடைய குடிப்பிறப்பு, அவனுடைய ஒழுக்கம் குன்றினால் கெடும்.

(ஒத்துக் கொளலாகும், வேதம் (ஓதிக்) கற்றுக் கொள்ள முடியும். பார்ப்பான் — மறை ஓதுவான்; குன்ற — குறைவுபட)

**விளக்கவுரை**

(ஒழுக்கத்தை) மறந்தவன் இழிகுலத்துளன் ஆவான் என்பதனால் மறத்தலாகாது என்னும் கருத்துப்பட 'மறப்பினும' என்றார். மறை ஓதும் உயர்ந்தானுக்குக் கூறியதனால், இஃது ஏனையோர்க்கும், கொள்ளப்படும்.

**இலக்கணம்**

மறப்பினும் — உம்மை இடைச்சொல் (எதிர்மறைப் பொருளில் வந்தது)

அழுக்கா றுடையான் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு. (5)

**தெளிவுரை**

அழுக்காறு உடையவனிடத்தில் ஆக்கம் இல்லாதவாறு போல ஒழுக்கம் இல்லாதவனுடைய வாழ்க்கையில் உயர்வு இல்லை.

(அழுக்காறு உடையான் கண் — பொறாமை உடையவனிடத்தில்)

**விளக்கவுரை**

அழுக்காறு உடையான் ஆக்கம் போல என்ற உவமையால் ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்வு இல்லை எனபது குறிப்பு.

**இலக்கணம்**

அழுக்காறு — முதனிலை திரிந்த தொழிற்பெயர்; இல்லை — குறிப்பு வினைமுற்று.

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து (6)

**தெளிவுரை**

ஒழுக்கம் தவறுதலால் குற்றம் உண்டாவதை அறிந்து மனவலிமை உடைய சான்றோர் ஒழுக்கத்தில் தவறாமல் தம்மைக்காத்துக் கொள்வர்.

(ஓல்கார் — தவறமாட்டார்; உரவோர் — மனவலிமை உடையோர்; ஏதம் படபாக்கு அறிந்து குற்றம் உண்டாவதை அறிந்து)

**விளக்கவுரை**

கொண்டவிரதம் விடாமை பற்றி உரவோர் என்றார்.

**இலக்கணம்**

ஓல்கார் — பலர்பால் எதிர்மறை வினைமுற்று

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. (7)

**தெளிவுரை**

எல்லோரும் ஒழுக்கத்தால் மேம்பாடு அடைவர்; ஒழுக்கத்திலிருந்துதவறுதலால் அடையத்தகாத பெரும் பழியை அடைவர்.

(எய்துவர் — அடைவர்; இழுக்கத்தின் — ஒழுக்கம் தவறுதலால்)

**விளக்கவுரை**

பகை பற்றி, இல்லாத பழியைக் கூறி அதனையும் இழுக்கும் பற்றிஉலகம் பழி என்று கொள்ளுமாதலின் எய்துவர் என்றார். இவை ஐந்து பாட்டாலும் நல்லொழுக்கத்தால் அடையும் மேம்பாடும், தீயொழுக்கத்தால் அடையும் வழியும் கூறப்பட்டன.

**இலக்கணம்**

எய்துவர் — பலர்பால் வினைமுற்று எய்தா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பைத்தரும் (8)

**தெளிவுரை**

ஒருவனுக்கு "நல்லொழுக்கம" இன்பமான வாழ்க்கைக்குக காரணமாக இருக்கும்; தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தைக் கொடுக்கும்.

(இடும்பை — துன்பம்)

**விளக்கவுரை**

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" என்றதனால், தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலையும், தீயொழுக்கம் இடும்பைத்தரும் என்றதனால் நல்லொழுக்கம் இன்பம் தருதலையும் குறிப்பால் உணரலாம்.

**இலக்கணம்**

நல்லொழுக்கம், தீயொழுக்கம் — பண்புத் தொகைகள்

ஒழுக்க முடையவர்ச் சொல்லவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். (௯)

**தெளிவுரை**

மறந்தும் தீய சொற்களைத் தம் வாயால் சொல்வது என்பது ஒழுக்கமுடையார்க்கு முடியாதது ஆகும்.

(ஒல்லா — முடியாததால்; வழுக்கியும் — மறந்தும்)

**விளக்கவுரை**

தீய சொற்களாவன; பிறர்க்குத் தீங்கு தரும் பொய் முதலியனவும், உயர்குடிப் பிறப்பிற்கு உரியன அல்லாதனவும்

**இலக்கணம்**

சொலல் — தொகுத்தல் விகாரம்

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார். (10)

**தெளிவுரை**

உலகத்தோடும் பொருத்த ஒழுகும் முறையை கல்லாதவர், பல நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவரே ஆவார்.

(ஒட்ட ஒழுகல் — பொருந்த வாழ்தல்)

**விளக்கவுரை**

உலகத்தோடு ஒட்ட ஒழுகலாவது; உயர்ந்தோர் பலரும் ஒழுகிய வழியில் ஒழுகுதல். கல்விக்குப் பயன் அறிவும், அறிவிற்குப் பயன் ஒழுக்கமும் ஆதலால் அவ்வொழுகுதலைக் கல்லாதார், பலகற்றும் அறிவிலாதார் என்று கூறினார். இவ்விரு பாட்டாலும் சொல்லாலும், செயலாலும் வரும் ஒழுக்கங்கள் எல்லாம் ஒரு வழியாகத் தொகுத்துக் கூறப்பட்டன.

**இலக்கணம்**

ஒழுகல் — தொழிற்பெயர்.

## 5. ஒப்புரவறிதல்

(உலக நடையினை அறிந்து செய்தல்)

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு (1)

**தெளிவுரை**

தமக்கு நீர் தந்து உதவுகின்ற மேகங்களிடத்து உயிர்கள் என்ன கைம்மாறு செய்கின்றன. (கைம்மாறு எதுவும் செய்வதில்லை). ஆதலால் அம்மேகங்கள் போன்றவர் செய்யும் உதவிகளும் கைம்மாறு வேண்டாதவை.

(மாரிமாட்டு — மேகங்களிடத்து)

**இலக்கணம்**

வேண்டா — எதிர்மறை வினைமுற்று; கடப்பாடு — முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு (2)

**தெளிவுரை**

ஒப்புரவாளன் தன்னால் இயன்ற முயற்சி செய்து சேர்த்த பொருளெல்லாம் தக்கவர்க்கு உதவி செய்தற் பொருட்டே ஆகும்.

(தாளாற்றி முயன்று; வேளாண்மை — உதவி)

**இலக்கணம்**

தக்கார் — குறிப்பு வினையாலணையும் பெயர்

புத்தேழ் உலகத்தும் ஈண்டும்பெறலரிதே
ஒப்புரலின் நல்ல பிற. (3)

**தெளிவுரை**

தேவருலகத்திலும், இவ்வுலகத்திலும் ஒப்புரவு போல் நல்லனவாகிய பிற செயல்களைப் பெறுதல் அரிது.

(புத்தேழ் உலகு — தேவருலகம்)

**விளக்கவுரை**

இம்மூன்று பாட்டாலும் ஒப்புரவினது சிறப்புக் கூறப்பட்டது.

**இலக்கணம்**

புத்தேழுகத்தும்,ஈண்டும் — எண்ணும்மை

ஒத்த தறிவான் உயிர்வாற்வான் மற்றை யான்
செத்தாருள் வைக்கப் படும். (4)

**தெளிவுரை**

ஒப்புரவை அறிந்து (பிறர்க்கு உதவியாக) வாழ்கின்றவன் உயிர் வாழ்கின்றவன் ஆவான்; அஃது அறிந்து செய்யாதவன் உயிர் உடையவனே ஆனாலும் செத்தாருள் ஒருவனாக வைத்துக் கருதப்படுவான்.

(ஒத்தது அறிவான் — உலக நடையினை அறிந்து செய்வான்)

**விளக்கவுரை**

உயிரின் அறிவும் செயலும் காணாமையின் செத்தாருள் வைக்கப்படும் என்றார்.

**இலக்கணம்**

உயிர் வாழ்வான் வினையாலணையும் பெயர்; வைக்கப்படும், செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று.

ஊருணி நீர்நிறைந்த தற்றே உலகலாம்
பேரறி வாளன் திரு. (5)

### தெளிவுரை

ஒப்புரவினால் உலகம் வாழுமாறு செய்யும் பெரிய அறிவினை உடையவனது செல்வம், ஊரார், தண்ணீர் உண்ணும் குளம் நீரால் நிறைந்தாற் போன்றது.

(திரு — செல்வம்)

### விளக்கவுரை

ஊருணியில் உள்ள நீர் உலகத்தார் பலருக்கும் பயன்படுவது போல ஒப்புரவாளனின் செல்வம் பலர்க்கும் பயன்படும் என்பதாம்.

### இலக்கணம்

ஊருணி — காரணப்பெயர்; பேரறிவாளன் — பண்புத்தொகை

ஊருணி நீர் நிறைந்தற்றே — உவமை; உலகவாம் பேரறிவாளன்

திரு — உவமேயம் இப்பாடலில் பயின்று வரும் அணி உவமை அணி

பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம்

நயனுடைய யான்கண் படின். (6)

### தெளிவுரை

செல்வமானது ஒப்புரவு செய்வானிடத்தில் இருக்குமானால், அஃது ஊர் நடுவே இருக்கும் பயன்தரும் மரமானது பழுத்தாற் போன்றது.

(பயன்மரம் — பயன் மிகுந்த மரம்; நயனுடைய யான் — ஒப்புரவாளன்)

### இலக்கணம்

பயன்மரம் — இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை; உள்ளூர் — முன்பின் தொக்கது.

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் — உவமை; செல்வம் நயனுடையான் கண்படின் — உவமேயம் இப்பாடலில் வரும் அணி உவமை ஆகும்.

மருந்தாகித் தப்பா மரத் தற்றால் செல்வம்

பெருந்தகை யான் கண் படின். (7)

### தெளிவுரை

ஒப்புரவாகிய பெருந்தகைமை உடையவனிம் செல்வம் சேர்த்தால் அஃது எல்லா உறுப்புகளும் பிணிகளுக்கு மருந்தாகிப் பயன்படத் தவறாதாம் போன்றதாகும்.

(தப்பா மரத்தற்று — தப்ப மரத்தைப் போன்றது)

### விளக்கவுரை

'மருந்தாகித் தப்பா மரத்தற்று' என்றதனால் தன்குனை நோக்காது எல்லார் வருத்தமும் தீர்கசும் என்பதாம். இவை மூன்று பாட்டாலும் ஒப்புரவாளனின் செல்வம் பயன்படும் வழி கூறப்பட்டது.

இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கெல்லார்
கடனறி காட்சியவர். (8)

### தெளிவுரை

தாம் செய்யத்தகுந்த ஒப்புரவினை அறிந்த இயற்கை அறிவுடையார். செல்வம் கருங்கிய காலத்திலும் உதவி செய்வதற்கு தளரமாட்டார்.

(இவன் இல் பருவத்தும் — செல்வம் குறைந்த காலத்தும்; ஒல்கார் தளர மாட்டார்)

### விளக்கவுரை

பில் எல்லாம் அறிந்தாலும், ஒப்புரவு அழியாது என்பதாம்.

### இலக்கணம்

கடனறி காட்சியவர் — வினைத்தொகை

நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செமுநீர்
செய்யா தமைகள் வாறு. (9)

### தெளிவுரை

ஒப்புரவு செய்தலை உடையவன் மருமை உடையவன் ஆதல், செய்யத்தக்க உதவிகளைச் செய்யாமல் வருகின்ற தன்மையாகும்.

(நல்கூர்ந்தான் ஆதல் — வருமையுடையவன் ஆதல்; நீர் — தன்மை)

**விளக்கவுரை**

இவ்விரு பாட்டாலும் ஒப்புரவாளன் தான் வறுமையுடையவனாயினும் ஒப்புரவு செய்யும் தன்மையினின்றும் நீங்காதிருக்கவேண்டும் என்பது கூறப்பட்டது.

ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. (10)

**தெளிவுரை**

ஒப்புரவு செய்வதானால் ஒருவனுக்குப் பொருட்கேடு வரும் என்று எவரேனும் கூறுபவர் இருப்பாராயின், அக்கேடு தம்மை விற்றாவது வாங்கிக் கொள்ளும் தகுதியை உடையது.

(கோள் தக்கது — கொள்ளத்தக்கது)

**விளக்கவுரை**

தன்னை விற்றுக்கொள்ளப்படுவதொரு பொருள் இல்லையல்லவா அப்படியிருந்தும் புகழ் தருவது கருதி அதுவும் செய்யப்படும் என்றார்.

**இலக்கணம்**

கேடு, கோள் முதனிலை திரிந்த தொழிற்பெயர்

## வினாக்கள்

1. திருக்குறள் பற்றிக் குறிப்பு வரைக.
2. ஞாலத்தின் மாணப்பெரிது, கடலிற்பெரிது என வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்?
3. நன்றன்று, நன்று எனத் திருக்குறள் எவற்றைக் குறிப்பிடுகின்றது?
4. உய்வில்லை — யாருக்கு?
5. நடுவு நிலைமையாவது யாது?
6. வாணிகம் செய்வாரின் நல்லியல்பு யாது?
7. "ஆக்கம் அதனினூஉங்கில்லை" என்று வள்ளுவர் எதனைக் கூறுகின்றார்?
8. மலையினும் மாணப் பெரிது எது?

9. செல்வர்க்கே செல்வம் தகைத்து — விளக்குக.
10. ஆமையை உவமையாக்கி வள்ளுவர் கூறும் கருத்து யாது?
11. நாகாத்தலின் இன்றியமையாமையை விளக்குக.
12. வேற்றுமை அணிக்கு எடுத்துக்காட்டு தந்து விளக்குக.
13. உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?
14. ஒழுக்கத்தின் ஒல்கார் யார்?
15. ஒழுக்கம், இழுக்கம் இவற்றால் அடைவன யாவை?
16. ஒழுக்கமுடையார்கது ஒல்லாே ப எது?
17. பலகற்றும் அறிவிலாதார் என்று திருவள்ளுவர் யாரைக் குறிப்பிடுகின்றார்?
18. ஒப்புரவினது சிறப்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?
19. பயன்மரம்'மருந்தாகித் தப்பா மரம" — இவ்வுமைகளால் நீவிர் அறிவன யாவை?
20. அஃதொருவன் விற்று கோள் தக்கதுடைத்து எது?
21. செய்நன்றி அறிதல், ஒப்புரவறிதல் இவற்றை விளக்கு.
22. பிரித்தெழுதுக; ஆற்றலரிது, நன்றன்று, எந்நன்றி, சொற்கோட்டம், ஆரிருள், சொல்லிழுக்கு, அறிவிலாதார், தீச்சொல், மாசற்றார்.
23. இன்றியமையா இலக்கணக் குறிப்பு தருக. துறவற்க, எழு பிறப்பும், ஒழிய விடல், கேடு, கோடாமை, நடுவொரீஇ, கெடுவல், சமண்சொற்கோட்டமி, ஆரிருள், காக்க அதனினூங்கு, பணிதல், நாகாக்க ஒம்பி, அழுக்காறு, எய்தாப்பழி.
24. உவமை அணி, வேற்றுமை அணி இவ்றறை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

# பாடம் 4

## அறிவுரைப்பகுதி (தொடர்ச்சி)

## (ஆ) பழமொழி நானூறு

**நூல்**

பழமொழி பழமை + மொழி. பழமையான மொழிகளை உடைய நூல். இந்நூலின் செய்யுட்கள் ஒவ்வொன்றின் இறுதியிலும் ஒவ்வொரு பழமொழி அமைந்திருப்பதால் இந்நூல் 'பழமொழி' எனப்பெயர் பெற்றது. நானூறு செய்யுட்களைக் கொண்டமையால் பழமொழி 'நானூறு' எனவும் வழங்கப்பெறும். இது பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

**ஆசிரியர்**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | முன்றுரை அரையனாா |
| கலாம் | : | கடைச்சங்க காலம் |
| ஊர் | : | பாண்டி நாட்டில் முன்றுரை |
| சமயம் | : | சமணம் |

இவரைப் பற்றிய வேறு செய்திகள் ஒன்றும் தெரியவில்லை.

உணற்கினிய இந்நீர் புறதுமிஇல் லென்னும்
கிணற்றகத்துத் தேரைபோ லாகர் கணக்கினை
முற்றப் பகலும் முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று.

**தெளிவுரை**

குடிப்பதற்கு உரிய இனிய இக் (கிணற்று) நீர் (போல்) வேறு எவ்விடத்தும் இல்லை என்று (நினைத்து வாழும்) கிணற்றுத் தவளையைப் போல (நாம்) ஒழுகுதல கூடாது; (ஏனெனில்) ஒரே நூலை முழுவதும் நாள்தோறும் வெறுப்பின்றி நன்கு கற்று உணர்வதைக் காட்டிலும், (பல நூல்களையும் அறிஞர் பலரிடம்) கேட்டலே நல்லதாகும்.

**அருஞ்சொற் பொருள்**

(தேரை — தவளை; உணவிற்கு — குடிப்பதற்கு; பிறிது உழி — வேறு இடத்தில்; இல் — இல்லை; கணக்கினை — நூலை; முற்ற — முழுவதும்; முனியாது வெறுக்காது ஓதி — படித்தர்

**விளக்கம்**

ஒரு நூலை நாமே கற்றுத் தெரிந்து கொள்ள முயல்வதைவிடப் பல நூல்களையும் அறிஞர் பலரிடம் கேட்டறிதலே மேலானது ஆகும். கற்றலில்கேட்டலே நன்று என்பது பழமொழி. 'கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளர்ப்பு தெரியாது' என்பது இக்காலத்துக்கும் வழங்கும் பழமொழியாகும்.

**இலக்கணம்**

இனிய — பெயரெச்சம்; முனியாது — எதிர்மறை வினையெச்சம் கேட்டல் — தொழிற்பெயர்.

கல்வியா ணாய கழிநுட்பம் கல்லார்முன்
சொல்லிய நல்லவும் தீயவாம் எல்லாம்
இவர்வரை நாட தமரைஇல் லார்க்கு
நகரமும் காடு போன் றாங்கு

**தெளிவுரை**

எல்லோராலும் விரும்பப்படுகின்ற மலைநாட்டவனே! உறவினர் இல்லாக் காரணத்தால், (மக்கள் நிறைந்த) நகரமும் காட்டை ஒத்துக் காட்சியளித்தல் போன்று (கற்றவர், தம்) கல்வியினால் ஆகிய மிக்க நுண்ணிய அறிவால், கல்லாதவர் முன்னிலையில் சொல்லிய நல்ல பொருள்களும் தீயனவாய்க் காட்சி அளிக்கும்.

(கழி நுட்பம் — மிக்க நுண்ணிய அறிவு; இவர் — விரும்ப; இவர்தல் — விரும்புதல், வரை — மலை; தமரை — உறவினரை)

**விளக்கம்**

'தீயவாத' லாவது; கல்லார் தம் அறிவின்மையால் கற்றார் கூறிய நல்ல பொருள்களின் அருமையை அறியாது இகழ்தல் கற்றோர் கூறிய நன்மை தரும் பொருள்களை கல்லார் தமக்குத் தீமை தரும் பொருள்களாகக் கொள்வர் என்று

கூறினும் பொருந்தும். நல்ல பொருள்களைக் கல்லார் முன்னிலையில் சொல்லலாகாது என்று கருத்து தாமரை இல்லார்க்கு நகரமும் காடு போன்று ஆங்கு பழமொழி.

**இலக்கணம்**

கழி நுட்பம் — உரிச்சொற்றொடர்; சொல்லிய — பெயரெச்சம் இவர் வினைத்தொகை; இல்லார்க்கு — வினையாலணையும் பெயர்.

பெரியநட்டார்க்கும் பகைவர்க்கும் சென்று
திரிவுன்றித்தீர்ந்தார் போல் சொல்லி அவருள்
ஒருவரோ டொன்றி ஒருப்படா தாரே
இருதலைக் கொள்ளியென்பார்

**தெளிவுரை**

தம் நண்பர்க்கும், அவரது பகைவர்க்கும் (ஆகிய இவ்விருவரிடத்தும் சென்று (சிறிதும், பணி) வேறுபாடின்றித் தெளிந்த அனபுடையார் போன்று அவ்விருவருள் ஒருவரிடத்தேனும் மனம் பொருந்தி நில்லாத நயவஞ்சகர் இருபக்கனங்களிலும் சுடுகின்ற கொள்ளிக் கட்டைக்கு ஒப்பாவார்.

பெரிய — மிகவும்; நட்டார் — நட்புக்கொண்டவர்; திரிவின்றி — வேறுபாடின்றி; ஒன்றி — பொருந்தி; ஒருப்படாதார் — உறுதியாக நில்லாதவர்; கொள்ளி — கொள்ளிகட்டை)

**இலக்கணம்**

நீர்ந்தார் —வினையாலணையும் பெயர்; சொல்லி — வினையெச்சம்.

## (இ) திரிகடுகம்

இது கடைச்சங்க காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய இம்மூன்று பொருள்களின் பொடிக்குத் திரிகடுகம், என்பது பெயர். இத்திரிகடுகம் உண்டவர்களது உடல் நோயைப்

போக்கும் மருந்தாகும். அவ்வாறே, மூன்று நீதிகளைக் கொண்ட நூறு வெண்பாக்களால் ஆகிய இந்த நூலும், மக்கள் மனத்தில் எழுகின்ற அறியாமையாகிய நோயைப் போக்குகின்றமையால், திரிகடுகம் என்னும் பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் நல்லாதனார் என்பவர் ஆவார்.

தன்னை வியந்து தருக்கலுந் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும் — முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை (1)

## தெளிவுரை

ஒருவன் தன்னைத்தானே நன்கு மதித்துச் செருக்கொள்ளுதலும் அடக்கம் இல்லாமல் வீணாகச் சினத்தைப் பெருகச் செய்தலும், கருதிய பலவகைப் பொருள்களையும் விரும்புகின்ற சிறுமைத் தன்மையும் ஆகிய இம்மூன்றும் ஒருவனுடைய செல்வத்தை அழிக்கும் கருவியாகுமம்.

(கருக்கல் — அகங்கரித்தல்; வெகுளி — கோபம்; முன்னிய — கருதிய வெஃகுதல் — இச்சித்தல், உடைக்கும் — அழிக்கும்)

## விளக்கம்

தன்னைப் புகழ்த்து செருக்குவதும், வீணாகச் சினம் கொள்வதும, பிறர் பொருளை விரும்புவதும் செல்வத்தைத் தேய்க்கும் படைகளாம். தன்னை வியத்தலால் அடக்கமின்மையும், வெகுளி பெருக்கதலால் துணையாக இருப்பவர் பிரிவும், பல பொருளையும் விரும்புவதால் குற்றமும் விளங்கும். இம்மூன்றும் படை என்று உருவகிக்கப்பட்டன.

## இலக்கணம்

கொண் — பயன் இல்லாமையைக் குறிக்கும் இடைச்சொல்; வெகுளி — தொழிற்பெயர்; படை 'படு' என்னும் அடியாகப் பிறந்த தொழிற் பெயர்.

வைத்தலால்கென்னை இலாக் கொள்வானும் நெய்பெய்த
சோறென்று கூழை மத்பபாலும் — ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும் இம்மூவர்
மெய்பொருள் கண்டுவாழ் வார். (2)

## தெளிவுரை

ஒருவன் வைத்ததை இனிய சொல்லாகக்கொள்கின்றனவனும், நெய்வார்ந்த சோறு என்று கூழை மதிக்கின்றவனும் கைத்துன்ற பொருடை வெல்லக்கட்டி என்று உண்கின்றவனும் ஆகிய இம்மூவரும் உண்மையாகிய பரம்பொருளைக் கண்டு வாழ்பவர் ஆவர்.

## விளக்கம்

வன் சொல்லை மென் சொல்லாகவும், கூழைப் பாற்சோறாகவும், கைப்புணாவை இனிப்பு உணவாகவும் கருதுகின்றவர் மெய்ப்பொருள் உணர்ந்தவர் ஆவர் என்பது கருத்து.

## இலக்கணம்

வைத்தது வினையாலணையும் பெயர் ஆ 'ஆக' என்பதன் இறுதிதொக்கது ஊறிய, 'செய்ய' என்னும் வாய்ப்பாட்டு (எதிர்காண் வினையெச்சம்)

கண்ணுக் கணிகலன் கண்ணோட்டம் காமுற்ற
பெண்ணுக் கணிகலன் நாணுடைமை நண்ணும்
மறுமைக் கணிகலம் கல்விஇம் மூன்றும்
குறியுடையார் கண்ணே உள.

## தெளிவுரை

கண்களுக்கு அணியத்தக்க பூணாவது கண்ணோடுதல் : (கணவனால்) விரும்பப்பட்ட குலமகளுக்கு அணிகலனாவது நாணம் உடையவளாய் இருத்தல் பொருந்துகின்ற மறுபிறப்புக்கு அணிகலனாவது கல்வி அறிவுடையோராக இருத்தல், இம்மூன்றும் ஆராயும் இயல்பு உடையாரிடத்தில் உண்டு.

(அணிகலன் — ஆபரணம்; கண்ணோட்டம் — இரக்கம் கொள்ளுதல் — காமுற்று விரும்பப்பட்ட; நாணுடைமை — கற்படைமை பெண்டிர்க்கு உரிய அச்சம், மடம்,நாணம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்களுள் ஒன்று. நண்ணும் — பொருந்தும்).

## விளக்கம்

கண்ணோட்டத்தால் கண்ணும், நாணத்தால் பெண்ணும், கல்வியால் மறுமையும் அழகுபெறும் என்பதாம். கண்ணோட்டமாவது நன்னோடு பழகினவர் சொன்னவற்றை மறுக்கமாட்டாமை; எனினுமாம்.

## இலக்கணம்

கண்ணோட்டம் — காரண ஆகுபெயர்; உள — பலவின்பால் வினைமுற்று.

# (ஈ) நான்மணிக் கடிகை

## நூல்

நான்கு + மணி + கடிகை — நான்மணிக்கடிகை'பதுமராகம், நீலகந்தி' குருவிந்தம், கோவாங்கு என்னும் நான்கு மணிகளால் இழைக்கப்பட்ட கழுத்தணி கண்ணுக்கு இன்பம் அளிப்பதைபோல ஒவ்வொரு செய்யுளிலும் நந்நான்கு நீதிகளைக் கொண்ட இந்நூல் மனத்துக்கு இன்பம் அளிக்கும். கடவுள் வாழ்த்துடன் 10 செய்யுட்களைக் கொண்ட இந்நூலும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்வகையைச் சார்ந்தது.

## ஆசிரியர்

ஆசிரியர் : விளம்பிநாகனார்

சமயம் : இவரது கடவுள் வாழ்த்துப் பாடலால் இவர் வைணவர் என்று அறியலாம்.

காலம் : கி.பி; ஐந்தாம் நூற்றாண்டு என்பர். இவருடைய பிற வரலாறுகள் ஒன்றும் தெரியவில்லை.

கள்ளி வயிற்றின் அகில் பிறக்கும் மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி (1)

## தெளிவுரை

அகிற்கட்டை கள்ளி மரத்தின் நடுவில் உண்டாகும்; ஒளியுள்ள அரிதாரம்டதன வயிற்றில் உண்டாகும்: மிக்க விலையுடைய முத்துக்கன் பெரிய கடலினுள் பிறக்கும்; நல்ல மக்கள் பிறக்கும் குடியை முன்பே அறியவல்லவர் யார்? (யாருமில்லை என்பதாம்)

## விளக்கம்

(ஒன் — ஒளியுள்ள; (பல்விலைய — மிக்க விலையுடைய)

கள்ளி — சதுரக்கள்ளி; அகில் மரம் வேறே இருப்பினும், இக்கள்ளியினுள் உண்டாகும் உள்ளீடு அகில்போல் மணமுடைமையின் இதனையும் அகில் எனக்கொள்வர்.

எக்குடியினும் நல்லார் பிறத்தலைப் பழங்காலத்தும், இக்காலத்தும் காண்கின்றமையால் அவர் பிறக்கும் குடி இதுதான் என்று துணிந்து அறிதல் இயலாமையின் அறிவார் யார் என்றார். எக்குடியினும் தன் மக்கள் தோன்றுவர் என்பது கருத்து.

## இலக்கணம்

விலைய — குறிப்புப் பெயரெச்சம்; ஆள் நல்லியல்புகளை ஆளும் நன்மக்களுக்குப் பெயராய் வந்தமையால், தொழிலாகுபெயர்.

திருவொக்குந் தீதில் ஒழுக்கம் பெரிய
அறனொக்கும் ஆற்றின் ஒழுகல் பிறனைக்
கொலையொக்குங் கொண்டுகண் மாறல் புலையொக்கும்
போற்றாதார் முன்னர்ச் செலவு (2)

## தெளிவுரை

தீமை கலவாத நலலொழுக்கம் செல்வத்துக்குச் சமமாகும் முறைப்படி ஒழுகுதல் (வாழ்தல்) சிறந்த அறச்செய்கைக்குச் சமமாகும். பிறன் ஒருவனை நட்பாகக் கொண்டு பின்பு அந்நட்பு மாறிப் புறங் கூறுதல் அவனைக் கொலை செய்வதற்குச் சமமாகும். தம்மை மதியாதவரிடத்தில் சென்று நயத்தில் இழிதகைமைக்குச் சமமாகும்.

திரு ஒக்கும் — செல்வத்தை ஒக்கும் : ஆற்றின் — முறைப்பழ, புலை — இழிவு

## விளக்கம்

நல்லொழுக்கம் செல்வம் போன்றது; முறையான இல்லற துறவம் போன்றது. பிறரைப் புறங்கூறுதல் அவரைக் கொலை செய்வதைப் போன்றது. தம்மை மதியாரைத் தாம் மதித்தல் இழிதகைமையாகும். பெரிய அறமாவது துறவறம் ஆற்றின், இல்லற ஆற கணமாறலாவது: கருத்து மாறல்.

இன்னாமை வேண்டின் இரவெழுக இந்நிறத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக தன்னோடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல். (3)

ஆண்ட திருமலை நாயக்கரின் விருப்பப்படி நீதிநெறி விளக்கம் எழுதப்பட்டது.

இவர் மீனாட்சியம்மை பிள்ளை தமிழ் மதுரைக் கலம்பகம் சகலகலாவல்லி மாலை முதலிய பல சிறந்த தமிழ் நூல்களை இயற்றியுள்ளார்.

தத்தம் நிலைக்கும் குடிமைக்கும் தப்பாமே
ஒத்த கட்பாட்டில் நாளுூன்றி — எய்த்தும்
அறங்கடையிற் செல்லார் பிறன் பொருளும்வெஃகார்
புறங்கடையை தாகும் பொருள். (1)

## தெளிவுரை

தத்தமக்குரிய நிலைமையிலும் குலவொழுக்கத்திலும் தவறாது இயைந்த முறையில் முயற்சி செய்து, மறந்தும் கூடப் பாவ நெறியில் செல்லாமல், பிறருடைய பொருளையும் விரும்பாதவருடைய தலைவாயிலிடத்தே பொருள் தானே வந்து கைக்கூடும்.

(ஒத்த பொருத்தமான; தாள் ஊன்றி... முயற்சி செய்து; அறங்கடை பாவநெறி; வெஃகார்... விரும்பமாட்டார்; புறங்கடை தலைவாசல் (வீட்டின் முன்வாசல்)

## விளக்கம்

குல ஒழுக்கம் குறைவுபடாமலும், பிறருடைய பொருள்மேல் ஆசை வையாமலும் தம் முயற்சியால் பொருள் தேடுவோர்க்கு அவருடைய அறநெறி கண்டு அகமகிழ்ச்சி கொள்ளும் அறக்கடவுள். அன்னார் புறங்கடையில் எளிதில் பொருள் குவிப்பார் என நன்னெறியின் முயற்சியால் பொருள் சேர்க்கும் பெருமையை ஆசிரியர் புகழ்கிறார். தீயவழிகளில் அல்லாது தமது நிலைமைக்கும் குடிமைக்கும் பொருந்திய நல்வழியில் பொருள் தேடுவோர்கச்குப் பொருள் எளிதில் கைக்கூடும் என்பது கருத்து.

## இலக்கணம்

சொல்லார், வெஃகார் — வினையாலணையும் யெர்கள்

வள்ளன்மை இல்லாதவன் செல்வத்தின் மற்றையோன்
நலகுரவே போலும் தனிதல்ல — கொன்னே
அருளிலன் அன்பிலான் கண்ணறையன் என் -
பலரால் இகழப் பட்டான். (2)

**தெளிவுரை**

பிறர்க்குக் கொடுக்கும் குணம் அல்லாதவனுடைய செல்வத்தை விட கொடுக்கும் குணம் உடையவனுடையே வறுமையே மிகவும் நல்லது. (ஏனனில் அவ்வறியவன் உயிர்களிடத்தில்) கருணை இல்லாதவன் என்றோ, அன்பு இல்லாதவன் என்றோ, கண்ணோட்டமில்லாதவன் என்றோ பலராலும் வீணே பழிக்கப்படமாட்டான்.

(நல்வரவு — வறுமை; நனி — மிகவும். சொன்னே......
வீணே கண்ணறையன் — கண்ணோட்டம் இல்லாதவன்)

**விளக்கம்**

ஈயாத செல்வர் உலகத்தினரால் பழிக்கப்படுவர் என்பது கருத்து ஈயாத செல்வர் இருந்தென்ன போயென்ன என்னும் இழிவு இங்கு நோக்கத்தக்கது.

**இலக்கணம்**

கொடுக்கும் தன்மை இல்லாதவன் இகழப்படுவான் என்பதனால் கொடையான் புகழப்படுவான் என உய்த்துணரவைப்பதால், மாறுபாடு புகழ்நிலை அணி ஆகும்.

சிறுமுயற்சி செய்தால் குறுபயன் கொள்ளப்
பெறுமெனில் தாழ்வரோ தாழார் அறனல்ல
எண்மைய வாயினுங் கைவிட் டிரிதெனினும்
ஒண்மையில் தீர்ந்தொழுக லார் (3)

**தெளிவுரை**

செய்வதற்கு எளியனவாக இருப்பினும், அறநெறிக்குப் பொருந்தாத தீயசெயல்களைச் செய்யாமல் இருக்க வேண்டும். செய்வதற்கு அரிதாக இருந்தபோதிலும், அறநெறியை விட்டு விலகாமல் அதனைச் செய்து அதன் பயனை அடைய வேண்டும். அவ்வாறு பயனடையும் அறிஞர் சிறிய முயற்சி செய்து அம்முயர்சியால் மிகுந்த பயனை அடையக் கூடுமானால் அம்முயற்சியைச் செய்ய பின்வாங்குவார்களா? (பின் வாங்கமாட்டார்)

(உறுபயன்... அடையும் பயன்; எண்மையவாயினும்... எளிதாக இருப்பினும், ஒள்மை... நன்னல்)

சிறு முயற்சி சொல்வண்டையால் உண்டாகும். பயன் போன்றவை அம்முயற்சி எளிது. ஆதலால் சிறு முயற்சி என்றும், மனம் நல்வழிச் சென்று செய்யும் அறச் செய்கை யார்கதும் அரிது. ஆகையால் அதனை அரிது என்றும் கூறினார.

செய்வதற்கு அறிய அருஞ்செயல் செய்து பெரும்; பயன் பெறும் அறிஞர் சிறு முயற்சியை பெரும் பயன் அடைய வழி இருக்கும்போது அம்முயற்சியை விரைந்து செய்து நலமுறப பின்வாங்க மாட்டார்கள் என்பது கருத்து.

## இலக்கணம்

சிறுமுயற்சி — பண்புத்தொகை; உறுபயன் — உரிச்சொற்றொடர் தாழ்வரோ — ஒகார இடைநிலை எதிர்மறைப் பொருளில் வந்தது.

# (௩) நீதிவெண்பா

## நூல்

நீதிகளை உணர்ததும் வெண்பாக்களால் ஆகிய நூல் ஆதலின் இந்நூல் இப்பெயர் பெற்றது. இதனை இயற்றினார் இன்னாரென்பது தெரியவில்லை.

அறிவன் பகையேனும் அன்புசேர் நட்பாஞ்
சிறுவன் பகையாம் செறிந்த அறிவுடைய
வென்றி வனசரன்தான் வேதியினைக் காத்தான்முன்
கொன்றதொரு வேந்தைக் குரங்கு (4)

## தெளிவுரை

முன்னொரு காலத்தில் மிகுந்த அறிவும் வெற்றியும் உடைய (பகைவனான) வேடன், பார்ப்பனன் உயிரைக் காப்பாற்றினான். ஒரு குரங்கு ஓர் அரசனை (அறிவில்லாமையால்) கொன்று விட்டது. (அதுபோல), அறிவுடையோன் பகைவன் ஆனாலும் அன்போடு கூடிய நண்பனாக ஆவான். (ஆனால்) அறிவில்லாதவன் (நண்பனாக இருந்தாலும்) பகைவனாக ஆகிவிடுவான்.

(வனசரன் — காட்டில் வாழ்பவன் (வேடன்)

பகை என்பது பகைவனைக் குறிப்பது போல நட்பு என்பது நண்பனைக் குறித்தது. அன்சேர் நட்பாவது அறிவுடையோர் ஒருவர்க்கொருவர் ஏதாவது ஒன்று குறித்துப் பகைவர் போல் ஆனாலும் நமக்குள் இருக்கும் அன்பை விட மாட்டார்கள் என்பதாம். அறிவில்லாதவர்களின் நட்பைவிட, அறிவுடையவர்களில் பகைமை நல்லது என்பது கருத்து

## வேடன் கதை

பார்ப்பான் ஒருவன் தான் ஓர் அரசனிடத்தில் பெற்ற மாணிக்க மணியைக் கையில் வைத்துக் கொண்டால் எவரேனும் பிடுங்கிக் கொள்வார்கள் என்று நினைத்து வாயில் போட்டு விழுங்கி விட்டான். பின்பு ஒரு சமயம் கக்கி எடுத்துக் கொள்ளலாம் என்பது அவன் எண்ணம். இதை அறிந்த வேடன் ஒருவன் அந்தப் பார்ப்பான் தன் ஊருக்குப் போகும்பொழுது கூடவே போய் நடுக்காட்டு வழியில் அவனை மடக்கி உன் வயிற்றிலிருக்கும் மாணிக்கத்தைக் கக்கு என்றான், பார்ப்பான் 'மாணிக்கம் உன் வயிற்றில் தானே இருக்கிறது' என்று வேடனை கேட்டான். இவர்கள் இப்படிச் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் பொழுது, திருடர்கள் வந்து பார்ப்பானைப் பிடித்துக் கொண்டு மாணிக்கத்தைக் கக்கச் சொன்னார்கள். வேடன் அறிவுள்ளவன். ஆதலால் அவன் பகைவன்; ஆனாலும் அந்தப் பார்ப்பானிடத்தில் அன்பும், இறக்கமும் கொண்டு அவன் உயிரைக் காக்க எண்ணித் திருடர்களைப் பார்த்து ஐயா நாங்கள் வேடிக்கைக்குப் பேசிக் கொண்டோம்; வயிற்றில் மாணிக்கம் இருக்கும்; வேண்டுமானால் என் வயிற்றைக் கீறிப்பார்த்து மாணிக்கம் இல்லாதது கண்டு ஆ இவனை வீணாகக் கொன்று விட்டோமே, இந்தப் பார்ப்பானையாவது விட்டு விடுவோம் என்று எண்ணி அவனை விட்டு விட்டார்கள். பார்ப்பான் உயிர் பிழைத்தான். பார்ப்பானுக்கு வேடன் முதலில் பகைவனாயிருந்தாலும், அவன் அறிவுடையவன். ஆதலால்'அன்புசேர் நட்டையே' கொண்டான் என்பது பழங்காலம் முதல் வழங்கும் கதையாகும்

## குரங்கின் கதை

அரசன் ஒருவன் தான் வளர்த்து வந்த குரங்கிடத்தில் கத்தியைக் கொடுத்து இங்கு யாரும் வராமல் பார்த்துக் கொள் என்று சொல்லித் திட்டம் செய்துவிட்டுப் படுத்துக் கொண்டான்.அவன், தூங்கும் பொழுது அவன் மேலே

ஓர் ஈ வந்து உட்கார்ந்தது. அறிவில்லாத அக்குரங்கு பார்த்தது. அரசன் இந்த ஈயைக் கொல்லத்தான் கத்தியைக் கொடுத்தான் என்று நினைத்து அந்த ஈயை கொல்ல போயிற்று ஈ பறந்து விட்டது. அரசன் இருதுண்டாக வெட்டுடண்டான் அரசனுக்குக் குரங்கு நட்பு ஆனாலும் அறிவில்லாமையால் பகைவன் போல் ஆகிவிட்டது.

## இலக்கணம்

சேர் நட்பு — வினைத்தொகை வெற்றி — என்று வலித்தல் விவகாரம் காத்தான் — வினையாலணையும் பெயர்.

ஆனை மருப்பும் அருங்கவரி மான்மயிருங்
கான வரியுங் கற்றோரும் மானே
பிறந்தவிடத் தன்றோ சிறப்பு (2)

## தெளிவுரை

மான் போன்ற விழியுடைய பெண்ணே! யானையின் கொம்புக்கும் அருமையான கவரிமானின் மயிருக்கும், காட்டில் வாழும் புலியின் நகத்திற்கும் கற்றோர்க்கும், தோன்றிய இடங்களில் அல்லாமல் வேற்று நாடுகளில் நாம் சேர்ந்த இடங்களில் அன்றோ பெருமை!

(மருப்பு கொம்பு; கான வரியுகிர் காட்டில் வாழும் புலியினுடைய நகம்)

## விளக்கம்

மருப்பும்; மயிரும்; உகிரும்; அவ்விலங்குகளால் போற்றப்படாமையின் அவற்றிற்கும் பிறந்த இடத்துப் பெருமை இல்லை. கற்றோர்க்கு வேற்றூர்களில் மிகச் சிறப்புண்டு என்பது கருத்து.

## இலக்கணம்

ஆனை மருப்பு, கவரிமான் மயிர், வரியுகிர் — ஆறாம் வேற்றுமைத் தொகைகள் அருங்கவரிமான்...... பண்புத்தொகை

தலைமயிருங் கூருகிரும் வெண்பல்லுந் தத்தம்
நிலையுடைய மாணவரு நிற்குநிலை தவறாத்
தானத்திற் பூச்சியமே சாரு நிலை தவறுந்
தானத்திற் பூச்சியமோ தான் (3)

## தெளிவுரை

தலையின் மயிருக்கும், கூர்ய நகத்திற்கும், வெண்மை நிறமுடைய பல்லுக்கும் தமக்கென ஒரு நிலையுடைய மானமுடைய பெரியோருக்கும் தாம் நிற்கின்ற நிலையினின்றும் தவறிப் போகாத இடத்தில் புகழுண்டு; தாம் சேர்ந்த அந்த உயர்ந்த நிலையிலிருந்து தவறுமிடத்தில் புகழ் உண்டோ? (புகழ் இல்லை)
(உகிர்.... நகம், தானா....இடம்)

## விளக்கம்

நின்ற நிலையினின்றும் வழுவாமை, மனம், மயிரும் உயிரும் பல்லும் தம் நிலையில் நின்றால் முறையே எண்ணெயும், நிறமும் பொடியும் பெற்றுப் பெருமை அடைதலும், தவறினால் இழிவு எய்துவர். இதனைத் திருவள்ளுவர் 'தலையின் இழிந்த மயிர் அனையர் மாந்தர் நிலையின் இழிந்த கடை' என்பார் திருவள்ளுவர். எனவே தாம் நிற்கும் நிலையினின்றும் தாழலாகாது என்பதும் கருத்து.

## இலக்கணம்

கூருகிர், வெண்பால் — பண்புத்தொகைகள்; தவறாத் தானம் — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

## குறிப்பு வரைக

1) பழமொழி நானூறு, திரிகடுகம், நான்மணிக்கடிகை.

2) 'கற்றலில் கேட்டலே' நன்று என்பதைப் பழமொழி எவ்வாறு விளக்குகிறது?

3) இருதலைக் கொள்ளியை உவமையாக்கிப் பழமொழி உணர்த்தும் கருத்து யாது?

4) 'செல்வம் உடைக்கும் படை' எனத் திரிகடுகம் எவற்றைக் குறிப்பிடுகின்றது.

5) மெய்பொருள் கண்டு வாழவார் மூவர் எவர்?

6) "நல்லான் பிறக்கும் குடியை அறிவார் எவருமிலர்:
என்பதைநான் மணிக்கடிகை கொண்டு விளக்குக.

7) எவை எவை வேண்டிய என்னென்ன—செய்ய
வேண்டும்?

8) நீதி நெறி விளக்கத்தின் ஆசிரியர் யார்? அவரைப்பற்றி
நீவிர் அறிவன யாவை?

9) புறக்கங்கடையதாகும் பொருள்— எப்போது?

10) வள்ளன்மை இல்லாதவன் செல்வத்தின் மற்றையான்
நல்குரவே நன்று என்று ஆசிரியர் கூறக் காரணம்
என்ன?

11) அறிவில்லாதவன் நண்பனாக இருந்தாலும்,
பகைவனாக ஆகிவிடுவான் என்பதை நீதிவெண்பா
எவ்வாறு விளக்குகிறது.

12) பிறிதொரு தேசத்தை செறிந்த விடத்துச் சிறப்பு என
நீதி வெண்பா எவற்றைக் கூறுகின்றது?

13) எவை எவை நிலை தவறாத் தான்த்தில் பூச்சியம்
பெறும்?

# பாடம் 5
# சிலப்பதிகாரம்

## கதைப்பகுதி

### நூல்

சிலப்பதிகாரம்:" சிலம்பால்அதிகரித்த கதையைக் கூறும்நூல் சிலம்பாவது அணிந்து கொள்ளும் ஒருவகை அணியாகும். சிலப்பதிகாரம்ஐம்பெருங்காப்பியங்களுள்ஒன்றாகும்ஐம்பெருங்காப்பியங்கள்: சிலப்பதிகாரம்,மணிமேகலை,சீவகசிந்தாமணி,வளையாபதி,குண்டலகேசி என்பனநெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாரதியாரால்புகழப்பட்ட இந்நூல்பூம்புகார்,மதுரை,வஞ்சி என்னும்மூன்று காண்டங்களையும் மும்பது காதைகளையும் உடையது (பாடப்பகுதி இருபதாவது காதையான வழக்குரை க்ாதையாகும்).

### ஆசிரியர்

சிலப்பதிகாரத்தைஇயற்றி' ‌ வர்இளங்கோவடிகள்ஆவார்.அவர் தந்தைநெடுஞ்சரலாதன்சேரமன்னன்;தாய்நற்சோணை;தமையன்செங்குட்டுவன்; நூலாசிரியா இளமையிலேயே துறவுபூண்டமையால் இளங்கோ!அடிகள் எனப்பட்டார். காலம்கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.முன்கதைச் சுருக்கம்சோழ நாட்டில் புகார் என்னும் காவிரி பூம்பட்டினத்தில் கோவலன் கண்ணகி திருமணம் நடைபெற்றது.மாதவியின் நடன அரங்கேற்றம் காணச்சென்ற கோவலன் அவன்பால் விருப்பம் கொண்டு அவளுடன் வாழத்தலைப்பட்டான். சிலகாலம் சென்ற பின்னர் இந்திரவிழாவின் போது,கானல்வரிப்பட்டால் கோவலனுக்கும் மாதவிக்குமிடையே கருத்து வேறுபாடு தோன்றியது அதனால் கோவலன் மனம் வருந்தி கண்ணகியிடம் சென்றடைந்தான்.

கண்ணகியின் காற்சிலம்பை விற்று, அதனால் கிடைக்கும் பொருளை முதலாகக் கொண்டு வாணிகம் செய்யும் நோக்கோடு கோவலன் கண்ணகி இருவரும் கவுந்தியடிகள் துணையுடன் மதுரைக்கு வந்தனர். அங்கு கண்ணகி புறஞ்சேரியில் மாதவி வீட்டில் இருக்க கோவலன் கண்ணகியின் சிலம்பு ஒன்றினை விற்றுவரப் புறப்பட்டான். பொற்கொல்லன் சூழ்ச்சியால் கோவலன் கொல்லப்பட்டான், அதனை அறிந்த கண்ணகி பாண்டியனது அரண்மனை வாயிலை அடைந்தாள்.

### வழக்குரை காதை

மதுரையில் கணவனை இழந்த கண்ணகிபாண்டியன், நெடுஞ்செழியன் கோவலனை கொலைசெய்வித்தது முறையன்று என்பதை நிறுவி மன்னனிடம்வழக்குரைத்ததையும், தன் தவறுணர்ந்து மன்னன் உயிர் நீத்ததையும் உணர்த்துவது வழக்குரைக்காதை ஆகும். இக்காதை மதுரைக் காண்டத்தில் உள்ளது. காதை கதைப்பகுதி.

### கோப்பெருந்தேவி கண்ட கனவு

ஆங்கு
குடையோடு கோல்வீழ நின்று நடுங்கும்
கடைமணியின் குரல் காண்பேன்—காண், எல்ல!
திசை இரு நான்கும் அதிர்ந்திடும் அன்றிக்
கதிரை இருள் விழுங்கக் காண்பேன்—காண். எல்ல!
இருங்கொடி வில்லிர; வெம்பசல் விழும்
கடுங்கதிர் மீன் இவை காண்பேன் —காண், எல்ல? (7)

### அருஞ்சொற்பொருள் (13-12 அடிகள்)

குடை—வெண்கொற்றக்குடை கோல்—செங்கோல்; நடுங்கும்—அசையும்; கதிரை—சூரியன்; மீன்—நட்சத்திரம்.

### தெளிவுரை (13.12 அடிகள்)

"தோழி! நம் மன்னரது வெண்கொற்றக் குடையோடு செங்கோலும் கீழேவிழ" இடைவிடாது அசையும் கடைவாயில் மணியின் ஓசையினையும் கனவிலே யான் கண்டேனடி; எட்டுத்திசைகளும் (அப்போது அதிர்ந்தன. மேலும் கதிரவனை இருள் விழுங்கவும் கண்டேனடி! இரவில் வானத்தில் வானவில்

தோன்றக் கண்டேன். கொடிய வெப்பம் தரும் (நண்) பகற் பொழுதிலே விண்மீன்கள் எரி கொள்ளிகளாக நிலத்தை நோக்கி விழவும்கண்டேனடி.

இலக்கணக் குறிப்பு

வெம்பகல், கடுங்கதிர் — பண்புத்தொகைகள் — தன்மை ஒருமை வினைமுற்று.

செங்கோலும் வெண்குடையும்
சொறிநிலத்து மறிந்து வீழ்தரும்
நம்கோன் நன் கொற்ற வாயில்
மணிநடுங்க, நடுங்கும் உள்ளம்
இரவு வில்லிடும் பகல்மீன் விழும்
இருநான்கு திசையும் அதிர்ந்திடும்
வருவதோர் துன்பம் உண்டு
மன்னவற்கு யாம் உரைத்தும்

அருஞ்சொற்பொருள் (8-12 அடிகள்)

"செங்கோலும் வெண்கொற்றக் குடையுள் சொறிந்த நிலத்தின் கண்மடங்கிக் கீழே விழுந்தன. நம் மன்னரது அரண்மனை வாயிலின் கண்மணியானது நடுங்க என் உள்ளமும் நடுங்கயது; இரவிலே வானத்தில் வில்லிட்டதையும் பகற்காலத்து விண்மீன்கள் எரிந்து கீழே விழுந்ததையும் எட்டு திசைகளும் அதிர்ந்ததையும் கண்டேன்; ஆதலின் நமக்கு வரக்கூடியதுன்பமும் ஒன்று உண்டு; அதனை நம் மன்னவர்க்கு யாம்சென்று கூறுவோம்" என்று கோப்பெருந்தேவி எழுந்து மன்னர் இருக்குமிடம் நோக்கிச் சென்றாள்.

விளக்கம்

கனாவில் கண்டது பலிக்கும் என்ற நம்பிக்கை பழங்காலத் தமிழரிடம் இருந்தது என்பதை அறிக.

## இலக்கணக்குறிப்பு

செங்கோல், வெண்குடை —பண்புத் தொகைகள்;உரைத்தும் — தன் பன்மை வினைமுற்று; செங்கோலும், வெண்குடையும் — எண்ணும்மை.

அரசின் வருகையும் தீக்ககனா யற்றி உரைத்தும்

ஆடி ஏந்தினர் கலன் ஏந்தினர்
அவிர்ந்து விளங்கும் அணிஇழை யினர்
கோடி ஏந்தினர் பட்டு ஏந்தினர்
கொழுந்திரையலின் செப்பு ஏந்திலர்
வண்ணம் ஏந்தினர் கண்ணம் ஏந்தினர்
மான் மதத்தின் சாந்து ஏந்தினர்
கண்ணி ஏந்தினர் பிணையல் ஏந்தினர்
கவரி ஏந்தினர் தூபம் ஏந்தினர்
கூனும் குறளும் ஊமும் கூடிய
குறுந்தொழில் இளைஞர் செறிந்து சூழ்தர
நரை விரைஇய நறுங் கூர் லர்
உரை விரைஇய பலர் வாழ்த்திட
"ஈண்டுநீர் வையம் காக்கும்
பாண்டியன் பெருந்தேவி வாழ்க' என
ஆயமும் காவலும் சென்று
அடியடி பரசி ஏத்தக
கோப் பெருந்தேவி சென்று தன்
தீக்கனாத் திறம் உரைப்பட.

அருஞ்சொற்பொருள் (18-12 அடிகள்)

ஆடி — கண்ணாடி, கலன் — அணிகலன், மான் மதத்தின் சாந்தி கத்தூரி, குறளும் — குட்டையாண்வரும்; விரைஇய — கலந்த; ஆயம்— தோழர் கூட்டம்.

தெளிவுரை (18-21 அடிகள்)

(அப்போது அரசியைத் தொடர்ந்து கண்ணாடி ஏந்தி வந்தனர். சிலர் அணிகலன் ஏந்தி வந்தனர் சிலர்; ஒளி விளங்கும் அழகி கலன்களைத்தாங்கி பூண்டவராக வந்தனர் சிலர்;

புண்டவராக வந்தனர் சிலர்.பருத்தி நூலாடையும், பட்டு நூலாடையும் ஏந்து வந்தனர்சிலர்; கொழுவிய வென்னிலைச் செப்பினை ஏந்தி வந்தனர் சிலர்;வண்ணமும் சுண்ணமும், கத்தூரிக் குழம்பும் ஏந்தி வந்தனர் சிலர்; கண்ணி, பிணையல் மாலை, கவரி, அகிற்புகை முதலியன ஏந்தி வந்தனர் சிலர். கூனராயும், குறவராயும் கூடிய குற்றேவல் மகளிர் பலரும் அவ்வாறே நெருங்கிச் சூழ்ந்து அரசியுடன் வந்தனர். நரைமுடி கலந்து நறுங்கூந்தலையுடைய முகமகளிர் பலரும் இவ்கையகம் காக்கும் தம் பாண்டிய மன்னனின் பெருந்தேவி வாழ்க!?என வாழ்த்தினர். தோழியரும் அந்தப்புற காவல் மகளிரும் (கோப்பெருந்தேவி) அடியெடுத்து வைக்கும் தோறும் அவளைப் புகழ்ந்து போற்றியவாறே வந்தனர்.(இவ்வாறு பரிவாரம் சூழ) கோப்பெருந்தேவியானவள் பாண்டியனிடம் சென்றுதான் தீக்கனவிலே கண்டவற்றையெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

**விளக்கம்**

தேவி மன்னரைக் காணத் தம் பரிவாரம் சூழச் செல்வது பண்டைய வழக்கம்.

**இலக்கணம்**

அணி — காரணப் பெயர், கொழுத்திரையில் — குறுந்தொழில் பெருந்தேவி, தீக்கனா— பண்புத் தொகைகள்; விரை இய — சொல்லிசை அளபெடை; ஆயமும், காவலும் — எண்ணும்மை (22—29) அடிகள்

**பாண்டியன் அரசு வீற்றிருத்தல்**

அரிமா னேந்திய அமளிமிசை இருந்தனன்
திருவீழ் மார்பிற் றென்னவர் கோவே; இப்பால்

**கண்ணகி வாயிற் காவலனிடம் கூறுதல்**

வாயி லோயே! வாயி லோயே
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்
திறைமுறை பிழைத்தோன் வாயிலோயே
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளென்
றறிவிப் பாயே? என

## (22—29 அடிகள்)

## அருஞ்சொற்பொருள்

திருவீழ்மார்பு திருமகள் விரும்பும் மார்பு, தென்னவர்க்கோ— பாண்டியமன்னன் (நெடுஞ்செழியன்) அரிமான் ஏந்திய அமளி— சிம்மாசனம்; அமளி—இருக்கை; வாயிலோயே— வாயிற்காப்பவனே;அறிவறை போகிய— அறிவு கெட்டுப்போன பொறி அனு அறிவு நினைவு அற்ற இறைமறை— அரசநீதி; அரி—சிலம்பின் உள்ளே இருந்த பால்; கடையகம்—வாயில்.

### தெளிவுரை அடிகள் (22-29 அடிகள்)

திருமகள் விரும்பும் மார்பினை உடைய பாண்டியன் நெடுஞ்செழியன் அரியணையில் அமர்ந்திருந்தான்.

கண்ணகி தனது ஒற்றைச் சிலம்பினைக் கையில் ஏந்திக் கொண்டு பாண்டிய மன்னனுடைய அரண்மனை வாயிலை அடைந்து, வாயிற காப்பவனை நோக்கி, "அறிவு அற்றுப்போன அறநினைவற்ற உள்ளத்தை உடைய பாண்டிய மன்னனது வாயிற்காப்பவனே!(உனது தவறானநீதியால் ) தன் கணவனை இழந்த பெண்ணொருத்தி மாணிக்கப் பரங்களை உடைய சிலம்பு ஒன்றினைக் கையில் ஏந்திக் கொண்டு அரண்மனை வாயிலினிடத்து நிற்கின்றான் என்று பாண்டிய மன்னனிடம் இப்பொழுதே தெரிவிப்பாயாக" என்று கூறினான்.

### விளக்கம்

இணையில் சிலம்பு கோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பினை ஒத்த சிலம்பு.

### இலக்கணக் குறிப்பு

அரிமான்— இருபெயரொட்டும் பண்புத்தொகை; வீழ்மார்பு— வினைத்தொகை; வாயிலோயே — அடுக்குத் தொடர் அறிவிப்பாயே— அறிவிப்பாயே — அடுக்குத்தொடர்; வாயில் — இல்வாய்; என்பதன்இலக்கணப் போலி;

## பகுபத உறுப்பிலக்கணம்

ஏந்திய= ஏந்து + (இன்) + ய் + அ; இன்—இறந்தகால இடைநிலை புணர்ந்து கெட்டது; ய் —சந்தி; அ—பெயரெச்ச விகுதி. இழந்தாள்= இழ + த்—(ந்) + ஆள்; இழ—பகுதி; த்—சந்தி; ந் விகாரம்; த்—இறந்தகால இடைநிலை; ஆள்—பெண்பால்வினை,

வாயிற்காவலன் அரசனுக்கு அறிவித்தல்

வாயிலோன் வாழியெங் கொற்கை வேந்தேவாழி!
தென்னம் பொருப்பிற் றலைவ வாழி!
செழிய வாழி! தென்னவவாழி!
பழியொடு படராப் பஞ்சவ வாழி!
அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்;
அறுவர்க்கிளைய நங்கை இறைவனை
ஆடல் கண்டருளிய அணங்கு சூருடைக்
கானக முகந்த காளி தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணுமல்லள்;
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளே
கணவனை இழந்தாள் கடையகத் தாளே? என

அருஞ்சொற்பொருள் (35–41 அடிகள்)

கொற்கை வேந்தே — கொற்கை நகர அரசே; தென் அம் பொருப்பு தெற்கிலுள்ள பொதியமலை; வாழி — வாழ்க; பழியொடு — படரா பழியோடு பொருந்தாத; பஞ்சவ — பாண்டியனே; குருதி — இரத்தம்; பசுந்துணி — புதிய துண்டம்; தடக்கை — பெரியகை; கொற்றவை — துர்க்கை; அணங்கு தெய்வப்பெண்; சூர் உடை — தாருகன் என்ற அசுரனின் பெரிய மார்பை செற்றனள் — பழிவாங்கும் உணர்ச்சி உள்ளவள்; செயிர்த்தனள் — சினம் கொண்டவள்; ஏந்திய — உடைய.

தெளிவுரை (35–42)

வாயிற் காப்பவன் பாண்டிய மன்னனை அடைந்து அவனை வணங்கி “வாழ்க! எமது கொற்கை அரசனே வாழ்க! தெற்கிலுள்ள பொதிய மலைக்குத்

தலைவனே! வாழ்க! தென்னவனே வாழ்க! பழியோடு பாண்டியனே வாழ்க (தமது அரண்மனை) வாயில் பெருஞ்சினம் கொண்டவளாய் பெண் ஒருத்தி நிற்கிறாள்; (அவள்) குதித்து எழுகின்ற இரத்தம் அடங்காத புதிய துண்டமாகிய பிடரியோடு கூடிய (மகிடாகரன் என்னும அசுரனது தலையாகிய பீடத்திலே ஏறிய இளங்கொடி போன்றவளான வெற்றி பொருந்திய வேலினை தனது பெரிய கையிலே கொண்டுள்ள துர்க்கையோ என்றால் அத்துர்க்கையும் அல்லல்; (ஏழு கன்னியர்களுள்) ஆறு பேர்களுக்கு இளையவளும் சிவபெருமானைத் தன்னோடு நடனம் ஆடுமாறு செய்தருளிய தெய்வப்பெண்ணும் அச்சத்தைக் கொண்ட காட்டினைத் (தனக்குரிய மார்பினை கிழித்த பெண்ணும் ஆகிய காளி தெவியும் அல்லள்; பழிவாங்கும் உணர்ச்சி உடையவள் போலவும் நீங்காத கோபம் கொண்டவள் போலவும் நுண்ணிய வெலைப்பாட்டுடன்) கொன்னால் செய்யப்பட்ட ஒற்றைச் சிலம்பை ஏந்திய கைளை உடையவளாய் கணவனை இழந்த பெண்ணொருத்தி நமது அரண்மனை வாயிலில் வந்து நிற்கிறாள் என்று கூறினாள்.

**விளக்கம்**

செழியன்: தென்னவன்; பஞ்சவன் — பாண்டியரைக் குறிக்கும் பெயர்கள் பிடர்த்தலை பீடம் ஏறிய மடக்கொடி எருமைக்கடாவின் தலையை உடைய மகிடாசுரன் தவத்தினால் பெருவரங்கள் பெற்று பெண்ணால் இறப்பு நேரும் என்ற சாபம் பெற்றவன். இவன் தேவர்களை துன்புறுத்தினான். தேவர்கள் உமாதேவியிடம் அடைக்கலம் புகுந்தனர். உமாதேவி மகிடாகரனை கொல்லுமாறு தனது அம்சமாகிய துர்க்கையை ஏவினாள். துர்க்கையும் அவனை எதிர்த்துப் போராடிஅவனது தலையை வெட்டி வீழ்த்தி அப்பிடர்தலைமீது நின்று தேவர்களைக் காத்தாள்.

றைவனை ஆட கண்டு அருவிய அணங்கு — காளிதெவி தானே நடனமாடுவதில் வல்லவள் என்று செருக்குற்றிருந்தாள். சிவபெருமான் அவனது செருக்கை அடக்க, இவள் முன்தோன்றினார். காளி சிவனையும் நடனத்தில் வெறட்றி கொள்ள வேண்டுமென விரும்பி, சிவனையும் தன்னோடு நடனமாட வேண்டினாள். சிவனும் எல்லாத் தேவர்களும் காணுமாறு நடனமாட ஆடி (சிவதாண்டவம்) அருளினார். காளியோ சிவன் ஆடியது போல் ஆடமுடியாமல் தோற்றாள்.

தாருகன் பேருரம் கிழித்த பெண் ; யானை தலையை உடைய தாருகன் என்னும் அசுரன் , தன் தந்தையாகிய இரணியாக்கனைக் கொல்லிவித்த தேவர்களை துன்புறுத்தினான். தேவர்கள் இவனுக்கு அஞ்சி , பெண்டிக்கு வடிவெடுத்த சிவனை அடைந்து முறையிட்டனர். சிவபெருமான் சக்திக்கு கட்டளையிட , அவள் தன் அம்சமாகிய வீரமாகாளியை ஏவுனாள். அவன் தாருகனது மார்பைக் கிழித்துக் கொன்றாள்.

அலுவலர்க்கிளைய நங்கை : அபிராமி, மகேஸ்வரி, கௌமாரி நாராயணி,வராகி; இந்திராணி, சாமுண்டி எனப்படும் ஏழு பெண்களுக்கும் இளையவள் காளிதேவி.

## இலக்கணக்குறிப்பு

வாழி — விளங்கோள் வினைமுற்று; எழுகுருதி —வினைத்தொகை; பகந்துணி —பண்புத்தொகை பிடர்த்தலை — இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை தடக்கை — உரிச்சொற்றொடர்; ஆடல் —தொழிற்பெயர்; பேருரம்—பண்புத்தொகை; செயிற்றனள், செயிர்த்தனன் —வினையாலனையும் பெயர்கள்.

## பிரித்து எழுதுதல்

பீடமேறிய = பீடம் + ஏறிய; வேற்றடக்கை = வேல் + தட+ கை; ஏறியபசுந்துணி = பசுமை + துணி; பொற்றொழில், பொன் + தொழில்; குறுதிவடங்கா = குருதி +அடங்கா;கானகமுகந்த கானகம்+ உகந்த; பேருரம் = பெருமை + உரம் பொண்ணுமல்லன் = பெண்ணும் + அல்லன்.

## பாண்டியன் கண்ணகியை வரவழைத்து வினவுதல்

வருக மற்றவட் டருக வீங் கென

வாயில் வந்து கோயில், காட்டக்

கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி,

நீர்வார் கண்ணை யெம்முன் வந்தோய்!

யாரை யோ நீ மடக்கொடி யோய்! என

## அருஞ்சொற்பொருள் (44-48 அடிகள்)

ஈங்கு — இங்கு; வாயில் — வாயிற் காவலன்! கோயில் — அரண்மனை குறுகினள் சென்றுழி — நெருங்கிச் சென்றபோது; நீர்வார்கண — நீர்வழியும் கண்கள்.

## தெளிவுரை (44-48) அடிகள்

(வாயிற் காப்பவன் கூறியதைக் கேட்ட பாண்டிய மன்னன்) "அத்தகைய பெண்ணை நீ இங்கு அழைத்து வருக"என்றான்.வாயிற் காப்பவன் கண்ணகியை அழைத்துக்கொண்டு சென்று மன்னன் இருக்குமிடத்தைக் காட்ட(கண்ணகி) மன்னனை நெருங்கிச் சென்றாள்.அப்போது,பாண்டிய மன்னன் நீர்வழியும் கண்களோடு என்முன் நிற்கும் இளங்கொடி போன்றவளே! நீ யாரவள்?" என்று கூறினாள.

## இலக்கணக்குறிப்பு

வருக,வருக— வியங்கோள் வினைமுற்றுகள்;வாயில்—இடவாகு பெயர் குறுகினன் சென்றுழி —முற்றெச்சம்;அவட்டருக— அவண்+தருக.

### கண்ணகி வழக்குரைத்தல்

தேரா மன்னா! செப்புவ துடையேன்!
என்னறு சிறப்பின்இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் டீர்த்தோ னன்றியும்
வாயிற் கடைமணி யுகுநீர் நெஞ்சுடத் தான்கன்
ஆவின் கடைமணி நடுநா நடுங்க
அரும்பெற்ற புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
எசாச் சிறப்பின் இசை விளக்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனையாகி
வாழ்தல் வேண்டிய ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா! நினைகாப் புகுத்திங்கு
என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி;
கண்ணகி என்பதன் பெயரே'எனப்

### அருஞ்சொற்பொருள்(49—63)அடிகள்

தேரா—ஆராய்ந்து அறிய மாட்டாத;செப்புவது—சொல்ல வேண்டுவது; எள் அறு—இகழ்ச்சியற்ற;இமையவர்—தேவர்; புள்—பறவை புறா)புன்கண் —துன்பம் நா— நாக்கு ஆ—பசு ஆழி—தேர்ச்சக்கரம் புகார்—காவிரிப்பூம்பட்டினம் பதி—ஊர் ஏசா— குற்றமற்ற இசை—புகழ் ஊழ்வினை

தீவினை (விதி); கழல்—(காலில் அணியும்) வீரக்கழல்; பகர்தல் வேண்டி விற்க விரும்பி.

தெளிவுரை: (49—63 அடிகள்)

கண்ணகி பாண்டியனை நோக்கி, "உண்மையான ஆராய்ந்து அறிய மாட்டாத மன்னனே! உன்னிடம் கூற வேண்டிய செய்தி ஒன்று உள்ளது இகழ்ச்சியற்ற சிறப்பினையுடைய தேவர்கள் வியக்க ஒரு புறாவின் உயிரைக்காக்கத் தன் தசையை அறுத்துக் கொடுத்த சிபி மன்னனும், கன்றை இழந்த தாய்ப்பசு அரண்மனை வாயிலில் கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியின் நடுவிலிருந்த நாக்கினை அசைத்து ஒலி எழுப்ப பசுவின் கண்கள் சிந்தியகண்ணீரைக் கண்டு, உள்ளம்வருந்தி தன் மகனைத் தேர்க்காலின்கிடத்திக்கொன்று நீதியை நிலைநாட்டிய மனு நீதிச் சோழ மன்னனும் ஆட்சிபுரிந்து பெரும்புகழ் பெற்ற காவிரிப்பூம்பட்டிணமே எனது ஊராகும். அவ்வூரில் குற்றமற்ற சிறந்த புகழோடு விளங்கும் பெருமைக்குரிய (வணிகர்) குடியில் பிறந்த மாசாத்துவனின் மகனாகப் பிறந்து பொருளீட்டி, வாழ விரும்பியவனை தீவினையானது செலுத்துதலினால் வீரக்கழல் அணிந்த அரசே! உனது மதுரை கொலைக்களப்பட்ட கோவலனது மனைவியாவேன் நான், என் பெயர் கண்ணகி என்பதாகும் என்றாள்.

## விளக்கம்

*புள்உறுபுண்கண் தீர்த்தோன் சிபி மன்னன்* : பெருங்கொடையாளியாகிய இவனது கொடைத் தன்மையை உலகம் அறியுமாறு செய்யும் பொருட்டு இந்திரன் பருந்தாகவும் எமன் புறாவாகவும் மாறி வந்தனர். பருந்து புறாவைப் பிடித்து உண்பதற்காக விரட்டிச் சென்ற பொழுது புறா. சிபி மன்னனிடம் தஞ்சம் புகுந்து தனக்கென இரையாகக் கிடைத்த புறாவை விட்டுவிடுமாறு கூறியது. ஆனால் மன்னனோ தன்னிடம் தஞ்சம் அடைந்த பொருளை விடேன் என்றான். அவ்வாறாயின் அப்புறாவின் எடைக்குச் சமஅளவு அவன் தசையை தருமாறு கேட்க அவனும் அதற்கு உடன்பட்டு தராசின் ஒரு தட்டில் புறாவை வைத்து மற்றொரு தட்டில் தனது தசை முழுவதும் அரிந்து வைத்தும் அதற்குச் சமமாகாமையால் தானே அத்தட்டில் ஏறி நின்று எடையைச் சமமாக்கினான். உடனே தேவர்கள் அவன் முன் தோன்றி அவனது கொடைப் பண்பினைப் பாராட்டி அவனைமுன்போலாக்கி அவன் வேண்டும் வரங்களைக்கொடுத்தான்.

*அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்:* மனுநீதிச்சோழனின் சோழ நாட்டில் திருவாரூரில் மனுநீதிச்சோழன் என்பான் ஆட்சி புரிந்தான். அவன் மகன் வீதிவிடங்களை தெருவில் தேரினைச் செலுத்திச் சென்றபொழுது ஒரு பசுவின் கன்று தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டு இறந்தது. கன்றை இழந்த வருந்திய பசு,அரண்மனை வாயிலில் கட்டியிருந்த ஆராய்ச்சி மணியைத் தனது கொம்பினால் அசைத்து அடித்தது.மணியொலிகேட்டு மன்னன் அங்கு வந்து நிகழ்ந்ததை அறிந்து தனது கன்றை இழந்து பசுவானது வருந்துவதுபோலத் தானும் தன்மகனை இழந்த வருந்துவது முறையாகுமென்றுஎண்ணி தம் மகனைத் தேர்க்காலிட்டு கொல்லுமாறு அரசன் அமைச்சரிடம் கூறினான். அதனை நிறைவேற்ற அமைச்சர் தன் உயிரை மாய்த்துக் கொண்டான்.அதனை அறிந்து அரசன் தானே தன் மகனைத்தேர்க்காலிட்டுக் கொன்றான். இது கண்டு விண்ணவர்மலர்மாரி பொழிந்தனர்.இறைவன் தோன்றி கன்றையும்அமைச்சரையும் இளவரசனையும் உயிரிப்பித்து அருளினான்.

## இலக்கணக் குறிப்பு

தேரா மன்னா ஏசாச் சிறப்பு;ஈறு கெட்ட எதிர்மறைச்பெயரெச்சங்கள்; சூழ்கழல்,உடிநீர்— வினைத்தொகைகள்;தீர்த்தோன்,மடித்தோன்— வினையாலணையும் பெயர்கள்;வாயில்— இலக்கணப்போலி,நடுநா— ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை; பெரும் பெயர், பெருங்குடி—பண்புத்தொகைகள்.

பாண்டியன் கூற்று

பெண்ணணங்கே! கணவனைக் கோறல் கடுங்கோலன்று
வெண்வேற் கொற்றங்காண் என வொள்ளிறை
கண்ணகி உறையும் பாண்டியன் உணர்வும்
'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!
என்காற் பொற்சிலம்பு மணியுடையரியே'எனத்
தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
'தருகெ' னத் தந்து தான்முன் வைப்பக்

## அருஞ்சொற்பொருள்

அணங்கு தெய்வம்;கள்வன்—திருடன்;கோறல்—கொல்லுதல்.
கடுங்கோல்—கொடுமையான ஆட்சி;ஒளி பொருந்திய

ஆபரணங்கள்;படரா—செல்லாத;அரி—உள்ளிடுபால்;மணி—மாணிக்கம்—தேன் போன்ற மொழி பேசும் கண்ணகி;செவ்வை—செம்மையான.

**தெளிவுரை**

தெய்வப் பெண் போன்றவளே! கள்வனைக் கொல்வது கொடுங்கோன்மை அன்று,செங்கோலாட்சி முறையேயாகும் என்பது 'பாண்டியன்(கண்ணகியிடம்)கூறினான்.ஒளி பொருந்திய அணிகளை அணிந்து கண்ணகி அறநெறியில் செல்லாத கொற்கை நகர அரசனே! என்று காலில் அணிந்திருந்த பொன்னாலாகிய சிலம்பின் உள்ளிடுபால் மாணிக்கமாகும் என்று கூறினாள்.கண்ணகி கூறிய இச்சொற்கள் உண்மை உணரத்தகுந்த செம்மையான சொற்களே; எமதுசிலம்பின் உள்ளிடுபால் முத்து ஆகும் என்று பாண்டியன்(மனத்துள் எண்ணி)சிலம்பைக் கொண்டு வருமாறு ஏவலரைப் பணித்தான்.அவர்கள் கொண்டுவர அதனைப் பெற்றுமன்னன் கண்ணகி முன்வைத்தான்.

**விளக்கம்**

கண்ணகி தனது சிலம்பின் உள்ளிடு பரலைக் கூறினாள்.அரசன் தன் மனைவியினுடைய சிலம்பின் பரலைக் கூறுவான். என்று எண்ணியவளாய் என்காற் பொற்சிலம்பு மணியுடைய அரியே' என்றாள்.

**இலக்கணக்குறிப்பு**

கோறல்—முதலியன திரிந்ததொழிற்பெயர்;கொடுங்கோல்—பண்புத்தொகை ஒள்ளிழை —பண்புத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை;நற்றிறம்—நன்மொழி— பண்புத்தொகை,படரா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்;பொற்சிலம்பு—மூன்றன் உருபும்பயனும் உடன்தொக்கத் தொகை;தேமொழி—உவமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; தருக —வியங்கோள் வினைமுற்று;தருகென—தொகுத்தல் விகாரம்.

**பிரித்தெழுதுக.**

பொற்சிலம்பு= பொன் + சிலம்பு ; தருகென= தருக + என
நற்றிறம்=நன்மை + திறம்.

## பாண்டியன் உண்மை உணர்ந்து மயங்கி வீழ்தல்

கண்ணகி அணிமணிக்க காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதற் றெறித்தது மணியே;மணிகண்டு
தாழ்ந்த குடையவன் தளர்ந்செங் கோலன்
பொன்செய் வரசன்! யானே கள்வன்!
மன்பதைக் காக்கும் தெம்புலம் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென்னாயுள்!"என
மன்னவன் மயங்கிவீழ்த் தன்னே;தென்னவன்

### அருஞ்சொற்பொருள்

அணி—அழகிய;மன்பதை மக்கள் சமுதாயம்;தென்புலம்—தென்னாடு(பாண்டிய நாடு);காவல்—ஆட்சி;பிழைத்தது—தவறியது.

### தெளிவுரை

கண்ணகி (அந்த)அழகிய மாணிக்கத்தை உள்ளீடு பரவலாகக்கொண்டகால் சிலம்பினை உடைத்தாள்.அதன் உள்ளிருந்த மாணிக்கப் பால் மன்னனின் வாயில் பட்டுச். சிதறி விழுந்தது. (மாணிக்கப்பரல்கண்டு) தாழ்ந்த வெண்கொற்றக்குடையை உடையவனும் தளர்ந்த செங்கோலினை உடையவனுமாகிய பாண்டியன் பொற்கொல்லனது பொய்ச் சொற்களைக் கேட்டு (நீதி தவறிய கள்வன்) மக்களைக்காக்கும் பாண்டிய நாட்டின் ஆட்சிமுறை என்முதல் தவறுடையதாயிற்று(ஆதலின்)என் வாழ்வு(இன்றுடன்) முடிவதாகும்;என்று சொல்லி மயங்கி உயிர் நீத்தான்.

### விளக்கம்

யானே அரசன் அமைச்சரின் சொற்களைக் கேட்பவனே அரசன் பாண்டியனோ பொற்கொல்லன் சொற்கேட்டமையால் இவ்வாறு கூறினான். யானோ கள்வன் சிலம்பையும் கோவலன் உயிரையும்கவர்ந்தமையால் பாண்டியன் யானே கள்வன் என்றான்.

என்முதல் பிழைத்தது நெடுஞ்செழியன் முன் வாழ்ந்த பாண்டியர் நீதி தவறாது ஆட்சி புரிந்தனர். பாண்டியனே முதன் முதலில் முறை தவறினான். ஆதலின்'தென் புலங்காவல் என் முதல் பிழைத்தது'என்றான்.கெடுக என் ஆயுள்—உயிரினும் மானத்தை பெரிதெனக் கருதிய பாண்டியன் அதனைக் காக்க இவ்வாறு கூறினான்.

## இலக்கணக்குறிப்பு

தாழ்ந்தகுடையன்,தளர்ந்தசெங்கோலன் —முற்றெச்சங்கள்;யானோ— ஒகாரம் எதிர்மறை;யானே —ஏகாரம்(தோற்றம்)கெடுக—வியங்கோள் வினைமுற்று ;மயங்கி—வினையெச்சம்;தென்புறம்—தெற்கு+புலம்.

## கோப்பெருந்தேவியும் உயிர்நீத்தல்

கோப்பெருந்தேவி குலைந்தன ணடுங்கிக்
'கணவனை யிழத்தோர்க்குக் காட்டுவதில்' என்(80)
றிணையடி தொழுதுவீழ்ந் தனனே மடமொழி. (81)

## அருஞ்சொற்பொருள்

குலைத்தனன்—மனம்கலங்கி;இல்—இல்லை;இணையடி— இருபாதங்கள்;மடமொழி—(இங்கு) கோப்பெருந்தேவி.

## தெளிவுரை

மடமைபொருந்தியமொழிபேசுபவளும்,பாண்டியன்மனைவியுமாகிய கோப்பெருந்தேவி, (பாண்டியன் மயங்கிவிழுந்தமைக்கண்டு) மனங்கலங்கி உடல நடுங்கியவளாய் கணவனை இழந்த பெண்களுக்கு கணவன் முறை கூறிப் பிறரைக் குறித்துக்காட்டுவது தமிழர் வழக்கம் இல்லை என்று (இரங்கிக்)கூறி (தன்கணவனது)இரு பாதங்களையும் தொட்டு வணங்கித் தரையில் வீழ்ந்து, உயிர் நீத்தாள்.

## விளக்கம்

கணவனை இழந்தோர்க்கு காட்டுவது இல் — அன்னை,தந்தை,மகன், முதலிய உறவினரை இழந்தவர்க்கு அம்முறை சொல்லி மற்றொருவரைக் காட்டுதல் கூடும்;ஆனால் கணவனை இழந்த பெண்ணுக்கு கணவன் முறை சொல்லும் பிறரைக் காட்டமுடியாது.

## இலக்கணக்குறிப்பு

குலைந்தனன் நடுங்கி —முற்றெச்சம்;இழந்தோர்க்கு—வினையாலணையும் பெயர்; மடமொழி—பண்புத்தொகைப் புறத்துப் பிறந்தஅன்மொழித் தொகை;இல்—'இல்லை'என்பதன் தொகுத்தல் விகாரம்,தொழுது—வினையெச்சம்.

### பயிற்சி வினாக்கள்

1. சிலப்பதிகாரத்தின் பெருமைகள் யாவை?
2. இளங்கோவடிகள் குறித்து நீவிர் அறிவனயாவை?
3. கோப்பெருந்தேவி கண்ட தீக்கனா யாது?
4. 'மன்னவர்க்கு யாம் உரைத்தும்'எனக்கு கூறி தேவி புறப்பட்டு சென்றமையை இளங்கோவடிகள் எவ்வாறு காட்டுகின்றார்?
5. கண்ணகி வாயிற்காப்போனை நோக்கிக் கூறியது யாது?
6. கண்ணகியின் வருகை குறித்து வாயிலோன் பாண்டியனிடம் கூறிய செய்தி யாது?
7. 'யாரையோ நீ மடக்கொடியோய்? என்று கேட்ட பாண்டியனுக்குக் கண்ணகி கூறிய விடை யாது?
8. கண்ணகி தன் கணவன் கள்வனல்லன் என்பதைப் பாண்டியனிடம் எவ்வாறு மெய்பித்தாள்?
9. **இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

அ. யாரையோ நீ மடக்கொடியோய்?

ஆ. 'வருக மற்றவட்டருக வீங்கு'

இ. 'கள்வனைக் கோறல் கடுங்கோலன்று'

ஈ. 'தேமொழி உரைத்தது செல்வை நன்மொழி'

உ. 'யானோ அரசன்? யானே கள்வன்?

ஊ. 'கணவனை இழந்தோர்க்கு காட்டுவது இல்;

10)கதைக் குறிப்பு தருக.

அ. ஆடல் கண்டருளிய வணங்கு

ஆ. 'பேரருங்கிழந்த பெண்'

இ. புள்ளுறுபுண் கண்டீர்த்தேன்

ஈ.' அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்'

11) இலக்கணக் குறிப்பு எழுதுக.

அரிமான்,வாயிலோயே, வாயிலோயே,எழுகுருதி,வருக, தேரா தடக்கை,ஆடல்,கோறல்,பொற்சிலம்பு,தேமொழி உரைத்தது.

12)பிரித்தெழுதுக.

வேற்றடக்கை,பொற்றொழிற்சிலம்பு,நற்றிறம்,தென்புலம்,சிலப்பதிகாரம்.

## பாடம் 6

## மணிமேகலை

### பெயர்க்காரணம்

மணிமேகலை என்னும் அறச்செல்வியின் வரலாற்றைக் கூறும் நூல் ஆகையால் இந்நூல் இப்பெயர் பெற்றது.மணிமேகலை என்பாள் கோவலனுக்குப் 'மாதவிக்கும' மகளாவாள். இந்நூலுக்கு 'மணிமேகலை துறவு' என்னும் வேறு பெயரும் உண்டு.

### நூல் அமைப்பு

இந்நூல் 'விழாவறை காதை முதலாகப் பவத்திறம் அறுகெனப் பாவை நோற்றகாதை'இறுதியாக முப்பது காதைகளைக் கொண்டது.ஒவ்வொரு காதையும் ஒவ்வோர் ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. இந்நூலுக்கு முதலில் கதையைத் தொகுத்துக் கூறும் பதிகம் ஒன்று அமைந்துள்ளது.(காதை—கதைப்பகுதி)

### நூலின் பெருமை

இந்நூல் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று-அஃது அமிழ்திற்சிறந் தமிழெனும் மடந்தை அணிமேகலையாம் மணிமேகலை எனப் புகழ பெற்றது இந்நூலில் வரும் தொடர்கள் உரையாசிரியர்கள் பலரால் மேற்கோளாக எடுத்தாளப்பட்டன.இது பௌத்த சமயச் சார்பான நூலாகும்.(சிலப்பதிகாரம்,மணிமேகலை, சீவகசிந்தாமணி,வளையாபதி, குண்டலகேசி என்பன ஐம்பெருங்காப்பியங்களாகும்)

### ஆசிரியர் வரலாறு

இந்நூல் ஆசிரியர் மதுரை கூலவாணிகள் சீத்தலைச் சாத்தனார் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர்.இவர் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்தவர்; மதுரையில் கூலவாணிகம் புரிந்து வாழ்ந்தவர் ; புத்தசமயத்தவர் ,நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.இவர் காலத்தில் வாழ்ந்தவர்' தண்டமிழ் ஆசான் சாத்தான் நன்னூற் புலவன்'என்று இவரை இளங்கோவடிகள் பாராட்டியுள்ளார்.(கூல தான்யம்)

## முன்கதைச் சுருக்கம்

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த மாதவி மதுரையில் கோவலன் கொலையுண்டு இறந்த செய்தியைக் கேட்டு பெருந்துன்பம் கொண்டாள்;உலக வாழ்க்கையில் வெறுப்புற்று துறவு மேற்கொண்டு பௌத்த சங்கத்தைச் சார்ந்தாள்;தன்மகள் மணிமேகலையும் துறவு வாழ்க்கையை மேற்கொள்ளச் செய்தாள். இளமைத்துறவு மேற்கொண்ட மணிமேகலையின் அழகில் ஈடுபாடு கொண்ட அரசகுமாரன் உதயகுமாரன் அவளுக்குப் பல இன்னல்களை விளைவித்தான். மணிமேகலையோ (உலக வாழ்க்கையில் ஈடுபாடு இன்றி) பளிங்கறை மண்டபத்தில் போய் ஒழிந்து கொண்டாள். உதயகுமாரன் சென்ற பின்னர், அங்கு வந்த மணிமேகலா தெய்வம் அவளை மணிபல்லவம் என்னும் தீவிற்கு கொண்டு சென்று அவளுக்குப் பல நன்மைகளை விளைவித்தது .அங்கே மணிமேகலை புத்த பீடிகையை கண்டு வணங்கித் தன் பழம்பிறப்புச் செய்திகளை அறிந்தாள்.மணிமேகலா தெய்வம் அவளுக்கு வேற்று வடிவம் கொள்ளவும்,ஆகாய வழிச் செல்லவும் பசியின்றி இருக்கவும் மூன்று மந்திரங்களை அருளியது.மணிபல்லவ தீவில் கோமுகி என்னும் பொய்கையில் முன்னொரு காலத்தில் ஆபுத்திரனால் இடப்பட்ட அமுதசுரபி என்னும் வற்றாத உணவு காக்கும் பாத்திரத்தை அவள் பெற்றாள்;பின்னர் மீண்டும் காவிரிப்பூம்பட்டினம் சென்று தன் குருவாகிய அறவண அடிகளாரைத் தொழுது,நிகழ்ந்த செய்திகளைக் கூறினாள்.

**பாடப்பகுதி**

### ஆபுத்திரன் திறம் அறிவித்த கதை

### (இது மணிமேகலையின் பதின்மூன்றாவது கதை)

மணிமேகலை அமுதசுரபியைக் கையில் ஏந்தயமை கண்ட அறவண அடிகள் ,ஆபுத்திரன் திறம் அறவணர் தன்பால் கேள் என்று தீவதிலகை என்னும் தெய்வம் கூறிற்று என மணிமேகலைக்கு அறிவித்ததை கூர்ந்து ஓர்ந்து அத்தெய்வப் பாத்திரத்தை பெற்று ஆபுத்திரன் வரலாற்றை மணிமேகலைக்கு அறிவித்த செய்தியைக் கூறும் பகுதியாதலின் இஃது இப்பெயர் பெற்றது.

## பாடப்பகுதியின் சுருக்கம்

வாரணாசியில் வாழ்ந்த அபஞ்சிகன் என்ற அந்தணனுடைய மனைவி சாலி என்பவள் கட்டுக் காவலைக் கடந்த சென்றமையால்

போக்குவரத்து குமரித்துறையில் நீராடச் சென்றாள். வழியில் சூல் முதிர்ச்சி அடைந்த பருவத்தே,அவள் ஒரு குழந்தையைப்பெற்று ஒரு தோட்டத்தில் இட்டுச் சென்றாள். அக்குழந்தையின் துயரக்குரல் கேட்ட பசு ஒன்று, பாலூட்டி அதனைப் பாதுகாத்து வந்தது. இளம்பூதி என்பவன அக்குழந்தையை எடுத்து வளர்ந்து வந்தான்.

அச்சிறுவன் ,ஒருநாள் ,அந்தனன் வீட்டிலுள்ள கொலை வேள்விச் சாலைக்குச் சென்ற போது,அங்கே ஒரு பசு கொலைத் தொழிலைச் செய்யும் அவ்வந்தணனின் செயலுக்கு அஞ்சி நிற்கக் கண்டான்.அவன் அதனை காக்க எண்ணி;அதனைக் கள்வு செய்து கொண்டு அவ்விடத்தை விட்டு நீங்கினான். அந்தணரெல்லாம் தேடி,அச்சிறுவனைப் பிடித்து அடித்தனர்.பசுவானது அந்தணரின் உவர்த்தியைக் கொம்பால் குத்திவிட்டு ஓடிவிட்டது.

அருள் உள்ளம் கொண்ட பசுவோடு உங்களுக்கு உள்ள பகைமை தான் யாது? என்று ஆபுத்திரனைப் பசுவினுடைய மகன்'என அந்தணர் இமந்தனர்.அதுகேட்ட மகன்தானே ஒருவன் ஆபுத்திரனின் வரலாற்றைச் சொல்ல தொடங்கினான். அதனை கேட்ட பின்னர் ஆபுத்திரன் அந்தணர் குல மரபினை இகழ்ச்சியோடு சொன்னான்.அதனால் இளம்பூதி அவனை வீட்டைவிட்டு வெளியேற்றினான். அந்தணர் வாழும் கிராமங்களில் அவனுடைய பிச்சைப் பாத்திரத்தில் கல்லைப் போட்டார்கள்.அவன் அதன் பின் தென்மதுரையை அடைந்து அங்கு வீடுகள் தோறும் சென்று பிச்சை பெற்று அவ்வுணவினைத் துன்புற்றவர்க்கு அளித்து எஞ்சிய உணவைத் தான் உண்டு வருவானானான்.

## ஆபுத்திரன் திறம் அறிவித்த கதை

மாபெரும் பாத்திரம் மடக்கொடிக்(கு) அருளிய
ஆபுத்திரன் திறம் அணியிழை கேளாய்
வாரணாசியோர் மறையோப் பாளன்
ஆரண இர்ததிவு அபஞ்சிகன் என்போன்
பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து
பொண்டோற் பிழைத்த தண்டம் அஞ்சித்
தென்திசைக் குமரி பாடிய வருவோள்

சூல்முதிர் பருவத்துத் துஞ்சிருள் இயவிடை
ஈன்ற குழவிக்(கு) இரங்காளாகித்
தோன்றாத் துடவையின் இட்டனன் நீங்கத் (10)

## தெளிவுரை (1-10 அடிகள்)

அழகு பொருந்திய ஆபரணங்களை அணிந்தவனே! மேன்மை பொருந்திய அமுதசுரபியை மடக்கொடி போன்ற மணிமேகலைக்கு வழங்கி அருளிய ஆபுத்திரனின்வரலாற்றைக் கேட்பாயாக; வாரணாசி என்னும் ஊரின்கண் வேதம் ஓதுவிக்கின்றவனான அபஞ்சிகன் என்பானின் மனைவி சாலி என்பவள். தன்னைக் காத்துக்கொள்ளும் கற்பு நெறியாகிய காவலின் எல்லையை கடந்து சென்றதனால் தன் கணவனுக்கு துரோகம் செய்தவள் ஆனாள்; அதற்குரிய தண்டனைக்கு அஞ்சிய அவள் தன் பாவத்தைப் போக்குவதற்காகத் தென்திசையிலிருந்த குமரித்துறையில் நீராடுவதற்காக வந்து கொண்டிருந்தாள்.(வழியில்) சூல்முதிர்ந்த பருவத்தே ஊர் மக்கள் உறங்கும் இருள் மிகுந்த இரவுப்பொழுதில் ஒரு குழந்தையைப் பெற்றாள்.(பழிக்கு அஞ்சி) தான்பெற்ற குழந்தைக்கும் இரங்குதல் அற்றவளாக அவ்விடத்துத் தோன்றிய ஒரு தோட்டத்தில் அதனைப் போட்டுவிட்டு அவள் சென்றுவிட்டாள்.

## அருஞ்சொற்பொருள்

(வாரணாசி —காசி என்னும் ஊர்,உவர்த்தி—ஓதுவிக்கிறவன்; காப்புக்கடை —காவல்; தண்டம்—தண்டனை;துஞ்சம்—தூங்கும்; ஈன்றபெற்ற குழவி — குழந்தை;துளவை—தோட்டம்)

## இலக்கணம்

மாபெரும்—ஒரு பொருட்பன்மொழி;பெரும்பாத்திரம்,மடக்கொடி பண்புத்தொகைகள்;கழிந்து,இஞ்சி —வினை எச்சங்கள்;பிழைத்த—பெயரெச்சம்,முதிர்பருவம்—வினைத்தொகை குழவி—உரிச்சொற்றொடர

தாயில் நுவாக் குழவிதுயர் கேட்டோர்
ஆவந்(து) அணைத்தாங்(கு) அதன் துயர் தீர
நாவால் நக்கி நண்பால் ஊட்டிப்
போகா(து) ஏழுநாள் புலக்கர்த(து) ஓம்ப

## தெளிவுரை(11-14 அடிகள்)

தாயில்லாமல் பசியினால் அழுதுகொண்டிருந்த அக்குழந்தையின் துயரக்குரலினைக் கேட்ட ஒரு பசுவனது,அருகில் வந்து குழந்தையின் துயரம் தீருமாறு தன்நாவினால நக்கிக்கொடுத்து,நல்லபாலும் அதற்கு ஊட்டிற்று. இவ்வாறு ஏழுநாட்கள் அக்குழந்தையை விட்டு நீங்காமல் பசு பாலூட்டி அதனைப் பாதுகாத்து வந்தது.

(நாவாக் குழவி—உண்ணாத குழந்தை;ஆ—பசு;புறங்காத்து ஓம்ப—பேணி பாதுகாக்க)

தூவா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்;நன்பால் —பண்புத்தொகை;

போகாது—எதிர்மறை வினையெச்சம்.

வயனங் கோட்டி—(ல்) ஓர் மறை ஓம்பாளன்
இயவிடை வருவாள் இளம்பூதி என்போன்
குழவி ஏங்கிய கூக்குரல் கேட்டுச்
கழுவிய துன்பமொடு கண்ணீர் உகுந்தாங்(கு)
ஆமகன் அல்லன் என்மகன் என்றே
காதல தன்னோடு கைதொழு(து) எடுத்து

## தெளிவுரை (15-20 அடிகள்)

வயனங்கோடு என்னும் ஊரினைச் சேர்ந்த ஒரு மறை ஓம்பும் அந்தனன் நன் மனைவியுடன் அவ்வழியே வந்து கொண்டிருந்தான்.இளமபூதி என்போனாகிய அவன் குழந்தை ஏக்கத்தோடு அழுகின்ற நிலைமைக்குக் கண்ணீர் சொரிந்து இவன் பசுவினுடைய மகன் அல்லன்'என் மகன்' என்று சொல்லி அக்குழந்தையைத் தனக்கு காட்டித் தந்த கடவுளுக்குத் கைகுவித்து வணங்கியவனாய்த் தன் மனைவியுடன் கூடி அதனை எடுத்தான்.

(இயவிடை —இடைவழியே;உகுத்து—சொரித்து)

## விளக்கம்

'ஆ மகன் அல்லன், என்மகன்' என்றே காதலி தன்னோடு கை தொழுது எடுத்து, என்பதனால் இவர்கள் குழந்தை இல்லாதவர் ' என்பதும் இறைவனே

இக்குழந்தையை அருளினான் என்று எடுத்துப் போயினர் என்பதும் குறிப்பால் உணரத்தக்கது.

## இலக்கணம்

ஏங்கிய —பெயரெச்சம்; கூவக்குரல் —இசை நின்ற அளபெடை; ஆமகன், என்மகன்—ஆறாம் வேற்றுமைத் தொகைகள்; கைதொழுது —மூன்றாம் வேற்றுமைத் தொகை.

நம்பி பிறந்தான் பொலிகநம் கிளை எனத்
தம்பதிப் பெயர்ந்து தமரொடும் கூடி
பார்பிடை முந்நூல் வனையா முன்னர்
நாவிடை நன்நூல் நன்கனம் நவிற்றி
ஒத்துடை அந்தணர்க்(கு) ஒப்பவை எல்லாம் (25)
ராததொலைவின்றி நன்கனம் அறிந்தபின்

## தெளிவுரை (21-26 அடிகள்)

'நமக்கொரு மகன் பிறந்தான்; நம் சுற்றம் இனிச் சிறப்புறும் என்று கருதி, இளம்பூதியும் அவன் மனைவியும் தம் ஊருக்குச் சென்று தம் உறவினரோடு கூடி மகிழ்வுற்றனர். அச்சிறுவனின் மார்பில் முப்புரி நூல் (பூணூல்)அணிவதுக்கும் முன்னரே அவனுடைய நாவினால் வேதங்களை நன்முறையில் ஓத கற்பித்தான் இளம்பூபதி. அச்சிறுவனும் அந்தணர்க்குப் பொருந்துவன எல்லாம் நாப்பிறழ்ச்சி இல்லாமல் நன்கு ஓதப் பயின்றான். அதன் பின்னர்.

(பொலிக —சிறப்புறம்; கிளை —உறவு; முந் நூல்—பூணூல்; வனையாமுன்னர்—அணிவதற்கு முன்னால்; நவிற்றி ஓதி ஒத்துடை; அந்தணர்—மறை ஓதும் அந்தணர்).

## இலக்கணம்

பொலிக—வியங்கோள் வினைமுற்று; முந்நூல் —பண்புத்தொகை; வனையா —ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; நன்னூல், நன்கனம்—பண்புத்தொகைகள்; நவிற்றி—வினையெச்சம்

அப்பதி தன்னுளோர் அந்தணனன் மனைவியின்
புக்கோன் ஆங்குப் புலைசூழ் வேள்வியில்
குருஉத் தொடைமாலை கோட்டைச் சுற்றி

வெருஉப் பகை அஞ்சி வெய்துயிர்த்துப் புலம்பிக்
கொலைநவில் வேட்டுவர் கொடுமரம் அஞ்சி
வலையிடைப் பட்ட மானே போன்(று) ஆங்(கு)
அஞ்சி நின்று அழைக்கும் ஆதுயர் கண்டு
நெஞ்சுநடுக் குற்ற நெடுங்கணர் உருத்துக்

## தெளிவுரை (27-34 அடிகள்)

(ஒரு சமயம் அச்சிறுவன்)அவ்வூரில் உள்ள ஓர் அந்தணன் வீட்டுக்குச் சென்றான்.அங்கு அந்தணர்கள் தாம் மறுநாள் புலால் உண்ணுவதை விரும்பி வேள்வி செய்வதற்காக இருந்த வேள்விச் சாலையைக் கண்டான்.அங்கே அழகு (திறம்) பொருந்தி மாலை கொம்பிலே சுற்றப்பட்டதாக,அச்சம் தருகின்ற பகைக்கு அஞ்சி பெருமூச்சு விட்டுப் புலம்பிக் கொண்டிருந்தது ஒரு பசு.அது கொலைத் தொழில் புரியும் வேட்டுவரின் கொடுமையான வில்லிற்குப் பயந்து ஓடி வலையினிடத்தில் அகப்பட்டுத் துடிக்கின்ற மானைப்போல,அங்கே அச்சத்தோடு நின்று கதறிற்று.அதன் துயரத்தைக் கண்டு அச்சிறுவன் மனம் நடுங்கி மிகுதியான கண்ணீரைச் சொரிந்து வருந்தினான்.

(பதி—ஊர்; மனையின் —வீட்டில்;குருஉ—நிறம்;கோடு—கொம்பு
வெய்துயிர்த்து —பெருமூச்சு விட்டு)

## விளக்கம்

புலைசூழ்தலாவது புலால் உண்ணும் இழிவினை கடவுள் வழிபாடு போலக்காட்டி மறைத்தல் வேள்விக் கனத்தில் கொல்லும் உயிரினங்களுக்கு மாலை சூட்டித் தூபம் முதலியன காட்டுதல் மரபு.ஆதலின்' மாதை கோட்டிடைச் சுற்றி' என்றார்.

## இலக்கணம்

சூழ்வேள்வி —வினைத்தொகை;குருஉ,வெருஉ—இசை நிறை அளபெடைகள்;தொடை —காரணப் பெயர்; கொடுமரம்— பண்புத்தொகை; ஆத்துயர் —ஆறாம் வேற்றுமைத்தொகை; நெடுங்கணீர் —பண்புத்தொகை;கணீர்—கண்ணீர் என்பதன் தொகுத்தல் விகாரம்.

கள்ள வினையர் கருந்துயர் பாழ்பட (35)
நன்னிருள் கொண்டு நடக்குவன் என்னும்
உள்ளம் சரத்தங்கு (கு) ஒருபடை எதுங்கி
அல்லிநடை ஆக்கொண்(டு) அப்பதி அகன்றோன்.

## தெளிவுரை (35-38 அடிகள்)

(அந்தணருக்குத் தெரியாதவாறு) 'இப்பசுவினது கொடிய துன்பம் ஒழியுமாறு, இன்று நள்ளிரவிலே இதனைக் களவு செய்து கைப்பற்றிச் சென்று வாழ்விப்பேன்' என்னும் கருத்துடையவனாய்; அக்கருத்தைப் பிறர் அறியா வண்ணம் மனத்தில் ஒளித்துக் கொண்டவனாக அவ்விடத்தில் ஒரு பக்கமாக அவன் ஒதுங்கி நின்றான். இரவிலே (தான் நினைத்தபடியே) பசுவினைக் கைப்பற்றிக் கொண்டு வயனங்கோடு என்னும் அவ்வூரை விட்டு நீங்கினான்.

(கரந்து — மறைந்து; அல் — இரவு)

## விளக்கம்

'கள்ளவினை' யாவது களவு செய்தல், ஆபுத்திரன் சிறுவன் ஆதலாலும் அந்தப் பசுவினைக் காப்பதற்கு வேறு வழி காணாமையாலும், இதனைக் கள்ளவினை செய்தேனும் காப்பாற்றுவேன் என்று துணிந்தான்.

## இலக்கணம்

கடுந்துயர் — பண்புத்தொகை; நடக்குவன் — தன்மை ஒருமை வினைமுற்று

கல்லதர் அத்தம் கடவா நின்றுழி
அடர்க்குறு மாக்களொ(டு) அந்தணர் எல்லாம்
கடத்திடை ஆவொடு கையகப் படுத்தி
ஆகொண்(டு) இந்த ஆரிடைக் கழிய
நீமகன் அல்லாய் நிகழ்ந்ததை உரையாய்
புலைச்சிறு மகனே போக்கப்படுத்தி (என்று)
அலைக்கோல் அதனால் அறைந்தனர் கேட்ப
ஆட்டிநின் றலைக்கும் அந்தணர் உவர்த்தியைக்
கோட்டினின் குத்திக் குடர்புய்த் துறத்துக்
காட்டிடை நல்ஆக் கதழ்ந்து கிளர்ந்தோட

## தெளிவுரை (38-48 அடிகள்)

(நீங்கி) பருக்கைக் கற்களை உடைய சிறியதோர் வழியிலே செல்லும் பொழுது; புலைசூழ் வேள்வி நடத்தும் அந்தணர் எல்லாம் தமக்கு வேண்டிய சிற்றின் மாக்களோடு சென்று பசுவைத்தேடி அச்சிறிய வழியிலே பசுவோடு ஆபுத்திரனையும் கைப்பற்றினர். பசுவைத் திருடிக்கொண்டு இவ்வாறு அறநெறியிலாது போவதற்கு, நீ (அதனைக் கொன்று தின்னும் விருப்பமுடைய)

கீழ் மகன் இல்லையே! (இளம்பூதியின் மகனான நீ இவ்வாறு செய்வதற்கு காரணமாய்) நடந்ததைச் சொல்வாயாக, கீழ்தரமான சிறுவனே! சொல்லவில்லையானால் இப்பொழுதே எங்களால் உயிர் போக்கப்படுவாய் என்று கூறித் துன்புறுத்தும் கைகோலாலே பலரும் அவனை அடித்துக் கேட்டனர். அது கண்ட நல்ல அந்தப் பசுவானது. அங்ஙனம் (ஆபுத்திரனை வருத்திக் கொண்டிருந்த அந்த) அந்தணர்களில் உவர்த்தியானைத் தன் கொம்பினால் வயிற்றிலே குற்றிக் குடரினை அறுத்துச் சரித்துவிட்டு விரைந்து துள்ளிக்கொண்டு காட்டினூடே புகுந்து ஓடி மறைந்தது.

(கல் அதர் — கற்கள் நிறைந்த பாதை; கடவா — நின்றுழி; கடந்து — செல்லும் பொழுது; அலைக்கோல் — துன்புறுத்தும் கோல்; உவர்த்தி — தலைவன்)

## இலக்கணம்

கடவா நின்றுழி — செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் உரையாய், வருதி — முன்னிலை ஒருமை வினைமுற்றுகள்; குடர்புய்த்து — இரண்டாம் வேற்றுமைத் தொகை.

ஆபுத்திரன் தான் ஆங்காவர்க்(கு) உரைப்போன்
தோலன செய்யன் மின் நொடிவன கேண்மின்
விடுநில மருங்கின் புகுபுல் லார்த்து
நெடு நில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்த நாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்
அறத்தரு நெஞ்சோ(டு) அருள் கரந்(து) ஊட்டும்
இதனோடு வந்த செற்றம் என்ன
முதுமறை அந்தணர் முன்னிய துரைமோ

## தெளிவுரை (49-56 அடிகள்)

(அது கண்ட) ஆபுத்திரன் அப்பொழுது அவ்வந்தணர்களுக்கு (கீழ் வருவனவற்றைச்) சொல்வான் ஆனான்; பிற உயிர்கள் துன்புறுவதற்கு உரிய- கொடிய செயலைச் செய்யாதீர். தான் சொல்வதைக் கேளுங்கள். மக்கள் பயிர் செய்யாது விட்ட நிலத்திலே தாமே தோன்றுகின்ற புல்லை மேய்ந்து, உலகிலே வாழும் மக்களுக்கு எல்லாம் அவர்கள் பிறந்த நாள்தொடங்கிச் சிறந்ததான தன் இனிய சுவையுடைய பாலினை அறம் பொருந்திய நெஞ்சத்தோடு அருள்கனிந்து ஊட்டும் பசு இது இப்பசுவோடு உமக்கு உண்டாகிய பகைமை தான் யாதோ? பழைய மறைகளை ஓதும் அந்தணர்களே, நும் எண்ணத்தைச் சொல்வீராக.

(நொடிவன — கூறுவன; விடுநிலம் — பயிர் செய்யாமல் விடப்பட்ட நிலம; ஆர்நது — மேய்ந்து; செற்றம் — பகைமை; முன்னியது — நினைத்து)

**விளக்கம**

சிறந்த பால் — பாலினும் சிறந்த உணவு இல்லாமையால் சிறந்த பால் என்று கூறினான். ஆபுத்திரன் தானும் தன் உடம்மைப் பிறர் உதவியின்றக்காத்துக் கொண்டு, தன் பாலால் பிறரை ஊட்டும் செயல் முழுதும் அறமே ஆதலின்'அறந்தரு நெஞ்சோடு' என்று பாராட்டினான் என்க.

**இலக்கணம**

செய்யன் மின் — ஏவல் பன்மை எதிர்மறை வினைமுற்று; கேண்மின் ஏவல் பன்மை வினைமுற்று; நெடுநிலம், தீம்பால், முதுமறை — பண்புத்தொகைகள், பிறந்த நான் தொட்டும் — சிறப்பு உம்மை.

பொன்னணி நேமு வலங்கொள்ளக் கரக்கை
மன்னுயிர் முதல்வன் மகன்எமக்(கு) அருளிய
அருமறை தன்னூல் அறியா (ய்) இகழ்ந்தவனை
தெருமரல் உள்ளத்துச் சிறியை நீஅவ் (௬௦)
ஆமக னாதற் (கு) ஒத்தனை அறியாய்
நீ மகள் அல்லாய் கேனெள இகழ்தலும்

**தெளிவுரை (51-52 அடிகள்)**

திருமகளை மார்பில் அணிந்திருக்கின்றவனும், சக்கரப் படையை ஏந்திய கையை உடையவனும், நிலைபெற்ற உயிர்களுக்கு எல்லாம் முதல்வனும் ஆனவன் திருமால்; அவன் மகனான் பிரமன் எமக்கு அருளிச் செய்த அரியமறை நூல்களின் அருமை பெருமைகளை அறியாமலே எம்முடைய வேள்வத் தொழிலை நீ இகழ்ந்து பேசினாய்; அந்தப் பசுவின் மகனாக ஆவதற்கே நீயும் பொருத்தமாக இருக்கின்றாய்; அறியாமை உடையவனே! நீ எம்மகன் ஆகவே மாட்டாய்; இதனைக் கேள் என்று அந்தணர்கள் அவனை (ஆபுத்திரனை) இகழ்சிசயாகச் பேசினர்.

(அணி — அழகு; நேமி சக்கரப்படை; மன் — நிலைபெற்ற; தெருமரல் — சுழற்சி)

### விளக்கம்

சிறியை என்பது ஐயறிவே உடையை என்றவாறு 'நீ மகன் அல்லாய்' என்றது விலங்கே என்னும் அவர் கருத்தை வலியுறுத்தற் பொருட்டு.

### இலக்கணம்

அருமறை, நன்னூல் — பண்புத் தொகைகள்,

ஆன்மகன் அசலன் மான்மகன் சருங்கி,
புலிமகன் விரிஞ்சி புரையோர் போற்றும்
நரிமகன் அல்லனோ கேச கம்பளன்
ஈங்கிலர் நும்குலத் திருடி கணங்க(ள்) என்(று)
ஓங்குவர் பெருஞ்சிறப்(பு) உரைத்தலும் உண்டால்
ஆவொடு வந்த அழிகுலம் உண்டோ
நான்மறை மாக்கள் நன்னூ லகத்தென

### தெளிவுரை (63-69 அடிகள்)

(அது கேட்ட ஆபுத்திரன்) நான்கு மறைகளையும் உடைய மாக்களே! அசல முனிவன் பசுவின் வயிற்றில் பிறந்தவன், சிருங்கி முனிவன் மான் வயிற்றில் பிறந்தவன். விரிஞ்சி முனிவன் புலியின் வயிற்றில் பிறந்தவன் (என்று நீவிரே கூறுவீரோ) இங்கு யான் எடுத்துக்கூறிய இவரை எல்லாம் நீவிர் நும் குலத்தைச் சேர்ந்த அறவோர் கூட்டத்தினர் என்று சொல்லி மிக உயர்ந்த பெருஞ்சிறப்புடையாராகப் புகழ்ந்து கூறுவது உண்டல்லவா? அதனால் பசுவோடு தொடர்புடையதாகி வந்ததனால் இழிந்த குலமாம் என்று உங்கள் நான்கு வேதங்களினூடே எங்காவது சொல்லப்பட்டிருப்பதை நீவிர் கண்டதுண்டா? (என்று அந்தணர்களைப் பார்த்துக் கேட்டான்)

(ஆன் — பசு; புரையோர் — உயர்ந்தோர்).

### இலக்கணம்

ஆன்மகன், மான்மகன், புலிமகன், நரிமகன் — ஆறாம் வேற்றுமைத் தொகைகள்; ஓங்குயர் — ஒருபொருட்பன்மொழி; பெருஞ்சிறப்பு, நன்னூல் — பண்புத்தொகைகள்.

ஆங்கவர் தம்முளோர் அந்தணன் உரைக்கும்
ஈங்கினவன் றன்பிறப் பிறான்(அ) றி குவனென
தடவை வருத்தமொடு தல்கூர் மேனியன்
வடமொழியாட்டி மறைமுறை எய்திக்
குமரி பாதங் கொள்கையின் வணங்கித்
தமரில் தீர்த்த சாலினி போல்தனை
யாது நின்னூர் ஈங்(கு) என்வர(வு) என
மாமறை யாட்டி வருதிறம் உரைக்கும்
வார ணாசியோர் மாமறை முதல்வன்
ஆரண உவர்த்தி அரும்பெறல் மனைவியான்
பார்ப்பார்க்(கு) ஒவ்வாப் பண்பின் ஒழுகிக்
காப்புக் கிடைகழிந்து கணவனை இழந்தேன்
எறியயம் உடைமையின் இரியில் மாக்களொடு
தெற்கன் குமரி யாடிய வருவேன்
பொற்றொச் செழியன் கொற்கையாம் பேரூர்க்
காவதங்கடந்து கோவலர் இருக்கையின்
ஈன்ற குழவிக்(கு) இரங்கே ணாகித்
தோன்றாத் துடவையின் இட்டனன் போந்தேன்
செல்கதி உண்டோ தீவினை யேற்(கு) என்(று)
அல்லலுற்(று) அழுத அவள் மகன் ஈங்கிவன்
சொல்லுதல் தேற்ரேன் சொற்றயம் இன்மையின்
புல்லலோம் பன்மின் புலமைமகன் இவனென

## தெளிவுரை (70-91 அடிகள்)

அவ்விடத்தில் இருந்தவர்களுள்ளே ஓர் அந்தணன் (மற்ற அந்தணர்களை நோக்கி), இவனுடைய பிறப்பு பற்றி நான் அறிவேன் என்று சொல்லத் தொடங்கினான்.

வழி நடந்த வருத்தத்தோடு இளைந்த உடலின் ஆன மறையவள் (பார்ப்பனி) ஒருத்தி, தீவினைக்கு வேதத்தில் சொல்லப்பட்ட கழுவாய் செய்யும் விதியின்படி சென்று குமரியில் நீராழ, குமரிப் பெருந்தெய்வத்தின் பாதங்களை முறையோடு வணங்கி மீண்டும் வருபவரும், தனது சுற்றத்தார் தொடர்பு நீங்கினவருமான சாலிஎன்பவளை வழியிலே கண்டு நின்னூர் யாது? இங்கு நீர் வருவதற்குக் காரணம் யாது? என்று நான் கேட்டேன். மறையோர் குலத்தவளாகிய அச்சாலி தான் அவ்வாறு வருவதற்குரிய காரணத்தைக் கூறுவாளாயினாள்.

என் ஊர் வாராணாசி; நான் அவ்வூரில் வாழும் சிறந்த மறைகளை ஓதிச் சிறந்தவனும், மறை ஓதுவிக்கும் உபாத்திமைத் தொழிலை உடையவனும் ஆகிய ஓர் அந்தணர்க்குத் தகாத தீயொழுக்கத்தில் ஒழுகி மகளிர்க்கு இன்றியமையாத கற்புக் காவலை விட்டுச் சென்றேன். அதனால் கணவனோடு வாழும் வாழ்வை இழந்தேன்.

ஆற்றலைக் கள்வர்க்குப் பயந்து என் போன்ற மக்களோடு கூடி தமிழகத்துத் தென்கோடியிலுள்ள குமரித்துறையில் நீராடுவதற்காக வருகின்ற நான், பொன்னாலான தேரினை உடைய பாண்டியனின் கொற்கை என்னும் பெரிய பட்டிணத்தை கடந்து ஒரு காத தூரம் கடந்து அவ்விடத்திலிருந்த ஆயர்களின் இருப்பிடத்திற்கு அருகே வந்தேன். அங்கே மறைவிடமாய் இருந்த ஒரு தோட்டத்தில் குழந்தையைப் பெற்றேன். அக்குழந்தையைப் போட்டு விட்டும் வந்துவிட்டேன். இத்தகைய மாபெரும் தீவினைத் துணிந்து செய்த எனக்கு இனி சொல்லுதற்கான ஒரு நற்கதியும் உண்டா; என்று துன்புற்று அழுதாள். அவளுடைய மகனே இவ்விடத்திலுள்ள இவன், என் சொல்லால் விளையும் பயன் ஏதும் இல்லாமையால் இவ்வரலாற்றை இதுவரை நான் சொல்வதற்குத் துணிவின்றி இருந்தேன். இவன் இந்த தொழிலில் பிறந்த கீழ்மகன் ஆதலினால் இவனை யாரும் தீண்டுதலும் காத்தலும் செய்யாதீர் (என்று அவ்வந்தணன் கூறினான்).

(கடவை வருத்தம் — வழி நடை வருத்தம்; நல்கூர்மேனி — இளைத்தமேனி; வடமொழியாட்டி — பார்பனி; மறைமுறை — வேகத்தில் தீ — வினைக் கழுவாயாகக் கூறப்பட்ட உறுதி; குமரி — ஒரு தெய்வம்; தமர்சுற்றம்; எறியயம் — ஆற்றலைக் கள்வர் எறியவர் என்ற அச்சம்; எறிதல் படைத்தல், வெட்டுதல், கொள்ளுதல் முதலியவற்றிற்குப் பொதுப்பெயர் இரியன் — நிலை கெட்டுத் திரிபவன்; செழியன் — பாண்டியன்; ஓம்பல்மின் — பாதுகாவாதீர்)

## இலக்கணம்

உரைக்கும் —'செய்யும' என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று; தன் பிறப்பு ஆறாம் வேற்றுமைத் தொகை; அறிகுவன் — தன்மை ஒருமை வினைமுற்று; நல்கூர்மேனியன் — வினைத்தொகை; மாமறை உரிச்சொற்றொடர்; ஒவ்வா — ஈறுக்கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; பெற்றோர் — மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை; பேருர் பண்புத் தொகை; செல்கதி —

வினைத்தொகை; தீவினை — பண்புத் தொகை; ஓம்பல்மின் — ஏவல் பன்மை எதிர்மறை வினைமுற்று.

ஆபுத் திரன்பின் (ப) அமர்நகை செய்து
மாமறை மாக்கள் வருகுளம் கேண்மோ
முதுமறை முதல்வன் முன்னர்த் தோன்றிய
கடவுட் கணிகை காநலஞ்சிறுவர் (90)
அருமறை முதல்வர் அந்தணர் இருவரும்
புரிநூல் மார்பிர் பொய்யுரை யாமோ
சாலக்(கு) உண்டோ நலறென உரைத்து
நான்மறை மாக்களை நகுவனன் நிற்ப

## தெளிவுரை (92-99 அடிகள்)

(அது கேட்ட ஆபுத்திரன்) மீண்டும் கேட்போர் விரும்பும்படி இனிதாக நகைத்து, பெரிய மறை நூல்களையுடைய மாக்களே 'நீவிர்' பிறந்து வந்த உங்கள் (அந்தணக்) குலத்தின் வரலாற்றைக் கேளுங்கள்; பழைய வேதங்களுக்கு முதல்வனான பிரம்மன்பால் உங்கள் குலத்திற்கு முதன்முதலாகத் தோன்றிய அரிய மறைகளுக்கு முதல்வராகிய பார்ப்பனராகிய வசிட்டரும், அகத்தியரும் நாடக கணிகையாகிய திலோத்தமையின் வயிற்றில் பிறந்து அவரால் அன்பு செய்யப்பட்ட தேவகணிகையின் மக்கள் என்று உங்கள் நூல் கூறுகின்றதே; முப்புரிநூல் அணிந்த மார்பினை உடையவரே அவ்வுரை பொய்யாகிவிடுமோ?(அங்கனம் அஃது உண்மையாயின்) சாலிக்கு மட்டும் அவ்வொழுக்கம் தவறாகிவிடுமோ? என்று நான்கு வேதங்களையும் ஓதும் மக்களாகிய அவ்வந்தணரை இகழ்ச்சியோடு கேட்டான்.

(மறை — வேதம்; கேண்மோ — கேட்பிராக; நகு — சரி; கடவுட் கணிகை — தேவகணிகை).

## விளக்கம்

'அமர்நகை' யாவது கண்டோர் விரும்பத் தகுந்த இனிய நகை; அமர் நகை எள்ளல் பொருளாகப் பிறந்தது; நகுவன் என்றது பிறர் பேதமை பொருளாகப் பிறந்தது என்க.

## இலக்கணம்

முதுமறை, அருமறை, பொய்யுரை — பண்புத் தொகைகள் மாமறை உரிச்சொற்றொடர்.

ஓதல் அத்தணர்க்(கு) எவ்வான் என்றே
தாவத பூதியும் தன்மனை கடிதர
ஆகவர் கள்வன் (என்(று) அத்தணர் உதைதரும்
கிராம மெங்கனும் கடிஞையிற் கல்லிட
மிக்க செல்வத்து விளங்கியோர் வாழும்
தக்கண மதுரை தான் — சென்(று) எய்திச்
சிந்தா விளக்கின் கெழுங்கலை நியமத்
தத்தின் முன்றில் அம்மைப் பீடிகைத்
தங்கினன்....

## தெளிவுரை (100-108 அடிகள்)

ஆபுத்திரன் பிறப்புமுறை கேட்டமையாலும், அவன் வேதத்தையும் வேள்வியையும் அந்தணரையும் ஒருசேரப் பழித்து நதுதலாலும்'இவன் வேதம் ஓதும் அந்தணர்க்கும் பொருத்தமற்றவன்" என்று கருதி அவனை வளர்த்த தந்தையாகிய இளம்பூதி தன் வீட்டினின்றும் அவனை வெளியேற்றி விட்டான். அதனால் அவன் அந்தணர் வாழும் ஊர்களிலே சென்று பிச்சை கேட்க அங்கே வாழுகின்ற அந்தணர்கள், 'இவன் வேள்விப் பசுவைக் களவாடிய கள்வன்" என்று இகழ்ந்து அவனுடைய பிச்சைப் பாத்திரத்திலே கற்களைப் போட்டார்கள். அவன் அதன்பின் மிகுந்த செல்வத்தோடு வாழ்கின்றோர் நிறைந்த தென்மதுரையை அடைந்து மக்கள் மனதில் ஞான விளக்காகத் திகழும் மலைமகளின் கலைச்சிறப்பு மிக்க கலை நியமம் என்னும் திருக்கோயிலின் வாயிலிலே உள்ள ஊரம்பலமாகிய மேடையிலே தங்கி இருப்பவனாயினான.

(ஒய்வான் — பொருத்தமற்றவன்; தாதை — தந்தை; பூதி இளம்பூதி; என்ற அந்தணன்; மனை — வீடு; கடிதா — வெளியேற்ற; உதைதரும் வாழ்கின்ற; கடிஞை; பிச்சைப்பாத்திரம்; தக்கணம் — தெற்கு; எய்தி — அடைந்து — சிந்தாவிளக்கு கலைமகள்; கலைநியமம் — கலைத்தொழிலால் சிறப்புற்ற திருக்கோயில்).

## விளக்கம்

ஈதலால் பெரும்புகழ் அண்டயும் வடமதுரை இருப்பதனால் தக்கண மதுரை எனத் தெளிவாகக் கூறினார் என்க. இரப்போர்க்கு உணவிடாமல் போவதே இரக்கமற்ற தன்மை அங்ஙனமிருக்க,

அந்தணர் கிராமங்களிலெல்லாம்

ஆபுத்திரன் யாகப் பசுவைக் களவாடியவன் என்ற பகைமை உணர்வால், பிச்சைப் பாத்திரத்தில் கல்லைப் போடத்துணிந்தனர். இது அவர் அந்நாளில் கொள்ளை வேள்வியால் கொண்டிருந்த பற்றினைக் காட்டுவதாகும்.

## இலக்கணம்

தாதை — 'தந்தை' என்பதன் மருஉ, கவர் கள்வன் — வினைத்தொகை பேரூர் — செழுங்களை — பண்புத்தொகை; மூன்றில் — இலக்கணப் போலி.

........ வதிந்தத் தக்கணப் பேரூர்
ஐயக் கடிகை கையின் ஏந்தி
மையறு சிறப்பின், மனைதொறும் மறுகிக்
காணார் கேளார் கால்முடைப் பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகவென்(று) இசைகதுகடன் ஊட்டி
உண்(டு) ஒழிமிச்சி(ல்) உண்(டு) ஓடுதலை மடுத்துக்
கண்படை கொள்ளும் காவலன் தானென்

## தெளிவுரை (100 - 115 அடிகள்)

ஆபுத்திரன் அந்தத் தென்தமிழ் நாட்டுத் தலைநகராகிய மாமதுரையில் பிச்சை பாத்திரத்தைக் கையில் ஏந்திகொண்டு குற்றமற்ற சிறப்பினை உடைய வீடுகள்தோறும் சென்று பிச்சைபெற்று, குருடரையும், செவிடரையும் கால்முடம்பட்டவரையும் ஆதரிப்போர் இல்லாதவரையும், நோயாக் துன்புற்றவரையும் நெருங்கி அவர்களை 'வருக' என்று (இனிதாக) அழைத்து (தான் பெற்ற பிச்சையாகிய உணவினை) ஊட்டுவான்; ஊட்டியது போல எஞ்சிய உணவினைத் தான் உண்டு பிச்சைப் பாத்திரத்தை தலைக்கு அடியிலே தலையணையாக) வைத்துக் கொண்டு (அமைதியாகத்)தூங்குவான் என்பதாம்

(ஐயக்கடிகை — பிச்சைப்பாத்திரம்; மைஅறு — குற்றம் நீங்கிய, மறுமகிழ அடைவது; மிச்சில் எஞ்சிய; ஓடு பாத்திரம்)

ஆபுத்திரன் தானே பிச்சை எடுப்போனாய் இருந்தும் இடைவிடாது இயன்ற பொழுதெல்லாம் பிறர்க்கு உணவளித்து வாழ்த்த அவனைக் 'காவலன்' என்று கூறிய ஆசிரியரின் திறம் மிகவும் வியக்கத்தக்கதாகும்.

காணார், கேளார் — வினையாலணையும் பெயர்கள்; வருக — வியங்கோள் வினைமுற்று; ஒழி மிச்சில் — வினைத்தொகை.

பயிற்சி வினாக்கள்

சுருக்கமான விடை தருக

1) மணிமேகலை — பெயர்க்காரணம் தருக.

2) மணிமேகலையின் ஆசிரியர் யார்? அவரைப்பற்றி நீவிர் அறிவன யாவை?

3) ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை என்ற பெயர்ப் பொருத்தத்தை விளக்குக?

4) சாலி என்பவள் யாவள்? அவள் குமரித்துறைக்கு நீராடச் செல்லக் காரணமென்ன?

5) சாலி பெற்ற குழந்தைக்குப் பசு பாலூட்டியது ஏன்?

6) இளம்பூதி என்பவன் யார்? அவன் நம்பி பிறந்தான் பொலிக நம்பிகளை என்று மகிழக் காரணமென்ன?

7) இளம்பூதி தான் எடுத்து வளர்த்த குழந்தையை எவ்வாறு வளர்த்தான்?

8) 'வரையிடப்பட்ட மானே போன்று' இவ்வுவமை எதன் பொருட்டு எடுத்தாளப் பெற்றுள்ளது.

9) 'நேரவன செம்மின்' என்ற ஆபுத்திரன் அந்தணர்க்கு உரைத்த அறநெறி யாது?

10) ஆபுத்திரன் கொலை வேள்விச் செயலைக் கடிந்து பேசியதற்குக் காரணமென்ன?

11) 'ஆவோடுவந்த அழிகுலம்' உண்டா? ஆபுத்திரன் வழி நின்று விளக்குக.

12) ஆபுத்திரனை இளம்பூதி தன் வீட்டிலிருந்து வெளியேற்றக் காரணம் யாது?

13) ஆபுத்திரன் தக்காண மதுரை சென்றது ஏன்?

14) ஆபுத்திரனைக் காவலன் என ஆசிரியர் கூறுவது பொருந்துமா? ஆய்க.

# பாடம் 7
# பெரியபுராணம்

## குறிப்பு

பெருமை பெற்ற சிவனடியார்களின் வரலாறுகளை உணர்த்துவதாக இந்நூல் அவ்வாறு பெயர் பெற்றது. சிவனடியார் எழுபத்திரண்டு பேராவர். அவர்களுள், தனியடியார் அறுபத்து மூவர்; தொகையடியார் ஒன்பதின்மர் இந்நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர், 'திருத்தொண்டர் புராணம்' என்பது இது சைவத் திருமறைகளுள் பன்னிரண்டாவது திருமுறையாகும். இது இரண்டு காண்டங்களையும், பதின்மூன்று சருக்கங்களையும் கொண்டது. புராணம் என்பதற்குப் பழைய வரலாறு என்பது பொருள்.

## சேக்கிழார்

பெரியபுராணத்தை இயற்றியவர் சேக்கிழார். இவர் தொண்டை மண்டலத்தில் உள்ள குன்றத்தூரில் வேளாளர் மரபில் தோன்றியவர். இளமையில் பெற்றோர் இவருக்கு இட்ட பெயர், 'அருண்மொழித்தேவர்' என்பது. அநாபயச் சோழன் (இரண்டாம் குலோத்துங்கன்) என்னும் மன்னன் இவரைத் தம் அமைச்சராக ஆக்கிக் கொண்டான். இவருக்கு உத்தம சோழப் பல்லவராயன் என்ற பட்டத்தையும் ஈந்தான். இந்த அரசனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, இவர் பெரியபுராணத்தை இயற்றியருளினார். மன்னன் இவருக்குப் பல சிறப்புகளைச் செய்து, 'தொண்டர்சீர் பரவுவார்' என்ற சிறப்பு பெயரையும் நல்கினான். இவருடைய காலம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு. சேக்கிழார் பெருமான் பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப்பாடும் இயல்பு உடையவர்.

## மெய்பொருள் நாயனாரின் வரலாற்றுச் சுருக்கம்

சேதிநாட்டில் உள்ள திருக்கோவலூரில், 'மெய்பொருள் நாயனார்' என்னும் மன்னர் வந்தார். அவர் பகைவர் பலரை வென்று அறநெறி வழுவாமல்

ஆட்சி புரிந்தார். இவர் சிவனடியார்களிடம் அளவு கடந்த பக்தி கொண்டு, அவர்களுக்கு வேண்டுவன அளித்து, அவர்களுடைய திருவேடமே மெய்பொருள் எனக் கொண்டு வாழ்ந்து வந்தார். முத்தநாதன் என்பவன் பகைமை கொண்டு அவர்மீது பலமுறை போர் தொடுத்துத் தோல்வி கண்டான். அதனால் அவன் நாயனாரை வஞ்சனையால் வெல்லக் கருதினான். ஆகவே அவன் சிவனடியார் போன்று வேடந்தாங்கி, உடைவாளை மறைத்து வைத்திருந்த புத்தகக் கட்டு ஒன்றினைக் கையில் ஏந்திக்கொண்டு திருக்கோவலூரை அடைந்தான்.

அங்கு மெய்ப்பொருள் நாயனாரின் அரண்மனையை அடைந்து உள்ளே சென்றான். நாயனார் அவனைச் சிவனடியார் என்று கருதி வரவேற்று அவன் வந்த காரணத்தை வினவினார். அதற்கு உங்கள் தலைவராகிய சிவபெருமான் அருளிய சிறந்த ஆகமநூல் ஒன்றை உமக்கு உபதேசிக்க வந்தேன். தாங்கள் அதனைத் தனியாக இருந்து கேட்க வேண்டும் என்றான். நாயனாரும் இதனைக் காட்டிலும் மிகக் பேறு ஒன்று எனக்கு உண்டோ என்று கூறி, தனிஇடத்தே இருந்து அதனை அருளிச் செய்யும்படி வேண்டினார். வேண்டி, அதனை வணங்கி நிற்க, அவன், தான் மறைத்து வைத்திருந்த உடைவாளை எடுத்து அவரைக் குத்தினான்.

முத்தநாதனின் கொடுஞ்செயலைக் கண்ட தத்தன் என்னும் வாயில் காவலன் அவனை வாளால் வெட்டிக் கொல்ல முயன்றான். செங்குருதி பெருக்கெடுத்துப் பாயக் கீழே விழும் நிலையிலிருந்த நாயனார் அவனைத் தத்தா நமர் எனத் தடுத்தார். அவர் இனி நான் யாது செய்ய வேண்டும்? என் அவரிடம் வேண்ட நாயனார் முத்தநாதனுக்கு எத்தகைய துன்பமும் நேராவண்ணம் அவரை அழைத்துச்சென்று நகர எல்லையைக் கடந்து விட்டு வரும்படிக் கட்டளையிட்டார். தத்தனும் அவ்வாறே செய்து அவரிட்ட கட்டளையை நிறைவேற்றியதை அவரிடம் வந்து கூறினான்; நாயனாரும் அவனை மனமகிழ்ந்து பாராட்டினார், அப்போது சிவபெருமான் நாயனாருக்குத் திருக்காட்சி அளித்து, அவரைத் தம் திருவடி நிழலை அடையுமாறு செய்தார்.

# மெய் பொருள் நாயனாரின்
# அரசியல் மாண்புசிவநெறித் தொண்டும

சேதி நன் னாட்டு நீடு,
திருகோவ லூரின் மன்னி,
மாதொரு பாகர் அன்பின்
வழிவரு மலாடர் கோமான்,
வேதநன் நெறியின் வாய்மை
விளக்கிட மேன்மை பூண்டு,
காதலால் ஈசர்க் கண்பர்
கருத்தறிந் தேவல் செய்வார், (1)

அரசியல் நெறியின் வந்த
அறநெறி வழாமல் காத்து,
வரைநெடுந் தோளால் வென்று
மாற்றலர் முனைகள் மாற்றி,
உரைதிறம் பாத நீதி
ஓங்குநீர் மையினில் மிக்கார்
திரைசெல்நீர்க் கடையான் அன்பர்
வேடமே சிந்தை செய்வார் (2)

மங்கையை பாக மாக
உடையவர் மன்னுங் கோயில்
எங்கனும் பூசை நீடி,
எழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப்
போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள் நாயகருக் கன்பர்
தாளலால் சார்பொன் றில்லார் (3)

தேடிய மாடு, நீடு
செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்
காவான் ஆகும்; என்று
நாடிய மனத்தி னோடு
நாயன்மார் அணைத்த போது,
கூடிய மகிழ்ச்சி பொங்கக்
குறைவறக் கொடுத்து வந்தார். (4)

## தெளிவுரை : (1)

உமாதேவியினை ஒரு பக்கத்தே கொண்டுள்ள சிவபிரானிடம் கொண்ட அன்பினை வழிவழியாகப் பெற்ற மலாடு என்னும் நாட்டின் தலைவராக விளங்கிய மெய்ப்பொருள் நாயனார் என்னும் மன்னர், சேதிநாடு என்னும் பெயரையுடைய அந்நாட்டினைத் திருக்கோவலூர் என்னும் ஊரினைத் தலைநகராகக் கொண்டு, வேதங்கள் சிறப்பித்துக் கூறும் நல்ல வழிகளில் உண்மையானது. நிலைபெற்று விளங்கும்படி உயர்ந்த, தன்மைகளைக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தார். மேலும் பக்தி நிறைந்து விளங்கும் சிவபெருமானுடைய அடியார்களின் விருப்பத்தை அறிந்து, அவர்கள் விரும்பிய பணிவிடைகளைச் செய்து வந்தார் (மன்னி நிலைபெற்று; மாதொருபாகர் — சிவபெருமான்; ஏவல் — பணிவிடை).

## விளக்கம்

மலையமான் என்பவனுடைய நாடு 'மலாடு' எனப்பெயர் பெற்றது. அதற்கு சேதி நாடு என்பது பெயர். தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள திருக்கோவிலூரும், அதனைச் சார்ந்த பகுதிகளும் மலையமானுடைய நாடாகும். மெய்ப்பொருள் நாயனார், சிவபெருமானுடைய அடியார்களின் விருப்பத்தைக் குறிப்பால் அறிந்து அவர்கள் விரும்பும் பணியிடைகளைப் புரிந்து வந்தார்.

## இலக்கணம்

நன்நாடு, நன்நெறி — பண்புத்தொகைகள்; மலாடு — மலையமான் நாடு என்பதன்மரூஉ; மேன்மை — பண்பாகுபெயர்; பூண்டு — இறந்த கால வினையெச்சம்; செய்வார் — பலர்பால் வினைமுற்று.

## தெளிவுரை : (2)

மெய்ப்பொருள் நாயனார் அரசியல் முறைப்படி நீதிநெறி தவறாமல் குடிமக்களைப் பாதுகாத்து வந்தார். மலைபோன்ற தம் தோள்வலின் வலிமையாய் பகைவர்களைப் போர்க களங்களில் வென்ற வாய்மை; தவறாத அரசு நீதியில் சிறந்து விளங்கினார். அலைகள் பொருந்திய நீரினையுடைய கங்கையாளு தங்கியுள்ள சடையினை உடைய சிவபெருமானுடைய அடியார்களின் திருவேடத்தையே எப்பொழுதும் நினைத்த வண்ணம் இருப்பார்.

(வரை — மலை; மற்றவர் — பகைவர் நீர்மை — தன்மை).

## விளக்கம்

மெய்ப்பொருள் நாயனார் அரச நீதி தறாமல் ஆட்சி புரிவதில் சிறந்து விளங்கினார். சிவபக்தியிலும் அவர் சிறந்த விளங்கவானார். சிவபெருமானுடைய அடியவர்கள் நம்மிடம் வருவதை அவர் எப்பொழுதும் நினைத்த வண்ணமாகவே இருப்பார்.

## இலக்கணம்

அறநெறி, நெடுந்தோள் — பண்புத்தொகைகள்; வழாமல் — எதிர்மறை வினையெச்சம்; காத்த, வென்று — இறந்தகால வினையெச்சங்கள் திறம்பாத — எதிர்மறைப் பெயரெச்சம்; ஓங்கு, நீர்மை, செய்நீர் — வினைத்தொகைகள்.

## தெளிவுரை : (3)

உதாதேவியை இடப்பக்கத்தே உடையவராகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கோயில்களில் எல்லாம் சிறப்புடன் பூசைகள் நடைபெறுமாறு செய்தார். ஏழிசைகள் அமைந்த பாடல்களும், நடனங்களும் அங்கே சிறந்து விளங்கும்படிச் செய்த சிவபெருமானை நாள்தோறும் போற்றி வணங்கி வாழ்ந்து வருபவரானார். நாயனார், தம்முடைய தலைவராகிய சிவபெருமானுடைய அடியார்களின் திருப்பாதங்களே தமக்குத் துணையாவதன்றி, வேறு துணை ஒன்றும் இல்லாதவராக இருந்தார். (மங்கை — உமாதேவி; மன்னம் — நிலைபெறும்; எங்கணும் — எங்கும் தான்பரதம்;சார்பு — துணை)

## விளக்கம்

சிவபெருமானுடைய அடியவர்களின் திருவடிகளார் தமக்குத் துணையாகக் கொண்டு விளங்கினார். மெய்ப்பொருள் நாயனார், ஏழிசை, சூரம், தத்தம், உழை, இளி, விளரி, தாரம், கைக்கிளை என்பன.

## இலக்கணம்

உடையவர் — வினையாலணையும் பெயர்; எங்கணும் — கண்ணும் என்னும் சொல்லின் இடைக்குறை; ஏழிசை (ஏழ்+இசை) பாடல், ஆடல் உம்மைத் தொகைகள்; அலால் என்பதன் இடைக்குறை.

**தெளிவுரை : (4)**

தாம் தேடிய செல்வமும் முன்னோர்கள் தேடிவைத்த செல்வங்களையும் தில்லைச் சிற்றம்பலத்தில் நடனம் ஆடிக்கொண்டிருக்கும் கூத்தப் பெருமானின் அடியவர்களுக்கே உரியனவாகும் என்று எண்ணி சிவபெருமானுடைய அடியவர்கள் தம்மிடம் விரும்பி வந்தபோது தம் உள்ளத்தில் பொருந்திய மகிழ்ச்சி மிகும்படியாக ஒரு குறையும் இல்லாமல் அவர்களுக்கு மிகுதியாகக் கொடுத்து வந்தார்.

(மாடு — செல்வம்; நாடிய — விரும்பிய; நாயன்மார் — சிவபெருமானுடைய அடியவாக்ள)

**விளக்கம்**

மெய்ப்பொருள் நாயனார், தாம் முன்பு தேடிய செல்வமும் தம் முன்னோர்கள் தேடிவைத்த செல்வமும் சிவபெருமானுடைய அடியவர்களுக்கே உரியன என்று கருதினார். அதனால் அவர் சிவனடியார்களுக்கு மிகுதியாகக் கொடுத்து வந்தார்.

**இலக்கணம்**

தேடிய, ஆடிய, நாடிய, கூடிய; அணைந்த — இறந்தகாலப்பெயரெச்சங்கள்; நீடு செல்வம் — வினைத்தொகை.

## முத்தநாதனின் சூழ்ச்சி

இன்னவா றொழுகு நாளில்,
இக்திறம் புரிந்தோர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும்
ஆசையால் அமர்மேற் கொண்
பொன்னனி ஓடை யானை
பொருபரி காவாள் மற்றும்
பன்முறை இழந்து தோற்றுப்
பரிபவப் பட்டுப் போனான் (5)

இப்படி இழந்த மாற்றான்
இகலினால் வெல்ல மாட்டான்,
மெய்ப்பொருள் வேந்தன் சீலம்
அறிந்து, வெண்ணீறு சாத்தும்
அப்பெரு வேடங் கொண்டே
அற்றத்தில் வெல்வா னாகச்,
செப்பரும் நிலைமை எண்ணித்
திருக்கோவ லூரிற் சேர்வான். (6)

**தெளிவுரை (5)**

மெய்பொருள் நாயனார் இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில், முத்தநாதன் என்னும் பெயருடைய ஒரு மன்னர். அவர் மேல் பகைமை கொண்டு அவரை வெல்லும் ஆசையால் அவர் மீது போர் தொடுத்துப் பொன்னால் செய்யப்பெற்ற அணிகளாகிய முகபடாம் அணிந்த யானைப் படை, போர்புரியும் குதிரைப்படை, காலட்படை, தேர்ப்படை முதலியவைகளையும், பிறபடைகளையும் பலமுறை இழந்து, தோல்விகண்டு அவமானப்பட்டு போனான்.

(இகல் — பகைமை; அமர் — போர்; பரிபவம் — அவமானம்)

இலக்கணம்

பொன்னணி — வேற்றுமைத்தொகை; பொருபரி — வினைத்தொகை; இழந்து தோற்று — இறந்தகால வினையெச்சங்கள்; போனான் — படர்க்கை ஆண்பால் வினைமுற்று.

**தெளிவுரை (6)**

இவ்வாறு மெய்ப்பொருள் நாயனாரிடம் தோல்வி கண்ட பகைவனாகிய முத்தநாதன், போரில் அவரை வெல்ல முடியாதவனாய்ச் சிவவேடமே சிவபிரான், என்று கருதும் (மெய்பொருள் நாயனாரின் சிறந்த ஒழுக்கத்தினை அறிந்து, திருநீற்றை அணியும் சிவனடியார் வேடத்தை மேற்கொண்டு வஞ்சகச் சூழ்ச்சியால் எண்ணி, சொல்வதற்கரிய அந்தச் செயலை நினைத்துக் திருகோவலூரைச் சேர்த்தான்

மாற்றான் — பகைவன்; இகல் — பகை; சீலம் — ஒழுக்கம்; அற்றம் — சூழ்சி;

**இலக்கணம்**

மாட்டான் — முற்றெச்சம்; வெண்ணீறு — பண்புத்தொகை; செப்பரும் — தொகுத்தல் விகாரம்.

## முத்தநாதன் சிவவேடத் தாங்கிநாயனாரின் மாளிகையினுள் செல்லுதல்

மெய்யெலாம் நீறு பூசி,
வேணிகள் முடித்துகி கட்டிக்
கையினிற் படைக்க ஏந்த
புத்தகக் கவனி யேந்தி,
மைபொதி விளக்கே யென்ன
மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய்தல லேடங் கொண்டு
புகுந்தனன் முத்த நாதன் (7)

மாதவ வேடங் கொண்டே
லண்கணான் மாடந் தோறும்
கோகைசூழ் அளக பாரக
குழைக்கொடி யாட மீது
சோதிவெண் கொடிகள் ஆடும்
சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோவில்
திருமணி வாயில் சேர்ந்தான் (8)

கடையுடைக் காவ லாளர்
கைத்தொழு தேற நின்றே,
உடையவர் தாமே வந்தார்
உள்ளொழுந் தாளும், எண்ணத்
தடை பல புக்க பின்பு,
தனித்த வடநின்று தத்தன்
இடைதெரிந்தருள வேண்டும்;
துயில் கொள்ளும் இறைவன் என்றான். (9)

என்றவன் கூறக் கேட்டே
    யானவற் குறுகி கூற
நின்றிடு நீயும் என்றே
    அவனையும் நீக்கிப் புக்குப்,
பொன் திகழ் பள்ளிக் கட்டில்
    புரவலன துயில, மாடே
மன்றங் குழல்மென சாயல்
    மாதேவி இருப்பக் கண்டான். (10)

## தெளிவுரை (7)

முத்தநாதன் தன் உடல் முழுவதும் திருநீற்றைப் பூசிக்கொண்டு சடைகளை முடித்து தலையில் கட்டிக்கொண்டு, ஆயுதத்தை மறைத்து வைத்துள்ள புத்தகக்கட்டைத் தன் கையில் ஏந்திக்கொண்டு, கருப்பைத் தன்னிடம் கொண்டுள்ள (திரி) விளக்குப் போல மனத்துள்ளே வஞ்சகச் சூழ்ச்சியினைக் கொண்டு பொய்யான சிவனடியார் வேடத்தைத் தாங்கி அரண்மனையுள் புகுந்தான். (வேணி — சடை; கரந்த — மறைந்த, கவளி — கட்டு).

## விளக்கம்

மைபொதி.....கறுப்பு வைத்தது.

முத்தநாதன் வஞ்சகம் பொருந்திய உள்ளம் உடையவனாகக் காணப்பட்டான். அவனுடைய வெளித்தோற்றமோ சிறந்த சிவனடியார் வேடமாகக் காணப்பட்டது. முத்தநாதன் சிவனடியார் போன்று காணப்படினும் அவனுடைய உள்ளம் இருள் (சூழ்ச்சி) நிறைந்ததாக இருந்தது. இதனைச் சேக்கிழார் ஒரு சிறந்த உவமை வாயிலாக விளக்குகிறார். விளக்கு வெளித் தோற்றத்தில் ஒளி நிறைந்து காணப்படுகிறது. ஆயினும் அது (திரி) இருளைத் தன்னகத்தே கொண்டது. முத்தநாதனின் வஞ்சகம் பொருந்திய உள்ளத்திற்கு இதனை உவமையாக அமைக்கின்றார் சேக்கிழார்.

## இலக்கணம்

எலாம் — இடைக்குறை; கரந்த — இறந்தகாலப்பெயரெச்சம்; புத்தக்கவளி — வேற்றுமைத்தொகை; என்ன — உவம உருபு; பொதி விளக்கு — வினைத்தொகை; தவவேடம் — வேற்றுமைத் தொகை; புகுந்தனன் — படர்க்கை ஆண்பால் வினைமுற்று.

## தெளிவுரை (8)

சிவவேடங்கொண்ட வன்னெஞ்சு உடையவனாகி முத்தநாதன் (திருக்கோவலூரை அடைந்து) பாடங்கள் தோறும் மலர் அணிந்த கூந்தலாகிய மங்கையர் ஆட, மாடங்களின் மேல் ஒளி பொருந்திய வெண்மையான கொடிகள் ஆடுகின்ற ஒளிமிக்க நீண்ட தெரு வழியாகச் சென்று சேதிநாட்டு அரசர் பெருமானாகிய மெய்ப்பொருள் நாயனாரின் அரண்மனையின் அழகிய வாயிலைச் சேர்ந்தான்.

(வன்கணான் — வன்னெஞ்சுடையவன்; கோதை — மலர்; அளகம் — கூந்தல்; குழை — காதணி; சோதி — ஒளி, மறுகு — தெரு; சோதியர்பெருமான் — மெய்ப்பொருள் நாயனார்; கோயில் — அரண்மனை)

## இலக்கணம்

மாதவம் — உரிச்சொற்றொடர், குழ அளகம் — வினைத்தொகை, அளகபாரம் — உருவகம்; வெண்கோடு, நெடு மறுகு — பண்புத்தொகைகள் வாயில் — இலக்கணப்போலி.

## தெளிவுரை (9)

அரண்மனை வாயில் காவலர்கள் முத்தநாதனைக் கைகூப்பி வணங்கி, எதிரே சென்று நின்று, 'சிவபெருமானே வந்துள்ளார். உள்ளே எழுந்தருள்க' என்று பணிவோடு வேண்டிக்கொள், பல வாயில்களைக் கடந்து சென்ற பின்னர், கடைசி வாயிலில் நின்று கொண்டிருந்த தத்தன் என்னும் வாயில் காவலன் 'அரசர் துயில் கொள்கின்றார்; ஆகவே தக்க சமயம் அறிந்து வருக' என்று கூறினான் (துயில்—தூக்கம்; இடை சமயம்; இறைவன்— அரசன்).

## இலக்கணம்

உடையவர் — வினையாலணையும் பெயர் — அருளும், செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று; வேண்டும் — வியங்கோள் வினைமுற்று; கொளும் — கொள்ளும் என்பதன் இடைக்குறை.

## தெளிவுரை

அன்று தத்தன் கூற அதனைக் கேட்டு நான் அரசர்க்கு உறுதிப் பொருளைக் கூறவந்தேன். நீயும் இங்கேயே நிற்பாய் என்று கூறி அவனையும்

நீக்கிவிட்டு உள்ளே சென்றான். பொன்னால் செய்யப் பெற்றுச் சிறந்து விளங்கும் படுக்கைக கட்டிலில் அரசன் உறக்கத்தை மேற்கொண்டிருந்த பக்கத்தில் மணம் வீசும் அழகிய கூந்தலையும் மென்மையான தோற்றத்தையும் உடைய அரசமாதேவி இருப்பதைக் கண்டான்.

(பள்ளி — படுக்கை; புரவலன் — அரசன்; மாடு — பக்கம்; மன்றல் — மணல்)

## இலக்கணம்

நின்றிடு—ஏவல் ஒருமை வினைமுற்று; புக்கு — இறந்தகால வினையெச்சம்; திகழ்பள்ளி — வினைத்தொகை; பள்ளிக்கட்டில் — வேற்றுமைத் தொகை; மென்சாயல் — பண்புத்தொகை; மாதேவி — உரிச்சொற்றொடர் இருப்ப — இறந்தகால வினையெச்சம்.

## மெய்பொரு நாயனார் முத்தநாதனிடம் ஆகமம் கேட்டல்

கண்டுசென் றனையும் போது
கதுமென எழுந்து தேவி
வண்டலர் மாலை யானை
எழுப்பிட, உணர்ந்து மன்னன்,
அண்டர்நா யகனார் தொண்ட
ராமெனக் குவிந்த செங்கை
கொண்டிழிந்து, எதிரே சென்று
கொள்கையின் வணங்கி நின்று (11)

மங்கலம் பெருக, மற்றென்
வாழ்வு வந்தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற
தென் கொலோ? என்றுகூற
உங்கள் நாயகனார் முன்னம்
உரைத்த ஆ கமநூல், மண்மேல்
எங்குமில் லாத தொன்று
கொடுவந்தேன்; இயம்ப என்றான் (12)

பேறெனக் கிதன்மேல் உண்டோ;
பிரானருள் செய்த இந்த
மாறிலா கமத்தை வாசித்
தருள்செய வேண்டும் என்ன
நாறுபூங்கோதை மாது
தலிரவே நானும் நீயும்
வேறிடந் திருத்தல் வேண்டும்
என்றவன் விளம்ப வேத்தன்

(13)

திருமகன் என்ற நின்ற
தேவியார் தம்மை நோக்கிப்
பசிவுடன் விரைய அந்த்
புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத்
தலிசின் மேல் இருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி,
இனியருள் செய்யும் என்றார்

## தெளிவுரை (11)

முத்தநாதன் அரசனையும், அவர் தம் தேவியாரை கண்டு அவர்களை அணுகியபோது, அரசியார் விரைந்து எழுந்து வண்டுகள் தங்குவதர் மலர்ந்த மாலையினை அணிந்துள்ள அரசரை எழுப்பினான். மன்னன் எழுந்து, தேவர்கட்குத் தலைவரரிகய சிவபிரானுடைய அடியவர் என்று முத்தநாதனைக் கருதிக் கூப்பிய கைகளோடு படுக்கைக் கட்டிலிருந்து இறங்கி, எதிரே சென்று முறைப்படி வணங்கி நின்றார்.

(கலுமென — விரைவாக; அண்டர் — தேவர்; நாயகனார் — தலைவர்; இழிந்து — இறங்கி; கொள்கை — முறை)

## இலக்கணம்

போது — மருஉ; அலர்மாலை — வினைத்தொகை; அண்டர், நாயகனார் — வேற்றுமைத்தொகை; செங்கை — பண்புத்தொகை; இழிந்த — இற்நதகால வினையெச்சம்.

## தெளிவுரை : (12)

'நன்மை பெருகும்படி எனக்கு நல்வரவு வந்து பொருந்தியது என்று கூறும் வண்ணம்' தாங்கள் இங்கு எழுந்தருளியதற்குக் காரணம் என்னவோ, என்று கேட்க, முத்தநாதன் உம்முடைய தலைவராகிய சிவபெருமான் முன்பு கூறியருளிய, மண்ணுலகில் எங்குமே கிடைக்காத சைவ ஆகமநூல் ஒன்றினை உமக்குக் கூறும் பொருட்டுக் கொண்டு வந்தேன் என்று கூறினான். (மங்களம் — நன்மை; இயம்ப — கூற)

## விளக்கம்

'மங்களம்...வந்தனைந்து' — இது குறிப்புப் பொருள் தருவது; நன்மை நிறைந்த மேல் உலக வாழ்வு வந்து கிட்டியது. அதாவது மெய்ப் பொருள் நாயனாரின் இவ்வுலக வாழ்வு முடிந்தது என்பதை உணர்த்தும் முத்தநாதன் பொய்யான சிவவேடத்தோடு வந்திருப்பவன். ஆதலால் 'உங்கள் நாயகனார' என்றால் மண்மேல்....இல்லாததொன்று இஃது இரு பொருள்பட வந்தது. மண்ணுலகில் எங்கும் கிடைக்காத பெருமை மிக்க ஆகமநூல் என்றும், மண்மேல் இல்லாத பொய்யான ஒன்று என்றும் பொருள் தரும்.

## இலக்கணக் குறிப்பு

அனைத்து — ஒன்றன் பால் வினைமுற்று; என்ன — உவம உருபு; சொல் — இடைச்சொல் (அசை நிலைப் பொருளியல் வந்தது); ஆகமநூல் — இரு பெயரொட்டுப் பண்புத் தொகை; கொடு — கொண்டு என்பதன் இடைக்குறை; இயம்ப — வினையெச்சம்.)

## தெளிவுரை (13)

இதனைக் காட்டிலும் மேலான பேறு ஒன்று எனக்கு வேறு உளதோ.? சிவபிரான் கூறியருளிய இந்த ஒப்பற்ற ஆகமத்தை உபதேசித்தருள வேண்டும் என்று மன்னன் வேண்ட, 'மணம் வீசும் பூமாலையினை அணிந்த உன் மனைவி இவ்விடத்தை விட்டு நீங்க, ஆகநூலை உபதேசிப்பதற்கு ஏற்றவாறு நானும் நீயும் வெவ்வேறு இடங்களில் இருத்தல் வேண்டும்' என்று அவன் கூற, அரசன்; (பிரான் — தலைவன்; மாறில் — ஒப்பில்லாத; கோதை — மாலை; விளம் — கூற).

விளக்கம்

நானும் நீயும் வேறிடத்திலிருத்த வேண்டும்; நூலை உபதேதசிக்கும் ஆசான் மேலிடத்தில் இருப்பதையும் மாணாக்கள் கீழிடத்தில் இருப்பதையும் குறிக்கும். நான் இவ்வுலகில் இருக்க நீ மேலுலகில் இருக்க வேண்டும் என்றும் பொருள் தரும். தாது பூங்கோதை மாது தவிர மலரணிந்த உன் மனைவி இவ்விடம் விட்டுச் செல்ல வேண்டும், உன் மனைவி இன்று முதல் மலர் அணிவதை நீக்க வேண்டும்.

## இலக்கணம்

பெறு — முதனிலை திரிந்த தொழிற்பெயர்; வேண்டும் — வியங்கோள் வினைமுற்று; பூங்கோதை — வேற்றுமைத் தொகை; நானும் நீயும் — எண்ணும்மை.

## தெளிவுரை : (14)

இலக்குமி போன்று நின்ற தன் மனைவியை நோக்கி விரைவாக அந்தப்புரத்திற்குச் செல்லும்படி அன்போடு கட்டளையயிட்டுப் பொய்யான சிவவேடந் தாங்கி வந்த முத்தநாதனை, உயர்ந்த ஓர் இருக்கையின் மேல் இருக்கும்படிச் செய்து; தாம் தரையிலிருந்து அவரை வணங்கி, இனி ஆகமநூலை உபதேசித்தருள்க என்று வேண்டிக் கொண்டார் (திருமகள் — இலக்குமி, தேவி — மனைவி; பரிவு — அன்பு; ஏவி — கட்டளையிட்டு; தவிசு — இருக்கை)

## இலக்கணம்

தருதவம் — வினைத்தொகை; மேல் — ஏழாம் வேற்றுமை உருபு; இருநிலம்—உரிச்சொற்றொடர்.

## முத்தநாதன் தன் கருத்தை நிறைவேற்றல்

கைத்தலம் திருந்த வஞ்சக்
கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று
புரிந்தமர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான் முன்
நினைத்த அப் பரிசே செய்ய
'மொய்த்தவ வேடமே மெய்ப்
பொருள் எனத் தொழுது வென்றார்.

## தெளிவுரை(15)

தன்கையில் வைத்திருந்த புத்தகக் கட்டுப் போலத் தோன்றும் ஆயுதம் மறைத்து வைத்துள்ள கட்டினைத் தன்மடியின் மீது வைத்துப்புத்தகக் கட்டினை அவிழ்ப்பவனைப் போல் அதனை நாயனார் தம்மை விரும்பி வணங்கும் போது அதனுள் மறைத்து,வைத்திருந்த உடைவாளை எடுத்துத்தான் முன்பு நினைத்து வந்த அந்தச் செயலையே செய்ய,நாயனார்,சிவனடியாரின் தவவேடமே சிவபிரானின் தோற்றம் என்று கருதி,அவனை மீண்டும் வணங்கி,அந்நிலையிலும் அவனை வென்றவரானார்.(கவளி—கட்டு;புரிந்து—விரும்பி பத்திரம் —உடைவாள்;விதம்)

### விளக்கம்

முத்தநாதன்,மெய்ப்பொருள் நாயனாரைக் கொலை புரிந்தான் என்று குறிக்கச் சேக்கிழார் மனம் விரும்பவில்லை,ஆகவே அவர்,தான் முன் நினைத்து அப்பரிசே செய்ய'என்று குறிக்கலானார்.

### விளக்கம்

கைத்தலம்—இருபெயரொட்டுப் பண்புத்தொகை;அவிழ்ப்பான்—வினையாலணையும் பெயர்;மெய்ப்பொருள்—இருபெயரொட்டுப் பண்புத்தொகை;வென்றார்—படர்க்கைப் பலர்பால் வினைமுற்று(உயர்வுப்பன்மைப் பொருளில் வந்தது)

### தத்தன் முத்தநாதனை வெட்ட முயல்வதும் நாயனார் தடுத்துக் கூறலும்

மலைந்தவன் புகுந்த போதே
　　மனம் மனம் அங்கு வைத்த தத்தன்;
இறைப்பொழுதி தின்கட் கூடி
　　வாளினால் எறிய லுற்றான்
நிறைந்தசெங் குருதி சோர
　　வீழ்கின்றார்,அளவில் 'தத்தா!
நமர்'எனத் தடுத்து வீழ்ந்தார். (16)

வேதனை எய்தி வீழ்ந்த
வேந்தரால் விளக்கப்பட்ட
தாதனாம் இத்தன் தானும்
தலையினால் வணங்கித் தாங்கி,
'யாதுதான் செய்கேன்? என்ன
எம்பிரான் அடியார்கோக
மீதிடைவிலக்கா வண்ணம்
கொண்டு போய் விடுநீ' என்பார். (17)

## தெளிவுரை (16)

முத்தநாதன் தன் புத்தக் கட்டினை மறைத்துக் கொண்டு உள்ளே புகும்போதே, தன் மனத்தை அங்கே செலுத்திக் கவனித்துக் கொண்டிருந்த தத்தன் என்னும் காவலன், நொடிப்பொழுதில் உள்ளே சென்று தன் கையில் இருந்து வாளால் அவனை வெட்ட முயன்றான். சிவந்த இரத்தம் மிகுதியாகச் சொரியத் தளர்ந்து வீழகின்றவராகிய நாயனார், தாம் கீழே விழும் அந்நிலையிலும் தம்முடைய நீண்டகையால், தத்தனே! இவர் 'நம்மவா' என்று கூறி முத்தநாதனை வாளால் வெட்டாதபடி தடுத்துத் தரையிலே விழுந்தார். (இறைப்பொழுது — நொடிப்பொழுது; எறிதல் — வெட்டுதல், குருதி — இரத்தம்; நமர் — நம்முடையவர்).

## இலக்கணம்

நிறைந்த — இறந்த காலப் பெயரெச்சம்; செங்குருதி (செம்மை — குருதி) — பண்புத்தொகை; வீழ்கின்றார் — வினையாலணையும் பெயர்; வீழ்ந்தார் — படர்க்கை பலர்பால் வினைமுற்று; எறிதல் — தொழிற்பெயர்; தத்தா — விளிவேற்றுமை.

## தெளிவுரை (17)

தரையில் விழுந்த மன்னரால் தடுக்கப்பட்ட அடியவனாகிய தத்தனும் துன்பமுற்று அரசரைத் தலையால் வணங்கி, அவரைத்தன் கைகளால் தாங்கிக் கொண்டு, இப்பொழுது நான் செய்ய வேண்டுவது யாது? என்று கேட்க, மெய்ப்பொருள் நாயனார், சிவபெருமானுடைய அடியசராகிய இவர் இங்கிருந்து செல்லும் வழியில் இவரை யாரும் குறுக்கிட்டு தடுத்துத் துன்புறுத்தாதபடி நீயே இவரைக் கொண்டு போய்விடு என்று கூறினார் (தத்தன் — அடியவன்; எம்பிரான் — எம்முடைய தலைவன்).

## இலக்கணம்

எய்தி—இறந்தகால வினையெச்சம்;செய்கேன்—தன்மை ஒருமை வினைமுற்று;எம்பிரான் — வேற்றுமைத் தொகை;விலக்கா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்;விடு—ஏவல்; மீதிடை—மீது+இடை;

### தத்தனது செயல

ஏஎஅத்திறம் அறிந்தார் எல்லாம்
அரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் தன்னைக் கொல்வோம்
எனப்புடை சூழ்ந்த போது.
தத்தனும் அவரை எல்லாம்
தடுத்துடன் கொண்டு போவான்
இத்தவன் போகப் பெற்றது
இறைவன் தாணை'என்றான் (18)

அவ்வழி அவர்கள் எல்லாம்
அஞ்சியே அகன்று நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன்
திருநகர் கடந்து போந்து
கைவடி நெடுவாள் ஏத்தி
ஆளுறாக் கானம் சேர
வெவ்வினைக் கொடியோன் தன்னை
விட்டபின் மீண்டும் போந்தான். (19)

மற்றவன் கொண்டு போன
வஞ்சினை வேடத் தான்மேல்
செற்றவா தம்மை நீக்கித்
தீதிலர் நெறியில் விட்ட
சொற்திறங் கேட்க வேண்டிச்
சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவன் முன்பு சென்றான்
கோமகன் குறிப்பில் நின்றான் (20)

சென்றடி வணங்கி நின்று
செய்தவ வேடங் கொண்டு
வென்றவற் கிடையூறின்றி
விட்டனன் என்று கூற
இன்றெனக் கையன் செய்தது
யார்செய்ய வல்லார்,'என்று
நின்றவன் தன்னை நோக்கி
நிறைபெருங் கருணை கூர்ந்தர்.

**தெளிவுரை (18)**

அந்நிகழ்ச்சியை அறிந்தவர்கள் எல்லோரும்' தம் அரசனுக்குத் தீமை செய்த பொய் வேடந்தாங்கி வந்த கொடியவனைக் கொள்வோம் என்று கூறி, அவன் பக்கத்தில் சூழ்ந்த போது தத்தன் அவனுக்குத் தீங்கு செய்யாதபடி அவர்கள் எல்லோரையும் தடுத்து அவனைத் தன்மையுடன் அழைத்துக் கொண்டு செல்பவனாய், இந்த அடியவர் இவ்விடத்தை விட்டு இடையூறு இன்றிச் செல்ல வேண்டுமென்பது அரசரது கட்டளையாகும் என்று கூறினான். (படை— பக்கம்,ஆணை—கட்டளை)

**இலக்கணம்**

அறிந்தார் —வினையாலணையும் பெயர்;கொல்வோம் — தன்மை பன்மை வினைமுற்று;போவான் —முற்றெச்சம்.

**தெளிவுரை**

முத்தநாதனுக்குத் தீங்குச் செய்ய வந்தவர்கள் எல்லோரும் அரசருடைய ஆணைக்கு அஞ்சி நீங்கிச் சென்றனர். தத்தன் செம்மையான வழியில் திருக்கோவிலூரைச் கடந்து சென்று, தன்கையில் கூர்மையான நீண்ட வாளினைத் தாங்கி மக்கள் நடமாட்டம் இல்லாத காட்டினை அடைந்து. கொடிய செயலைச் செய்த கொடியவனாகிய முத்தநாதனைக் கொண்டு போய் விட்டபின்பு திரும்பி வந்து நகரை அடைந்தான்(அஞ்சி—பயந்து,செவ்விதி—செம்மையான;நெறி—வழி;வடி—கூர்மை;கானம்—காடு;வெவ்வினை—கொடிய செயல்)

**இலக்கணம்**

செவ்விய குறிப்புப் பெயரெச்சம்;கடந்து, போந்து —இறந்தகால வினையெச்சங்கள் ;பெயர் நெடுவாள் (நெடுமை + வாள் ) வெவ் வினை , வெம் மை வினை

— பண்புத்தொகைகள்; கொடியோன் —வினையாலணையும் பெயர், அவ்வழி அ+வழி

## தெளிவுரை (20)

தன் அரசருடைய எண்ணத்திற்கு ஏற்றவாறு நடப்பவனாகிய தத்தன் தன்னுடனேயே அழைத்துக் கொண்டுபோன பொய்வேடந்தாங்கி வந்த முத்தநாதன் மீது சினங்கொண்டு வந்தார் எல்லோரையும் விலக்கி, அவனைத் துன்பம் இல்லாத வழியில் விட்டுவந்து செய்தியைக் கேட்கும் பொருட்டு,தளர்ந்து,நீங்கும் உயிரைத் தாங்கிக் கொண்டிருக்கும் அரசன் முன்பு சென்றான்.(சென்றவர்— சினம் கொண்டவர்;சோர்கின்ற —தளர்கின்ற;ஆவி — உயிர்,கொற்றவன்;கோமகன் —அரசன்)

## இலக்கணம்

சொற்றிறம்—சொல்+திறம்;செற்றவர்—வினையாலணையும் பெயர்,சோர்கின்ற —நிகழ்காலப்பெயரெச்சம்;சென்றான்— முற்றெச்சம்(சென்றான்,நின்றான் என முடிக்க)

## தெளிவுரை (21)

சென்று,அரசருடைய பாதங்களில் வணங்கி நின்று,பொய்யாக சிவவேடத்தினைத் தாங்கி வந்து தங்களை வென்றவனாகிய முத்தநாதனுக்கு யாதொரு துன்பமும் நேராதவாறு அவனைக் கொண்டு சென்றுவிட்டேன்,என்று கூற இன்றைக்கு எனக்கு மேலாணாகிய நீ செய்த இவ்வுதவியை வேறு யார் செய்ய வல்லவர் ஆவார்,என்று பாராட்டிக்கூறித் தம்முன் வந்து நின்ற தத்தனை நோக்கி நிறைந்த பேரன்பு கொண்டார்.(இடையூறு— துன்பம்;ஐயன் —மேலோன்)

## இலக்கணம்

செய்தவம் —வினைத்தொகை;வென்றவன்,நின்றவன்— வினையாலணையும் பெயர்கள்;பெருங்கணை—பண்புத்தொகை; விட்டனன் தன்மை ஒருமை வினைமுற்று.

**சிவபெருமானைச் சிந்தை செய்தல்**

அரசியல் ஆயத்தார்க்கும்

அழிவுறங் காத லார்க்கும்

விரவிய செய்கை யெல்லாம்

விளம்புவார் விதியினாலே

பரவிய திருநீற் றன்பு
பாதுகாத்(து) உய்ப்பீர் என்று
பரவலர் மன்றுள் ஆடும்
பூங்கழல் சிந்தை செய்தார் (22)

## தெளிவுரை (22)

மெய்ப்பொருள் நாயனார்,அரசியல் ஆயத்தார்க்கும்,தன் பிரிவால் துன்புறும் அன்புடையவர்களாகிய மனைவி,மக்கள்,முதலானோர்க்கும் தம்மனத்தில் பொருந்தியுள்ள கொள்கையைக் கூறுகின்றவராய், வேதவிதிப்படி (உலகம் முழுவதும்) பரவியிருக்கின்ற திருநீற்றின் மீது வைத்துள்ள அன்பைப் பாதுகாத்து வருவீராக,என்று சொல்லிச் சிற்றம்பலத்தே நடனமாடும் சிவபெருமானின் மலர் போன்ற திருவடிகளை நினைத்துத் தியானித்தார்.

(காதலார் –அன்புடையவர்;விரவிய –பொருந்திய;விளம்புவார்–கூறுகின்றவராய்;புரவலர் –அரசர்;மன்று–அம்பலம்;கழல் திருப்பாதம்;

இலக்கணம்

**பூங்குழல்-உவமைத் தொகை.**

**நாயனார்க்குச் சிவபெருமான் காட்சி வழங்கல்**

தொண்டனார்க் கிமயப் தோகை.
துணைவனா ரவர்முன் தம்கைக்
கண்டலா றெதிரா நின்று
காட்சித் தருளி மிக்க
அண்டவர் வைர்கட் கெட்டா
அருட்சுழல் நீழல் சேரக்
கொண்டவர் இடையறாமல்
கும்பிடுங் கொள்கை ஈந்தார்.

## தெளிவுரை (23)

பார்வதி தேவியின் கணவராகிய சிவபெருமான், மெய்பொருள் நாயனாராகிய தம் அடியவருக்கு சிவனடியர்களுடைய வேடத்தையே சிவ

பெருமானாகக் கண்ட அவரது தன்மைக்கு ஏற்ப, அந்த வேடத்தோடு அவர் முன் தோன்றிக்) காட்சியளித்துத் தேவர்கட்கு எல்லாம் எட்டாத தம்முடைய கழல் அணிந்த திருவடிகளை அடையும்படி அவரை ஏற்றுக் கொண்டு, இடையீடு இல்லாமல் அவர் தம்மை வணங்கும் தன்மையை அவருக்கு அளித்தார். (இமயப்பாவை – உமாதேவி; வானவர்.. கழல் – பாதங்களில் அணியும் அணி; இடையறாமல் – இடைவிடாது; ஈந்தார் – கொடுத்தார)

## இலக்கணம்

பாவை – உவமையாகு பெயர்; அண்டர்வானர் – இருபெயரெட்டு பண்புத்தொகை; எட்டா – ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்; கழல் தானயாகு பெயர்; நீழல் – நீட்டல் விகாரம்; இடையறாமல் – எதிர்மறை வினையெச்சம்.

1. பெரியபுராணம் சிறு குறிப்பு வரைக.
2. சேக்கிழார் – குறிப்பு எழுதுக.
3. மெய்ப்பொருள் நாயனாரின் ஆட்சிச் சிறப்பு எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
4. நாயனாரின் சிவ வழிபாட்டின் தன்மையையும், அவருடைய திறத்தையும் விளக்கமாகக் கூறுக.
5. முத்தநாதன் செய்த சூழ்ச்சியும், அவன் அவ்வாறு செய்ததற்குரிய காரணமும் யாவை?
6. முத்தநாதன் அரண்மனையின் உள்ளே சென்ற போது தத்தன் கூறியது என்ன? அதற்கு முத்தநாதன் கூறிய விடை யாது?
7. நாயனார் முத்தநாதனை எங்ஙனம் வரவேற்றார்?
8. முத்தநாதனுக்கும், நாயனாருக்கும் நிகழ்ந்த உரையாடலைத் தெளிவாக எழுதுக.
9. முத்தநாதன் மெய்ப்பொருள் நாயனாரை எங்ஙனம் கொலை புரிந்தான்?
10. மெய்ப்பொருள் நாயனார்'தத்தா' 'நமர்' என்று தடுக்கக்

11. நாயனார் தத்தனிடம் வேண்டியது யாது?

12. முத்தநாதனைத் தத்தன் கானகத்தில் சேர்ந்து வந்த தன்மையைப் புலப்படுத்துக.

13. முத்தநாதனைத் தத்தன் கானகத்தில் சேர்ந்து வந்த தன்மையைப் புலப்படுத்துக.

14. இன்றெனக் கையன் செய்தத யார் செய்ய வல்லார்? இஃதுயார் கூற்று? இவ்வாறு கூறக் காரணம் என்ன?

15. சிவபெருமான் நாயனாருக்குக் காட்சி வழங்கிய தன்மையைப் புலப்படுத்துக.

16. அரசியல் ஆயத்தார் முதலியோர்க்கு நாயனார் கூறியது யாது?

17. இடஞ்சுட்டி விளக்குக.

அ. 'உடையவர் தாமே வந்தார் உள்ளெழுந் தருளும'

ஆ. 'இங்கேழுந் தருளுப் பெற்ற தென்கொலோ'?

இ. 'பேறெனக் கிதன்மேல் உண்டோ'

ஈ. 'மெய்த்தவ வேட மேமெய்ப் பொருள'

உ. 'இத்தவன் போகப் பெற்ற திறைவன தாணை'

ஊ. 'வென்நவற் கிடையூன்றி விட்டனன'.

எ. "நாறுபூங்கோதை மாது தலிரவே நானும் நீயும் வேறிடத்திருத்தல் வேண்டும்."

18. 'மைபொதி விளக்கேயென்ன' — உவமையை விளக்கி, உவமேயத்தோடு பொருத்திக் காட்டுக.

## பயிற்சி

1. பெரியபுராணம் பற்றியும், சேக்கிழாரைக் குறித்தும் நீவிர் அறிந்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.
2. மெய்ப்பொருள் நாயனாரின் வரலாற்றைச் சுருக்கி வரைக.
3. மெய்ப்பொருள் நாயனாரின் அரசியல் சிறப்பு, சிவபக்தியின் சிறப்பு ஆகியவை குறித்து, நீவிர் அறிந்த செய்திகளை தொகுத்துக் கூறுக.

4. முத்தநாதன் மெய்ப்பொருள் நாயனாரை வென்ற தன்மையை நயந்தோன்ற எழுதுக.

5. மெய்ப்பொருள் நாயனாரின் உயர்ந்த பண்பு எங்ஙனம் புலனாகின்றன?

6. தத்தனது செயல்களை விளக்கமாக எழுதுக.

7. மெய்ப்பொருள் நாயனார் பெற்ற பேறு யாது?

8. மெய்ப்பொருள் நாயனாரின் இயல்புகளைத் தொகுத்துக் கூறுக.

9. இடஞ்சுட்டிப் பொருளை விளக்குக.

அ. "யானவர் குறிதி கூற நின்றிடும் நீயும்"

ஆ. "மற்றென் வாழ்வுவந் தணைந்ததென்ன"

இ. "உங்களை நாயனார் முன்னம் உரைக்க ஆக நூல் மண்மேல் எங்குமில்லாத தொன்று கொண்டுவந்தேன்"

ஈ. "தான்முன் நினைத்த அப் பரிசே செய்ய"

உ. "யாது நான் செய்தேன்?"

ஊ. "பொய்த்தவன் தன்னைக் கொல்வோம்"

## இலக்கணக் குறிப்பு வரைக

நன்னெறி; பூண்டு; வாழாமல்; செந்நீர்; நாடிய; பொன்னணி. பொருபரி; மாட்டான்; மெய்ப்பொருள்; வெண்ணீறு; செப்பரும்; கரந்த; புகுத்தனன்; உடையவர்; புக்கு; திகழ்பள்ளி; பள்ளிக்கட்டில்; மென்சாயல் இருப்ப; குவிந்தே; செங்கை; அணைந்தது. வந்தேன்; பூங்கோதை; விளம்பதருதவம்; இருநிலம்; போற்றி; கைக்கதலம்; அவிழ்ப்பான்.

II. தடித்த எழுத்துக்களில் உள்ளவைகளுக்கு இலக்கணக் குறிப்புகள் தருக

நிறைந்த செங்குருதி, சோர வீழ்கின்றார், யாது நான் செய்கேன்; கொண்டுபோய் விடு; பொய்த்தவன் தன்னைக் கொல்வோம்! கொண்டு போவான், கடந்து, பொந்து நெடுவான் ஏற்றி வெல்வினைக் கொடியோன்; செற்றவர் தம்மை; சோர்கின்ற ஆனி; குறிப்பில் நின்றான்; செய்தவ வேடம்; இடையூறின்றி விட்டனன். செங்கத்தியார் செய்ய பெருங்கருணை கூர்ந்தார்; இமையப்பாவை; எட்டா அருட்கழல்; நீழல் சேர; கொள்கை ஈந்தார்.

# பாடம் 8
# கம்பராமாயணம்

## பெயர்க்காரணம்

கம்பரது இராமாயணம் அல்லது கம்பரால் இயற்றப்பட்ட இராமயாணம் என விரியும். இராமாயணம் என்பதற்கு இராமனது வரலாற்றை உரைக்கும் நூல் என்பது பொருள், வடமொழியில் வால்மீகி முனிவர் இயற்றிய இராமாயணத்தைத் தழுவிக் கம்பர் இப்ருெங்காப்பியத்தை இயற்றினார். கம்பர் தம் காப்பியத்திற்கு இராமாவதாரம் என்றே பெயரிட்டனர்.

## நூல்

கம்பராமாயணம் பல்வகைச் சிறப்புக்களும் பாங்குற அமைந்துள்ள பெருங்காப்பியமாகும். 'கம்பன் கவியே கவி' என்பார் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, 'கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும" என்பது பழமொழி.

கம்பராமாயணம் பாலகண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம் உட்பிரிவுகளாய்ப் பல பட்லங்கள் அமைந்தள்ளன. காண்டம் — பெரும் கதைப் பகுதி. படலம் — சிறுகதைப் பகுதி எனலாம்.

## பாடப்பகுதி

பாடப்பகுதி இக்காப்பியத்தின் ஐந்தாவது காண்டமாகிய சுந்தரகாண்டத்தில் மூன்றாவதாகிய காட்சிப்படலப் பகுதியாகும்.

சுந்தரகாண்டம் : இக்காண்டத்தில் இராமன், சீதை இருவருடைய அழகு கூறப்படுவதனால், இப்பகுதி சுந்தரகாண்டம் என வழங்கப்படுகிறது எனபர் சிலர். அனுமனுக்குச் சுந்தரன் என்னும் பெயர் இருப்பதாலும் அவனுடைய

அரும்பெரும் செயல்களே இக்காண்டத்தில் பெரும்பாலும் உள்ளமையினாலும் 'சுந்தர காண்டம்' என வழங்கப்படுகிறது என்பர் வேறு சிலர்.

காட்சிப்படலம் : அனுமன், இலங்கை நகரில் அசோகவனத்தில் அரக்கியர் நடுவிலிருந்த சீதையைக் கண்ட செய்தியை உணர்த்தும் பகுதி.

## ஆசிரியர்

கம்பர் சோழநாட்டில் உள்ள திருவழுந்தூரில் பிறந்தார். இவர் உவச்சர் குலத்தில் ஆதித்தர் என்பார்க்குப் புதல்வராய்த் தோன்றினார் என்பர். இவர் திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிககப்பட்டவர். ஏரேழுபது, திருக்கை வழக்கம், சடகோபர் அந்தாதி என்னும் நூல்களும் இவர் பாடினர் என்பர். இவரது காலம் கி.பி. 3 —ஆம் நூற்றாண்டு எனச் சிலரும், கி.பி. 12 — ஆம் நூற்றாண்டு எனச் சிலரும் இரு வேறு கருத்துக் கொண்டனர்.

## கதைத் தொடர்பு

அயோத்தியை ஆண்ட தசரதச் சக்கரவர்த்தியின் மூத்த மகனாய்த் தோன்றி இராமன், தந்தையின் வாக்கைக காப்பாற்றும் பொருட்டுத் தன் மனைவி சீதையுடனும் தம்பி இலக்குமனனுடனும் காட்டிற்குச் செல்கிறான். கோதாவரி ஆற்றங்கரையில் 'பஞ்சவடி' என்னும் இடத்தில் இவர்கள் தங்கியிருந்தபோது ஒரு பேரிடையூறு நேர்நதது. இலங்கை மன்னன் இராவணன், சீதையை வஞ்சமாய்க் கவர்ந்து சென்று தன் நகரில் அசோகவனத்தில் சிறை வைத்தான். சீதையைக் காணாமல் அவளிருக்குமிடம் நாடி இராம, இலக்குமணர் கிட்கிந்தை மலையை நோக்கிச் சென்றனர். கிட்கிந்தை மன்னன் சுக்ரீவனது துணையுடன் அவனுடைய வானரப் படைகளை ஏவிப் பல பக்கங்களிலும் சீதையைத் தேடச் செய்தனர். தென் திசைக்குச் சென்றவருள் அனுமனும் ஒருவன். மகேந்திர மலையிலிருந்து அனுமன் கடலைத் தாவி, இலங்கையை அடைந்து அங்குள்ள மாடமாளிகைகளிலெல்லாம் சீதையைத் தேடினான். பிறகு, அந்நகரத்து உத்தியானவனத்திலும் சென்று தேட வேண்டும் என்று கருதி அதனை நாடிச் செல்லும் பொழுது அசோகவனத்தைக் கண்டான். 'இங்கு சீதையைக் கண்ணுற்றால் என் மனத்துயர் நீங்கும்; ஒருகால் இங்கும் சீதை இல்லை என்றால் இவ்விலங்கையை நாசம் செய்து என் உயிரையும் மாய்த்துக் கொள்வேன" என்று அசோவனத்தினுள் சென்றான்.

## சுந்தரகாண்டம்

## காட்சிப்படலம்

வன்மருங்குல் வாளரக்கியர் நெருக்கலங் கிருந்தாள்
கன்மருங்கெ ழுந்தென்றுமோர் துளிவரக் காணா
நன்மருந்து போல்நலனுற வுணங்கிய நங்கை
மென்மருங்கும் போல் வேறுள அங்கமும் மெலிந்தாள் (1)

### தெளிவுரை

வலிய இடையினை உடைய வாளேந்திய அரக்கியர் ...ள் இராவணனுக்கு இணங்கும்படி சீதையை அச்சுறுத்தி அந்த அசோகவனத்தில் சீதையைச் சூழ்ந்து இருந்தார்கள். கடினமான கல்வியே (அரிதாகப் பெய்த மழை நீரால்) முளைத்து, எப்பொழுதும் ஒரு துளி நீராயினும் அடையப்பெறாத (சஞ்சீவிமருந்து போல), அழகுகெட வாடியிருந்த சீதை மெல்லிய தனது இடைபோல, உடம்பின் ஏனைய உறுப்புகளும் இராமனது பிரிவாற்றாமையால் இளைத்திருந்தாள்.

### அருஞ்சொற்பொருள்

(கல்மருங்கு — கல்லினிடையே; நலனுற உணங்கிய — அழகு கெட; வாடிய மருக்கில் — இடை; அங்கம் — உறுப்பு)

### விளக்கம்

சீதை பல திங்கள்களாகியும் இராமனது கருணையைப் பெறாமல் மிகவும் மெலிந்து அரக்கியர் கூட்டத்திடையே நெருக்குண்டு இருந்தாள் என்பதாம்.

முன்பு சீதைக்கு இடையில் இருந்தமெலிவு இயற்கையானது. ஆனால் இப்போது இராமனைப் பிரிந்த காரணத்தால் உடன் பிற உறுப்புகளில் காணும் மெலிவு செயற்கை கல்லினிடையே மூலிகை தளிர்த்தல் அரிது. அதுபோல், அரக்கியர் நிறைந்த இலங்கையில் சீதையின் உடல் தளிர்த்தல் அரிது. மூலிகை எப்போதும் மழைத்துளியை எதிர்பார்த்திருத்தல் போல் சீதை இராமனின் கருணை மழையின் வருகையை எதிர்பார்த்திருந்தாள்.

## இலக்கணம்

வன்மருங்குதல், நண்மருந்து, மெண்மருங்குதல் — பண்புத் தொகைகள்; வாளாக்கயர் — இரண்டாம் உருபும் பயனும் உடன்தொக்க தொகை; காணா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; உணங்கிய — பெயரெச்சம்.

கல்மருங்கு எழுந்து என்றும் ஓர் துளிவரக் காணா நல்மருந்து போல் — உவமை; நலறை வணங்கிய நங்கை வேறுள அங்கமும் மெலிந்தாள் — உவமேயம் இப்பாடலில் உவமை அணி வந்துள்ளது.

துயிலெனக் கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலும் துறந்தாள்

வெயிலிடைத் தந்த விளக்கென ஒலியிலா மெய்யாள்

மயிலிமல் குயில மழலையால் மானிளம் பேடை

அயில்எயிற்று வேம்புலிக் குழாத்(து) அகப்பட்ட(து) அன்னாள்(2)

## தெளிவுரை

மயில் போன்ற சாயலையும் குயில் போன்ற இனிய சொல்லையும் உடையவளாகிய சீதை தூக்கம் என்று கண்களை மூடுதலும், துயில் நீங்குதல் என்று கண்களைத் திறந்தலும் இல்லாதவளாகிய வெயிலிலே ஏற்றி வைத்த விளக்குப்போல, ஒளியில்லாத உடம்பை உடையவளாய் இருந்தாள். (அப்போது அவள்) கூரிய பற்களை உடைய புலிகளின் கூட்டத்தினிடையே அகப்பட்ட ஓர் இளமையான பெண்மானைப் போன்று இருந்தாள்.

(முகிழ்த்தலும் இமைத்தலும், மூடுவதும் திறப்பதும்; மானினம் — பேடை — இளமையான பெண்மான்; அயில் கூரிய — வேல்போன்ற; — எயிறு — பல்; குழாம் கூட்டம்)

## விளக்கம்

சீதை, இராமனைப் பிரிந்ததனால் உண்டான பிரிவுத் துயரால் சிறிதும் கண்ணுறக்கம் இன்றி, நீராடுதல் முதலியன இல்லாமையால் மேனி நிறம் மழுங்கி, அரக்கியர் கூட்டத்தில் அகப்பட்டுத் துடித்தாள் என்க.

## இலக்கணம்

இமைத்தலும், மகிழ்த்தலும் — எண்ணும்மை; ஒளியிலா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; இளம்பேடை, வெம்புலி — பண்புத்தொகைகள்; புலிக்குழாம் — அரக்கியர் கூட்டத்துக்கும் மான் இளம்பேடை சீதைக்கும் உவமை.

துப்பினாற் செய்த கையொடு கால்பெற்ற துளிமஞ்சு
ஒப்பினான் தனைநினைதொறும் நெடுங்கண்கள் உகுத்த
அப்பினால் அல்ந்துயர் உயிர்ப்புடையாக்கை
வெப்பினாற் புலர்ந்து ஒருநிலை உறாதமென் துகிலாள் (3)

## தெளிவுரை

பவனத்தினால் செய்யப்பட்ட கைகளும் கால்களும் பெற்ற மழைத்துளிகளைப் பெய்கின்ற கருத்த மேகம் (ஒன்று உண்டானால், அஃது எவ்வாறு இருக்குமோ அது) போன்ற இராமனை நினைக்குந்தோறும் (அவன் பிரிவினால் துன்புற்று) நீண்ட கண்கள் சிந்திய நீரினால் நனைந்தும் அறிய துன்பத்தினால் உலர்ந்தும் நனைந்த சேலை என்றுமில்லாமல், காய்ந்த சேலை (என்றுமில்லாமல்) ஒரு தன்மையாய் இராத மெல்லிய ஆடையை உடையவளாய் இருந்தாள் (சீதை)

(துப்பு — பவனம்; மஞ்சு — மேகம்; ஒப்பினான் — போன்றவன் (உகுந்த — சித்திய; அப்பினாம் — நீர்ப்பெருக்கினால்; உயிர்ப்பு — பெருமுச்சு; யாக்கை — உடம்பு; புலர்ந்து — உலர்ந்து; துகில் — ஆடை)

## விளக்கம்

இராமனது பிரிவினால் *சீதைக்குத்* துயர்க் கண்ணீரும், பெருமூச்சு வெப்பமும் தோன்றியதை இதனால் கூறுகின்றார். ஈர ஆடை காய்வதற்கு வெயிலே அன்றிக் காற்றும் உதவுதல் போலச் சீதையின் கண்ணிரால் நனைந்த சேலை காண்வதற்கு அவளுடைய உடல் வெப்பமே அன்றிப் பெருமூச்சுக் காற்றும் காரணமாயிருந்ததென்று கொள்ள 'உயிர்ப்படையாக்கை' என்றார்.

## இலக்கணம்

'நெடுங்கண்கள், அருந்தியர்' மென்துகிலான் — பண்புத்தொகைகள் உகத்த — பெயரெச்சம்; யாக்கை — காரணப்பெயர்; உறார — எதிர்மறைப் பெயரெச்சம்.

'துப்பினால் செய்தகையோடு காய்பெற்ற துளிமஞ்ச' என்பதொன்று உலகில் இல்லாத பொருள், அதனை இராமனுக்கு உவமையாக்கி கூறியுள்ளார் கவிஞர். இப்பாடலில் பயின்று வருவது இல்பொருள் உவமை அணி ஆகும்.

அரிதுபோ கவோவிதிவலி கடத்தலென்(று) அஞ்சிப்
பரிதிவா னவன்குலத்தையும் பழியையும் பாராச்
கருதிநா யகன் வரும்வரும் என்பதோர்
கருதிமா திரனைத்தையும் அளக்கின்ற கண்ணாள் (4)

## தெளிவுரை

உயிர் நீங்கட்டும் என்றால் ஊழ்வினையின் வலிமையை மீறுதல் கூடாத காரியமென்று எண்ணி, பயந்து, வேதங்களுக்குத் தலைவனாகிய இராமன், (என்பொருட்டு இல்லையாயினும் தான் பிறந்த சூரிய குலப்பெருமையையும், இதுவரை இல்லாது இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பழியையும் ஆராய்ந்து அறிந்து அப்பழியை நீக்கவராயினும் விரைவிலே வருவான் என்ற உறுதியினால், இராமனது, வருகையை நினைத்து, எல்லாத் திசைகளையும் அளாவிப் பார்க்கின்ற திருக்கண்கள் உடையவளானாள் (சீதை)

(கடத்தல் — மீறுதல்; பரிதி — சூரியன்; கருதி — வேதம்; மாதிரம் — திக்கு)

## விளக்கம்

சீதை, தனது கணவன் தன்னை மீட்பதற்கென்று இவ்விடத்திற்கு வராவிட்டாலும்,தன் மனைவியையும் காக்க முடியாதவன் ஒருவன் சூரிய குலத்தில் பிறந்துள்ளான் என்று பிறர் பழிப்பாரே என்பதற்காகவது இங்கே வரக்கூடும் என்று உறுதியுடன் இருந்தாள் என்பதாம்.

**இலக்கணம்**

வலிகடத்தல் – இரண்டாம் வேற்றுமைத் தொகை; அஞ்சு – வினையெச்சம்; குலத்தையும், பழியையும் – எண்ணும்மை; பாரா – செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்; வரும்வரும் – அடுக்குத்தொடர்.

ஆவிஆம் துகில் புனைவதொன் றன்றிவே(று) அறியாள்
தூவி அன் னமென்புன லிடைத் தோய்கிலா மெய்யாள்
தேவுதெண் கடல் அமிழ்துகொண்(டு) அனங்கவேள் செய்த
ஓவியம் புகையுண்டதே யொக்கின்ற உருவாள் (5)

**தெளிவுரை**

சீதை, பழமையாகத்தான் உடுத்துக் கொண்டிருப்பதாகிய புகை போன்ற மென்மையான அழகிய ஆடை ஒன்றே அல்லாமல் வேறொரு ஆடையைக் கண்டறியாதவள், சிறகுகளை உடைய அன்னப்பறவைகள் (தங்குவதற்குரிய) மென்மையான தண்ணீரில் படிந்திடாத உடம்பை உடையவள் (ஆதலால்) மன்மதன், தெளிந்த பாற்கடலிருந்து தோன்றிய தெய்வத் தன்மையுடைய அமுதத்தைக் கொண்டு தீட்டிய ஓவியம் புகையேறப் பெற்றதை ஒத்திருக்கின்ற உருவத்தை உடையவளாய் இருந்தாள்.

ஆவி ஆம் துகில் – புகை போன்ற மென்மையான அழகிய ஆடை; தூவி அன்னம் – சிறகுகளை உடைய அன்னப் பறவைகள்; புனல் – தண்ணீர், தோய்கிலா – படிந்திடாத; மெய் – உடல்; தேவு – தெய்வத் தன்மையுடைய தெண்கடல் – தெளிந்த கடல்; அனங்கவேள் – மன்மதன்)

**விளக்கம்**

சீதை தான் இடுப்பில் உடுத்திருந்த ஆடையோடு பல நாளாகத் தண்ணீரில் மூழ்காமையால் மாசுபடிந்த மேனியோடு அசோகவனத்தில் தங்கியிருந்தாள் என்பதாம்.

இராவணன் விலையுயர்ந்த பல ஆடை அணிகலன்களைக் கொடுக்கக் காத்திருந்தான்; ஆயினும் அவற்றுள் ஒன்றையும் சீதை விரும்பினாள் இல்லை என்க.

மதன் கண்டவர் கண்ணையும் கருத்தையும் கவரும் மாதருடைய கட்டழகு கொண்டு ஆடவர்க்குக் காதல் விளைவிப்பவன்.

முதல் ஐந்து பாடல்கள் அசோகவனத்தில் இருந்த சீதையின் நிலையினை விளக்கும்.

## இலக்கணம்

மென்புனல், கென்கடல் - பண்புத்தொகைகள்; தோய்கிலா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்;

சீதையின் மாசு படிந்த மேனிக்கு புகையுண்ட ஓவியம் உவமையாக கூறப்பட்டுள்ள ஓவியத்தினை அறிக.

மாண்டுபா யினன் எருவைக்கட் கரசன் மற்றோர்
யாண்டையென்னிலையறிவுறுப் பார்களிப் பிறப்பிற்
காண்டலோ வரிதென்றென்று வெம்முறும் கலங்கும்
மீண்டுமீண் டுடக்கெரிநுழைந் தாலென மெலிவாள் (2)

## தெளிவுரை

(இராவணன்) என்னைக் கவர்ந்து செல்லும்போது கண்டு எதிர்த்துப் போர் செய்து அக்கொடியவனது வாளால் வெட்டுபட்டுக் குற்றுயிரோடு கிடந்த கழுகுகளுக்குத் தலைவனான சடாயு இறந்துபோய் விட்டான் போலும்; (அவரொழிந்து) மற்றையோர் எனது நிலைமையை எவ்வாறு இராம இலக்குமணர்களுக்குத் தெரிவிக்க இயலும். இயலாது. ஆதலால் அவர்கள் என்னை இப்பிறப்பில் காண இயலாது, என்று பலவாறு நினைத்து அழுவாள்; கலங்கிடுவாள்; மீண்டும் மீண்டும் (புண்ணில்) கனல் நுழைத்து குத்தாற் போல வருந்துவாள் (சீதை).

[எருவை - கழுகு; யாண்டை - எவ்வாறு; எரி - நெருப்பு]

## விளக்கம்

சடாயு - அருணனின் மகன்; சம்பாதியின் தம்பி; இவன் தசரதர்க்குப் பல உதவிகள் செய்து உயிர்த்தோழன் ஆனவன்.

## இலக்கணம்

மீண்டும் மீண்டும் – அடுக்குத்தொடர்

என்னைநா யகனிளவலை யெண்ணலா வினையேன்
சொன்னவார் தைகேட்டறிவில் னெனத்துறந் தானோ
முன்னையூழ் வினைமுடிந்ததோ வென்றென்று முறையாற்
பன்னவாய் புலர்ந்துணர்வுதேயந் தாருயிர் பதைப்பாள் (7)

## தெளிவுரை

தீவினை உடைய நான், இலக்குமணனை மதியால் சொன்ன கடுஞ்சொற்களை இலக்குமணன் சொல்லக்கேட்டு (என்னை) அறிவில்லாதவள் என்று நினைத்து, இராமனன் என்னை வெறுத்து விட்டானோ? முற்பிறப்பில் செய்த கரும வசத்தினால் இவ்வாறு நேர்ந்ததோ? என்று இப்படி பலவாறு ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்வதனால் நா வறண்டு அறிவு சோர்ந்து அரிய உயிர் துடிப்பவளானாள் (சீதை).

(இளவல் – இளையவள்; எண்ணலா – மதியாமல்; வினையேன் – தீவினையுடையோன்; பன்ன – சொல்ல; புலர்ந்து – வறண்டு)

## விளக்கம்

சொன்ன வார்த்தையாவது இராமபிரானால் எய்யப்பட்டு இறந்து போகும் சமயத்தில் சீதை, இலக்குமணன் என்று கூறிய மாயமானின் குரலைக் கேட்டு சீதை தன் கணவனது குரலென்று நினைத்து, இலக்குமணன் சொன்ன தேறுதலைக் கேளாமல், அவனைத் தீய நினைப்புடையவனாக எண்ணிக் கூறிய வார்த்தைகள்.

## இலக்கணம்

எண்ணலா – ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்; அறிவிலன் – வினையாலணையும் பெயர்; துறந்தானோ, முடிந்ததோ – ஓகார இடைச் சொற்கள் (ஐயப்பொருளில் வந்தன) ஆருயிர் – பண்புத்தொகை.

அருந்துமெல் லடகாரிட வருந்துமென் நழுங்கும்

விருந்துகண்ட போதென்னுறு மோவென்று விம்மும்

மருந்துமுண்டு கொல்யான் கொண்டநோய்க்கென்று மயங்கும்

இருந்தமா நிலஞ்செல்லரித் திடவுமான் டெழாதாள் (8)

**தெளிவுரை**

தானிருந்த பெரிய இடம் முழுவதும் கறையான்பிடித்து அரிக்கவும் அவ்விடத்தை விட்டு எழுந்திராதவளான சீதை (காட்டில்) உண்ணப்படுகின்ற மென்மையான இலை உணவு முதலியவற்றை யார் பரிமாற இராமன் உண்பான் என்று எண்ணி வருந்துவாள்; விருந்தினர் வரக் கண்டபோது (உபசரிப்பார் இல்லையே என்று) என்ன துன்பம் படுவாரோ என்று எண்ணி அழுவாள்; நான் கொண்டிருக்கும் மனநோய்க்கு தீர்க்கும் மருந்தும் உளதோ என்று மயங்குவாள்.

எமெல்அடகு – மென்மையான இலை உணவு; ஆர் இட – யார் பரிமாற; அழுங்கும் – வருந்துவாள்; என் உறுமோ – என்ன துன்பப்படுமோ; விம்மும் – அழுவாள்ன

**விளக்கம்**

இராவணன் வைத்த இடத்தை விட்டுச் சலியாமல் அங்குத்தானே நிலையாக நிற்பவள் சீதை என்பதை விளக்க, மாநிலஞ்செல்லரித்திடவும் ஆண்டு எழாதாள் என்றார்.

அடக – காய், கனி, கிழங்கு முதலியன, இவை காட்டில் வாழும் முனிவர்க்கு உரிய உணவு.

மெல்லடகு – பண்புத்தொகை (வினைத்தொகை என்றும் கூறலாம்) விருந்து – பண்பாகுபெயர்; மாநிலம் – உரிச்சொற்றொடர்; மயங்கும் – செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று.

மெய்த் திருப்பத மேவென்ற போதினும்

இத்திருத் துறந்தே கென்ற போதினும்

சித்திர திலலர்ந்த செந்தாமரை

ஒத்திருக்கு முகத்தினை உன்னுவாள் (9)

**தெளிவுரை**

உண்மையாகவே சிறந்த, (தனது உலகம் முழுவதும் ஆளும்), பதவியை (நீ) அடையவாயாக என்று தசரதன் கூறிய காலத்தும், இவ்வரசாட்சிச் செல்வத்தை விட்டுவிட்டு காட்டுக்குச் செல்' என்று கைகேயி காலத்தும் (ஒருபடியாக) சித்திரத்திலே தோன்றும் செந்தாமரை மலர் போலப் (பொலிவு, மிகுதலும் குறைதலுமின்றி) விளங்கிய இராமனது முகத்தை நினைப்பவர்களானாள் சீதை.

எமெய்த்திருப்பதும் மேவு உண்மையாகவே சிறந்த பதவியை அடைக; இத்திரு துறந்து – இவ்வரசாட்சிச் செல்வத்தை விடுத்து, உன்னுவாள் நினைப்பாள்ணி

**விளக்கம்**

இன்பம் வந்ததென்று இறுமாந்து விடாமலும், துன்பம் வந்ததென்று சிறிதும் சோர்ந்து விடாமலும் உள்ள (அரிய துறவிகள் பாலும் அரியதாக் காணப்படுகின்ற) இராமனது அருமையினும் அருமையான மனநிலையை 'நினைத்து அப்படிப்பட்ட கணவனைப் பிரிய நேர்ந்ததே என்று சீதை வருந்தினாள்' என்க.

**இலக்கணம்**

அலர்ந்த – பெயரெச்சம்; செந்தாமரை – பண்புத்தொகை;

தேங்கு கங்கைத் திருமுடிச் செங்கணான்

வாங்கு கோல வடகரை வார்சிலை

எங்கு மாத்திரத் திற்றிரண் டாய்விழ,

தங்கு தோளை நினைத்து மெலிந்துனாள் (10)

**தெளிவுரை**

இவர் வில்லை வளைப்பாரோ வளைக்க் மாட்டாரோ என்று சனகர் ஐயம் கொண்டபோது, கங்கையாறு தங்கிய ஜடாமுடியையும், சிவந்த மூன்று கண்களையும் உடைய சிவன்; (கையில் எடுத்து) வளைத்த அழகிய வடக்கிலுள்ள மேருமலையின் அம்சமாக நீண்டவில் இரண்டு துண்டாய் ஒடிந்து விழும்படி பருத்த (இராமனது) தோளினை இழைத்தவளானாள் (சீதை)

[தேங்கிய – தங்கிய; செங்கணான் – சிவந்த கண்களை உடையவன்; வரை – மலை; வார்சிலை – நீண்டவில்; வீங்கு – பருத்த]

**விளக்கம்**

வடகரை வார்சிலை முப்புரங்களை அழித்த காலத்தில் மேருமலை சிவனுக்கு வில்லானது. திரியம்பகம் என்னும் பெயரை உடைய இச்சிவ தனுசு பரமசிவனால் சனகனுக்குக் கொடுக்கப்பட்டு, அப்பால் இவ்வில்லை எடுத்து வளைத்தவர்களுக்குச் சீதையைத் திருமணம் செய்விப்பதென்று (கன்னிய–கல்கம் ஒருவன் ஒரு கன்னிகையை மணந்து கொள்வதற்கு நிபந்தனையாக ஏற்படுத்தும் வில் வளைக்க).

**இலக்கணம்**

செங்கணான் – பண்புத்தொகை; கணாள் – தொகுத்தல் (விகாரம் அல்லது இடைக்குறை); வீங்குதோள் – வினைத்தொகை.

ஆழ நீர்க்கங்கை யம்பி கடாவிய
ஏழை வேடனுக்(கு) எம்பிநின் தம்பித்
தோழன் மங்கை கொழுந்தி யெனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள் (11)

**தெளிவுரை**

ஆழமான நீரை உடைய கங்கையாற்றிலே படகினைச் செலுத்திய எளிய வேடர் குலத்தைச் சேர்ந்த குகனை நோக்கி, 'என் தம்பி உன் தம்பி, நான் உன் தோழன்; சீதை உன் கொழுந்தி' என்று இராமன் சொல்லியருளிய சிநேக குணத்தை நினைத்துக் கலங்கினாள்' (சீதை)

[அம்பி – தோணி; கடாவிய – செலுத்திய; எம்பி – என் தம்பி]

**விளக்கம்**

இராமன் அரசருள் அரசரானவரின் மகனாயிருந்தும் அந்த மிக்குயர்ந்த நிலைமையைக் கருதாமல், தன்னோடு ஒப்பிட்டால் மிக்க ஏழையாக உள்ள குகனிடம் நட்புப் பூண்டான் என்பதனால் நட்பு பாராட்டும் திறத்தில் இராமன் ஒப்புயர்வில்லாதவன் என்பதை அறியலாம்.

குகன் - கங்கையில் ஓடம் விடுபவனும் ஆயிரம் ஓடத்துக்குத் தலைவனும், கங்கைக் கரையிலுள்ள சிருங்கிபேரத்திற்கு அதிபதியுமான ஒரு வேடர் தலைவன், இராமன் தன் மனைவி சீதையோடும், தம்பி இலக்குவனனோடும் வனவாசம் மேற்கொண்டபோது அவர்களுக்குப் பேருதவியாக இருந்தவன்.

**இலக்கணம்**

நீர்க்கங்கை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை; கடாவிய - பெயரெச்சம்; எம்பி - என் தம்பி என்பதன் மரூஉ; வாழி - அசைச்சொல்.

மெய்த்த தாதை விரும்பினன் நீட்டிய
கைத்த லங்களைக் கைகளி னீக்கிவேறு(று)
உயர்த்த போது தருப்பையி னொண்பதம்
வைத்த வேதிகைச் செய்தி மனங்கொள்வாள் (12)

**தெளிவுரை**

நல்லொழுக்கம் தவறாத தனது தந்தை சனகன் விருப்பமுள்ளவராகிப் பிடித்தக் கொடுத்த தன் கைகளை (அவளது) கைகளினின்றும் விடுத்து இராமன் தன் வலக்கையால் அவளது இடக்கையைப் பற்றிக் கொண்டு, மற்ற வைதிக காரியங்களை நடத்தினான், அப்பொழுது தருப்பையைப் போல தூயதான அவளது வலக்காலை இராமன் தனது வலக்கையால் பிடித்து அம்மியின் மேல் எடுத்து வைத்த திருமணத்தின் பொருட்டு நடந்த நிகழ்ச்சியை மனத்தில் நினைத்தாள்.

[தாதை – தந்தை; கைத்தளம் – கை; ஒன்பதாம் – தூய்மையான (வலக்)கால்; வேதிகைச் செய்தி – திருமணச் சடங்குகள் குறித்த செய்தி; மணங்கொள்வாள் – நினைப்பாள்]

விளக்கம்

திருமணக் காலத்தில் தன் காலைக் கையால் எடுத்து அம்மி மீது வைத்த அருமைச் செய்தியைச் சீதை எண்ணினாள். அன்போடு மணந்தவர் என்னை இப்போது நீங்கி வாழ்வது தகுதியாகுமா என்பது அவளது கருத்து.

## இலக்கணம்

தாதை – 'தந்தை' என்பதன் மரூஉ; ஒன்பதாம் – பண்புத்தொகை; மணங்கொள்வாள் – ஏழாம் வேற்றுமைத்தொகை.

பரித்த செல்வ மொழியப் படருநாள்
அருத்தி வேதியற் கான்குல மீந்தவன்
கருத்தி னாசை கரையின்மை கண்டிறை
சிரித்த செய்கை நினைத்தழும் செய்கையாள் (13)

## தெளிவுரை

தான் தங்குவதற்கு உரிய அரசாட்சிச் செல்வம் தன்னைவிட்டு நீங்க காட்டிற்குச் செல்கின்ற நாளில், இராமன் தானம் பெற விரும்பிய வேதியனுக்குப் பசுக்கூட்டங்களைத் தானம் செய்து, அவ்வேதியன் மனத்திலே இருந்த ஆசைக்கு எல்லை இல்லாததைக் கண்டு சிரித்த செயலை நினைத்து அழுகின்றவளானாள்.

[பரித்த – தாங்குதற்கரிய; படரும்நாள் – (காட்டுக்குச்) செல்லும் நாள்; அருத்தி – ஆசை; வேதியன் – அந்தணன்; ஆன்குலம் – பசுக்கூட்டம்; கருத்தின் – மனத்திலுள்; கரை – எல்லை ; இறை – அரசன் (இராமன்) ]

## இலக்கணம்

[படருநாள் – வினைத்தொகை; ஆசைக் கரையின்மை – நான்காம் வேற்றுமைத் தொகை]

ஏக வாளியவ் விந்திரன் செம்மன்மேல்

போக ஏவி அதுகண் பொடித்த நாள்

காக முற்றுமொர் கண்ணரில் லாக்கிய

வேக வென்றியைத் தன்றலை மேற்கொள்வாள் (14)

**தெளிவுரை**

காக வடிவாய் வந்த இந்திர குமரனாகிய சயந்தன் மேலே செல்லும்படி ஒப்பற்றதொரு அம்பை ஏவி (அக்காக்கையின் கண் ஒன்றைப் போக்கடித்த நாள் முதற், எல்லாக் காக்கைகளையும் ஒரு கண்) இல்லாதவனவாகச் செய்த உக்கிரமான வெற்றியைத் தன் தலைமேல் கொண்டு கொண்டாடுவளாயினாள்.

ஏகம் வாளி – ஒப்பற்ற அம்பு; இந்திரன் செம்மல் – இந்திரனின் மகன்; கண்பொடித்த நாள் கண் (ஒன்றைப்) போக்கிய நாள்.

**விளக்கம்**

'என்னிடத்திலே குற்றம் செய்த சயந்தன் என்னும் காகாசுரன் மீது அம்பு தொடுத்து, அவனது குற்றத்தைப் போக்கிய இராமன், என்னையே கவர்ந்த பெருங்குற்றவாளியாகிய இராவணனைத் தனது திறத்தினால் அடக்காமல் அலட்சியம் செய்கின்றனரே' என்பது சீதையின் குறிப்பு.

'ஏக வாளி அவ்விந்திரன் செம்மல் மேல் போக ஏவி அது கண் பொடித்த நாள்': சித்திரக்கூட மலையிலே இராமன் சீதை மடியிலே படுத்திருந்தபோது, சயந்தன் அறிவற்றவனாய் சீதைபால் விருப்பம் கொண்டு தேவ வேடத்தை மறைத்து காகவேடம் பூண்டு, சீதையின் மடிமேலே கொத்த, இராமன் கோபம் கொண்டு ஒரு தருப்பைப் புல்லை மந்திரித்து அதனை அக்காகத்தின் மேலே செலுத்தினான். அதற்கு அஞ்சிய காகம் உறவினர் முனிவர் முதலான பலரிடம் சென்ற அளவில், அவர்களால் கைவிடப்பட்ட நிலையில், இரக்க குணமுடைய இராமனிடம் வந்து புகலிடம் தேடவே, இராமனும் காகத்துக்கு உயிரைக் கொடுத்து ஒரு கண்ணை அழித்தான் என்பது புராண வரலாறு.

வென்றி – வலித்தல் விகாரம்.

## சீதை திரிசடையினிடம் வினவுதல்

முனியோடு மிதிலையின் முதல்வன் வந்தான்
துனியறு புருவமும் தோளும் நாட்டமும்
இனியன துடித்தன ஈண்டும் ஆண்டென
நனிதுடிக்கின்றன ஆய்ந்து நல்குவாய் (51)

**தெளிவுரை**

இவ்வாறு சீதை அறிவு ஒடுங்கி உடல் வருந்திக் கொண்டிருந்தால் அச்சமயம் திரிசடையின்றி மற்றை அரக்கியர் யாவரும் நள்ளிரவில் தூக்கத்தால் மயங்கிக் கிடந்தனர். சீதை திரிசடையினிடம் தனக்கு நேர்ந்த நன்னிமித்தத்தினை கூறி அதனால் யாது பயன் விளையுமோ எனக் கேட்டாள்.

சீதை திரிசடையை நோக்கி, இராமன் விசுவாமித்திர முனிவருடனே மிதிலைக்கு வந்தபொழுது, இனிமையை விளைப்பனவாய் குற்றமற்ற எனது இடப்புருவமும், இடத்தோளும், இடக்கண்ணும், துடித்தாற்போலவே இப்பொழுதும் நன்றாகத் துடிக்கின்றன; இதன் பயனை ஆராய்ந்து எனக்குச் சொல்வாயாக என்றாள்.

எமுனி – விசுவாமித்திரர்; துனி அறு – குற்றம் நீங்கிய; நாட்டமும் கண்ணும்; நனி – மிகுதி; ஆய்ந்து – ஆராய்ந்துன

**விளக்கம்**

மதிலை – சீதையின் தந்தை சனகனின் நகரம்

திரிசடை – விபீடணன் மகள்; சீதையின்பால் மிகுந்த அன்புடையவள் தந்தைப் போல நற்குண நற்செய்கைகளை உடையவள்; சீதையின் வருத்தத்திற்கு மனப்பூர்வமாக வருந்துபவள். சீதையைப் போலவே தூங்காமல் இருந்தாள் என்க.

**இலக்கணம்**

புருவமும் தோளும் நாட்டமும் – எண்ணும்மை; நனி – உரிச்சொல்; நல்குவாய் – முன்னிலை ஒருமை வினைமுற்று.

மறந்தனென் இதுவுமோர் மாற்றம் கேட்டியால்

அறந்தரு சிந்தையேன் னாவி நாயகன்

பிறந்தபார் முழுவதும் தம்பி யேபெறத்

துறந்துகான் புகுந்த நாள் வலந்து டித்ததால்

**தெளிவுரை**

(முன்னே) சொல்ல மறந்து விட்டேன்; இந்த ஒரு வார்த்தையையும் கேட்பாயாக, தருமமே பொருந்திய மனத்தை உடைய எனது உயிரோடு ஒத்த கணவனாகிய பரதனே ஆளும்படிவிட்டு, காட்டுக்கு வரும்பொழுது (புருவம் முதலியவற்றில்) வலப்புறம் துடித்தது. (என்றாள் சீதை)

மாற்றம் – வார்த்தை; கேட்டியால் – கேட்பாயாக; ஆவி – உயிர்; நாயகன் – தலைவன்; கான் – காடுனை

**விளக்கம்**

முன்னே நன்மை விளைந்த காலத்தில் அதற்கு அறிகுறியாக இடம் துடித்ததைக் கூறிய சீதை, இச்செய்யுளால் தனக்குத் தீமை விளைந்த காலங்களில் அவற்றிற்கு அறிகுறியாக வலந்துடித்ததைக் கூறுகின்றாள்.

**இலக்கணம்**

மறந்தனென் தன்மை – ஒருமை வினைமுற்று; கேட்டியால் – முன்னிலை ஒருமை வினைமுற்று; ஆவிநாயகன் – உவமைத் தொகை; துடித்ததால் ஆல் – அசைநிலை.

தஞ்சனை யான்வனத் திழைக்க நண்ணிய

வஞ்சனை தான்வலந் துடித்த வாய்மையால்

எஞ்சல வீண்டுதா மிடந்து டித்ததால்

அஞ்சலென் றிரங்குதற் கடுப்பதி யாதென்றாள் (17)

**தெளிவுரை**

"நஞ்சினை ஒத்த கொடிய இராவணன், தண்டகாரண்யத்தின் வஞ்சனை செய்ய நினைத்த பொழுதில் எனக்கு வலதுபக்கம் கடித்தன. அப்பொழுதெல்லாம்

இவ்வுறுப்புகள் உண்மையாகிய விளைப்பயனால் குறைபாதவை ஆயின. இப்பொழுது இடம் துடித்தது. ஆதலால் பயப்படாதே என்று, சொல்லி என்பால் இரக்கம் கொள்ளுமாறு வருவதாகிய செயல் எதுவோ?'' என்றாள் சீதை.

[நஞ்சனையான் – இராவணன்; வனத்து – காட்டில்; இழைக்க – செய்ய; நண்ணரிய – விரும்பிய ; அஞ்சல் – அஞ்சாதே]

**விளக்கம்**

வலம் துடித்தலால் தீமை விளைவதும் இடம் துடித்ததால் நன்மை விளைவதும் இதற்கு முன்னே எனக்கு தவறாது விளைந்தன. இப்போதோ இடம் துடிக்கின்றது. ஆனால் இலங்கையின் அரக்கியரிடையே அகப்பட்டுக் கிடக்கும் எனக்கு எந்த நன்மை உண்டாகக் கூடும்? இங்க நன்மை விளைய யாதொரு வழியும் தெரியவில்லை என ஏங்கிச் சீதை திரிசடையினிடம் தெரிவித்தாள் என்க.

**இலக்கணம்**

நண்ணரிய – பெயரெச்சம்; எஞ்சல் – பலவின்பால் வினைமுற்று; அஞ்சல் முன்னிலை ஒருமை வினைமுற்று; அடுப்பதியாது – குற்றியலுகரம்.

## நற்பயன் விளையுமென்று சீதையிடம் திரிசடை கூறுதல்

என்றாலும் திரிசடை இயைந்த சோபனம்
நன்றிது நன்றெனா நயந்த சிந்தனையாள்
உன்றுணைக் கணவனை உறுதல் உண்மையால்
அன்றியும் கேட்டியென் றறைதல் மேயினாள். (18)

**தெளிவுரை**

இவ்வாறு சீதை சொன்னவுடனே, திரிசடையானவள், உனக்கு உண்டான இம்மங்கலமான குறி மிகவும் நன்மையைத் தருவதாகும் என்று சொல்லி, மேலும் சீதையிடம் அன்பு வைத்த மனத்தை உடையவளாய் உனக்குத் துணையான கணவன் இராமனை நீ சேர்தல் உறுதியானது. இதுவன்றி யான் சொல்வதைக் கேட்பாயாக' என்று கூறி, அதனை சொல்லத் தொடங்கினாள்.

[சோபனம் – மங்கலக்குறி; நயந்த – அன்புடைய; எனா – என்று சொல்லி; உறுதல் – அடைதல்; கேட்டி – கேட்பாயாக; அறைதல் – சொல்லுதல்]

## இலக்கணம்

நன்று நன்று – அடுக்குத்தொடர்; கேட்டி – முன்னிலை ஒருமை வினைமுற்று.

சீதையிடம் தான் கண்ட நன்னிமித்தத்தைத் திரிசடை கூறுதல்

உன்னிறம் பசப்புற உயிர் உயிர்ப்பு

இன்னிறத் தேனிசை இனிய நண்பினால்

மின்னிற மருங்குலாய் செவியின் மெல்லெனப்

பொன்னிறத் தும்பிவந் தூதிப் போயதால் (19)

## தெளிவுரை

'மின்னல் போன்ற தன்மையுடைய இடையினை உடையவளே. உனது திருமேனியின் நிறம் பசுமை பெறும்படியாகவும் பொன்னின் நிறத்தை உடைய ஒரு வண்டு இனிய நன்மையினால் மெதுவாக வந்து இனிய நிறமுடைய தேன் போன்ற பாட்டிசையை உனது காதில் ஊதிவிட்டு (இப்பொழுது) போயிற்று.

உயிர்ப்புற – பிழைக்க; மின்னிற மருங்கு – மின்னல் போன்ற இடை; செவி – காது; தும்பி – வண்டு.

## விளக்கம்

பொன் வண்டு செவியினிடத்தில் இன்னிசை ஊதிச் சென்ற இது நல்லகுறி என்பதைக் குறித்ததற்கு 'உன்னிடம் பசப்புற உயிர்ப்புற' என்றாள் (திரிசடை).

## இலக்கணம்

உன்னிறம் – ஆறாம் வேற்றுமைத் தொகை; இன்னிறம் – பண்புத்தொகை; பொன்னிறத்தும்பி – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை.

ஆயபது தெரினின் னாவி நாயகன்
ஏயதோர் தூதுவந் தெதிரு மென்னமால்
தீயது தீயவர்க் கெய்த றின்னமென்
வாயது கேளென மறிந்துங் கூறுவான் (20)

## தெளிவுரை

'அதனை ஆராய்ந்தால் உன் உயிர் போன்ற கணவன் ஏவி அனுப்பிய தூதன் ஒருவன் வந்து சேர்வான்; கொடிய இராவணாதியர்க்குக் கொடுந் துன்பம் வருதலும் உறுதி (அதற்கு அறிகுறியாகப் பின்னும்) என்னிடம் நிகழ்ந்ததைக் கேட்பாயாக, என்று சொல்லி மீண்டும் சொல்லுவாள்.

ஊ.ஆயபது தேரின் – அதனை ஆராய்ந்தால்; ஏயது ஓர் தூது – ஏவி அனுப்பிய தூதுவன் ஒருவன்; எதிரும் – சேர்வான்; தீயவர் – இராவணன் முதலியோர்; என் வாயது – என்னிடத்து நிகழ்ந்ததை; மறுத்த – மீண்டும்ன

## விளக்கம்

'எந்த நன்மையையும் எதிர்பார்த்தற்கு இடமில்லாத இவ்வசோகவனத்தில் அரக்கரிடையே அகப்பட்டுத் தவிக்கின்ற எனக்கு இடம் துடிக்கின்றதனால் யாது நற்பயன் விளையும் என்று ஐயுற வேண்டா : உனது திருமேனியில் நன்னிறம் உண்டாகுமாறும் உன் உயிர் சேறுதல் அடையுமாறும் பொன்னிற வண்டு இன்னிசையை உன் செவியிலே ஊதிச் சென்றதன்றோ ? அதன் பயன் இப்பொழுது உன் உயிர்போன்ற கணவன் இராமனிடத்திலிருந்து ஒரு தூதுவன் வந்த செய்தி சொல்லிப் போவாள் என்பது தெளிவாக விளங்குகிறது. இதுவே உனக்கு இடப்புறம் துடித்ததன் பயனா; தீய அரக்கர்களுக்குத் தீமை விளைவல் திண்ணம். அதற்கு அறிகுறியாக இப்போது கனவும் கண்டேன். அதனை நான் கூறக்கேன் என்று திரிசடை கூறலாயினாள்.

## பயிற்சி வினாக்கள்

### I. ஒவ்வொன்றுக்கும் ஆறு வரிகளில் விடை தருக.

1) 'கன்மருங் கெழுந்தென்றுயோர் துளவரக் காணா நன்மருந்து போல்' இவ்வுவமையால் நீவிர் அறியும் செய்தி யாது ?

2) 'அயிலெயிற்று வெம்வுலிக் குழுநத் தகப்பட்ட' சீதையின் நிலையினை விளக்குக.

3) 'ஒரு நிலையுறாத மென்றுகிலாளின் துன்பத்தினைக்' கம்பர் எவ்வாறு காட்டுகின்றார்?

4) 'ஓவியம் புகையுண்டதே பொக்கின்ற உருவாள்' என்று கம்பர் சீதையைக் கூறக் காரணமென்ன?

5) சீதையின் விருந்தோம்பல் பண்பினைப் புலப்படுத்துக.

6) இராமனின் திருமுகத்தை 'சித்திரத்தினலர்ந்த செந்தாமரை' என்று சீதை கூறக் காரணமென்ன?

7) நட்பு பாராட்டும் திறத்தில் இராமன் ஒப்புயர்வில்லாதவன் என்பதை எவ்வாறு அறியலாம்?

8) இராமனின் 'வேக வென்றியாக' வரும் செய்தியை நம் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

9) எவ்வெப்போது சீதைக்கு வலப்புறம் துடித்தது?

10) இடம் துடித்ததால் அடுப்பது யாதென வினவிய சீதைக்குத்திரிசடை கூறியது யாது?

11) திரிசடை கண்ட நன்னிமித்தத்தையும் அதனால் விளையும் பயனையும் கூறுக.

## II. ஒவ்வொன்றுக்கும் இருபது வரிகளில் விடை தருக.

1) அசோகவனத்திலிருந்த சீதையின் நிலை யாது?

2) சீதை, திரிசடை இவர்களுக்கிடையே நிகழ்ந்த உரையாடல் எழுதுக.

இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

1) "வெயிலிடைத் தந்த விளக்கென ஒளியிலா மெய்யாள்"

2) "மீண்டும் மீண்டும் புக்கேரி நுழைந்தாலென நோய்க்கு"

3) "மருந்தும் உண்டுகொல் யான் கொண்ட நோய்க்கு"

4) "ஏழை வேடனுக்கு எம்பி நின் தம்பி"

5) "உள்றுணைக் கணவனை உறுதல் உண்மையால்"

6) "பொன்னிறத் தும்பி வந்தூதிப் போயதால்"

# பாடம் - 9
# நளவெண்பா

## நூலைப் பற்றி

நளன் என்னும் மன்னனது வரலாறு வெண்பாப் பாடல்களால் கூறப்பெறுவதனால், நளவெண்பா எனப் பெயர் பெறலாயிற்று. நளன் வரலாறு பாரதத்தில் கூறப்படுகிறது. அந்த வரலாறு நளவெண்பா என்னும் நூலில் கூறப்படுகிறது. ஆகவே பாரதம் இந்நூலுக்கு முதல் நூலாகும். இந்நூலில் சுயம்வர காண்டம், கலித்தொடர் காண்டம், கலிநீங்குகாண்டம் என மூன்று காண்டங்கள் உள.

## ஆசிரியரைப் பற்றி

நளவெண்பாவின் ஆசிரியர் புகழேந்திப் புலவர். இவர் நளவெண்பாவைப் பாடிப்புகழ் ஏந்தியவர். ஆதலால், புகழேந்தி எனப் பெயர் பெற்றார் என்றே கருதுகின்றனர். இவர் இயற்பெயர் தெரியவில்லை. இவர் தொண்டை நாட்டில் உள்ள பொன் விளைந்த களத்தூரில் வேளாண்மை மரபில் தோன்றியவர். இவர் வெண்பாப் பாடல்களைப் பாடுவதில் வல்லுநர். ஆதலின், 'வெண்பாவிற் புகழேந்தி' எனப் போற்றப்பட்டவர்; இவர் பாண்டிய மன்னனது அவையில் சிறப்பிடம் பெற்றவர். கம்பர், ஒட்டக்கூத்தர் முதலியோர் இவருடைய சமகாலப் புலவர்கள் ஒட்டக் கூத்தருக்கும், புகழேந்திப் புலவருக்கும் வாதங்கள் நடந்தனவாகக் கூறுவர். இவரது சமயம் வைணவம்; காலம் : காலம் கி.பி. 16--ஆம் நூற்றாண்டாகும்.

(கலிநீங்கு காண்டத்தில் உள்ள ஒரு பகுதி இங்கே பாடமாக அமைந்துள்ளது. புகழேந்திப் புலவரது வெண்பாப் பாடல்களின் பாடல்களில் இன்பத்தை அப்பாடல்களிலே கலைத்துக் காண்க. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்)

### முன் கதை குறிப்பு

நளன் நிடத நாட்டு வேந்தன். விதர்ப்ப நாட்டு மன்னன் வீமன். இவனுடைய மகளாகிய தமயந்தியை நளன் மணந்து கொள்கிறான். இதனால் சினங்கொள்கின்றான். கலிபுருடன் (சனி), பின்பு கலி, புட்கரன் என்னும்

மன்னனை நளனுடன், சூதாட அழைப்புகிறான். நளன் புட்கானோடு சூதாடி நாடு நகரங்களை இழந்தான். தம் மக்களை விதர்ப்ப நாட்டுக்கு அனுப்பினான். தமயந்தியுடன் காட்டிற்குச் சென்று, அவள் உறங்கும்போது நள்ளருளில் அவளை விட்டுப் பிரிந்தான். தன்னந்தனியாக நின்ற தமயந்தி, விதர்ப்ப நாடு சென்று தன் தந்தையோடு தங்கி இருந்தாள். அங்கிருந்து நளனைத்தேட முயன்றாள்.

நளன் கார்கோடகன் என்னும் பாம்பால் தீண்டப்பெற்று, உருவம் மாறிக்கருத்த நிறமுடையவனானான். அவன் வாகுகன் எனப் பெயர் பூண்டு அயோத்தி மன்னன் இருதுபன்னன் என்பானிடம் தேரோட்டியாகவும், சமையல் புரிபவனாகவும், பணிபுரிந்து வருகின்றான். நளனைத் தேடிவரும்படி தமயந்தி அனுப்பிய தூதனால், இந்த வாகுகனே நளன் எனத் தமயந்தி உய்த்தறிகின்றாள், ஆதலால் வீமனைக் கொண்டு தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் என்று கூறி, மன்னர்களை வரவழைக்கின்றான். இருதுபன்ன மன்னனும் சுயம்வரத்திற்கு வருகை புரிந்தனன். அவனுடன் வந்த வாகுகனாகிய நளன் மடைத்தொழில் (சமையல் தொழில்) புரிகின்றான். அவனே நளன் என்பதை ஐயமுற உரைத்த தன் மக்களை அவன் இருக்கும் இடத்திற்கு அனுப்பி, அங்கு நிகழும் செயல்களை ஆராய்ந்து வருமாறு பின் தோழியர்க்குக் கூறினாள்.

## தமயந்தி தன் மக்களை வாகுகனிடம் அனுப்புதல்

கோதை நெடுவேற் குமரனையும் தங்கையையும்
ஆதி அரசன் அருகாப் – போத
விளையாட விட்டவன்றன மேற்செயல் நா டென்றாள்
வளையாடு கையாள் மதித்து

தமயந்தியின் சூழ்ச்சித் திறனை நோக்கும்குகள்; தன் மக்களை வாகுகனிடம் அனுப்பி அங்கே நடக்கின்ற செயல்களை நன்கு அறிந்து வருமாறு தோழியிடம் கூறினாள்.

### சொல்லும் பொருளும்

கோதை – மலர்மாலை; குமரன் – புதல்வன்; போத – மிக; நாடு – ஆராய்க; ஆடும் – அமைதியும்; மதித்து – ஆராய்ந்து

### தெளிவுரை

வளைகள் அசைகின்ற கையினை உடையவளாகிய தமயந்தி நன்றாக ஆராய்ந்து பார்த்து மலர் மாலையினை அணிந்த நெடிய வேலினையுடைய தன்

மகன் இந்திரசேனனையும், அவனுடைய தங்கையாகிய இந்திரசேனையையும் முன்னாள் அரசனாகிய நளனது பக்கத்தில் மிகவும் விளையாட விட்டு அங்கே நிகழும் செய்திகளை நன்கு ஆராய்ந்து பார்த்து வருமாறு தன் தோழியிடம் கூறினாள்.

### பிரித்துக் காட்டல்

விட்டு + அவன் + தன் - விட்டவன்றவன்; நாடு + என்றாள் - நாடென்றாள்.

### இலக்கணம்

நெடுவேல் – பண்புத்தொகை; நாடு – ஏவல் வினைமுற்று; ஆடும் – பெயரெச்சம்.

## வாகுகன் மக்களுடன் உரையாடுதல்

மக்களைமுன் காணா, நடுங்கா வெய்துயிரா
புக்கெடுத்து வீரப் புயந்தணையா மக்காள்! நீ
என்மக்கள் போல்கின்றீர்? யார் மக்கள் என்றுரைத்தான்
வன்மம் களியானை மன் (2)

மக்கள் மேல் நளன் காட்டும் அன்பைப் பாருங்கள்! மக்களைக் கண்டான்; பெருமூச்சு விட்டான். அவர்களைத் தன் வீரப்புயத்திலே எடுத்து அணைத்தான். உண்மையை அறிய நீங்கள் யார் மக்கள்? என்று வினவுகின்றான். நளன் மக்களிடம் காட்டும் அன்பை என்னென்பது.

### சொல்லும் பொருளும்

காணா – கண்டு; நடுங்கா – நடுங்கி; வெய்து உயிரா – பெருமூச்சு விட்டு; வன்மம் – பகை; களியானை – மதம் பொருந்திய யானை.

### தெளிவுரை

பகைத் தன்மை கொண்ட மதம் பொருந்திய யானைகளை உடைய நளன், தன் மக்களை தன் முன்னே கண்டு, மனம் நடுங்கி பெருமூச்சு பொருந்திய புயத்திலே அணைத்துக் கொண்டு மக்களே! நீங்கள் என்னுடைய மக்கள் போல் காணப்படுகின்றீர்கள் நீங்கள் யாருடைய மக்கள் என்று கேட்டான்.

### பிரித்துக் காட்டல்

வெய்து + உயிரா - வெய்துயிரா; புக்கு + எடுத்து - புக்கெடுத்து; வன்மம் + களியானை - வன்மத்த வினை

### இலக்கணம்

காணா, நடுங்கா, உயிரா, அணையா - செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம். செய்து என்னும் உடன்பாட்டுப் பொருளில் வந்தது. மக்கா - விளிவேற்றுமை.

## மக்களின் மறுமொழி

'மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்;
அன்னைதனைக் கான்விட்டவன் ஏக - இந்நகர்க்கே
வாழ்கின்றோம்; மக்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றனன்!' என்றார் அழுது.

வாகுகனின் கேள்வி மக்களின் உள்ளத்தை உருக்கி விட்டது. உள்ளத்தின் உருக்கம் கண்ணீராக வெளிப்பட்டது. கண்ணீர்க் கடலில் நீந்திக் கொண்டே மக்கள் விடை கூறுகின்றார்கள். நிடதநாட்டு மக்களின் வாழ்வுக்குக் காரணமான மன்னனுடைய மக்கள் நாங்கள். எங்கள் அன்னையை காட்டகத்தே விட்டு விட்டு சென்றான். நாங்கள் இந்நகரில் வாழ்கின்றோம்; எங்கள் நாட்டை மற்றொருவன் ஆள்கின்றான்.

### சொல்லும் பொருளும்

வேந்தன் - அரசன் ; கான் - காடு ; ஏக - செல்ல;

### தெளிவுரை

பேரரசனாகிய எங்கள் தந்தையோ நிடதநாட்டு மக்களின் நல்வாழ்வுக்குக் காரணமான அரசன்; அவனுடைய மக்கள் நாங்கள். அவன் எங்கள் அன்னையை காட்டகத்தே விட்டுப் பிரிந்து செல்ல, நாங்கள் இந்நகரில் வாழ்ந்து வருகின்றோம். 'எங்கள் வளநாட்டை மற்றொருவன் (புட்கரன்) ஆண்டு வருகின்றான்' என்று அவர்கள் அழுதுகொண்டே கூறினார்கள்.

### பிரித்துக் காட்டல்

விட்டு + அவன் விட்டவன்; மற்று + ஒருவன் - மற்றொருவன்

### இலக்கணம்

வாழ்வேந்தன் - வினைத்தொகை; வாழ்கின்றோம் - பலர் பால்வினைமுற்று; வளநாடு - பண்புத்தொகை; ஆள்கின்றான் - ஆண்பால் வினைமுற்று.

### மீண்டும் வாகுகன் வினவுகின்றான்

உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிப்போந்து
இங்கண் உறைதல் இழுக்கன்றோ ? செங்கை

வன்வரசே என்றுரைத் தான் மாதவத்தால் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து

வாகுகன் தன் மக்களின் வீரத்தைச் சோதிக்க எண்ணினான். அவர்கள் உள்ளத்தைப் புண்படுத்தும் ஒரு கேள்வியை அம்பு போலத் தொடுத்தான் 'உங்கள் அரசை மற்றொருவன் ஆள, நீங்கள் இங்கே வாழ்ந்து தங்கி இருப்பது இழுக்கல்லவா?' என்பது அந்தக் கேள்வி.

### சொல்லும் பொருளும்

இங்கண் இவ்விடம் உறைதல் – தங்குதல்; செங்கை – சிவந்த கை; மாதவம் – சிறந்த தவம்; எடுத்து – ஆராய்ந்து.

### தெளிவுரை

வாகுகன் மிகவும் ஆராய்ந்து சிறந்த தவத்தால் பெற்ற இளவரசனாகிய தன் புதல்வனை நோக்கி கையினையுடைய வளம் பொருந்திய அரசே! உங்கள் அரசை (நாட்டை) மற்றொருவன் ஆட்சிபுரி நீங்கள் இங்கு ஓடிவந்து தங்கி இருப்பது இழுக்கல்லவா? என்று கேட்டான்.

### பிரித்துக் காட்டல்

அரசு + ஒருவன் - அரசொருவன்; இழுக்கு + அன்றோ - இழுக்கன்றோ, செம்மை + கை - செங்கை; மா + தவம் - மாதவம்; இளமை + அரசே - இளவரசே.

### இலக்கணம்

ஓடி, போந்து – வினையெச்சங்கள்; செங்கை, வளவரசே, இளவரசே – பண்புத்தொகைகள்; மாதவம் – உரிச்சொல் தொடர்.

### சிறுவனின் சீற்றம்

நெஞ்சால் இம்மாற்றம் நினைத்துரைக்க; நீயில்லாது
அஞ்சாரோ மன்னர்? அடுமடையா? எஞ்சாது
தீமையே கொண்ட சிறு தொழிலாய் எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி.

சிறுவனுக்குச் சீற்றம் பொங்கி எழுந்தது. அவன் சிங்கமெனச் சீறினான். கனல் கக்கும் மொழிகள் அவன் வாயினின்றும் வெறிப்படுகின்றன. வாகுகனை இழித்துக் கூறுகின்றான்; தன் தந்தையின் பெருமையை உணர்ச்சி பேசுகின்றான். நீ இழித்தவன் ஆத[illegible]

கூட இச்சொற்களை சொல்வதற்கு அஞ்சுவார்கள். எம் அரசனுக்கு வலிமையானது வாய்ண்மயே என்று முனங்கினாள்.

### சொல்லும் பொருளும்

இம்மாற்றம் – இச்சொற்கள்; அடுமடையா – சமையல் தொழில் செய்பவனே (அடுதல் – சமையல்; மடைத்தொழில் – சமையல் தொழில்)

### தெளிவுரை

சமையல் தொழில் செய்பவனே! எப்பொழுதும் தீய தன்மையை கொண்ட கீழான தொழிலைச் செய்பவனே! இச்சொற்களை நின்மனத்தால் நினைத்துக் கூறுவதற்கு, நீ அல்லாமல் அரசர்கள் கூட அஞ்சமாட்டார்களோ? எம் அரசனுக்கு வலிமையாவது உண்மையே என்பதனை நீ அறிந்து கொள்வாயாக!

### பிரித்துக் காட்டல்

அடும் + மடையா · அடுமடையா; சிறுமை + தொழில் · சிறுதொழில்

### இலக்கணம்

நினைத்து, உரைக்க, அல்ல – வினையெச்சங்கள்; அடுமடையா – வினைத்தொகை; எஞ்சாது – வினையெச்சம்

## தந்தையின் கனிந்த உரை

''மன்னர் பெருமை மடையர் அறிவாரோ?
உன்னை அறியாது உரை செய்த – என்னை
முனிந்தருளல்'' என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாராக் கண்.

சிறுவனின் சீற்றம் வாகுகனின் உள்ளத்தைக் கனியச் செய்து விட்டது. அவன் உள்ளங்கனிந்து உருகினான்? கண்ணனீரைப் பெருக்கினான்; தன் மைந்தன் முன்னே தலைதாழ்த்தி நின்றான்; மைந்தனின் விடை வீரப்பெருமன்னனைத் தன் மைந்தன் முன்னிலையில் தலை வணங்கி நிற்குமாறு செய்துவிட்டது. அவனது உள்ளமோ அனலில்பட்ட மெழுகு போல உருகிற்று. மன்னர் பெருமையைச் சமையல் தொழில் செய்யும் கீழானவர்கள் அறிவார்களோ? என்று பணிவோடும் கனிவோடும் கூறினான். உன் பெருமையை அறியாமல் கூறிய என் மீது சினங்கொள்ள வேண்டா எனப் பணிவோடு வேண்டினான்.

## சொல்லும் பொருளும்

மடையர் – சமையல் செய்பவர்; முனிந்து அருளல் – கோபித்துக் கொள்ள வேண்டா ; முடிசாய்த்து – தலைவணங்கி.

## தெளிவுரை

மைந்தன் கூறிய உரைகளைக் கேட்டு வாகுகன் மனம் கனிந்து உருகிக் கண்கள் நீரைப் பொழிய, மன்னர்களுடைய பெருமையைச் சமையல் தொழில் செய்யும் என் போன்ற கீழோர் அறிவார்களோ? உன் பெருமையை அறியாமல் கூறிய என் மீது சினங்கொள்ள வேண்டா என்று கூறித் தலைவணங்கி நின்றான்.

## பிரித்துக் காட்டல்

முனிந்து + அருளல் = முனிந்தருளல்; கனிந்து + உருகி = கனிந்துருகி

## இலக்கணம்

மடையர் – வினையாலணையும் பெயர்; அறியாது – எதிர்மறை வினையெச்சம்; முனிந்தருள் – வியங்கோள் வினைமுற்று.

## தமயந்தியின் துன்ப நிலை

கொற்றக் குமரனையும் கோதையையும் தான் கண்டு<br>
மற்றவன் ஆங்குரைத்த வாசகத்தை முற்றும்<br>
மொழிந்தார்; அம்மாற்றம் மொழியதே முன்னே<br>
அழிந்தான் விழுந்தான் அழு. (7)

இந்திரசேனனும் இந்திரசேனையும் திரும்பிவந்தனர். விளையாடச் சென்ற இடத்தில், அவர்கள் விளையாட்டா விளையாடினர்? கண்ணீர்க் கடலை அல்லவா பெருக்கினர்! வாகுகனின் கேள்வி அவர்கள் உள்ளத்தை வாளாற் பிளந்தது போல் அல்லவா இருந்தது! வாகுகன் கேட்ட கேள்விகள், அவன் கூறிய பணிவான கனிவுரைகள் ஆகிய அனைத்தையும் தோழியர் தமயந்தியிடம் தெரிவித்தனர். என்ன நடந்தது தெரியுமோ? அவர்கள் அத்தனையும் தெரிவிக்கும் முன்பே தமயந்தி உள்ளஞ் சோர்ந்தாள்; அவர்கள் அத்தனையும் தெரிவிக்கும் முன்பே தமயந்தி உள்ளஞ் சோர்ந்தாள்; அழுதுகொண்டே அடியற்ற மரம்போல் வீழ்ந்தாள். அழுது அழுது கண்ணீரைப் பெருக்கினாள். தமயந்தியின் நிலை இவ்வாறாகும் என்று அவர்கள் எதிர்பார்த்திருப்பார்களா?

### சொல்லும் பொருளும்

கொற்றம் – வெற்றி; குமரன் – புதல்வன்; கோதை – புதல்வி, மொழிந்தார், கூறினார்; அழிந்தாள் – மனஞ்சோர்ந்தாள்.

### தெளிவுரை

வெற்றிக்குரிய தன் மகனையும் மகளையும் வாகுகன் கண்டு அவன் கூறியனவைகளை ஒன்றுவிடாமல் தோழியர்கள் தமயந்தியிடம் கூறினார்கள். அவர்கள் அச்சொற்களைக் கூறுவதன் முன்பே, அவள் உள்ளஞ்சோர்ந்தாள்; அழுதுகொண்டே கீழே விழுந்தாள்.

### பிரித்துக் காட்டல்

கொற்றம் + குமரன் = கொற்றக்குமரன் ; ஆங்கு + உரைத்த = ஆங்குரைத்த.

### இலக்கணம்

மொழிந்தார் – பலர்பால் வினைமுற்று; அழிந்தாள், விழுந்தாள் – பெண்பால் வினைமுற்றுக்கள்.

## தமயந்தி வீமனிடம் கூறல்

''மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவதற்கும்
கொற்றந் தனித்தேரும் கொண்டணைந்து – மற்றும்
மடைத்தொழிலை செய்கின்ற மன்னவர் காண் எங்கள்
கொடைத் தொழிலான்'' என்றாள் குறித்து

தமயந்தியின் சூழ்ச்சி வென்றது அவள் தன் கணவனை இப்பொழுது கண்டறிந்து விட்டாள். தன் தந்தை வீமனிடம் செய்தி தெரிவித்தாள், எப்படி ?' இந்நகருக்கு வந்த இருதுபன்ன மன்னனுக்குத் தேரோட்டி வந்து சமையல் தொழிலும் புரிகின்ற மன்னவனே, எங்கள் கொடைத் தொழிலான்; எங்கள் மன்னவன்' என்று கூறினாள்.

### சொல்லும் பொருளும்

கொற்றம் – வெற்றி; தனித்தோர் – ஒப்பற்ற ; மடைத்தொழில் – சமையல் தொழில் ; கொடைத்தொழில் – கொடுக்குந் தொழில்.

### தெளிவுரை

தமயந்தி வீமனிடம் செல்வம் பொருந்திய இந்த நமது நகருக்கு வந்து சேர்ந்த இருதுபன்ன மன்னனுக்கு வெற்றி பொருந்திய ஒப்பற்ற தேரைச் செலுத்தி

வந்து, அதன் மேலும் சமையல் தொழில் புரிகின்ற மன்னவனே, கொடுக்கும் தொழிலையுடைய எங்கள் வேந்தன்" என்று உறுதியாகக் கூறினாள்.

**பிரித்துக் காட்டல்**

வந்து + அடைந்த - வந்தடைந்த; தனி + தேர் - தனித்தேர்; கொண்டு + அணைந்து - கொண்டணைந்து ; மடை + தொழில் - மடைத்தொழில்

**இலக்கணம்**

அடைந்த, செய்கின்ற – பெயரெச்சங்கள், கொண்டு, அணைந்து – வினையெச்சங்கள்; தொழிலாள் – வினையாலணையும் பெயர்.

## வினாக்கள்

1. நளவெண்பா சிறுகுறிப்பு வரைக.
2. புகழேந்திப் புலவர் சிறுகுறிப்பு வரைக.
3. தமயந்தி தோழியிடம் கூறியது என்ன?
4. மக்களால் கண்டதும் நளன் கொண்ட அன்பை விளக்கமாக எழுதுக.
5. நீர் என் மக்கள் போல்கின்றீர்? யார் மக்கள்? இதற்கு மக்கள் கூறிய மறுமொழி யாது?
6. சிறுவன் சீற்றங்கொள்ளக் காரணம் என்ன?
7. வாகுகனின் கனிவுரை யாது?
8. தமயந்தியின் துன்பநிலையினை விளக்குக.
9. தமயந்தி வீமனிடம் தெரிவித்த செய்தி யாது?

## பயிற்சி

1. வாகுகனுக்கும் மக்களுக்கும் நடைபெற்ற உரையாடலை தொகுத்துக் கூறுக.

2. பொருள் தருக : கோதை, நாடு, வள்மம், இங்கண், மாதவம்மாற்றம், மடையர், கொற்றம்,

3. சேர்த்து எழுதுக : வேற் + குமரன் ; வளை + ஆடும்; மற்று + ஒருவன்; இழுக்கு + அன்றோ; இளமை + அரசு; சிறுமை + தொழிலாய்; முனிந்து + அருள்; ஆங்கு + உரைத்த; கொண்டு + அணைந்து.

4. பிரித்துக் காட்டுக : புக்கெடுத்து; வளநாடு; செங்கை; அடுமடையா; கனிந்துருகி; மற்றனன்; மன்னவற்கு; கொற்றந் தனித்தேர்.

5. கீழ்வருவனவற்றில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்துக.

அறுகாக; அணையா ; உறைத்தன் ; வாழ்கின்றோம் ; ஆழ்கின்றோம்; உறைதல் ; இளுக்கு; பெருமை ; முனிந்தருள் ; கனிந்துருகி ; மாட்டம் ; மொளியாத; விளிந்தாள் ; மன்னவருக்கு ; கொண்டணைந்து

6. இடஞ்சுட்டி விளக்குக.

(அ) 'அவன்றன் மேற்செயல் நாடு'

(ஆ) 'எங்கள் வளநாடு மற்றொருவன் ஆள்கின்றான்'

(இ) 'எங்கள் வளநாடு மற்றொருவன் ஆள்கின்றான்'

(ஈ) 'இம்மாற்றம் நினைந்துரைக்க நீயல்லாது அஞ்சாரோ மன்னர்'

(உ) 'மன்னர் பெருமை மடையர் அறிவாரோ'

**இலக்கணக் குறிப்பு வரைக.**

நெடுவேல் ; நாடு ; நடுங்கா ; அணையா ; மக்காள் ; வாழ்வேந்தன் ; வாழ்கின்றோம் ; வளநாடு ; ஆள்கின்றான் போந்து ; உறைதல் ; செங்கை ; இளைவரசை ; அல்லாது ; அடுமடையா ; பெருமை ; மடையர் ; அறியாது; முனிந்தருளல் ; கனிந்து ; மொழிந்தார் ; அழிந்தாள் ; அணைந்து ; செய்கின்ற; தொழிலாள்.

# பாடம் - 10
# தேம்பாவணி

## தேம்பாவணி

இத்தொடரை 'தேம்பா + அணி' என்றும், தேன் + பா + அணி என்றும் பிரிக்கலாம். தேம்பா + அணி என்பதற்கு வாடாத பூமாலை போன்ற பாமாலை என்பது பொருள் (தேம்பா - வாடாத; அணி - பூ - மாலை தேன்பா அணி என்பதற்குத் தேன் போன்ற இனியபாக்களால் அமைந்த நூல் என்பது பொருள். இக்காப்பியத்தின் தலைவர் சூசையப்பர்; அவர் தேம்பா வணியான வாடா அருள் மகன் என்று குறிப்பிடுகிறார். ஆதலின் காப்பியத் தலைவன் பெயரே நூலுக்கும் பெயராக அமைந்தது.

இந்நூல் யூதேய நாட்டிற் பிறந்து புகழுடன் வாழ்ந்த சூசையப்பர் வரலாற்றை உரைப்பதாகும். விவிலிய நூல் (பைபிளில்) கூறப்பெற்ற வரலாற்றையே இந்நூல் கூறுகின்றது. ஆதலால், இது வழிநூலாகும். விவிலிய நூல் இதன் மூலம் நூல் இது மூன்று காண்டங்களையும் முப்பது படலங்களையும் கொண்டது. கம்பராமாயணம், சிந்தாமணி போன்ற நூல்களில் காணப்படும் கவிநயமும் கற்பனை வளமும் செறிந்தது. இக்காப்பியத்தின் ஆசிரியர் வீரமாமுனிவர்.

## வீரமாமுனிவர்

இவருடைய இயற்பெயர் கான்ஸ்டான்சி யுஸ்ஜோசப்பெஸ்கி என்பது. இவரைத் தைரியநாதர் எனவும் வழங்குவர். இத்தாலி நாட்டில் உள்ள காஸ்திகிளியோன் என்பது இவரது பிறப்பிடம். இவருடைய தந்தை கொண்டல்போபெஸ்கி, தாயர் எலிசபெத்து, இவர் உரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவர். இவர் சமயத் தொண்டாற்றும் பொருட்டுத் தமிழகத்துக்கு வந்தார். இவர் சுப்பிரதீபக் கவிராயர் என்பவரிடம் தமிழ் பயின்று தமிழ்புலமை பெற்றார். இவருக்கு இத்தாலி, கிரிக், எபிரேயம், இலத்தீன், ஆங்கிலம் முதலிய மொழிகளும் நன்கு தெரியும். பரமார்த்த குருகதை, தொன்னூல் விளக்கம், திருக்காவலூர்க் கலம்பகம் முதலிய நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். இவர் கி.பி. 1680 முதல் 1747 வரையாகும்.

(முதற்காண்டத்தில் உள்ள வளன் சனித்த படலத்தில் ஒரு பகுதி இங்குப் பாடமாக அமைக்கப்பட்டுள்ளது.

## கதை தொடர்ச்சி

பண்டைக்காலத்தில் யூதேய நாட்டில் இஸ்ரவேலர் என்பார் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு அரசனாக விளங்கியவன் சவுல், பிலித்தையர் என்பவர் யூதசமயப் பகைவர். அவர்கள் இஸ்ரவேலுக்கு எப்பொழுதும் தொல்லைகள் விளைவித்து வந்தனர். பிலித்தையர் படையில் கோலியாத்து என்னும் கொடியவன் ஒருவன் இருந்தான். சவுல் என்னும் மன்னனும் அவன் படைவீரரும் கோலியாத்துக்கு எதிர்நின்று போர் புரிய இயலாது அஞ்சிநடுங்கினர்.

## வளன் சனித்த படலம்
## தாவிதும் கோலியாத்தும்
## கோலியாத்தின் போர்க்காலம்

வேலி யாற்கது விடாத்திரு நகரெல்லாம் நடுங்க
மாலியாற்கதிர் வகுத்தவாள் ஏந்தினர் நாப்பண்
ஆவி யாற்கரித்து அகிலமுகில் உருக்கொடு வேய்ந்த
கோலி யாத்தெனும் கொடியவோர் இராக்கத்தன் எதிர்த்தான் (1)
கூர்த்த போர்செயக் கூறினார்க் கொருவனவந் தெய்தி
சீத்த போர்செயக் கூறினார்க் கொருவனவந் தெய்தி
சீத்த நான் அவன் சிறந்தபோர் தனித்தனி தாக்க
தோற்ற பாங்கினர் கொழும்பரென் றாகுவர்'' என்னா?
ஆர்த்த ஓசையால் நகைத்திகழ்வு அறைந்தறை தழைப்பான் (2)

**தெளிவுரை**

(செய்யுள்) : பகைவரால் கைப்பற்ற இயலாத வலிமை வாய்ந்த மதியால் சூழப்பெற்ற அழகிய எருசேலம் நகரத்தார் அனைவரும் மனம் நடுங்கும்படி சூரியனுடைய கதிர்களைப் போல ஒளிவீசும் வாளாயுதத்தை ஏந்திவந்தவர்களாகிய பிலித்திய வீரர்களுக்கு நடுவே நீர்த்துளிகளால் கரிய நிறங்கொண்டு பரவிச் செல்லும் மேகம் போன்ற கரிய வடிவத்தைக் கொண்டு தோன்றிய கோலியாத்து என்னும் கொடிய அரக்கன் ஒருவன் இஸ்ரவேலரை எதிர்த்துப் போர் புரிய முன்வந்தான்.

(வேலி – மதில்; கதுவிடா – கைப்பற்ற இயலாத; மாலி – சூரியன்; நாப்பண் – நடுவில்; ஆவி – நீர்த்துளி; அகழ் – அகன்ற; முகில் – மேகம்; வேய்ந்த – தோன்றிய)

## இலக்கணம்

கதுவிட - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; நகர் - இடவாகு பெயர்; ஏந்தினர் - வினையாலணையும் பெயர்; அகில், முகில் - வினைத்தொகை; எலம்கொடு - இடைக்குறைகள்; (தொகுத்தல் - விகாரங்கள்)

(செய்யுள் 2) : மிக்க போரைச் செய்யக் கூடியுள்ள இஸ்ரவேலருக்கு உங்களுள் ஒருவன் என்னுடன் போர் புரியும் பொருட்டு வந்து, போர்க்களத்தை அடைந்து போர் புரிவதில் சிறந்தவனாகிய நானும் என்னோடு போர் புரிய வந்த அவனும், தனித்தனியே ஒப்பற்ற போரில் ஒருவரை ஒருவர் தாக்கிப் போர் செய்ய, தோல்வி அடைந்த பக்கத்தைச் சார்ந்தவர். வென்றவன் பக்கத்தார்க்கு அடிமையாவர், என்று கூறி ஆரவாரத்தோடு மகிழ்ச்சியால் ஏளனமாகச் சிரித்து இகழ்ச்சியான சொற்களை சொல்லி இஸ்ரவேலரைப் போருக்கு அழைத்தான்.

(கூர்த்த - மிகுந்த; சீர்த்த - சிறந்த; தொழும்ப - அடிமை; ஆர்த்த - ஆரவாரத்தோடு கூடிய; ஓகை - மகிழ்ச்சி)

## இலக்கணம்

செய - இடக்குறை; கூடினார்க்கு - வினையாலணையும் பெயர்; என்னா - செய்ய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்; ஓகை - உவகை என்பதன் மரூஉ; தனித்தனி, அறைந்து அறைந்து - அடுக்குத்தொடர்கள்.

### தாவீது போர்புரிய முன்வரல்

''தாங்கு வாரிலாச் சாற்றிய உரைகள் கேட் டெவரும்
நீங்கு வா'' ரென நிருபனும் அயரும் தன் நெஞ்சிற்கு
ஏங்கு வான்'' எவன் எதிர்த்தகவல் வரக்களை வென்றால்
ஆங்கு நான் அவர்கு என்மகள் அளிக்குவென் என்றான் (3)
''இன்ன வாய்ப்பகல் நாற்பதும் இரிந்த பின், அண்ணர்
முன்னர் மூவரே முரண்செயப் போயினர் அவரைத்
துன்ன ஆசையால் தொடர்த்தினந் தாவீதன் எய்தி
அன்ன யாவரையும் அஞ்சினர் அறைதலும் கேட்டான் (4)
"கைவ யத்தினால் கருதித்தியத் துடலினுங் கோங்கும்
பொய்வ யத்தினான் பகைந்த சொற் கஞ்கவதென்னா
மெய்வ யத்தினால் விழைசெயம் ஆவாதோ; கடவுள்
செய்வ யத்தினால் சிறுவன்நான் வெல்வுவேன்'' என்றான் (5)

## தெளிவுரை

(செய்யுள் 3) : ஏற்றுக் கொள்பவர் எவரும் இல்லாத வகையில் கோலியாத்து கூறிய அறைகூவல் மொழிகளைச் சவுல் அரசன் கேட்டு, இந்த அறை கூவலைக் கேட்டுத் தன் வீரர் யாவரும் புறங்காட்டி ஓடுவர் என்று எண்ணிச் சோர்வடைந்து தன் மனநிலை குறித்து ஏங்கினவனாய், இந்தக் கொடியவனாகிய கோலியாத்தை எவனாவது எதிர்த்துப் போர்செய்து வெற்றி பெற்றால் அப்பொழுதே என் மகளை அவனுக்கு மணஞ்செய்து கொடுப்பேன், என்று தெரிவித்தான் (சாற்றிய – கூறிய; நிருபன் – அரசன் ; அயரும் – சோரும்)

## இலக்கணம்

சாற்றிய – பெயரெச்சம்; ஏங்குவேன் – முற்றெச்சம்; அளிக்குவென் – தன்மை ஒருமை வினைமுற்று; தாங்குவோர் – வினையாலணையும் பெயர்.

(செய்யுள் 4) : இத்தன்மையாக நாற்பது நாட்கள் சென்றபிறகு, இளைஞனாகிய தாவீது என்பவன், முன்பே போர் செய்யச் சென்ற தன் தமையன்மார் மூவரையும் நெருங்கிக் காணவேண்டும் என்னும் விருப்பத்தால், அவர்களைத் தேடி எருசேலம் நகரை அடைந்து, கோலியாத்துக்குப் பயந்தவர்கள் போர்க்களத்தில் நிகழ்ந்தவைகள் எல்லாவற்றையும் அவனிடம் கூறுதலும், அவன் அவைகள் அனைத்தையும் கேட்டுத் தெரிந்து கொண்டான். (முரண் – போர்; துன்ன – நெருங்க; அறைதல் – கூறுதல்).

## விளக்கம்

இசுரவேல் இளைஞருள் ஒருவன் தாவீது என்பவன்.

## இலக்கணம்

இரிந்த – பெயரெச்சம்; போயினர் – பலர்பால்வினைமுற்று; அஞ்சினர் – வினையாலணையும் பெயர்; கேட்டான் – படர்க்கை ஆண்பால் வினைமுற்று.

(செய்யுள் 5) : "தன் உடல் வலிமையினால் மேம்பட்டு விளங்கும் தன் கைகளின் வலிமையினால் தன் மனதில் பொய்யான வலிமை கொண்டிருப்பவனாகிய கோலியாத்து கோபங்கொண்டு கூறிய சொற்களைக் கேட்டு, நீங்கள் பயப்படுவது ஏனோ? உடல் வலிமையால் மட்டும் அவன் விரும்பும் வெற்றி கிடைத்துவிடுமோ? கடவுள் அளிக்கும் பலத்தினால், சிறுவனாகிய நானே அக்கொடியவனை" 'வெல்வேன்' என்று தாவீது கூறினான். (வயம் – வலிமை; புகைந்த – கோபித்த; விழை – விரும்பும்).

### இலக்கணம்

புகைந்த – பெயரெச்சம்; விழைசெயல், செவ்வயம் – வினைத்தொகைகள்; வெல்லுவேன் – தன்மை ஒருமை வினைமுற்று.

## தாவீது போருக்குப் புறப்படல்

அரிய ஆண்மையை அதிசயத் தரசன்நன் றென்னா
வீரிய ளாதொளி வேலோடு தனதுபல்
உரிய போர் செய் நெருங்குதந தனன்; அவற்றொடுதான்
திரிய ஆய்முறை தெரிகிலேன்,'' எனமறுந் தகன்றான் (6)

தெரிந்த வாய்ந்தஐஞ் சிலையோடு கவுன்எடுத் தெவரும்
இரிந்த பாலனை நோக்கி உன் அதிசயித் திரங்க,
வரிந்த அசையால் வேதியர் ஆசியைக் கூறப்
பிரிந்த கால்ஒலி பெருக ஆங்கனைவரும் ஆர்த்தார் (7)

### தெளிவுரை

(செய்யுள் 6) தாவீதினுடைய வீரமொழிகளை கேட்ட அரசன், இளைஞனுடைய சிறந்த வீரத்தைக் கண்டு வியப்படைந்து, 'உனது வலிமை சிறந்தது' என்று கூறி போர் செய்வதற்கு உரிய பரந்து ஒளி வீசும் வேலாயுதத்துடன் தன்னுடைய பலவிதமான படைக்கலன்களையும் ஒருசேரக் கொடுத்தான். தாவீது அந்தப் படைக்கலன்களையும் தான் செல்ல அவைகளை ஆய்ந்து செலுத்தும் முறைகளை அறியமாட்டேன் என்று கூறி, அவற்றை வாங்க மறந்து அங்கிருந்து சென்றான்.

(அளவு பரந்த ஆஉ – ஆராய்ந்து ; தெரிகிலேன் – அறியமாட்டேன்)

### விளக்கம்

சவுல் அரசன் பலவிதமான படைக்கலன்களையும் தாவீதுக்குக் கொடுத்தான். ஆனால் அவைகளைச் செலுத்தும் முறை அறியாததனால் அவன் அவைகளை வாங்க மறுத்துப் போருக்குச் சென்றான்.

### இலக்கணம்

செய – இடைக்குறை; தந்தனன் – படர்க்கை ஆண்பால் வினைமுற்று; ஆய்முறை – வினைத்தொகை; தெரிகிலேன் – தன்மை ஒருமை எதிர்மறை வினைமுற்று; அகன்றான் – படர்க்கை ஆண்பால் வினைமுற்று.

தெரித்தெடுத்த தகுதி வாய்ந்த ஐந்து கற்களோடும், அவற்றை வீசுவதற்கு உரிய கவணையும் எடுத்துக் கொண்டு புறப்பட்ட இளைஞனாகிய தாவீதை யாவரும் பார்த்து வியப்படைந்து ''அவனுக்கு என்ன நேருமோ''? என்று இரங்கவும், அளவு கடந்த ஆசையால் வேதங்களில் குருமார்கள் வாழ்த்துக்கூறவும், அவன் பிரிந்து சென்றபோது அவ்விடத்தில் கூடியிருந்தவர் அனைவரும் மிக்க ஒலி எழுமாறு ஆரவாரஞ் செய்தனர்.

(சிலை – கல்; கவண் – கல்லை எறியும் கருவி; இரித்த – நீங்கிய; வேதியர் – வேதங்களின் வல்லவர்; ஆர்த்தார் – ஆரவாரம் செய்தார்)

## இலக்கணம்

தெரிந்த, இரிந்த – பெயரெச்சங்கள்; ஆர்த்தார் – படர்க்கைப் பலர்பால் வினைமுற்று.

## கோலியாத்தின் கோபம்

''நீய டாஎதிர் நிற்பதோ? மதம்மொழி கரிமேல்
நாய டாவினை நடுத்துமோ? கதம் கொடு நானே
வாய டாபிளந் துயிர்ப்பிட, மறுகி நீ நுண்தூள்
ஆய டாஉல கப்புறத் தேகுவாய்'' என்றான்.

## தெளிவுரை

செய்யுள் (8) : அடா! சிறுவனாகிய நீ என்னை எதிர்த்து நிற்பதா? அடா கைநீரைச் சொரியும் யானை மீது நாயானது போர் தொடுக்குமா? அடா நான் சினங்கொண்டு வாய் திறந்து பெருமூச்சு விட்டால், நீ சுழன்று நுண்ணிய தூள் போலாகி, இந்த உலகிற்கு அப்பால் சென்று வீழ்வாயடா என்று கோலியாத்து கோபங்கொண்டு கூறினான்.

(மதம் – மதநீர்; கரி – யானை; கதம் – சினம்; உயிர்ப்பு – பெருமூச்சு)

## விளக்கம்

கோலியாத்துதி தன்னை மதமிக்க யானையாகவும், சிறுவனாகிய தாவீதை நாயாகவும் கருதினான். அதனால், கோலியாத்தைத் தாவீது எதிர்த்து நிற்பதை எண்ணி, யானை மீது நாய் போர் தொடுக்குமோ? என்றான்.

### இலக்கணம்

மதம் மொழி – இரண்டாம் வேற்றுமைத்தொகை; பொழிகரி – வினைத்தொகை; கொடு – இடைக்குறை; நுண்தூள் – பண்புத்தொகை; ஏகுவாய் – முன்னிலை வினைமுற்று.

### தாவீது வெல்லுதல்

வெல்லவை வேல்கெயு மிடவதுண் மிடலடா! நானோ
எல்லை யாதரவியற்றேதி ரிலாந்திறக் கடவுள்
வல்கை யோடுனை மாய்த்துடல் புட்கிரையாக
ஒலிசேய் வேன்எனா உடைகவண் சுழற்றினான் இளையோன் (9)

கல்லை ஏற்றலும் கவணினைச் சுழற்றலும். அக்கல்
ஒல்லையோட்டாலும் ஒருவரும் காண்கிலர்; இடிக்கும்
செல்லல ஒத்தன சிலைநுதற் பாய்தலும் அன்னான்
எல்லை பாய்ந்திருள் இரிந்தென வீழ்தலும் கண்டார் (10)

### தெளிவுரை

செய்யுள் (9) : அடா! உன்னுடைய வலிமை எல்லாம் வெல்வதற்கு உரிய கூர்மையான வேலாயுதம் செய்கின்ற வலிமையாகும். நானோ தக்க சமயத்தில் ஆதரவு காட்டுகின்ற தமக்கு ஒப்பாக ஒருவர் இல்லாத எல்லா வலிமையும் வாய்ந்த கடவுளின் வலிய "கைத்துணையோடு விரைவில் உன்னைக் கொன்று, உன் உடம்பைப் பறவைகளுக்கு உணவாகும்படி செய்வேன்" என்று கூறிச் சிறுவனாகிய தாவீது தன்னுடைய கவணை செலுத்தினான்.

(மிடல் – வலிமை; கைவேல் – கூர்மையான வேல்; எல்லை – சமயம் ஒல்விரைவு; புள் – பறவை; கவண் – கல்லை எறியும் கருவி)

### விளக்கம்

"நீயோ உன் படைக்கலத்தை நம்பி வந்துள்ளாய்; நானோ ஆண்டவனின் பலத்தை நம்பி வந்துள்ளேன்! ஆதலால் உன்னை எளிதில் வெல்வேன்" என்றான்.

### இலக்கணம்

இலா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; வைவேல் – உரிச்சொல் தொடர்; செய்வேன் – தன்மை ஒருமை வினைமுற்று; சுழற்றினேன் – படர்க்கை ஆண்பால் வினைமுற்று.

(செய்யுள் 10) : தாவீது கல்லைக் கவணில் வைத்ததையும் கவணைச் சுழற்றியதையும், கவணில் வைத்த கல்லை விரைந்து செலுத்தியதையும் ஒருவரும் காணவில்லை. இடிக்கும் மேகத்தைப் போன்ற பேரொலியுடன், அக்கல் கோலியாத்தின் நெற்றியில் பாய்ந்ததையும் அக்கொடியவனாகிய கோலியாத்து சூரியனுடைய ஒளி பாய்ந்தமையால், இருள் ஒழிந்ததுபோல தரையில் விழுந்ததையும் அனைவரும் கண்டனர்.

(ஒல்லை – விரைவு; செல் – மேகம்; சிலை – கல்; நுதல் – நெற்றி; எல்லை – சூரியனுடைய ஒளி; இரிந்து – ஒளிந்து)

## இலக்கணம்

ஏற்றல், கழற்றல், ஓட்டல், பாய்தல், வீழ்தல் – தொழிற்பெயர்கள்; காண்கிலர் – பலர்பால் எதிர்மறை வினைமுற்று; இரிந்து – வினையெச்சம்; கண்டார் – பலர்பால் வினைமுற்று.

### வினாக்கள்

1. குறிப்பு எழுதுக:
   தேம்பாவணி : வீரமாமுனிவர்
2. கோலியாத்தின் போர்க்கோலத்தை விளக்குக.
3. தாவீது யார்? அவன் கோலியாத்துடன் போர்புரிய முன்வந்த திறத்தை – விளக்கமுற எழுதுக.
4. தாவீது போருக்குப் புறப்பட்ட இயல்பினைக் கூறுக.
5. கோலியாத்தின் சினம் எவ்வாறு கூறப் பெற்றுள்ளது?
6. கோலியாத்தைத் தாவீது வென்ற தன்மையை நயந்தோன்ற வரைக.

### பயிற்சி

1. கோலியாத்தின் போர்க்கோலமும், அவன் கொண்ட சினமும் எங்ஙனம் கூறப் பெற்றுள்ளது.
2. தாவீது போர்புரிய முன்வந்த திறத்தையும் அவன் போருக்குப் புறப்பட்டு வந்த இயல்பையும் சுருக்கி வரைக.

3. இடஞ்சுட்டிப் பெருமாளை விளக்குக.

அ) "தோற்ற பாங்கினர் தொழும்பரென் றாகுவர்"

ஆ) "திரிய ஆய்விறை தெரிகிலேன்"

இ) "தெய்வ யத்தினால் விழைசெயம் ஆவதே"

ஈ) "மதம்மொழி களிமேல் நாயாடா விளை நடத்துமோ"

உ) "வெல்வதை வேல்செயு மிடலதுன் மிடலடா"

4. கோலியாத்து தாவீது இருவருக்கும் நடைபெற்ற உரையாடலைப் புலப்படுத்துக.

5. இலக்கணக் குறிப்பு வரைக.

ஏந்தினர்; அகல் முகில்; தனித்தனி; ஆகுலர்; ஓகை; அறைந்தறைந்து; ஏங்குவான், அளிக்குவென்; பாயினர்; அஞ்சினர்; புதைந்த விழை செயம்; நந்தனன்; ஆய்முறை தெரிகிலேன்; இரிந்த; ஆர்த்தார்; மதம் மொழி; பொழிகரி; நுண்துரள்; ஏகுவாய் வைவேல் கழற்றினன்; காண்கிலர்; கழற்றல்; இரிந்து; வீழ்தல்; கண்டார்.

குறிப்பு : கீழ்வரும் எண்ணுள்ள செய்யுட்களை மனப்பாடஞ் செய்க. எண் 8, 10 நீயடா; கல்லை ஏற்றலும்.

# அரிச்சந்திர புராணம்

## நூல்

வாய்மை தவறாத அயோத்தி மன்னன் அரிச்சந்திரனது வரலாற்றைக் கூறுவது இந்நூல். இது பத்துக் காண்டங்களில், 1225 செய்யுள்களைக் கொண்டது. (நம் பாடப்பகுதி மயான கண்டத்தில் உள்ளது) இந்நூல் எளிய நடை, இனிய சொற்கள், சந்தம் ஆகியவை அமையப் பெற்றது.

## ஆசிரியர்

அரிச்சந்திர புராணத்தை இயற்றியவர் நல்லூர் வீரை ஆக்கவிராயர் ஆவார். இவர் இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்தவர், இவரது காலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டு. இவர் இப்புராணத்தை கி.பி. 1524இல் திருப்புல்லாணித் திருமால் கோவிலில் அரங்கேற்றினார்.

## முன்கதைச் சுருக்கம்

சொன்ன சொல் தவறாமல் கோசிக முனிவருக்குப் பொன் தரும் பொருட்டு மறையோன் ஒருவனிடம் அரிச்சந்திரன் தன்னுடைய மனைவி சந்திரமதியும், மகன் தேவதாசனையும் அடிமைகளாக விற்றான். அங்கு சந்திரமதியும் தேவதாசனும் பகலும் இரவும் மறையவன் சொற்படி பணியாற்றி வருந்தியிருந்தனர். அப்போது ஒருநாள் தேவதாசன் விறகு எடுத்து வரச் சிறுவர் சிலருடன் காட்டுக்குச் சென்றான். மாலைப் பொழுதாகியும் மகன் இன்னும் வரவில்லையே! என்று ஏங்கித் தவித்த சந்திரமதி தன் மகனுடன் சென்ற சிறுவனைக் கண்டு வினவினாள்.

### மகன் இறந்ததை
### *சிறுவர் சந்திரமதிக்கு கூறுதல்*

வணங்கிய கரத்தாள் 'சால
  வாடிய மனத்தாள்' மக்காள்!
இணங்கிடம் முடனே வந்த
  என் மகன் எங்கே? என்றாள்.

"மணங்கமழ் குழலாய்! உன்றன்
மைத்தனை அரவு தீண்ட
உணங்கியே இறந்தான் என்றார்
உயிர்த்திலன்; மறுகி வீழ்ந்தாள்.

### அருஞ்சொற்பொருள்

வணங்கிய – தளர்ந்த; கரம் – கை; சால – மிகவும்; குழல் – கூந்தல்; மைந்தன் – மகன்; அரவு – பாம்பு; உணங்கி – வருந்தி ; மறுகி – மயங்கி.

### தெளிவுரை

தளர்ந்த கைகளையும், மிகவும் வாடிய மனத்தையும் உடையவளான சந்திரமதி ''பிள்ளைகளே! உம்மோடு சேர்ந்து (காட்டுக்கு விறகெடுக்க) வந்த என் மகன் எங்கே'' என்றாள். (அதற்கு அச்சிறுவர்கள் ''மணம் வீசும் கூந்தலை உடைய பெண்ணே! உன் மகனைப் பாம்பு கடிக்க அவன் வருந்தி இறந்தான்'' என்றனர் (அதனைக் கேட்ட சந்திரமதி) மூச்சும் விடாதவளாய் மயங்கி விழுந்தாள்.

### இலக்கணக் குறிப்பு

சால–உரிச்சொல்; மக்காள் விளி

இறந்த இடம் யாதென அறிதல்

மடத்தகை வல்லி பின்னும்
மைந்தரை நோக்கி, "எந்த
இடத்திலே இறந்தான்?" என்ன
இடத்திலே இறந்தான்?" என்ன
'யாம்தரு வழியில் நிற்கும்
வடத்திறுக்(கு) அருகே, அங்கே
வடக்கினிற் குசை படர்ந்த
பிடத்தினில் தெற்கே' என்று
சாற்றியே அவர்கள் போனார்.

### அருஞ்சொற்பொருள்

குசை – தருப்பைப் புல்; தடம் – இடம்; சாற்றி – சொல்லி; வடம் – ஆலமரம்.

### தெளிவுரை

இளமையான வல்லிக்கொடி போன்ற சந்திரமதி அச்சிறுவர்களிடம் தன் மகன் எவ்விடத்தே இறந்தான் என்று கேட்க திகழ்ந்தாள்,"நாங்கள் வரும் வழியில்

நிற்கின்ற ஆலமரத்திற்கு அருகில், சற்று வடக்கில், தருப்பைப்புல் படர்ந்துள்ள இடத்திற்கு தெற்கே என்று கூறிச் சென்றார்கள்.

## இலக்கணக் குறிப்பு

மடந்தகை வல்லி – அன்மொழித் தொகை

## சந்திரமதி மறையோனிடம் விடை பெற்றுக் காட்டுக்குச் செல்லல்

3) மாலையங் குழலாள் கூற
மறையவன் மனம்பொருந்தி
வேலைகள் மிகவும் உண்டு
விடியுமுன் வருவா யாகில்,
நீலவேல் விழியாய், எழு
நீயென ஒரு கால் சொன்ன
காலையே எழுந்தி ருந்து
கடிநகர் கடிந்து போனாள்.

## அருஞ்சொற்பொருள்

குழல் – கூந்தல், ஒரு கால் – ஒரு தடவை, சொன்ன காலையே – சொன்ன பொழுதே, கடிநகர் – காவல் மிகுந்த நகர்.

## தெளிவுரை

(தன் மகன் இறந்த செய்தியை மறையோனிடம்) மாலை அணிந்த கூந்தலை உடைய சந்திரமதி கூறியவுடன் மறையவன் மனம் ஒத்து – இங்கு வீட்டு வேலைகள் மிகுதியாக உள்ளன; (எனவே) நீ பொழுது விடிவதற்குள் வருவதாக இருந்தால் நீ மலரும் வேலும் போன்ற விழிகளை உடையவளே! நீ செல்க என்று ஒருமுறை சொன்னான். உடனே சந்திரமதி எழுந்து காவல் மிகுந்த நகரத்தைக் கடந்து சென்றாள்.

## இலக்கணக் குறிப்பு

வேல்விழி – உவமைத்தொகை; எழு – ஏவல் வினைமுற்று; மடி – உரிச்சொல்.

## இறந்த மகனைக் காணல்

4) ஓடினாள்; உள்ளம் எல்லாம்
உருகினாள்; கருகி மேனி
வாடினாள்; விறகு வைத்த
வடத்தினுக் கருகே வந்தாள்.
நாடினாள்; கழுகும் பேயும்
நரிகளும் குறளும் துன்றிக்
கூடிய குழுவின் நாப்பண்
குமாரனைச் சென்று கண்டாள்.

### அருஞ்சொற்பொருள்

மேனி – உடம்பு; வடத்தினுக்கு – ஆலமரத்திற்கு; நாடினாள் – (விரும்பித்) தேடினாள்; குறள் – (குட்டிப்) பேள்கள்; துன்றி – நெருங்கி; குழு – கூட்டம்; நாப்பண் – நடுவிலே.

### தெளிவுரை

(சந்திரமதி) ஓடினாள், மனம் முழுவதும் உருகினாள், உடம்பு முழுவதும் கருகி வாடினாள். விறகு வைத்திருந்த ஆலமரத்துக்கு அருகே வந்தாள். தன் மகன் உடலைத் தேடினாள் (பிணம் தின்னக் காத்திருக்கும்) கழுகுகளும், பேய்களும், நரிகளும், குட்டிப்பேய்களும் கூட்டமாக இருந்த இடத்தின் நடுவிலே இறந்த மகனைச் சென்று பார்த்தாள்.

### இலக்கணக் குறிப்பு

சென்று – வினையெச்சம் ; கண்டாள் – பெண்பால் வினைமுற்று

## சந்திரமதி புலம்பல்

5) பனியால் நனைந்து, வெயிலால் உலர்ந்து,
பசியால் அலைந்தும் உலவா
அனியா யவெங்கள் அரசன் இறந்த
அதிபா லம்பன்கொல் அறியேன்!
தனியே கிடந்து விட நோய் செறிந்து
தரைமீது துருண்ட மகனே
இனியா ரைநம்பி உயிர்வாழ் வன் என்றன்
இறையோ னும்யானும் அவமே?

**அருஞ்சொற்பொருள்**

உலர்ந்து – காய்ந்து; உலவா – இறவாமல்; அநியாயம் – கொடுமை; அரவு – பாம்பு; விடம் – நஞ்சு; செறிந்து – மிகுந்து; இறையோன் – தலைவன்(மன்னன்).

**தெளிவுரை**

(கூடியிருந்த கழுகு முதலியன வெகுண்டு ஓடும்படி சந்திரமதி பிணத்தின் மேல் விழுந்து கதறி அழுது) "பனியினால் நனைந்து வெயிலினால் காய்ந்து, பசியால் வருந்தியும் சாகாமல் கொடிய கண்களோடு கூடிய பாம்பினால் இறந்த பெரும்பாவம் யார்தோ யான் அறியேன் தனியிடத்தே கிடந்து விடம் மிகுதியாகி, தரைமீது உருண்டு இறந்த மகனே! என் தலைவனும் நானும் இனி யாரை நம்பி உயிர் வாழ்வோம்" என்று புலம்பினாள். இது இயற்கைச் சாவு அன்று; இடையே வந்த சாவு காரணம் அறியேன் என்பது கருத்து)

**இலக்கணக் குறிப்பு**

நனைந்து – வினையெச்சம்; வெங்கண் – பண்புத்தொகை; வாழ்வம் – தன்மை பன்மை வினைமுற்று.

6) செங்கோல் அறத்தின் முறையே செலுத்து
திறலோன் எவர்க்கும் உரவோன்
வெங்கோ பயானை விறன் மன்னன் நம்மை
விடுவிக் களண்ணரி வருநாள்
பங்தக ருகத்து மலர்போல் விளங்கு
வதனா! மகிழ்ந்த பரிவால்,
"எங்கே என் ஆசை மகன்? என் றுரைக்கில்
எதிரே துசொல்வன் மகனே!

**அருஞ்சொற்பொருள்**

திறலோன், உரவோன் – வலிமை உடைய அரிச்சந்திரன், விறல் – வலிமை; பரிவு – அன்பு; பங்கேருகத்து மலர் – தாமரை மலர்; வதனா – முகத்தை உடையவனே.

**தெளிவுரை**

"தாமரை மலர்மேல் விளங்கும் முகத்தை உடைய மகனே! செங்கோல் ஆட்சியை அறநெறிப்படியே செலுத்தும் திறன் உடையவனும், கொடிய கோபம்

கொண்ட யானை (போன்ற) வலிமை உடையவனும், மன்னனும் ஆகிய உன்தந்தை நம்மை விடுவிக்கவரும் நாளில், மகிழ்ந்த அன்போடு என்னுடைய ஆசைமகள் எங்கே என்று கேட்டால், எதிர்மொழி பதில் என்ன கூறுவேன்!'' (என்று புலம்பினாள்).

('செங்கோல் அறத்தின் ...... விறலி மன்னன்' என்பது அவன் நீதியையும், அறிவையும், வெற்றியையும் விளக்குகின்றது)

## இலக்கணக் குறிப்பு

செங்கோல் – பண்புத்தொகை; பங்கேருகத்து மலர்போல் – உவமையணி.

7) "மறைநீ தியற்ற புறநா டழித்து
வருசே னை ஆள்வ தறியேம்;
அனைவநீ திமுற்றும் உணரா அமைச்சே
அணிவா யில்வைத்தும் அறியேம்;
குறையே இழைத்து வினையே விளைத்த
குடிவைத் திருத்தும் அறியேம்;
இறையே! தவத்தின் விளைவே! எமக்கும்
இதுவோ விதித்த விதியே.

## அருஞ்சொற்பொருள்

மறைநீதி – மறைநூல் கூறும் அறம்; புறநாடு – அயல்நாடு; முற்றும் – முழுவதும்; அணிவாயில் – அழகமைந்த அரண்மனை வாயில்; குடி – குடிமக்கள்.

## தெளிவுரை

""தவத்தின் பயனாய் விளங்கும் கடவுளே! மறைநூல் சொல்லும் முறைப்படி நடக்கின்ற அயல்நாட்டை அழித்துவரும் படையை வைத்து எங்களுக்கு அரசாளத் தெரியாது; மறைநூல் கூறும் நீதி முறைகளை முழுவதும் அறியாத அமைச்சர்களை எங்கள் அரண்மனையில் வைத்துக் கொள்ளமாட்டோம்; குற்றங்களைச் செய்து பாவங்களைத் தேடிய குடிமக்களை எங்கள் நாட்டில் குடியிருக்குமாறு செய்யமாட்டோம்; (அப்படியிருந்தும்) எங்களுக்கு இத்தீவினையே நீ செய்தது முறையோ?'' (என்று கதறினாள்).

## இலக்கணக் குறிப்பு

வருசேனை – வினைத்தொகை; அறியேம் – தன்மைப் பன்மை வினைமுற்று.

## பயிற்சி வினாக்கள்

1) அரிச்சந்திர புராணம் – குறிப்பு வரைக.

2) மகன் இறந்ததைச் சந்திரமதி எவ்வாறு அறிந்தாள்?

3) சந்திரமதி தன் மகன் இறந்த இடம் யாதென அறிந்தாள்?

4) சந்திரமதி மறையோனிடம் விடை கேட்டபோது, அவன் யாது கூறினான்?

5) சந்திரமதி தன் மகனை எவ்விடத்தில் கண்டாள்?

6) இறந்த மகனைக் கண்டு சந்திரமதி எவ்வாறு புலம்பினாள்?

## பிரித்தெழுதுக.

மகனொங்கே, வழியினிற்கும், மிகவுண்டு, பணியாளணைந்து; விறன் மன்னன்.

## இலக்கணக் குறிப்பு எழுதுக.

வேல்விழி, கடிநகர், வெங்கண், வாழ்வும், வருசேனை.

# பாடம் 11
# பல்சுவைப் பகுதி

## 1. புறநானூறு

கடைச்சங்ககாலத்தில் விளங்கிய புலவர் பெருமக்களும் புரவலர்களும் புறப்பொருள் பற்றிப் பாடிய நானூறு செய்யுட்களை உடைய நூல் புறநானூறு என்பது. இது கடைச்சங்க நூல்களுள் எட்டுத் தொகையைச் சேர்ந்தது.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன் ஒரு காலத்தில் வடநாடு சென்று அங்கிருந்த ஆரிய மன்னரது படையை வென்றவன். இவன் கற்றோர் பால்மிக்க மதிப்புடையவன் என்பதும் கற்றலையே பெரும்பயனாகக் கொண்டவன் என்பதும் இவன் பாடியுள்ள கீழ்வரும் பாடலால் விளங்கும்.

உற்றுழி – உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னா(து) அவருள்
அறிவுடை யோனா(று) அரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே (1)

### தெளிவுரை

பிறப்பால் ஒரு தன்மையராகி ஒரு தாய் வயிற்றுப் பிறந்தவர்களுள்ளும் கற்ற கல்விச் சிறப்பால் தாயும் மனம் வேறுபடுவாள்; ஒரு குடியின் கண் பிறந்த பல்லோருள்ளும் மூத்தோன் வருக என்று சொல்லாமல் அக்குடியினருள் அறிவுடையோன் சென்ற வழியிலேயே அரசன் செல்வான்; வேற்றுமை தெரியப்பட்ட நான்கு குலங்களுக்குள்ளும் கீழ்க்குலத்தில் பிறந்தவன் ஒருவன் கல்வி கற்பனாயின் மேற்குலத்தில் பிறந்தவனும் இவன் கீழ்க்குலத்தவன் என்று பாராது கல்வியின் பொருட்டு அவனிடத்தே சென்று பணிந்திருப்பான்; ஆதலால் தன் ஆசிரியர்க்கு ஒரு துன்பம் உண்டானவிடத்து அதனைத் தீர்ப்பதற்கு உதவி

புரிந்தும், மிக்க பொருளைக் கொடுத்தும் வழிபட்டு நிற்றலை வெறுக்காமல் கற்றல் ஒருவனுக்கு அழகாகும்.

உறுபொருள் – மிக்க பொருள் பிற்றைநிலை – வழிபாட்டு நிலைமை முனியாது – வெறுக்காமல்; திரியும் – வேறுபடும்; ஆறு – வழி.

**விளக்கம்**

வேற்றுமை தெரிந்த நாற்பால் உலகில் பிறப்பினால் உயர்வு, தாழ்வு என்னும் வேறுபாடு கொள்கின்ற நான்கு குலங்கள்; அவையாவன; அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்.

உற்றுழி உதவுதல் – எல்லோர்க்கும் பொதுவாக அறம் ஆதலின் அதனை முதலிலும் உறுபொருள் கொடுத்தல் செல்வம் உடையவர்களுக்கே இயல்வது ஆதலின், அச்சிறப்புப் பற்றி அதனைப் பின்வைத்தும் கூறினார் என்க.

பெற்ற தாய்க்குத் தன் வயிற்றில் பிறந்த பிள்ளை எத்துணை அழகற்றிருப்பினும் மனவெறுப்பு உண்டாகாது; அத்தகைய தாயும் தன் மகன் கல்வி இல்லாமையால் கடையவன் ஆவான் என்பது காண அருவருப்புக் கொள்வாள் என்பதையும் தாயும் தன்மனம் திரியும் என்றார்.

**இலக்கணம்**

உற்றுழி – உற்ற + உழி; உறுபொருள் – உரிச்சொற்றொடர்; கற்றல் – தொழிற்பெயர்; என்னாது – எதிர்மறை வினை எச்சம்; கொடுத்தும் – உயர்வு சிறப்பு உம்மைகள்; முனியாது – எதிர்மறை வினை எச்சம்; திரியும் – செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று; வருக – வியங்கோள் வினைமுற்று.

## 2. திவ்வியப்பிரபந்தம்

திவ்யப் பிரபந்தம் இது வைணவர்களின் தமிழ் மறையாக விளங்குகிறது. திவ்வியம் – தூய்மை; பிரபந்தம் திரட்டு அல்லது தொகுப்பு "திருமாலைக் குறித்துப் பாடிய (தூய) பாடல்களின் தொகுப்பு" என்பது இதன் பொருளாகும். அந்நூல் நாலாயிரம் பாடல்களைக் கொண்டது. ஆதலின், இது நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் எனவும் வழங்கும். முதலாயிரம், பெரிய திருமொழி, இயற்பா, திருவாய்மொழி என்னும் நான்கு பகுதிகளைக் கொண்டது. இந்நூலைப் பாடியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள் ஆவர். அப்பன்னிருவருள், நம்மாழ்வர் பாடிய

திருவாய் மொழிச் செய்யுளும் திருமங்கை ஆழ்வார் பாடிய பெரிய திருமொழிச் செய்யுளும் நமக்குப் பாடமாக அமைந்துள்ளது.

## 8. திருவாய்மொழி

### ஆசிரியர்

ஆசிரியர் – நம்மாழ்வார்; இயற்பெயர் – மாறன்; பெற்றோர் – காரியார் உடைய நங்கையார்; பிறப்பிடம் – பாண்டி நாட்டிலுள்ள திருக்குருகூர்; இவரது சிறப்புப் பெயர்கள் – சடகோபர்; பராங்குசர்; வகுளா பரணர்; இயற்றிய நூல்கள்; திருவிருத்தம்; திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்பன; காலம் கி.பி. 8–ஆம் நூற்றாண்டு.

உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழன் மனனே (2)

### தெளிவுரை

மனமே! இறைவன் உயர்வை ஒப்பிடும்போது வேறு உயர்வு ஒன்றும் இல்லையாகும்படி உயர்ந்த நற்குணங்களை உடையவன். அறியாமையாகிய மயக்கம் நீங்கும்படி எனக்கு ஞானமாகிய நன்மையைத் தந்தருளியவன்; தளர்ச்சி இல்லாத தேவர்களுக்குத் தலைவனாக உள்ளவன்; (உயிர்களின்) துன்பங்களையெல்லாம் போக்கும் ஒளிமயமான அவனது திருவடிகளை வணங்கி அவனுக்குத் தொண்டுகள் செய்து உயர்வாயாக!

(மயர்வற – மயக்கம் நீங்க; மதி – ஞானம் அறிவு, அயர்வு அற, தளர்ச்சி இல்லாத, அமரர்கள் – தேவர்கள்; அதிபதி – தலைவன்; துயர் அறு – துன்பத்தைப் போக்கும்; சுடர்அடி – ஒளிமயமான திருவடி; எழு – உயர்வாயாக.

### விளக்கம்

ஒப்பில்லாத உயர்குணங்களை உடையவனும், ஞானமாகிய நன்மையை அருள்பவனும், அமரர்களோடு இறைவனது திருவடிகளை வணங்கி உயர்வடைய வேண்டும் என்பதாம்.

### இலக்கணம்

அற – வினை எச்சம்; உயர்நலம் – வினைத் தொகை; அமரர்கள் – அதிபதி, நான்காம் வேற்றுமைத் தொகை; தொழுது – வினையெச்சம்; மனன் – மனம் என்பதன் (ஈற்றுப்) போலி, மயவன் – வினாப்பெயர்; உயர்வு, மயர்வு, அயர்வு – தொழிற்பெயர்கள்,

## (ஆ) பெரிய திருமொழி

### ஆசிரியர்

பெயர் – திருமங்கை ஆழ்வார்

இயற்பெயர் – நீலன்; மரபு – கள்ளர்; பிறப்பிடம் – சோழ நாட்டில் திருக்குறையலூர்! இயற்றிய வேறுநூல்கள் – திவ்யப் பிரபந்தம் பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், பெரிய திருமடல், சிறிய திருமடல் முதலியன காலம் – கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு என்பர்.

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
    படுதுயர் ஆயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
    அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
    தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
    நாராயணா என்னும் நாமம்.

### தெளிவுரை

நாராயணா என்னும் திருப்பெயரானது, தன்னை ஓதுகின்றவர்களுக்கு உயர்ந்த குலத்தைக் கொடுக்கும்; சிறந்த செல்வத்தை அளிக்கும் அடியார்கள் துய்க்க வேண்டிய துன்பங்கள் எல்லாவற்றையும் தரைமட்டம் ஆக்கவிடும்; பெரிய மோட்சப் பதவியையும் கொடுக்கும்; திருமாலின் திருவருளையும், (அவருக்குத் தொண்டு செய்யும்) பெரிய பதவியையும் கொடுக்கும் இன்னமும் வேண்டிய நன்மைகள் யாவற்றையும் தரும். பெற்று வளர்க்கும் தாயைக் காட்டிலும் மிக்க நன்மையானவற்றைச் செய்யும். இவ்வாறு எல்லா நன்மைகளையும் தரக்கூடிய (நாராயணா என்னும்) திருப்பெயரை நான் கண்டுகொண்டேன்.

(நாமம் – பெயர்; நிலந்தரம் செய்யும் – அடியோடு போக்கும்; நீள் விசும்பு – பெரிய மோட்சப் பதவி; வலம் – வலிமை)

**விளக்கம்**

இதனால் நாராயணா என்னும் திருமாலின் திருப்பெயரின் பெருமை நன்கு விளங்கும் நாராயணா எனும் நாமத்தை ஒதும் அடியார்கள் இவ்வுலகத் துன்பங்களினின்றும் விடுபட்டு மோட்சப் பதவியை எய்துவர் என்பது கருத்து. படுதுயர் என்றது அனுபவித்தே தீரவேண்டிய துயரங்கள், நீள்விசும்பு – பரமபதம்.

**இலக்கணம்**

படுதுயர், நீள் விசும்பு – வினைத்தொகைகள்; பெருநிலம் – பண்புத்தொகை; குலம் தரும் இரண்டாம் வேற்றுமைத் தொகை.

பெற்று – பெறு (பெற்று + அ; பெறு – பகுதி அ – பெயரெச்ச விகுதி பகுதியில் ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டிற்று.

கண்டு – காண் (கண்) பகுதி; (கண்) விகாரம்; ட் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

கொண்டேன் – கொள் (கொண்) + ட் + ஏன்; கொள் – பகுதி; கொண் – விகாரம்; ட் – இறந்தகால இடைநிலை; ஏன் – தன்மை ஒருமை வினை முற்று விகுதி.

செய்யும் – செய் + ய் + உம்; செய் – பகுதி; ய் – சந்தி; உம் – விகுதி.

## 5. திருமறை
## (அ) தேவாரம்

**நூல்**

சைவ சமயக் குரவர்களாகிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் (அப்பர்), சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வருள் முதல் மூவர் சிவதலத்தோறும் சென்று சிவபெருமானைக் குறித்துப் பாடிய பாடல்களின் தொகுதியே தேவாரம்.

தேவாரம் – தே+வாரம்; தெய்வத்தன்மை உடைய இசைப்பாடல்கள் தே+வாரம்; இனிமை பொருந்திய பாமாலையாகிய பூமாலை.

ஈண்டு நமக்கும் பாடமாக அமைந்துள்ள தோடுடைய செவியன் என்று தொடங்கும் பாடலை இயற்றியவர் திருஞான சம்பந்தர் ஆவார்.

ஊர் - சோழநாட்டில் சீர்காழி; குலம் - அந்தனர் குலத்தில் கௌணியகோத்திரம்; பெற்றோர் சிவபாத இருதயர், பகவதியார்; காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி யென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானிவனன்றோ (4)

**தெளிவுரை**

சிவபெருமானாகிய இவன், தோடு அணிந்த காதினை உடையவன் இடப(காளை) வானத்தில் ஏறியவன். ஒப்பற்ற தூய வெண்மையான பிறை நிலவைச் சூடியவன்; சுடுகாட்டிலே விளங்குகின்ற திருநீற்றினைத் தன் திருமேனியில் பூசியவன்; என் உள்ளத்தை யான் அறியாமல் கவர்ந்து கொண்ட கள்வன்; அழகிய இதழ்களைக் கொண்ட தாமரையில் இருப்பவனாகிய நான்முகன் (பிரமன்) முன்பு தன்னை வணங்கிப் போற்ற அவனுக்கு அருள் செய்த பெருமை உடையவன் பிரமாபுரத்தில் (சீர்காழியில்) பொருந்தியவன் ஆவான்.

(செவி - காது; விடை - காளை; மதி - நிலவு; சுடலைப்பொடி - சுடுகாட்டுச் சாம்பல்; ஏடு - இதழ்; முனைநாள் - முன்னாள்; ஏத்த - வழிபட; பீடு - பெருமை; பிரமபுரம் - சீர்காழிக்கு மற்றொரு பெயர்; மேவிய - பொருந்திய; பெம்மான் - தலைவன்)

**விளக்கம்**

இப்பாடல், முதல் திருமுறையின் முதற்பகுதியில் முதற்பாடலாகும். இம்முதல் பதிகம் பிரமாபுரம் என்னும் சீர்காழியில் தோன்றியது. இங்கு இறைவர் பிரமபுரீசுவரர்; இறைவி - திருநிலை நாயகி; இப்பதிகத்தின் கருத்து நமக்குப் பாலமுதம் வழங்கியவர் இன்னார் எனத் தம் தந்தையார்க்கு அடையாளம் கூறுவதாக உள்ளது.

அறக்கடவுளைக் காளையாகப் படைத்து ஊர்தியாகக் கொண்டமையால் "படைத்தல்" தொழிலும் மதிசூடி அபயம் தந்தமையால் "காத்தல்" தொழிலும் சங்கார காலத்துச் சுடலைப்பொடி பூசியமையால் "அழித்தல்" தொழிலும், உள்ளங்கவர் கள்ளத்தன்மையால் "அருளல்" தொழிலும் ஆகிய ஐந்தொழில் உடையவன் இறைவன் என்பதை இப்பாடல் குறிப்பதை உணரலாம்.

சிவபாத இருதயர், மூன்று வயதான தம் மகவு ஞானசம்பந்தரை உடன் அழைத்துக்கொண்டு சென்று, மகவினை பிரமதீர்த்தக் கரையில் அமரச் செய்துவிட்டு நீராடியபோது நீருள் மூழ்கி அகமருட மந்திரத்தை ஓதுவதற்காகச் சிறிதுநேரம் நீரில் மூழ்கியிருந்தார். தந்தையைக் காணாத பிள்ளை அழவே, தோணியப்பராகிய பெருமாள் உமாதேவியாருடன் மடையின்மீது எழுந்தருளி பிள்ளைக்கு உமாதேவியைப் பாலூட்டும்படி கூறவே அவரும் அவ்வாறே செய்தார். பூசையை முடித்துக் கரையேறிய சிவபாதர் கடைவாயில் பாலொழுக நின்ற சம்பந்தரைக் கண்டு, வெகுண்டு எச்சில் மயங்க இப்பால் ஊட்டினாரைக் காட்டுக, என்று கடிந்துகொள்ள ஞானப்பால் அளித்த அம்மையாரும் தோணியப்பரும் இருந்த தோணிபாச் சிகரத்தைக் காட்டி ஞானசம்பந்தர் தோடுடைய செவியன் என அடியெடுத்துப் பதிகம் பாடினார் என்க.

## இலக்கணம்

தூவெண்மதி – பண்புத்தொகை; சூடி – வினையெச்சம்; கவர் கள்வன் – வினைத்தொகை; முனை – முன்னை என்பதன் தொகுத்தல் விகாரம்;

சூடி – சூடு + இ; சூடு – பகுதி; இ – வினையெச்சவிகுதி

பணிந்து – பணி + த்(ந்) + த் + உ; பணி – பகுதி; த் – சந்தி; ந் – விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

## (ஆ) திருவாசகம்

சைவத் திருமுறைகள் பன்னிரெண்டனுள் திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாகத் திகழ்பவை (நம் பாடப்பகுதி திருவாசகத்தில் திருச்சதகப் பகுதியைச் சார்ந்தது) திருவாசகப் பாடல்கள் பக்திச்சுவை மலிந்தவை; உள்ளத்தை உருக்குபவை, அதனாலேயே திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்னும் பழமொழி வழங்கி வருகின்றது.

## ஆசிரியர்

திருவாசக ஆசிரியர் – திருவாதவூர் என்னும் மாணிக்கவாசகர். பிறப்பிடம் பாண்டி நாட்டில் திருவாதவூர்; குலம் – அந்தணர்; தொழில் – மதுரையை ஆண்ட அரிமத்தன பாண்டியனின் அமைச்சர்; சிறப்புப்பெயர் – தென்னவன் பிரமராயன், காலம் – ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர்.

யானேயும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்?
வானேயும் பெறில் வேண்டேன்! மண்ணாள்வான் மதித்தும் இரேன்
தேனையும் மலர்க்கொன்றைச் சிவனே! எம்பெருமான் எம்
மானே உன் அருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே.

**தெளிவுரை**

நான் பிறப்பதற்கு ஒரு சிறிதும் அஞ்சமாட்டேன். ஆகையால் இறப்பதற்கும் அஞ்சமாட்டேன். விண்ணுலகம் முழுவதும் கொடுத்தாலும் அதனைப் பெற்றுக் கொள்ள விரும்ப மாட்டேன். உலகத்தை ஆளும் அரசனை மதித்தும் வாழேன், தேன் பொருந்திய கொன்றை மலர் அணிந்த சிவனே! எமது தலைவனே! பெரியோனே; உன்னோடு இரண்டறக் கலப்பதற்கு ஏதுவாய் திருவருளை அடையும் காலம் எப்போது? எப்போது? என்று எண்ணி மனம் வருந்துகிறேன்.

(அஞ்சேன் – பயப்படமாட்டேன்; வான் – விண்ணாலகம்; மண்ணாள்வான் – அரசன்; கொன்றை – மாலை)

உலகில் மனிதர்கள் இறப்பதற்கும் பின்பு பிறப்பதற்கும் அஞ்சுவர். ஆனால் பிறப்பு இறப்பு இல்லா இறைவனுக்கு அடியார்களாயிருப்பவர்கள். பிறப்பு இறப்புகளுக்கு அஞ்சமாட்டார்கள்.

"மண்ணாள்வான் மதித்தும் இரேன்" என்றது. இறைவனினும் மேம்பட்டவன் எவனும் இல்லை. அவனே மனத்தால் மதித்தற்கு உரியவன் என்பதால் என்க.

**இலக்கணம்**

அஞ்சேன், கடவேன், வேண்டேன், இரேன் – தன்மை ஒருமை எதிர்மறை வினைமுற்றுக்கள்; பெறுதான் – வினைத்தொகை; வருந்துவன – ஒருமை வினைமுற்று.

அஞ்சேன் அஞ்சு + (ஆ) + ஏன்; அஞ்சு – பகுதி; ஆ – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது; ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

வேண்டேன் · வேண்டு + (ஆ) ஏன்.

வருந்துவன் · வருந்து + வ் + அன்; வருந்து · வ் – எதிர்கால இடைநிலை; அன் – விகுதி.

## 8. அபிராமி அந்தாதி

**நூல்**

இறைவி(அபிராமி) யை வாழ்த்திய நூறு வாழ்த்துப் பாடல்கள் அந்தாதியாக அமைந்த நூல் இது. (அந்தாதி என்பது ஒரு பாட்டின் இறுதியில் உள்ள எழுத்து அசை, சீர், அடி என்னும் நான்கனுள் ஏதேனும் ஒன்று அடுத்த பாட்டிற்குத் தொடக்கமாக அமையுமாறு பாடப்பெறுவது. இந்நூலில் உள்ள நூறு பாக்களும்

அந்தாதியாக அமைந்திருந்தாலும், இறுதிப்பாடலின் இறுதிச்சீர் முதற்பாட்டு முதற்சீராக அமைந்திருத்தலும் காண்க. நமக்கு இருபாடல்கள் பாடப்பகுதி அமைந்துள்ளன.

**ஆசிரியர்**

பெயர் - அபிராமிபட்டார்; ஊர் - சோழநாட்டில் திருக்கடவூர்; குலம் - அந்தணர் (சிவநெறி); தொழில் - தஞ்சை சரபோஜி மன்னரிடத்திலே சோதிடம் சொல்லுதல்.

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடுக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே (1)

**தெளிவுரை**

(காலையில்) தோன்றுகின்ற சிவந்த இளஞாயிறும் உயர்வாகிய திலகரும் ஆராய்ச்சி உணர்வுடையோர் நன்கு மதிக்கின்ற மாணிக்க மணியும், மாது மலரும், மின்னற்கொடியும், மென்மையாகிய மணம் பொருந்திய மேனியை உடைய செந்தாமரை மணில் எழுந்தருளியிருப்பவளாகிய திருமகள் போற்றுகின்ற அபிராமி என் உயிர்த்துணையாவாள்.

(செங்கதிர் - இளஞ்சூரியன்; திலகம் - மஞ்சாடி என்னும் மலர்; கமல - இலக்குமி; மென்கடி - மென்மையாகிய மணல்; மேனி - உடல்; தேயாம் - குழப் விழுத்துணை - சிறந்த துணை)

**விளக்கம்**

அபிராமி பட்டர் அறிவு திரிந்திருந்த சமயம் சிலர் அவரை அழைத்துப் போக அரசன் முன் நிறுத்தவே அரசனும் அவர் அறிவுந்திரிந்துள்ளார் என்பதை அறிந்து அவரிடம் இன்றைய நாளின் பஞ்சாங்கத்தைக் கூறும் என்று சொன்னான். மறுநாள் அமாவாசை நாள். ஆனால் அறிவு திரிந்திருந்த பட்டர் மறுநாள் பௌர்ணமி என்று கூறிவிட்டார். அரசன் பட்டரை நோக்கி "நாளைக்குக் கதிரவன் மறைந்தது கிழக்கிலே முழுமதி தோன்றவில்லையானால், உன்னை என் வாளுக்கு இரையாக்குவேன் என்றான். பட்டர் தமது தவற்றினை எண்ணி வருந்தி அபிராமியின் தாள் போற்றி நாளைக்கு நிலவு தோன்றுமாறு வேண்டுவோம் என்று முடிவு செய்தார்; மறுநாள் காலை இறைவியைப் போற்றி பாடத் தொடங்கினார் முதற்பாட்டு, தான் "உதிக்கின்ற" என்று தொடங்கினார்.

**இலக்கணம்**

செங்கதிர், மென்கடி – பண்புத்தொகைகள்; மலர்க்கமலை – ஏழாம் வேற்றுமைத் தொகை; திலகம் – ஆகுபெயர்.

உதிக்கின்ற – உதி + க் + கின்று + அ; உதி – பகுதி; க் – சந்தி; கின்று – நிகழ்கால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி.

"தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்ப என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழ லாள் அபிராமி அன்னை கடைக்கண்களே"

**தெளிவுரை**

முகிலின் கரிய நிறத்தைத் தரும் மலர்முடித்த கூந்தலை உடைய அபிராமியினது திருக்கடைக்கண்களானவை, தம் மெய்யன்பர் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் அடியார்களுக்கே கல்வியைக் கொடுக்கும் செல்வத்தைக் கொடுக்கும்; ஒரு நாளும் சோர்வு அறியாத மனத்தைக் கொடுக்கும்; தெய்வத். தன்மை பொருந்திய பேரழகையும் கொடுக்கும், வஞ்சக மனம் இல்லாத மனைவி. மக்கள் முதலான சுற்றத்தையும் கொடுக்கும்; இவை தவிர) எல்லா நன்மைகளையும் கொடுக்கும்.

(தனம் – பொருள்; தளர்வு – அயர்வு; குழல் – கூந்தல்)

**விளக்கம்**

கனம் – நன்கு மதிப்பு அதாவது, நன்று மதிக்கப்படும் பொருள்கள் எல்லாவற்றினும் மிக நன்கு மதிக்கப்படும் பொருளாகிய வீடுபேறு.

அபிராமியானது கடைக்கண் பார்வையே மெய்யன்பர்களுக்கு இம்மை மறுமை இன்பங்களைக் கொடுக்கவல்லது என்பது கருத்து.

**இலக்கணம்**

தனம் தரும், கல்வி தரும் (முதலியன, இரண்டாம் வேற்றுமைத் தொகை; தளர்வறியா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; வஞ்சகமில்லா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; பூங்குழலாள் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை.

## பயிற்சி வினாக்கள்

சுருக்கமான விடையளிக்க.

1) கல்வியின் சிறப்புக் குறித்து ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கூறுவன யாவை?
2) திவ்வியப்பிரபந்தம் குறிப்பு வரைக.
3) இறைவன் பெருமைகளாக நம்மாழ்வார் கூறுவன யாவை?
4) நாராயணா என்னும் நாமம் தரும் நன்மைகளாகத் திருமங்கையாழ்வார் கூறுவன யாவை?
5) தேவாரம் பெயர்க் காரணம் தருக.
6) திருஞான சம்பந்தர் பற்றிக் குறிப்பெழுதுக.
7) சிவபிரானின் பெருமைகளாக ஞானசம்பந்தர் கூறுவன யாவை?
8) "தோடுடைய செவியன்" என்று தொடங்கும் பாடல் வாயிலாக இறைவனின் ஐந்தொழில்களை எவ்வாறு அறியலாம்?
9) "தோடுடைய செவியின்" என ஞானசம்பந்தர் அடியெடுத்துப் பதிகம் பாடக் காரணமாக இருந்த நிகழ்ச்சியை எழுதுக.
10) "உன் அருள்பெறும்நாள் என்று" என்று மாணிக்கவாசகர் வருந்திக் கூறுவன யாவை?
11) அபிராமி பட்டர் அந்தாதி பாடக் காரணமென்ன?
12) அபிராமியைத் தம் விழுத்துணையாகக் கருதிப் பட்டர் கூறுவது யாது?
13) அபிராமியின் கடைக்கண் பார்வையால் அடியார் பெறும் இன்பங்கள் யாவை?
14) இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

அ) "சிறப்பின பாலால் தாயுமனந்திரியும்"

ஆ) "அறிவுடையோனாறரசுஞ் செல்லும்"

இ) "நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்"

ஈ) "வானேயும் பெறில் வேண்டேன்"

15) இலக்கணக் குறிப்புத் தருக.

உறுபொருள், முனியாது, வருக, உயர்நலம், அமரர்கள், அதிபதிமனன், நீள்விசும்பு, பெருநிலம், குலம்தரும், செங்கதிர், தளர்வறியா, பூங்குழலாள்.

16) பகுபத உறுப்பிலக்கணம் தருக.

வருக, தொழுது, அளிக்கும், கண்டு, பெற்ற, குடி, பணிந்து, அஞ்சேன், வருந்துவாள்.

# பாடம் - 12
## இரண்டாம் களம்

இடம் : ஊர்ப்புறத்து ஒரு சார்
காலம் : வைகறை

(நடராஜன் அருணோதயம் கண்டு நிற்க)
(இணைக்குறள் ஆசிரியப்பா)

**நடராசன் : (தனிமொழி)**

பரிதியினுதயம் பார்க்கக் கருதில்
இவ்விளம் சாலவு மினிதே உதயம்
செவ்விதிற் கண்டுபின் செல்வோம்.
ஓவியத் தொழில்வன்லா நீவியக் கிழியல்
தீட்டுவான் புகுந்தசித்திரம், நீட்டும்
தூரியம் தொடத்தொட துலங்குதல் போல
சூரியன் பன்னிறக் கதிர்கள் தொடத்தொட
உருவு தோன்றாவண்ணம் ஒன்றாய்ச் செறிந்து
சிறிது சிறிதாயுறுப்புகள் தெளியத்
தோன்றுமித் தோற்றம் நன்றே!
குட்டைச் சேவல் கரைக்கொடி படர்ந்த அவ்
வீட்டுச் சியின் மேல் வீம்பாய் நடந்து நடந்துபின்
இருசிறையடித்து நெடுவா யங்காந்து
ஒருமுறை கூவி உழையுளார் புகழ்
உற்றுநோக் குவர்போற் கற்றுநோக் குதலும்
இருட்பகை இரவி இருவெனத் தம்மையும்
கருதிக் காய்வனோ என்றயிர்த் திருசிறைக்
கையால் மார்பிற் புடைத்துக் கலங்கி
மெய்யாம் தம்பெயர் விளம்பி வாயசம்
பதறியெத் திசையிலும் சிதறியோ டுதலும்
பன்னிறச் சிறகர்ப் பறவைத் தொடுதி
தம்மினம் தழுவிச் சூழ்ந்து வட்டமாய்
அங்கங் கிருந்து தங்கண் முறைமுறை

அஞ்சிறை யொத்தறுத் தடியா, எஞ்சலில்
இசையறி மாக்களின் ஈட்டம்போல
வசையுறு பாடல் வழங்கலும் இனிதே!
அஃ வன்! ஆஹா! அகலா வடிக்கடி
தலையும் தம்சிறை தடவி விளக்கிக்
கதுவும் காதலா ளையிட் டறைந்து
பின்புசென் றேயா தன்புயா ராட்டும்
இவ்விரு குருகுங் காதலர்
கண்டும் அவர் நிலை காணார் போல்துகிர்த்
துண்டங் கொண்டு பரலைச் சொரிந்த
பழமெனப் பாவனை பண்ணிக் கொத்தி
உழையுழை ஒதுங்கி யோடிப் போலிக்
கூச்சம் காட்டுமிக் குருகுகா தலியே
ஆடவர் காதலறை தலுந் தையலர்
கூடமாய்க் கொள்ளலும் இயல்பே போலும்!

## மனோன்மணீயம்

நூற்குறிப்பு : பாண்டிய மன்னனான சீவகனுடைய மகள் மனோன்மணியைப் பற்றிய வரலாற்றைக் கூறுவதால், இந்நூல் மனோன்மணியம் என்று அழைக்கப்படுகின்றது.

தமிழில் இலக்கியச் சிறப்பு பொருத்த இயற்றப்பட்ட நாடக நூல்களில் இம் மனோன்மணீயம் மிகச் சிறந்தது. எளிய, இனிய நடையும், கருத்துச் செறிவும் பொருள் நயமும் பொருந்திப் படிப்பவர்க்கு மகிழ்ச்சி தருவது. ஆங்கிலத்தில் "லிட்டன்பிரபு" என்பவர் இயற்றிய மறைவு வழி, (The secret way) என்ற நூலைத் தழுவித் தமிழில் எழுதப்பட்டது. "மனோன்மணியம்" எனினும் தமிழ் முதல் நூல் என்று சொல்லுமளவுக்குப் பெருமை பெற்றது. இந்நூலில் தத்துவங்களும் வருணனைகளும் உலகியல் உண்மைகளும் நிறைந்துள்ளன.

இந்நாடகம் கவிதை நடையில் அமைந்துள்ளது. நூலின் தொடக்கத்தில் பாயிரம் உள்ளது. "நீராடும் கடலுடுத்த" என்ற பாடல், இன்று தமிழக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்து என்பதை அனைவரும் அறியலாம். அந்தப்பாடல் இந்த நூலில் தான் உள்ளது. நூல் அங்கங்களும், 19 களங்களும் உடையது. 4502 அடிகளைக் கொண்டது.

நூலாசிரியர் : இந்நூலாசிரியர் பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை

ஊர் : திருவனந்தபுரத்தைச் சேர்ந்த ஆலப்புழை

பெற்றோர் : தந்தை : பெருமாள்பிள்ளை ; தாய் : மாடத்தியம்மாள்

ஆசிரியர் : கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள்

அலுவல் : திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியில் தத்துவப் பேராசிரியர்

காலம் : கி.பி. 1885 – 1897.

பிறமொழிகள்: திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சி நூல் தொகை விளக்கம் முதலியன.

நடராசன் தனிமொழி

(பொ.ரை) நடராஜன், சூரியன் உதிக்கும் காட்சியைக் கண்டு தனித்துப் பேசிக் கொள்கிறேன்.

(1–11) சூரியன் உதிப்பதைப் பார்க்கலாம் என்றால், அதற்கு இவ்விடம் மிகமிகச் சிறந்தது. எனவே, சூரியன் உதிப்பதைப் பார்த்து மகிழ்ந்த பின் திருப்புவோம்.

சிறந்த ஓவிய ஆசிரியன், ஓவியத் துணியில் வரையத் தொடங்கிய சித்திரம் தனது ஓவியக் கோலால் வரைய வரைய இச்சித்திரம் மிகவும் சிறப்பாக அமையுமல்லவா ? அது போலவே இச்சூரியனின் உதயமும், ஓவியனது உள்ளத்தில் ஒரு கருத்து உண்டு; அது பிறர்க்குப் புலனாகாது. தூரியம் (எழுதுகோல்) திரைச் சீலையில் படப்பட, அவனது கருத்து இன்னது என்பதை மற்றவரும் புரிந்து கொள்வர். அதுபோல இருட்கூட்டத்தே புலப்படாமல் கிடந்த பொருட்கள் எல்லாம் சூரியனின் கதிர்கள் படப்பட பிறர் கண்ணுக்குத் தெரியும்! ஆகா! இத்தோற்றம் மிகவும் நன்றே!

(12–15) அதோ, ஒரு வீடு! அதன் கூரைமேல் சுரைக்கொடி படர்ந்துள்ளது! அழகான கொண்டையை உடைய சேவல் ஒன்று அக்கூரை மேல் நிமிர்ந்து நடந்தது. தன் இரண்டு சிறகுகளை அடித்துக் கொண்டு தனது நீண்ட வாயைத் திறந்து, கூவி அழைக்கிறதே! அதுமட்டுமா! சுற்றுமுற்றும் தன் பார்வையைச் செலுத்துகிறது!

"இக்காட்சி, தன்னருகே உள்ளோர் சிலர் தன்வனைப் பற்றிப் புகழ்ந்து பேச அதனைக் கூர்ந்து கவனிப்பதுபோல் எனக்குத் தோன்றுகிறது!

(17–21) அதோ ஒரு காக்கை பதறியடித்துக் கொண்டு சிதறி ஓடுகிறதே ஏன் தெரியுமா? இருளுக்குப் பகைவனாக இருக்கிற சூரியன் தன் நிறத்தைக் கண்டு தன்னையும் இருள் எனக் கருதிக் காய்ந்து கொல்வானோ என்று ஐயத்தால் இரண்டு (சிறகுகளும்) கைகளால் மார்பிற் அடித்துக் கொண்டு கலங்கித் தனது உண்மைப் பெயரைக் (காக்கை) கூறியவாறு, எல்லாத் திசைகளிலும் ஓட ஆரம்பிக்கிறது!

(22–2) மற்றொரு பக்கம், பல நிறங்களைக் கொண்ட சிறகுகளையுடைய பறவைக்கூட்டம், தத்தம் இனத்தோடு சேர்ந்து, சூழ்ந்து, வட்டமாக, அங்கங்கே இருந்து வரிசை முறைப்படி, தான் ஒழுங்கு பெறச் சிறகுகளை அடித்துக் கொண்டிருக்கின்றன. அக்காட்சி குறைவு இல்லாத இசை நுட்பம் அறிந்த இசைவாணர்களின் கூட்டம் போல- எனக்குத் தோன்றுகிறது.- ஆமாம்! இவை பழிப்பு இல்லாத பாடல்களைப் பாடுவதும் நன்றாகவே உள்ளது!

(28–29) அங்கே தெரிகின்ற இரண்டு குருகுகள் (நாரைகள்) ஒன்று தன் அலகால் அடிக்கடி, செறிந்த தன் இறகால் மற்றொன்றைத் தடவிக் கொடுக்கிறது; நெருங்கிய காதலால் அதன் பின்னே சென்று இடைவிடாது அன்பால் பாராட்டுகின்றதே! ஆம்! இவ்விரண்டில் ஒன்று ஆண்! மற்றொன்று பெண், தன் பின்னே ஓடோடிவரும் ஆண் குருகைக் கொஞ்சமும் கவனிக்காமல் பெண் குருகு ஒதுங்கிப் போகிறதே! பவளத் துணுக்குப் போன்ற தன் அலகால் பால் கற்களைப் பழம் எனத் தானாகப் பாவித்துக் கொண்டு, கொத்துகின்றதே! தன் காதலனாகிய ஆண் குருகு பின்னால் ஓடிவந்து அன்பு பாராட்டியும் கவனிக்காதது போல், போலிக் கூச்சம் காட்டுகின்றதே!

ஆம்! ஆண்கள் தங்கள் காதலை வெளிப்படையாய்ச் சொல்லிவிடப் பெண்களே அவற்றைப் புதைபொருள் இரகசியமாய் வைத்திருப்பர் என்பது அவர்கட்குரிய பண்பு போலும்.

(ஆண் குருகு தன் காதலை வெளிப்படையாய் காட்டியும் பெண் குருகு, அதை அறியாததுபோல் பொய்யாகப் பாவனை செய்து ஒதுங்கிப் போவதைக்

கண்டான் நடராஜன். இப்போது அவனுக்குத் தன் செரித்தக் காதல் வாழ்க்கை நினைவில் எழுந்தது. நடராசனிடத்து வாணி நிரம்பிய காதல் கொண்டவள் எனினும் அதை வெளிப்படையாகப் புலப்படுத்த விரும்பவில்லை அவள்! அதுவே பெண்ணின் பெருமை!

## அருஞ்சொற்பொருள்

அருணோதயம் (அருண உதயம்) சூரியத் தோற்றம்

4. பரிதி – சூரியன் 3. செவ்விதின் – நன்கு 4. நீவியம் – துணி கிழி – துணி (நீவியக்கிழி என்பது ஒரு பொருள் பன்மொழி)

5. தீட்டுவான் புகுந்த – தீட்டத் தொடங்கிய

6. தூரியம் ஓவியக்கோல் – பிரஷ் (கூழ்ன்ஸ்ட்)

4–11 ஓவியன் கருத்தில் ஒரு சித்திரம் உள்ளது. அது பிறர் கண்ணுக்குத் தெரியாது தூரிகை திரைச்சீலையில் படப்பட அது பிறர் கண்ணுக்கு புலனாகிறது; அதுபோல இருட் செறிவிலே புலப்படாமல் கிடந்த பொருள்களெல்லாம் ஞாயிற்றின் கதிர்கள் படக் கண்ணுக்குத் தெரியப் புலப்படுகின்றன.

12. குட்டு – கொண்டை (ஐகாரம் சாரியை)

14. சிறை – சிறகு அங்காந்து – திறந்து

15. உழையுளார் – பக்கத்தில் இருப்போர் புகழ புகுதலால்

17. இருட்பகையாகிய இரவி

18. காய்வனோ – கோபிப்பானோ, எடுத்து – விடுவானோ, அயித்து – ஐயப்பட்டு.

19. புடைத்து – அடித்து

20. மெய்யாம் தம் பெயர் விளம்பி – உண்மையான நம் பெயரை – காக்கா (ய்) என்ற பெயரை எடுத்துச் சொல்லி வாயசம் – காகம்

17–21 இருளைக் கண்டால் சினந்து காய்பவன் சூரியன், காகத்தின் நிறம் கருப்பு. காலையில் எழும் கதிரவன் இருள் நிறம கொண்ட காகங்களையும் இருளின் திரள் என்று நினைத்து விட்டால் ஆபத்தாயிற்றே என்று காகங்கள் தம் பெயரை விளம்பரப்படுத்திப் பறக்கின்றன. ஒப்பிடுக; அங்கம் களம் வரி 1756.

22. சிறகர் – சிறகு – தொகுதி

அம் – அழகிய ஒத்தறுத்து அடியா – (தாள்) ஒழுங்கு பெற அடித்து எஞ்சல் இல் – குறையில்லாத

26. இசையறி மாக்களின் ஈட்டம் – இசைக் கலைஞர் கூட்டம்.

29. ததையும் – செறியும் 30 சதுவும் – பற்றுகின்ற

33. துதிர்த்துண்டம் – பவளத்துணுக்குப் போன்ற அலகு

38–35 பாற்கற்களைப் பழமெனப் பாவித்துக் கொண்டு, சொரிந்த – உதிர்ந்த

33–40 ஆண் குருகுகள் தங்கள் காதலை வெளிப்படையாகப் புலப்படுத்த பெண் குருகு அறியாதது போல் பொய்யாய்ப் பாவனை பண்ணி ஒதுங்கி ஒதுங்கிப் போவதைக் கண்ட நடராசனுக்குத் தம் சொந்தக் காதல் கதை நினைவு வருகிறது.

நடராசனிடத்து வாணி நிரம்பிய காதல் கொண்டவளாயினும் அதனைப் புலப்படுத்தி, விளம்பரப்படுத்தா இயல்பினள்; அது பெண்மையின் மாண்பு.

39. கூடம் மறைவு – புதை பொருள்

# பாடம் - 13
## மறுமலர்ச்சிப் பாடல்கள்

ஈண்டு நமக்குப் பாடமாக அமைந்துள்ள "அழகு" "புறா" ஆகிய இரு பாடல்களையும் புனைந்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆவார். இவரது பெற்றோர் - கனகசபை, இலக்குமி அம்மாள். இவரது இயற்பெயர் (கனக) சுப்புரத்தினம், ஊர் - புதுச்சேரி, கி.பி. 1891-1964. இவர் இயற்றிய நூல்கள் - பாரதிதாசன் கவிதைகள், குடும்பவிளக்கு, அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, சேரதாண்டவம், இசையமுது, தமிழியக்கம் முதலியன.

### அழகு

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!
 கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே மலர்களிலே, தளிர்கள் தம்மில்.
 தோட்ட இடம், எலாம் கண்ணில் தட்டுப்பட்டாள்,
மாலையிலே மேற்றிசையில் இலங்கு கின்ற
 மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்! ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
 தனில் அந்த அழகென்பாள் கவிதை தந்தாள் (1)

**தெளிவுரை**

காலையில் தோன்றும் இளஞ்சூரியனின் தோற்றத்திலும் கடல்நீர் பரப்பிலும், சூரியனது கதிர்களில் ஒளிவீசும் கடல்நீரிலும், சோலையிலும், மலர்களிலும், தளிர்களிலும், மாலைப்பொழுதில் மேற்குத் திசையில் மாணிக்கம் போல் சுடர்விடும் சூரியனின் செந்நிற ஒளியிலும், ஆலமரங்கள் வரிசையாய் வளர்ந்துள்ள சாலையிலும் அவ்வால மரங்களில் ஆலம்பழங்களைத் தின்னக்கூடியுள்ள கிளிகளின் கூட்டங்களிலும், "அழகு" எனும் பெண் தங்கியுள்ளார்; அவளைக் கண்டேன்; அவள், நான் கவிதை பாடுவதற்குரிய கருத்துக்களைத் தந்தாள்.

**அருஞ்சொற்பொருள்**

பரிதி – சூரியன்; புனல் – நீர்; தட்டுப்பட்டாள் – காணப்பட்டாள்.

**விளக்கம்**

கடல், வானம், சோலை, சாலை முதலிய இயற்கைக் காட்சிகளில் நெஞ்சைப் பறிகொடுத்த ஆசிரியர், இங்ஙனம் பாடியுள்ளார்.

**இலக்கணம்**

இளம்பரிதி – பண்புத்தொகை; மேற்றிசை - மேற்கு + திசை.

**புறா**

தாய் இரை தின்ற பின்பு
　தன்குஞ்சைக் கூட்டிற் கண்டு
வாயினைத் திறக்கும்; குஞ்சு
　தன் வாய்க்குள் வைக்கும் மூக்கை;
தாய் அருந் தியதைக் கக்கித்
　தன் குஞ்சின் குடல் நிரப்பும்;
ஓய்ந்ததும் தந்தை ஊட்டும்!
　அன்புகோர் எடுத்துக்காட்டாம்! (2)

**தெளிவுரை**

தாய்ப்புறாவானது, இரை தின்ற பின்னர், தான் வாழும் கூட்டிலுள்ள தனது குஞ்சு பசியோடிருப்பதைப் பார்த்து, கூட்டை அடைந்து, தன்னுடைய வாயைத் திறக்கும்; குஞ்சு தனது அலகினைத் தன் தாயினது வாய்க்குள்ளே வைக்கும். தாய்ப்புறா, தான் உண்ட இரையைக் கக்கி தன் குஞ்சின் வயிற்றை நிரப்பும். தாய்ப்புறா ஊட்டி முடிந்ததும், தந்தைப் புறா தன் குஞ்சிற்கு (இவ்வாறே) இரை ஊட்டும். இவ்வாறு (உணவூட்டும் செயல்) பெற்றோர் தம் மக்களிடம் கொண்டுள்ள அன்புக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

**இலக்கணம்**

திறக்கும் – வைக்கும், ஊட்டும் – செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்றுகள்; குடல் நிரப்பும் – இரண்டாம் வேற்றுமைத் தொகை.

# ஆற்றின் கதை

### ஆசிரியர்

ஆறு தன் வரலாறு கூறுவது போல அமைந்த இக்கவிதையை இயற்றியவர் கவிஞர். கா. வேழவேந்தன் ஆவார். அவருடைய வண்ணத்தொகை என்னும் கவிதை நூலில் கீழ்வரும் பாடல்கள் உள்ளன.

வேழவேந்தன் அவர்களின் இயற்பெயர் கசேந்திரன் என்பதாகும். இவர் சென்னையில் இந்து தியாலஜிகள் உயர்நிலைப்பள்ளியில் பயின்று, பின்னர் பச்சையப்பன் கல்லூரியில் மேற்படிப்பினை முடித்தார். அதன் பின்னர் சட்டக்கல்லூரியில் பயின்று வழக்கறிஞர் பட்டம் பெற்றார். இவர் சிறந்த தமிழ்ப்புலமையும், பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் உடையவர்.

மலைநாட்டு மங்கையாய்ப் பிறந்தேன்; நல்ல
　　மருதத்தின் மருமகளாய் நடந்து வந்தேன்;
சலசலவென் றேசலங்கை ஒலித்து நிற்கச்
　　சரிவுகளும் மேடுகளும் தாண்டி வந்தேன்;
விலையில்லா நுரை என்னும் ஆடைபூண்டே
　　விரைந்தோடி வந்த என்னை வழியிற்கண்ட
சிலைமாதர் இளஞ்சிறுவர் பூரிப்போடு
　　சேர்ந்தணைத்தே மகிழ்ந்தார்கள்; மகிழச் செய்தேன் (3)
வரும்வழியில் வயல் உழவர் என்னைக் கண்டார்.
　　"வா மகளே"! என மகிழ்ந்து வரவேற்றார்கள்!
இருள்சூழ்ந்த பஞ்சமெனும் இருட்டைப் போக்கும்
　　எழில்மகளே! நீ வாழ்க என்று சொன்னார்.
பரிதியெனும் தீப்பந்து சுட்டெரிக்கப்
　　பயிர்மக்கள் முகம் சுருங்கி யாடக்கண்டேன்!
இருந்திட்ட வயல்வீட்டில் நுழைந்து பார்த்தேன்.
　　எனைக்கண்ட பயிர் முகத்தில் பகைமை கண்டேன் (4)

### தெளிவுரை (3)

நான் மலைநாட்டுப் பெண்ணாகப் பிறந்தேன்; பின்னர் வயல் சூழ்ந்த நாட்டின் மருமகளாய் நடந்துவந்தேன்; சலசலவென்று சலங்க ஒலிக்க மலைச் சரிவுகளையும், மேடுகளையும் தாண்டி வந்தேன்; விலை மதிக்க முடியாத

நுரையாகிய ஆடையினை அணிந்து விரைவாக ஓடி வந்த என்னை வழியில் கண்ட அழகான பெண்களும், இளஞ்சிறுவர்களும் பூரிப்போடு வாரியணைத்து மகிழ்ந்தார்கள்; நான் அவர்களை மகிழச் செய்தேன்.

## தெளிவுரை (4)

நான் வரும் வழியில், வயலை உழுது பயிரிடும் உழவர்கள் என்னைக் கண்டு, "வா மகளே" என்று அன்போடு மகிழ்ந்து வரவேற்றார்கள் "இருள் சூழ்ந்த பஞ்சம் என்னும் கொடுமையைத் தீர்க்கும் அழகிய மகளே! நீ வாழ்க!" என்று என்னை வாழ்த்தினார்கள். சூரியனாகிய தீப்பந்து விட்டு எரிப்பதனால் பயிராகிய மக்கள் முகம் சோர்ந்து கிடப்பதை கண்டேன். வீட்டில் நுழைந்து பார்த்தேன்; என்னைக் கண்டதால் பயிர்களின் முகத்தில் பசுமையைக் கண்டேன்.

## விளக்கம்

ஆறு மலையில் தோன்றி, மலைச் சரிவுகளையும், மேடுகளையும் தாண்டி வயல் வெளியில் பாய்ந்து செழிக்க செய்வதனையே கவிஞர் இவ்வாறு உருவகமாகப் பாடியுள்ளார். இப்பாடல் உருவக அணி ஆகும்.

## இலக்கணம்

சலசல – இரட்டைக்கிளி; சிலை, மாதர் – உவமைத்தொகை; இளஞ்சிறுவர் – பண்புத்தொகை; வாழ்க – வியங்கோள் வினைமுற்று; வயல் வீடு – உருவகம்.

## தமிழ்க்குமரி

இப்பாடல்களின் ஆசிரியர் திரு. சு.து. சுப்பிரமணியயோகியார் ஆவார். தேசபக்தருள் ஒருவராகிய இவரது பெற்றோர் துரைச்சாமி, மீனாட்சி ஆவார். "தமிழ்க்குமரி", "அகல்யை", "மேரி மக்தலேனா" முதலிய கவிதைகளை இவர் பாடியுள்ளார். கூத்த நூலுக்கு உரை எழுதியுள்ளார். இவர் 1963 இல் அமரரானார்.

காவிரியின் பாய்ச்சலெல்லாம் கருப்பஞ் சோலை;
 கழனியெலாம் கதிர்முத்தும் செந்நெற் சாலை;
பூவிரியும் மதுபொழியும்; வண்டு தேடும்;
 பொய்கரெலாம் குயிலினங்கள் வதுவை கூடும்;
தாவிவரும் முகில்பார்த்து மயில்களாடும்;
 தமனியத்துப் பாறைகளில் சுனைகள் நீடும்;
பாவிரியும் கவிவாணர் புகழ்ந்து பாடும்
 பசுந்தமிழ்நாடு ஈடில்லை எந்த நாடும்; (5)

சந்தனமும் சண்பகமும் தேக்கும் பாக்கும்
 சாமை திணைப் பயிர்வகைகள் தலையைத் தூக்கும்
கொந்தளவு மாங்கனியும் தீம்ப லாவும்;
 குளிர் நறவத் தொடுகுழைந்து மதுக்கு லாவும்;
பந்தரெலாம் கிளிக்குலங்கள் கதைகள் பேசும்;
 பசியமந்த மாருதத்தின் வாடை வீசும்;
இந்துவந்து மரக்கிளைகள் ஊடு பார்க்கும்
 இளந்தமிழ் நாட்டுக்கீடெந் நாடு வாய்க்கும் (6)

**தெளிவுரை (5)**

தமிழ்நாட்டில் காவிரி பாய்வதினால் வளமுடன் விளங்கும் இடங்களிலெல்லாம் கருப்பஞ்சோலைகள் செழிப்பாக விளங்கும்; வயல்கள் எல்லாம் கதிர் முற்றிய செந்நெற் பயிரின் சாலைகளாகத் திகழும். எங்கும் மலர்கள் மலர்ந்து (மகரந்த) தேன் சொரியும். அவற்றை வண்டுகள் தேடிவரும் சோலைகளிலெல்லாம் குயிலினங்கள் கூடி மகிழும்; பரந்துவரும் மேகங்களைப் பார்த்து மயில்கள் ஆடும்; பொன்மயமான மலைப்பாறைகளில் நீர்ச்சுனைகள் நிறைந்திருக்கும். ஆதலால், கவிபாடும் கவிஞர்கள் புகழ்ந்து பாடும் பெருமை பெற்ற பசுந்தமிழ் நாட்டுக்கு எந்நாடும் ஈடாகாது.

(சாலை – சேர்த்து வைக்கும் இடம்; கழனி – வயல்; மது – தேன்; பொய்கர் – சோலை; வதுவை – திருமணம்; முகில் – மேகம்; தமனியம் – பொன்; சுனை – மலையிலுள்ள நீரூற்று; பா – பாட்டு; ஈடு – இணை)

**தெளிவுரை (6)**

சந்தனம், சண்பகம், தேக்கு, பாக்கு முதலிய மரங்களும், சாமை, திணை முதலிய பயிர்வகைகளும் தலைதூக்கிச் செழிப்பாக வளர்ந்திருக்கும். கொத்துக்

கொத்தாகக் காய்ந்துள்ள மாம்பழங்களும், இனிய பலாப்பழங்களும் குளிர்ச்சியான தேனோடு கலந்து இனிமை நிறைந்திருக்கும். பந்தல்களில் எல்லாம் கிளிக்கூட்டங்கள் உட்கார்ந்து கதை பேசிக் கொண்டிருக்கும். நிலவு வந்து மரக்கிளைகளுக்கிடையே எட்டிப் பார்க்கும். இத்தகைய என்றும் இளமை மாறாத் தமிழ்வழங்கும் நாட்டிற்கு எந்நாடு ஒப்பாகும்? (ஒரு நாடும் ஒப்பாகாது) (கொத்து – கொத்தாக; நறவம் – தேன்; மந்தமாருதம் – தென்றல்காற்று; வாடை – மணம்; இந்து – நிலவு)

## இலக்கணம் (5,6)

செந்நெல், பசுந்தமிழ் – பண்புத்தொகைகள்; வாணர் – வாழ்நர் என்பதன் மரூஉ; பந்தர் – இறுதிப்போலி; இளந்தமிழ் – பண்புத் தொகை;

## எழிலோவியம்

கீழ்வரும் பாடல்களைப் புனைந்தவர் கவிஞர் வாணிதாசன் ஆவார். இவர் பாரதிதாசனின் அடிச்சுவட்டைப் பின்பற்றியவர். இவர் உலக, நிகழ்ச்சிகள், இயற்கைத் தோற்றங்கள் முதலிய பலவற்றையும் உள்ளுர நினைத்துப் பார்த்து உளமுருகிப் பாடுவதில் சிறந்தவர். இவருக்கு பிரெஞ்சு மொழிப் புலமையும் உண்டு.

## காடு

கிடைத்தபோ துண்டு, சோறு கிடைக்காத போது சோங்கி
நடுத்தெரு வாழும் ஏழை மக்கள்போல நாளும் வானம்
கொடுத்தபோ துண்டு வெய்யில் கொளுத்தும்போதேற்றுச் சோங்கி
அடுத்தவர்க் குதவி செய்தே அழிவேற்றுக் கிடக்கும் காடே (7)

## தெளிவுரை

நடுத்தெருவையே தமது வாழ்விடமாகக் கொண்டு வாழும் ஏழை மக்கள் சோறு கிடைத்தபோது உண்டு, கிடைக்காத போது சோம்பிக் கிடக்கின்றார். அவர் போல, வானம் மழை கொடுத்தபொழுது அதனை (உறிஞ்சி) உணவாகக் கொண்டு, மழையின்றி வெய்யில் கொளுத்தும் பொழுது, அவ்வெப்பத்தை ஏற்றுச் சோம்பிக் கிடக்கும் காடானது தனக்கு வரும் அழிவினை (வருந்தாது) ஏற்றுக்கொண்டு மற்றவர்க்கு உதவி செய்கிறது.

**விளக்கம்**

தமக்கு வரும் துன்பத்தைப் பொருட்படுத்தாமல், பிறருக்கு இன்பம் வரும் வழியில் வாழ்வதே பெரியோர் இயல்பு என்பதை ஆசிரியர் இப்பாடல் வாயிலாக (மறைமுகமாக) உணர்த்துகின்றார். (இப்பாடலில் உவமை அணி வந்துள்ளது)

**நிலா**

வானிடை ஒளிப்பி ழம்பின் வட்டமோ? வெள்ளித் தட்டோ?
பானைமோர் மிதக்கும் வெண்ணெய்ப் பற்றலோ? சிறுவர்பந்தோ;
மானமே உயிராய் வாழ்ந்த வீரர்கைப் பரிசை தானோ?
தேனடை நிலவே! உன்னை வேறென்ன செப்பு வாரே;

**தெளிவுரை (8)**

வானத்தின்கண் விளங்கும் ஒளி திரண்டு வட்டமாகக் காட்சியளிக்கிறதோ; வெள்ளித் தாம்பாளமோ? பானையில் கடைந்து வைத்துள்ள மோரில் மிதக்கும் வெண்ணெய்த் திரட்சியோ? சிறுவர் விளையாடும் பந்தோ? மானமோ உயிராகக் கொண்டு வாழ்ந்த வீரர்களின் கையில் விளங்கிய கேடயமோ? தேனடை போன்ற (இனிய) நிலவே! உன்னை வேறு என்னவென்று சொல்வது?

**இலக்கணக்குறிப்பு**

வெள்ளித்தட்டு – மூன்றன் உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை; வீரர் கை – ஆறாம் வேற்றுமைத் தொகை.

## பயிற்சி வினாக்கள்

1. அழகென்பாள் எவ்வெவ்விடங்களில் இருந்து தமக்குக் கவிதை தந்ததாகப் பாரதிதாசனார் கூறுகின்றார்.
2. அன்புக்கோர் எடுத்துக்காட்டாகப் பாரதிதாசனார் எதனைக் குறிப்பிடுகின்றார்?
3. வேழவேந்தன் அவர்கள் கூறும் ஆற்றின் கதை யாது?
4. "தமிழ்நாட்டுக்கு ஈடில்லை எந்த நாடும்" என்று யோகியார் கூறக் காரணமென்ன?
5. காட்டின் இயல்பினை வாணிதாசனார் எவ்வாறு கூறுகிறார்?
6. நிலவின் எழில் கண்டு வாணிதாசனார் யாது நவில்கின்றார்?

# பாடம் - 14

## 1. பெற்றோர் பேணல்

**திரு. வி. கலியாண சுந்தரனார்**

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஅ ரெனின்?"

என்றார் திருவள்ளுவர். கல்வியின் பயன் கடவுளைத் தொழுவது என்பது மறைமொழியின் கருத்து அவரை எப்படித் தொழுவது?

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

முதன் முதல் காணும் கடவுளாய்க் காட்சி அளிப்பவர் நம்மை ஈன்ற தாய் தந்தையர். அவர் வழியே பின்னே முயற்சியால் யாண்டுமுள்ள இறைவனை வழிபடுதல் கூடும். இக்கருத்துப் பற்றியே சான்றோர், "தந்தை தாய்ப்பேண்" என்று கூறினார்.

தாய் : தாய் தந்தை என்னும் இருவருள் தாயே சிறந்தவள். கடவுள் அன்பிற்கு அடுத்தபடியில் நிற்பது தாயன்பே. "ஒன்றாளி னென்ன கடவுளுமில்" என்றார் ஒரு பெரியார். "விளையும் பயிர் முளையில் தெரியும்" என்பது பழமொழி. காந்தியடிகளின் இளமை வாழ்வு, பின்னே அவரது பெருவாழ்விற்குக் கால்கொண்டது. காந்தி அடிகள் ஈன்ற அன்னையாரைத் தெய்வமாகவும், அவர் மொழியை மறை மொழியாகவும் போற்றி வந்தார். தமக்குத் தவறு என்று தோன்றும் ஒன்று. தாயாருக்கு அவ்வாறு தோன்றாதொழியுமேல் அடிகள் தாய்மைச் சொல்வழி, நிற்கவே ஒருப்படுதல் வழக்கம்.

அன்னையார் உள்ளம் புண்படும் வழியில் அடிகள் நடந்ததில்லை. காந்தியடிகள் ஈன்றார் சொல்லுக்கு என்றும், எங்கும் கட்டுப்பட்டு நடந்து வந்தார் என்பதை வலியுறுத்த அவரது வாழ்வில் சில நிகழ்ச்சிகளை ஈண்டு எடுத்துக்காட்டுகிறேன்.

## புலாலும் அன்னையாரும்

காந்தியடிகள் குலம், புலால் உண்ணாத பெருமை வாய்ந்தது. அடிகளுக்கும் புலாலின் சுவை தெரியாது. நண்பன் ஒருவன் "புலால்" உட்கொள்வதால் வெள்ளைக்காரர்கள் பருத்து உயர்ந்து திடமாய் இருக்கின்றனர் அத்திடங்கொண்டு அவர் நமது நாட்டைம் பற்றிக் கொண்டனர். அவரைத் துரத்தி சுயராச்சியம் பெறவேண்டுமானால் அவரைப் போல புலால் உணவு உண்டு கொழுத்தல், வேண்டும் என்று நாளடைவில் அடிகட்கு அறிவுறுத்தி அவரை மயக்கிப் புலால் உண்ணும்படி செய்தான். காந்தியடிகளும் "சுவை கருதிப் புலால் உண்டேனில்லை". சுயராச்சியங் கருதியுண்டேன் என்று எழுதியிருக்கின்றார் மாலை வேளைகளில் சிறுவர்களோடு சேர்ந்து புலால் உணவு விலாப்புடைக்கக் கொள்ளுவதால் வீட்டில் அடிகள் அடிக்கடி இரவு உணவு கொள்ளா தொழிந்தார் அவ்வப்போது அவர் அன்னையார் ஏன் சாப்பாடு வேண்டாம் என்று மறுக்கிறாய்? என்று கேட்கும் வேளையில் "அம்மா எனக்கு பசியில்லை" என்று நம் அடிகளார் உரைப்பாராம். இப்பொய்யுரை அடிக்கடி மனத்தை கொத்திக் கொன்றது. அந்தோ பொல்லாப் புலால் உணவு ஈன்றார் மாட்டும் பொய் கூறத் தூண்டுகிறதே! என் செய்வது! என்று அன்னையார் பால் பொய் கூற மனமெழாது புலால் உண்பதை நம் மெய்யர் நிறுத்திவிட்டார்.

## முட்டை

அடிகளார் இங்கிலாந்தில் இருந்தபோது உணவைப் பற்றிப் பல நூல்களை ஆராய்ந்தார். அவ்வாராய்ச்சியாலும், சிலர் அறிவுறுத்தலாலும் முட்டையில் உயிரில்லை என்னும் முடிவிற்கு வந்து அதை உண்ணத் தொடங்கினார். அங்கு ஊன் உண்ணாத பலரும் முட்டையை மட்டும் உண்பது வழக்கம். முட்டை உயிரற்ற பொருள் என்பது அவர் தம் கொள்கை. ஒருநாள் காந்தியடிகளுக்கு ஓர் ஐயம் தோன்றிற்று. "முட்டையில் உயிருண்டா இல்லையா"? என்பதை ஆராய்ந்து உண்மை கண்டு அதை உண்ணும் உரிமை பெற நான் யார்? முட்டையிலும் உயிருண்டு என்னும் நம்பிக்கை தாயார்க்கு உண்டு என்பது எனக்குத்தெரியும். அவர் கருத்து வழி நோக்கின், "முட்டையும் புலாலின் பாற்பட்டதே" என்று தெளிவுற்று முட்டை உண்பதை ஒழித்தார். ஈன்றவரை ஏமாற்ற அடிகளார் மனச்சான்று இடந்தரவில்லை. ஆராய்ச்சியாளர் கருத்திலும் தாயார் கருத்துக்கே அதிக மதிப்பு ஈந்தார்.

## தந்தையாரிடம் அன்பு

அடிகளார் தம் தந்தையாரிடம் அன்பு பூண்டு அவரை வழிபடுவதுண்டு. அவர் தந்தையார்க்குப் பல திறப் பணிவிடைகள் செய்வார். தந்தையார் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் கிடந்தபோது அடிகளார் தந்தையார்க்குக் கை,கால் பிடித்தல் முதலிய தொண்டுகளை அன்புடன் நிகழ்த்தி வந்ததை அவரது வரலாறு அறிவிக்கின்றது. அடிகளார் தந்தையாரை இளமையில் தெய்வமெனப் போற்றினார் என்பதற்கு ஈண்டொரு நிகழ்ச்சியை எடுத்துக் காட்டுவதே சாலும்.

## சுருட்டும் திருட்டும்

தீ நட்புக் காரணமாக அடிகளார் இளமையில் சுருட்டுக் குடிக்கப் பயின்றார். சுருட்டுக்குக் காசு கிட்டுவதில்லை. வேலைக்காரன் காசை அடிகள் திருடுவது வழக்கம். ஒருமுறை அவர் தம் உடன்பிறந்தார் கைக்காப்பில் ஒருசிறு பொற்றுண்டு வெட்டி விற்றுக் கடனடைந்தார். இன்னோரன்ன மறச் செயல்கள் நிகழ்த்தியபோதெல்லாம் அடிகளாரை மனச்சான்று ஒறுத்துக் கொண்டே வந்தது. நன்மனமுடையோர் சிறுகுற்றமிழைப்பினும், அவர் மனமே அவரை ஒறுக்கும். அவ்வொறுத்தலைப் பொருட்படுத்தாது வாழின், மனிதன் நாளடைவில் இருகால் விலங்காவான்.

## முறையீடு

காந்தியடிகளார் குற்றம் குறித்து வருந்தி முடிவில் அக்குற்றத்தைத தந்தையார் பால் முறையிட்டே தீரல் வேண்டுமென்று ஒரு கடிதத்தில் பொறித்துத் தந்தையாரிடம் தந்தார். தந்தையார் அது கண்டு கண்ணீர் உகுப்பதை அடிகள் நோக்கித் தாமும் கண்ணீருங் கம்பலையுமானார். அதைப்பற்றி அடிகளார் தமது "சத்தியசோதனை" என்னும் நூலில், "தந்தையாரிடம் கடிதத்தைக் கொடுத்தபோது" எனது உடல் நடுங்கிற்று. அவர் கடிதத்தைப் படித்தபோது அவர் சிறிதுநேரம் கண்ணை மூடிச் சிந்தனையில் இருந்தார்; பின்னர் விழித்துக் கடிதத்தைக் கிழித்து எறிந்தார். அக்காட்சி எனது மனதையும் உருக்கிற்று. அவ்வன்பு நிலை அனுபவித்தவர்களுக்கன்றோ தெரியும். அன்று இந்நிகழ்ச்சியின் மூலம் தந்தையாரின் அன்பைக் கண்டேன். இன்று அன்கண் அகிம்சையின் நுட்பத்தைக் காண்கின்றேன். மன்னிக்கும் தன்மை இயல்பாக என் தந்தையார் பால் ஏற்பட்டதொன்று. அவர் சினந்துட கடுஞ்சொல் எண்ணினேன்: நெற்றியில் அடித்துக் கொள்வாரென்று எதிர்பாாததேன. அவரது பொறுமை

எனக்கு வியப்பூட்டியது! இதற்குக் காரணம் யாது? யான் எனது குற்றத்தை கரவாது வெளியிடுவதோடு மீண்டும் அக்குற்றம் இழைப்பதில்லை என்று கூறுவது கழுவாய் தேடுவதாகும்' என்று எழுதியிருக்கிறார்.

இவ்வுரைகளால் காந்தியடிகள் தந்தையார்பால் கொண்டிருந்த அன்பு விளங்குகின்றது.

'அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்'

என்னும் முதுமொழிக்கு காந்தியடிகளார் வாழ்வு ஓர் இலக்கியமாய் மிளிர்வதை அன்பர்கள் உணர்வார்களாக.

காந்தியடிகள் வாழ்விலுள்ள இச்சில குறிப்புகளும் மனிதருக்குட் பெருந்துணை செய்வனவாம்.

## அருஞ்சொற்பொருள்

'கற்றதனால் எனின்' (குறள்) – தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனை வணங்காவிட்டால் கற்றதனால் ஆகும் பயன்தான் என்ன? மறைமொழி – வேதவாக்கு; ஈன்ற – பெற்ற; பின்னை – பின்னர்; யாண்டுமுள்ள – எங்கும் (நிறைந்து) உள்ள; ஈன்றாளின் என்று கடவுளுமில்லை – தாயைவிடச் சிறந்த கடவுள் இல்லை; கால்கொண்டது – அடிப்படையாக அமைந்தது; தோன்றா தொழியுமேல் – தோன்றவில்லையெனில்; ஒருப்படுதல் – சம்மதித்தல்; புண்படும் – வருந்தும்; ஈண்டு – இங்கு; புலால் – மாமிசம்; ஐயம் – சந்தேகம்; ஈந்தார் – கொடுத்தார்; ஒறுத்து – கண்டித்து; பொறித்து எழுதி; மறச்செயல் – பாவச்செயல்; உகுப்பது – சிந்துவது; கம்பலை – விம்முதல் ஒலி; மாசு – குற்றம்; கழுவாய் – பிராயச்சித்தம் மிளிர்வது – ஒளிர்வது.

## வினாக்கள்

1. திருவள்ளுவர் கற்றதனாலாகிய பயனாக எதனைக் கூறுகிறார்?
2. தாய் சிறந்தவள் என்பதை எவ்வாறு அறியலாம்?
3. புலால் உண்ணும் பழக்கம் காந்தி அடிகளார்க்கு எவ்வாறு உண்டாயிற்று? அவர் பின்னர் அதை ஏன் விடுத்தார்?
4. முட்டை உண்பது குறித்து காந்தி அடிகளாரின் கருத்து யாது?
5. எந்த மனிதன் நாளடைவில் இருகால் விலங்காவான்?
6. காந்தியார் தம் தந்தையாரைத் தெய்வமெனப் போற்றினார் என்பதற்கு சான்று தருக.

# 2. சங்ககால மகளிர்

## புலவர் நா. நாகசுந்தரம்

இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமது நாட்டில் மகளிர் நிலை எவ்வாறு இருந்தது என்பதை அறியும் யாவரும் அந்நிலைக்காக வருந்துவர். மகளிர் உரிமையற்றவராய், உணவு சமைக்கும் ஒரு தொழிலையே செய்ய வேண்டியவராய், கல்வியும் பெற இயலாமல் வாழ்ந்தனர். ஆனால் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்ககாலத்தில் மங்கையர் நிலை அவ்வாறு இல்லை.

திருமணம் செய்து கொள்ளும் தலைவனும் தலைவியும் கல்வியறிவு ஒழுக்கங்களிலும் ஒத்திருக்க வேண்டும் என்று தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கண நூல் இயம்புகிறது. மகளிர் கல்வியில் சிறந்திருந்தனர். காலத்தை வெல்லும் கவிதை புனைய வல்லவராயும் திகழ்ந்தனர். அரசர்கள் ஆண்பாற் புலவரைப் போலவே பெண்பாற் புலவரையும் வரவேற்றுச் சிறப்பித்தனர்.

நச்செள்ளையார் என்னும் பெண்பாற்புலவர் இருந்தனர். காக்கையைப் பற்றிய அழகிய பாடலை பாடியதால் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் என வழங்கப்பட்டார். அவர் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்னும் அரசனைப் பற்றிப் பத்துப் பாடல்களைப் பாடினார். அப்பாடல்களை கேட்டு மகிழ்ந்த சேரலாதன் நச்செள்ளையாருக்கு நூறாயிரம் பொற்காசுகள் பரிசளித்தான். அவர் அணிகலன்கள் செய்து கொள்வதற்காகப் பெரும் பொன்னும் அளித்துச் சிறப்பித்தான். நச்செள்ளையார் சேரலாதனைப் பற்றிப் பாடிய பத்துப் பாடல்கள் 'பதிற்றுப்பத்து' என்னும் சங்க நூலில் இடம் பெற்றுள்ளன.

சங்ககாலம் வீரம் செறிந்த காலம் அக்காலத்து மகளிரும் மறம் மிகுந்தவராய் இருந்தனர். சங்க காலத்தாய் ஒருத்தி மகனைப் பெற்றளித்தல் எனது முதற் "கடமை" என்று கூறினாள்! சான்றோனாக்குதல் தந்தையாரின் கடமை என்று கூறி அம்மகளின் தலையாய கடமை என்னைக் காப்பதும், தந்தையைக் காப்பதும், என்று கூறாமல் போரின் கண் களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக்கடனே என்று கூறினான், நாட்டைக் காப்பது மகனது கடமை என்று கூறும் தாயின் வீரப்பண்பு தலைசிறந்ததன்றோ?

தன் நாட்டை காக்க முதல் நாள் கடந்த போரில் ஒரு பெண்ணின் தந்தை பகைவரது யானையைக் கொன்ற இறந்துவிட்டான். மறுநாள் நடந்த போரில்

அவளுடைய கணவன் பகைப் படையைத் தடுத்து போரிட்டு மாண்டான். மூன்றாளம் நாளும் போர் தொடர்ந்தது. அப்பெண்ணோ, வீரவுணர்வு மிகத் தன் ஒரே மகனான சிறுவனிடம் வேலினைக் கொடுத்து போருக்குச் செல் என்று கூறி அனுப்பி வைத்தாள். அப்பெண்ணின் வீரத்தை எவ்வாறு புகழ்வது.

சங்க காலப் பெண்பாற் புலவரான ஔவையார் அரசியல் பணியிலும் ஆடவரைப்போல ஈடுபட்டு புகழ் ஈட்டினார். தகடூர் அரசன் அதியமானுக்கும், தொண்டைநாட்டு மன்னன் தொண்டமானுக்கும் பகைமை ஏற்பட்டது. அதனால் போர் நிகழக்கூடும் என்பதையும் அப்போரில் ஆயிரக்கணக்கானவர் உயிர் துறக்க நேரிடும் என்பதையும் உணர்ந்த அதியமான் அப்போரைத் தடுக்க விரும்பினான்; அதனால் தொண்டைமான் தூதுவர் ஒருவரை அனுப்பினான். அவனால் அனுப்பப்பட்ட தூதுவர் யார்? அவர், அருந்தமிழ் வல்ல ஔவையாரே, அரசனின் தூதுவராய்ச் செல்லும் அளவுக்கு அரசியலறிவு நிரம்பப் பெற்றவர் ஔவையார். அவர் போரிடும் நோக்கம் கொண்ட தொண்டைமானின் படைக்கலக் கொட்டிலை நேரிற்கண்டார். அதைப் புகழ்வது போலப்பாடி அதியமானின் ஆற்றலைக் குறிப்பாக உணர்த்தி போர் நடைபெறாது தடுத்துக் காத்தார்.

"மெல்லியலார்" எனப் புகழப்படுவர் அம்மகளிர். அம்மகளிர் சங்க காலத்தில் கலைகள் பலவற்றில் தேர்ச்சி பெற்றிருந்ததில் வியப்பில்லை. புகார் நகரத்தில் வாழ்ந்த மாதவி என்ற மங்கை நல்லாள் ஆடல் பாடல்களில் வல்லவள்! அவற்றோடு ஓவியக் கலையிலும் தேர்ச்சி பெற்றவளாய்த் திகழ்ந்தாள்.

கலையரசியாய்த் திகழ்ந்த மாதவியின் மகள் மணிமேகலை உலக வாழ்வில் பற்றற்று, உயிருக்கு உறுதி தரும் உயர்ந்த வாழ்வு பெற விழைந்து புத்த சமயத் துறவியானாள். சமய உண்மைகளை ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்த மணிமேகலை, பிறசமயத்தைச் சார்ந்த ஆடவரான சமயத்தலைவர் பலரோடு வாதிட்டு, வெற்றி பெற்றாள்; 'அமுதசுரபி' என்னும் பிச்சைப் பாத்திரத்தைக் கையில் ஏந்தி பசித்தவர்களுக்கெல்லாம் தாய்போல உணவிட்டாள்; சிறைச்சாலையையும் அறச்சாலையாக்கினாள்! அறிவிலே இமயமாய்த் திகழ்ந்த சமயவாதிகளை வென்று புத்த சமயத்தின் புகழைப் பரப்பினாள்; ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று "மணிமேகலை" காப்பியத்தின் தலைவியாகும் பேருபெற்று அழியாப் புகழையும் பெற்றாள்.

கல்வி, வீரம், அரசியலறிவு, கலைகள், சமயம் ஆகியவற்றில் சீர் பெற்றிருந்த மகளிர், தமக்கே உரிய இல்வாழ்க்கை, விருந்தோம்பல் போன்றவற்றிலும் தலைசிறந்து விளங்கினர்.

## அருஞ்சொற்பொருள்

இற்றைக்கு – இன்றைக்கு; மகளிர் – பெண்கள்; இயலாமல் – முடியாமல்; ஏறத்தாழ – சுமார்; நிகரான – சமமான; புனைய – இயற்ற; மறம் – வீரம்; "களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" – போரில் யானையை வென்று திரும்புதல் காளைபோன்ற இளைஞனது கடமை; மாண்டான் – இறந்தான்; ஈட்டினார் – சம்பாதித்தார்; நிகழக்கூடும் – நடைபெறக்கூடும்; உயிர்துறக்க – இறக்க; படைக்கலக் கொட்டில் – ஆயுதங்கள் வைத்துள்ள இடம்; விழைந்து – விரும்பி; ஐயந்திரிபுற – சந்தேகம் நீங்கும்படியாக; ஐம்பெருங்காப்பியங்கள் – சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பவை.

## வினாக்கள்

1. சங்க கால மகளிரின் கல்விச் சிறப்பைப் பற்றி எழுதுக.
2. அரசர் புலவர்க்குப் பெரும்பொருள் கொடுத்துச் சிறப்பித்தமைக்கு சான்று தருக.
3. சங்க கால மகளிரும் வீரத்தில் சிறந்து விளங்கினர் என்பதை எவற்றால் அறியலாம்.
4. ஔவையார் அரசியலில் ஆற்றிய அரும்பணி யாது?
5. சங்க கால மகளிர் கலை வல்லவராக விளங்கியமைக்குச் சான்று தருக.
6. மணிமேகலையின் சமயப்பணி குறித்து எழுதுக.

# பாடம் - 15
# 3. கல்வியின் பெருமை

புலவர் கி.கணபதி

செல்வங்கள் பலவாகும். அவற்றுள் தீமையில்லாத நல்ல செல்வம் கல்விச் செல்வம். இதனாலேயே கேடில் விழுச் செல்வம் என்றார். திருவள்ளுவர் மனிதனை மற்ற உயிர்களிடத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது எது? எதனையும் சிந்தித்துச் செயல்பட வைப்பது எது? நல்லது, தீயது ஆகிய வேறுபாடு உணரச்செய்வது எது? நல்லொழுக்கத்தையும் நாகரிகத்தையும் கற்றுக் கொடுப்பது எது? அதுவே அறிவு ஆறாவது அறிவு எனப்படும். அவ்வறிவுக்கு உயிர் நாடியாக நின்று அதனை இயக்கி வைக்க உதவுவது கல்வி, மக்களுக்குக் கல்வியே கண் ஆகும்.

## கல்வியின் தேவை

மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவை ஐம்பொறிகள் எனப்படும். இவ்வைந்தினுள் மிகவும் சிறப்புடையது கண் ஆகும். ஆதலால் கல்விக்கு உவமை கூறும்பொழுது கண்ணை உவமையாகக் காட்டியுள்ளனர். கண்ணனைய கல்வி , "எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்".

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு
"கண்ணுடையார் என்பவர் கற்றோர்"

என்னும் ஆன்றோர்களின் அமுதமொழிகள் கண்போலச் சிறந்தது. வாழ்க்கைக்கு உதவுவது; தேவையானது! பயனளிப்பது என்பவற்றை உணர்த்துகின்றன.

## உண்மையான கல்வி

மாணவர் கல்வியைத் தாய்மொழியின் மூலம் கற்கவேண்டும் என்பது அறிஞர் கருத்து. தாய்ப்பால் குடித்த குழந்தை வலிமையுடன் வளர்வதையும், புட்டிப்பால் குடித்த குழந்தை வலிமையின்றி வளர்வதையும் காண்கிறோம். தாய்மொழிக் கல்விதான் உண்மையான கல்வி. அறிவுக்கு உரமளிக்கும் கல்வி, பூமிக்கு அடியில் இருந்து எடுக்கும் வைரக்கற்களைப் பட்டை தீட்டி மெருகு ஏற்றினால் ஒளி வீசுகின்றன. அதுபோல அறிவு என்னும் வைரக் கல்லிற்கு கல்வியினால் மெருகேற்றினால் ஒளி வீசும். ஒவ்வொருவரிடமும் அமைந்து கிடக்கும் அறிவு ஒளியை வீசச் செய்வதுதான் உண்மையான கல்வியாகும். மேலும் ஒழுக்கமாகிய பண்பும் கல்வியால் வளரவேண்டும்.

## கல்வியின் பெருமை

கல்வி இம்மை வாழ்க்கைக்கும் மறுமை வாழ்க்கைக்கும் உறுதுணை செய்யவல்லது. ஒருவற்குக் கேட்டினைத் தராத மேலான செல்வம் கல்வியேயாகும். ஏனெனில் ஏனைய செல்வங்கள் எல்லாம் நிலையானவையல்ல. ஒரு பிறவியில் கற்கும் கல்வி ஏழு பிறவிகளிலும் தொடர்ந்து வந்து பயன் தரும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் கொடுக்கவல்லது நற்புகழைத் தேடித்தரவல்லது கவலை ஏற்படுங்கால் கைகொடுத்துக் காப்பது; பிறரால் கைப்பற்றப்படாதது; பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையாதது. தீயால் இது அழிவதில்லை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுவதில்லை; கள்வராலோ அரசராலோ, கவரப்படுவதில்லை.

## கற்பாரின் சிறப்பு

கற்றோர்க்குச் சென்ற இடமெலாம் சிறப்பு உண்டாகும். பெற்றோர்களும் கல்வி கற்றவனையே நன்கு மதிப்பர். நாட்டை ஆள்வோரின் ஆதரவு கிடைக்கும். யாவரும் வணங்கிப் போற்றும் ஏற்றம் உண்டாகும். கற்றவர்க்கு எல்லாஊரும் தம் ஊராகும். எல்லா நாடும் நம் நாடாகும். கற்றவர் வாய்மொழிக்கு என்றுமே தனிமதிப்பு உண்டு. கல்லாதவன் சொல்வது எவ்வளவு சிறப்பாக இருந்தாலும் கேட்கமாட்டார்கள். கற்றவர் வயதில் இளைஞராக இருப்பினும் அவரை உலகம் என்றும் பாராட்டி மகிழும் கற்றவராலேயே ஒரு நாடு உயர்வை அடைகிறது. கற்பார்க்கு முகத்தில் இருக்கும் கண்களே கண்கள் என்று சொல்லப்படும். கல்லாதவர் முகத்தில் இருப்பவை புண்கள் எனப்படும். கற்பவரின் கல்விகண்களோ காலங்கடந்த பொருள். நாம் கடந்த பொருள் முதலிய யாவற்றையும் உணரவல்லவை.

## கல்வி கற்கும் முறை

கல்வி கற்பதற்கும் இளமைப் பருவமே ஏற்றது. தூய பளிங்கு இளமையில் மனம் இருக்கும். மாசு படியாத தூய்மை உடையதாக இருக்கும். அப்பருவத்தில் கல்வி பயின்றால் மனதில் நன்றாகப் பதிந்து விடும் இளமையிற் கல்வி சிலைமேல் எழுத்து என்பதை அறிந்திருப்பீர்கள். கல்விப் பயிற்சியின் போது உள்ளம் ஒரே நிலையில் இருக்கவேண்டும். அங்கும் இங்கும் அலைபாயக் கூடாது. ஆர்வத்துடன் படிக்க வேண்டும். சித்திரத்தில் எழுதப்பட்ட பாவை போல ஆடாமல்

அசையாமல் இருந்து பயில வேண்டும். ஆசிரியர்க்கு வேண்டிய உதவிகள் செய்தும், வழிபாடு செய்தும் பயில வேண்டும். நல்லாசிரியர்களை நாடிச்சென்று ஐயம் திரிபு அறக்கற்க வேண்டும். கற்கும்பொழுது ஊக்கமும் உற்சாகமும் இருக்கவேண்டும். தம்முடன் படிப்பவருடன் சேர்ந்து படிக்கவேண்டும். வாழ்க்கைக்குத் தேவையானவற்றை கற்க வேண்டும். தோண்டத் தோண்ட மணற்கேணியில் நீர் சுரப்பது போன்று படிக்கப் படிக்க அறிவு வளரும் வயதாகிவிட்டதே நமக்கு என் படிப்பு என எண்ணாமல் படித்துக்கொண்டே இருக்கவேண்டும். கற்றவரைப் பிறர்க்கு எடுத்துக் கூறுவதால் மனதில் நன்றாகப் பதிந்து விடும்.

செல்வங்களுள் சிறந்து விளங்கும் கல்வினை, கண்களாக விளங்கும் கல்வியைக் கற்று அதன்படி நடக்கப் பழகுதலே சிறப்பைத் தரும். கற்றதன் பயன் தெய்வம் தொழுதலேயாகும். அறிவை வளர்த்து ஆக்கம் பலவும் தரும் கல்வியை கற்பதே மக்களின் முதற்கடமையாகும்.

### அருஞ்சொற்பொருள்

கேடில் – (கேடு+இல்) தீமை இல்லாத; விழு – மேலான, பொறி – கருவி; அனைய – போன்ற, "எண் என்ப உயிர்க்கு" திருக்குறள் எண் என்று சொல்லப்படுவன, எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இருவகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்; ஆன்றோர் – சிறந்த பெரியோர்; வலிமை இன்றி – வலிமை இல்லாமல்; உரம் – வலிமை, பண்பு – குணம்; இம்மை – இவ்வுலகம்; மறுமை – மேலுலகம்; கள்வர் – திருடர், கவர்தல் – திருடுதல், ஏற்றம் – உயர்வு; மாசு – குற்றம், சிலை – கல், ஆர்வம் – விருப்பம், ஐயம் – சந்தேகம், திரிபு – மாறுபாடு, அற – நீங்க, கேணி – கிணறு, தொழுதல் – வணங்குதல், ஆக்கம் – செல்வம், பாவை – பதுமை.

## பயிற்சி வினாக்கள்

1. அறிவுக்கு உயிர் நாடி கல்வி – விளக்குக.
2. ஆன்றோர்களின் அமுத மொழிகள் கொண்டு கல்வியின் தேவையை எழுதுக.
3. உண்மையான கல்வி எது ? விளக்கம் தருக.
4. கல்வியின் பெருமையை எழுதுக.
5. கற்றோரின் சிறப்பை விளக்கி எழுதுக.
6. கல்வி ஏற்கும் முறையினைப் பதினைந்து வரிகளில் எழுதுக.
7. கல்விச் செல்வம் பற்றி ஒன்றரைப் பக்க அளவில் ஒரு கட்டுரை எழுதுக.

# சமுதாய வாழ்க்கை

### (புலவர். மணி தி.கி. சுந்தரமூர்த்தி)

## சமுதாய வாழ்வின் தேவை

"எல்லாம் யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்" என்று பாடினார் தாயுமானவர். ஆனால், உண்பதும் உறங்குவதும், ஆகிய நன்மைகளைப் பெறுவதற்காக மனிதன் தனியே வாழாமல் சமுதாயமாக வாழவேண்டியுள்ளது. சமுதாயமாய் அமையாமல், தனித்தனியே வாழ்ந்தால் தவறாமல் உணவு கிடைக்கும் என்று நம்பிக்கைக்கும் இடமில்லை. அச்சம் இல்லாமல் உறங்காமல் என்ற அமைதிக்கும் இடமில்லை. ஆகவே எதிர்காலம் பற்றியும் உடலின் பசி முதலியன பற்றியும் சிறிதும் கவலைப்படாத துறவியர் ஒரு சிலர் தவிர மற்ற எல்லோர்க்கும் சமுதாய வாழ்வு இன்றியமையாததாய் உள்ளது. சமுதாயத்தின் சிறு பகுதியே இல்லறம் நடத்தும் குடும்பம் என்பது. இந்தக் குடும்பங்களாகிய சிறுதுளிகள் சேர்ந்தே சமுதாயம் என்னும் பெருங்கடல் அமைகிறது.

மனித சமுதாய வாழ்வுக்கும் தேனீயின் சமுதாய வாழ்வுக்கும் உள்ள ஒற்றுமைகள் வேற்றுமைகள்

தேனீ எந்தப் பூவிலிருந்தேனும் தேனை நுகர்ந்து எங்கேனும் வாழலாம். ஆனால், பூக்கள் மலராத காலத்தில் என்ன செய்வது? தேன் இல்லாத காலத்தில் எதை உண்டு வாழ்வது? மழைக்காலத்தில் எங்கே ஒதுங்குவது? இப்படிப்பட்ட இடர்பாடுகள் இருப்பதால், தேனீக்களும் சமுதாயமாய கூடி வாழ வேண்டியுள்ளது. அவற்றைப் படைத்த கடவுள், அவ்வாறு கூடி வாழும் திறமையையும் அவற்றிற்கு அளித்துள்ளது. மனிதனுக்கும் அந்தத் திறன் உள்ளது. கூடி வாழும் உணர்வோடு கடமையும் மனிதனுக்கு ஏற்பட்டுள்ளது.

தேனீக்கு அப்படி இல்லை, தேனீக்களை கூடி வாழ்வதற்கு எவ்வளவு அறிவு வேண்டுமென அவ்வளவும் ஒவ்வொரு தேனீக்கும் பிறவியிலேயே அமைந்துள்ளது. ஆதலால், தேனீக்கள் சமுதாய வாழ்வுக்காக அறிவை வளர்த்துக் கொள்ளத் தேவை இல்லை. உள்ளதே போதும் என்ற நிலையில் அவை வாழ்கின்றன மனிதன் உரிமை உடையவன். அறிவை வளர்த்துக் கொள்ளவும், வளர்த்துக் கொள்ளாது இருக்கவும் "வளர்ந்த அறிவை

பாழ்படுத்தவும், உரிமை உடையவன். உரிமை உள்ள இடத்தில் வளர்ச்சியும் இருக்கும்; குறைவும் இருக்கும். தேனீயின் சமுதாய வாழ்வில் குறை இல்லை; வளர்ச்சிக்கு இடமில்லை. வியக்கத்தக்க வகையில் குறையுண்டு; வளர்ச்சிக்கு இடம் உண்டு, போற்றத்தக்க நல்ல பகுதிகளும் உண்டு, வெறுக்கத்தக்க தீய பகுதிகளும் உண்டு. உலகம் தோன்றிய காலத்தில் தேனீக்களின் வாழ்வு எப்படி இருந்ததோ, அப்படியே இன்று உள்ளது. ஆனால் மனித சமுதாயம் ஒவ்வொரு நூற்றாண்டிலும் சில பல முன்னேற்றங்களை மாறுதல்களைப் பெற்று வளர்ந்து வருகிறது.

### சமுதாய வளர்ச்சிக்குக் கல்வி உறுதுணை

சமுதாயம் வளர்ச்சி அடைய மனிதன் பொறுப்பும் வளர்கிறது. பல துறைகளை விரிவாக்க வேண்டி நேர்கிறது. அதனாலேயே தபால்தந்தி, செய்தித்தாள், வானொலி முதலியவற்றிற்கும் உரிய அறிவும் திறனும் ஒவ்வொருவருக்கும் வேண்டுவன ஆகின்றன. பொருள் அங்கும் இங்கும் போக வேண்டிய தேவையும் ஏற்படுகின்றன. போக்குவரத்து நிதிநிலையங்கள், நாணயச் செலவாணி முறைகள் முதலியன தேவையாகின்றன. அவற்றிற்கு உரிய அறிவும் திறனும் பலருக்கும் வேண்டுவன ஆகின்றன. இவற்றைப் பற்றிய கல்வி உறுதுணை ஆகிறது.

### மனித சமுதாயத்தின் வியக்கத்தக்க வளர்ச்சி

மனித சமுதாயம் எவ்வளவு விரிவு அடைந்து விட்டது. ஊர்களின் அளவில் இருந்த அமைப்பு நாடுகளின் அளவில் வளர்ந்து, இன்று உலக அளவில் விரிவு பெற்றுள்ளது. சாதி, நிறம், மொழி முதலியன குறுக்கிட்டுப் பிரிக்க முயல்கின்றன. மொழி தவிர மற்ற எல்லாவற்றையும் கடந்து மனித சமுதாயம் உலக அளவில் விரிவு பெற்று ஒன்றாய்க் காட்சியளிக்கத் தொடங்கிவிட்டது.

தேனீ, எறும்பு முதலியனவற்றின் சமுதாயங்கள் இவ்வாறு விரிவடைய வழி இல்லை. ஒரு தோப்பில் ஒரு மரத்தில் இரண்டு தேன் கூடுகள் இருக்கும் நிலையிலும், அவை ஒன்றுபடுவதில்லை. மனித சமுதாயம் முழுவளர்ச்சியை நெருங்காத இந்நிலையிலும், உலகத்தலைவர்களும், அறிஞர்களும் ஒன்றுகூடி உலகக் குடும்பத்திற்காகப் பேச இயல்கிறது. இதுவே வியக்கத்தக்க வளர்ச்சி தான்.

## மனிதர் சமுதாயமாக அமையத் தேவையானவை

மனிதர் சமுதாயமாக அமைய இருவகைப் பண்புகள் கட்டாயமாக வேண்டும். ஒன்று தன் நன்மையை விடச் சமுதாய நன்மையைப் பெரிதாகக் கருதி நடக்கும் பண்பு. மற்றொன்று தன் உணர்ச்சிக்கு முதலிடம் தராமல் பிறர் மனம் அறிந்து நடக்கும் பண்பு, இந்த இரண்டு பண்பும் வளர வேண்டுமானால், மனிதன் வல்லவனாக இருப்பதோடு நல்லவனாகவும் வாழக்கற்றல் வேண்டும். ஆகவே, சமயக்கல்வி, ஒழுக்கக்கல்வி ஆகியவை தேவையாகின்றன. நிலநூல், வானநூல், பொருள்நூல் முதலியன சமுதாய அகவாழ்வுக்குத் தேவையாகின்றன.

இந்த இருவகைக் கல்வியும் பெற்று, ஆற்றலாலும் பண்பாலும் வளர்ந்த மனிதரின் தொகை பெருகப் பெருக மனித சமுதாயம் சீரும் சிறப்புமாக விளங்கும்.

## அருஞ்சொற்பொருள்

சமுதாயம் – மக்கள் கூட்டம், நுகர்ந்து – உட்கொண்டு

இடர்ப்பாடு – துன்பங்கள், திறன் – வலிமை, உரிமை – சுதந்திரம்

உறுதுணை – பெருந்துணை, அறநூல் – நீதிநூல்

### வினாப் பயிற்சி

1. சமுதாய வாழ்வு ஏன் தேவை?
2. மனித சமுதாய வாழ்வுக்கும், தேனீயின் சமுதாய வாழ்வுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை?
3. சமுதாய வளர்ச்சிக்குக் கல்வி உறுதுணையாகும் – விளக்குக.
4. மனித சமுதாயத்தின் வியக்கத்தக்க வளர்ச்சி யாது?
5. மனிதர் சமுதாயமாக அமையத் தேவையானவை யாவை?
6. "சமுதாய வாழ்க்கை" – ஒன்றரைப்பக்க அளவில் ஒரு கட்டுரை வரைக.

# பாடம் - 16

## 5. சீவகன்

(பேராசிரியர் ஐயன்பெருமாள் கோனார்)

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த ஏமாங்கத நாட்டில் இராசமாபுரம் என்னும் சிறந்த நகரம் இருந்தது. இதனை ஆண்டுவந்த அரசன் சச்சந்தன் என்பவன் ஆவான். அவன் தன் மாமன் மகளான இளமையும் அழகும் கொண்ட விசயை என்பாளை மறந்து அவளை விட்டுப்பிரியாது கூடி வாழ்ந்து வந்தான். அதனால், அவன் அரசாளும் தன் கடமையை அறவே மறந்தான்.

சச்சந்தனுக்குத் தலைமை அமைச்சர் மூவர் இருந்தனர்; அவர்கள் நிமித்திகன், உருத்திரதத்தன், கட்டியங்காரன் என்னும் பெயரினர் ஆவர். அவர்களுள் கட்டியங்காரன் என்பவன் அரசனுக்க அருகிருந்தே எப்படியாவது அரசாட்சியைக் கவர்ந்து கொள்ள வேண்டுமென்றே தீய ஆசை கொண்டிருந்தான்.

ஒருநாள் விடியற்காலையில் விசயை தீய கனவொன்று கண்டாள். அதனால் அஞ்சிய அவள் அருக தேவனை வழிபட்டுத் தன் கணவனை எழுப்பித் தான் கண்ட கனவினைக் கூறினாள். சச்சந்தன் தான் எதிர் நோக்க வேண்டிய தீமைகள் பல உள்ளன என்பதை அக்கனவு முன்னதாகக் காட்டிற்று என்று நினைத்து விசயைக்கு ஒரு தீங்கும் நேராவண்ணம் பாதுகாத்திட உறுதிபூண்டான்.

கட்டியக்காரன் அரசனைக் கொன்று அரசாட்சியைத் தனக்கே உரிமையாக்கிக் கொள்ள விரும்பினான். அவன் அமைச்சர்களிடம் தான் அரசாள விரும்பும் எண்ணத்தைத் தெரிவிக்க, தருமதத்தன் என்பான், அத்தீய எண்ணத்தை மறுத்து, கட்டியங்காரனை நல்வழிப்படுத்த நினைத்தான். ஆனால் அது விழலுக்கு இறைத்த நீர்போல ஆயிற்று.

கட்டியங்காரன் சச்சந்தனுடன் போர் தொடுக்கப் புறப்பட்டான். இதனை அறிந்த சச்சந்தன் "வீரர்களே! யானைகளையும், குதிரைகளையும், தேர்களையும், போருக்குத் தயார் செய்யுங்கள்"! என்று இடிபோல் முழங்கினான். விசயையிடம், "நீ

கண்ட கனவு பலிக்கத் தொடங்கி விட்டது; கருவில் உள்ள குழந்தையைக் காத்தல் உன் கடன்; எனவே நீ வெளியேறி விடு" என்று மனவேதனையுடன் கூறினான்.

அரசன் சச்சந்தன் கட்டியங்காரனை எதிர்த்துப் போரிட்டான். எவ்வளவோ வலிமையாக அவன் போரிட்டும் முடிவில் எமனுக்கு இரையானான். அதனை அறிந்த விசயை உள்ளம் குமுறினாள். கண்ணீர் பெருக, அழுதுகொண்டே அவ்விடத்தை விட்டு அகலும் பொருட்டுத் தீக்கனவு கண்டபோதே சச்சந்தனால் அமைக்கப்பட்டிருந்த மயிற்பொறி ஒன்றில் ஏறி வான்வழிச் சென்றாள். அப்பொறி வலப்புறம் சுற்றினால் வான்வழியே செல்லும் தன்மையுடையது. சிறிது தூரம் சென்ற விசயை கணவனை இழந்த வருத்தத்தால் மயிற்பொறியை இயக்க மறந்ததால் ஒரு சுடுகாட்டில் இறங்கி கால்குவித்து நின்றது.

சிறிது தெளிந்து கண்விழித்துப் பார்த்த விசயை தான் காட்டில் கிடப்பதை அறிந்தாள். நெஞ்சம் பதறினாள்; புலம்பினாள்; புலம்பிய சிறிய நோக்கத்திற்கெல்லாம் அவள் இளஞாயிறு போன்ற ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். அந்தோ! மகனே! முரசு முழங்க, மகிழ்ச்சி பொங்க நாட்டோர் பாராட்டையும் வாழ்த்துரையும் வழங்கப் பிறக்க வேண்டிய நீ, நரிகள் ஊளையிட பிணங்களெல்லாம் கொழுந்துவிட்டெரிய இன்று இவ்வாறு பிறப்பதோ! ஐயகோ! என்று அவள் பலவாறு புலம்பித் தன் மகனை கண்ணீரால் குளிப்பாட்டினாள்.

இதனைக் கண்ட ஒரு தெய்வம் விசயையின் தோழியாகிய சண்பக மாலை வடுவத்தோடு அவளை அணுகி "தாயே நீ வருந்தற்க" உன் மகன் இவ்வுலகத்தையெல்லாம் அடக்கி ஆளுவான். அன்றியும் கட்டியங்காரனையும் வதைத்து வெல்வதற்காக இப்பொழுது இவனை ஒருவன் எடுத்துச் செல்வான்; நாம் இருவரும் மறைந்திருத்தல் நல்லது என்று கூறிற்று.

இவற்றைக் கேட்ட விசயை ஒருவாறு ஆறுதல் அடைந்தாலும் பெற்ற உடனேயே மகனைப் பிரியவேண்டுமே என்று கலங்கினாள். அவள் "மன்னவன் மகனே? நீதின்றி விளங்குவாயாக" என்று கூறித் தன் கையில் இருந்த மோதிரத்தை அவனுக்கு அணிவித்து விலகினாள்.

அவ்வேளையில் தன் இறந்த மகனைப் புதைப்பதற்காகக் கந்துக் கடன் என்னும் வணிகன் ஒருவன் அங்கு வந்து புதைத்த பின்னர் விசயையின் மகனைக் கண்டான். நல்ல மகன் ஒருவனைத் தான் அடைவேனென்று முனிவர் முன்னர்

கூறியிருந்ததை நினைத்து அவன் இவனே போலும் என்று கந்துக்கடன் எண்ணினான். குழந்தையின் கையிலிருந்த மோதிரத்தை எடுத்து மறைத்து வைத்துக் கொண்டு அக்குழந்தையை வாரி எடுத்தான். அக்குழந்தை தும்மிற்று; தெய்வம் "சிவ" என்று வாழ்த்திற்று. இறந்த குழந்தை மீண்டும் உயிர் பெற்றதாகச் சொல்லி அக்குழந்தையைக் கொண்டு தன் மனைவியிடம் கொடுத்தான்.

கந்துக்கடன் சுடுகாட்டை விட்டுச் சென்ற பின்னர் சண்பகமாலை என்னும் தெய்வம் விசயையைத் தவமாதர் இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்று அடைக்கலமாக விட்டுச்சென்று மறைந்தது.

சந்துக்கடன் சுடுகாட்டை விட்டுச் சென்ற பின்னர் சண்பகமாலை என்னும் தெய்வம் விசயையைத் தவமாதர் இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்று அடைக்கலமாக விட்டுச்சென்று மறைந்தது.

கந்தக்கடன் மனைவி தான் இழந்த மகனைத் திரும்பப் பெற்றதற்காக மகிழ்ச்சியடைந்தாள். கந்துக்கடனும், அவன் மனைவியும் தாம் பெற்ற மகிழ்ச்சியின் அடையாளமாக விழாக் கொண்டாடினர். குழந்தையை எடுத்தபோது, ஒருகுரல் "சிவ" என்று வாழ்த்தியதால் அக்குழந்தைக்கு சீவகன் என்று பெயரிட்டு அதனைக் கண்ணும் கருத்துமாய் வளர்த்து வந்தனர்.

சீவகன் வந்த காலத்திற்குப் பின்னர், கந்துக்கடனுக்கு மற்றோர் ஆண் குழந்தை பிறந்தது. அவனுக்கு ஆசிரியரானவர் சீவகனின் தாய், தந்தை பற்றிக் கூறிச் சீவகன் பிறப்புப் பற்றியும் கூறினார். அதனை அறிந்து மயக்கமுற்ற சீவகன் சிறிது நேரத்திற்கெல்லாம் தெளிந்து எழுந்தான்; "கட்டியங்காரன் முடித்தலையை இப்பொழுதே வெட்டுவேன்" என்று சீறினான். அவனது சீற்றம் கண்ட ஆசிரியர் "நீ சொல்லியவாறு செய்தல் உன் கடனே" என்றாலும் ஓராண்டு கழித்து அதனைச் செய்க என்று கூறி அவனது கோபத்தைத்தணிந்தார். பின்னர் அவர் சீவகனிடம் அவனைத் தக்க வேளையில் தக்க செயல் புரியுமாறு கூறிவிட்டு கானகம் சென்றார். சீவகனும் அறிவு, அழகு, ஆண்மை முதலியவற்றால் சிறந்து விளங்கினான்.

## பயிற்சி வினாக்கள்

1. அரசாளும் தன் கடமையைச் சச்சந்தன் விட்டுவிடக் கருதியது ஏன்?
2. கட்டியங்காரன் எப்படிப்பட்டவன்?
3. சச்சந்தன் – கட்டியங்காரன் இவர்களிடையே நிகழ்ந்த போரின் முடிவு யாது?
4. விசயை சுடுகாட்டில் இறக்க நேர்ந்தது ஏன்?
5. விசயை சுடுகாட்டில் தன் மகனைப் பார்த்து வருந்திக் கூறியது யாது?
6. கந்துக்கடன் என்பவன் யாவன்? அவன் செய்தது யாது?
7. சீவகனுக்கு அப்பெயர் எதன் பொருட்டு சூட்டப்பெற்றது?
8. ஆசிரியர் சீவகன் சீற்றத்தை எவ்வாறு தணித்தார்?
9. "விழலுக்கிறைத்த நீர்போல" "கண்ணும் கருத்துமாய்" இவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

# 6. பழந்தமிழர் பண்பாடு

(சுப. சொக்கலிங்கம் எம்.ஏ.)

உணவு, உடை, உறையுள், அணிகள், ஊர்திகள், நாடு, நகரம் உள்ளிட்ட புறத்தேவைகளின் சிறப்பினை "நாகரிகம்" என வழங்குவர். உள்ளத்தின் சிறப்பினைப் "பண்பாடு" என வழங்குவர். உள்ளத்துச் சிறப்பான பண்பாடு, உரையாலும் செயலாலும் வெளிப்படும்.

நாகரிகம், நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம், காலத்துக்கு காலம் வேறுபடும் இயல்புடையது. பண்பாடு எல்லாருக்கும் என்றும் பொதுவாக அமைவது. சங்க காலத் தமிழர் உடுத்த உடையை நாம் உடுத்துவதில்லை; உடுத்த வேண்டும் என்று வற்புறுத்துவதும் இல்லை. ஆயினும் அக்காலத் தமிழரின் ஒழுக்கத்தை நாமும் கடைப்பிடிக்கின்றோம். வருங்கால மக்களும் அதனை மேற்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம். எனவே பண்பாடு நிலையான ஒன்றாகும்.

பண்பாட்டைத் தருவது பெரும்பாலும் கல்வியே, அதனால் தமிழர் கல்வியைப் போற்றிக் கூறினர். யாவரும் விரும்பிச் சேர்க்கும் செல்வத்தினும் கல்வி சீரியது என்றனர். ஒரு தாய் தான் பெற்ற பிள்ளைகளுள் கற்றவனையே மற்றவரைவிட அதிகமாக விரும்புவாள். சமுதாயத்தில் கற்றவன் தாழ்நிலையில் இருப்பவனாயினும், மேல்நிலையில் உள்ளவனும் கல்வி கற்க அவனை நாடுவான். அரசனும் கற்றவன் மொழிகேட்டு அவன் வழி நிற்பான் என்று ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் சிறப்பை தம் உள்ளம் கொள்ளுமாறு உரைத்துள்ளான்.

தமிழர், விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்று அக்மலர்ச்சியோடு உபசரிப்பார். விருந்தினர் புறத்தே இருக்க, அமிழ்தமாயினும் தாம் மட்டும் தனித்து உண்ணார். மேல் உலகம் கிட்டாவிட்டாலும் ஈவது ஈன்று; இரப்பது தீது என்ற கொள்கையுடையவராய் இருந்தனர். இரப்பவனுக்கு இல்லை என்று சொல்வது இறப்பதைவிட இன்னாதென எண்ணினார். ஈதலும் இசைப்பட வாழ்தலும், இலக்குகளாகும்.

தமிழர்க்கு ஒழுக்கம் உயிரைக்காட்டிலும் விழுப்புடையது. கல்வியை மறந்து விட்டால் பின்னர்க் கற்றறியலாம்; ஒழுக்கம் தவறி விட்டால் அதனால் வரும் இழுக்கை நீக்குவது அரிது; ஒழுக்கத்தால் எவரும் மேம்பாடு எய்துவர்.

தமிழரின் பண்பாட்டில் தலைசிறந்தது மானம். மானமாவது தம நிலையிலிருந்து தாழாமல் இருத்தலும், தாழ்வு வரும்போது உயிர் வாழாமையும் ஆகும். நல்லவர் புகழ்தேடும் நெறியிலும் ஒவ்வாத செயல்களைச் செய்யமாட்டார். மானத்தைக் காப்பதில் தமிழர் மயிர் நீத்தால் உயிர் நீக்கும் கவரிமான் போன்றவர். சேரமான் கணைக்கால் இரும்பொறை மானம் அழியப் பெற்றபோது நீரைப் பருகாது தன்னிலைக்கு நாணி உயிர்விட்டாள். பெருஞ்சேரலாதன் என்னும் மன்னன் கரிகாற்சோழனோடு பெருநாதன், சோழன் எறிந்த வேல், சேரன் மார்பில் நுழைந்து முதுகுவழி வெளிப்பட்டமையால், முதுகிலும் புண் ஏற்பட்டது. அதனைப் புறப்புண்ணாகக் கருதிச் சேரலாதன் வடக்கிலிருந்து உயிர்துறந்து மானத்தைக் காத்துக் கொண்டான்.

குறமகள் இளவெயினி என்னும் பெண்பாற்புலவர் பாடிய பாடல் ஒன்று தமிழர் பண்பாட்டினை விளக்குகிறது. தம்மைச் சார்ந்தோர் தவறு செய்யின், அதைப் பொறுத்துக் கொள்வதும், மறந்து வறுமை நிலைக்குத் தாம்

நாணமுறுவது, படைக்குப் பழி தராத வீரம் பெற்றிருப்பதும் தமிழர் பண்பாட்டு கூறுகளாகும்.

பண்பாடு அமையப் பெற்றவரைச் "சான்றோர்" என்று வழங்குவர். "அச்சான்றோர் தேவர்க்குரிய அமிழ்தம் தமக்குக் கிடைத்தாலும், அதை இனிது என்று தான் மட்டும் தனித்து உண்ணாதவர்; பிறர் அஞ்சத்தக்க துன்பத்திற்குத் தாம் அஞ்சி, அதைத் தீர்ப்பதற்கு முயல்பவர்; புகழ் கிட்டும் செயலாயின், அதற்குத் தம் உயிரையும் தருவர்; பழிவரும் செயலாயின் அதனால் உலகமே பரிசாகக் கிடைப்பதாயினும், அதனைச் செய்யாதவர்; கவலையற்றவர்; வலிய முயற்சி பெற்றிருந்தும் தமக்கென முயலாமல் பிறர்க்கென முயல்பவர். அத்தகைய சான்றோர் இருப்பதாலேயே இவ்வுலகம் அழியாமல் இருக்கிறது என்று கடவுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்னும் அரசன் கூறியுள்ளான். "சான்றோர் தம் சான்றாண்மையிலிருந்து தவறிவிட்டால், அதனை இவ்வுலகம் பொறுத்துக் கொள்ளாது" என்று வள்ளுவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

"ஒரே உலகம்" என்னும் பரந்த மனப்பான்மை, இவ்விருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய இலட்சியமாக பாராட்டப்படுகிறது. இதே இலட்சியத்தை இரண்டாயிரம், ஆண்டுகளுக்கு முன்பே பழந்தமிழ்ப் புலவர் ஒருவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். அப்புலவர் பெயர் கணியன் பூங்குன்றனார், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது அவர் பாடிய பாடலின் முதல் அடி. இது பழந்தமிழர் பண்பாட்டினைப் படம்பிடித்துக் காட்டுகின்றது எனலாம்.

தமிழர்கள் இறைப்பற்று மிக்கவர்கள்; பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் தமிழ்நிலத்தை ஐந்து திணைகளாகப் பிரித்து இலக்கணம் கூறுகிறது. இந்த ஐந்து திணைகளுக்கும் தனித்தனி தெய்வங்களைக் கூறுகிறார். தொல்காப்பியர், இததெய்வங்களைப் பண்டைத் தமிழ் மக்கள் வழிபட்ட நிகழ்ச்சிகளைச் சங்க இலக்கியங்களில் நாம் பார்க்கலாம்.

சுருங்கச் சொன்னால், அனைத்திலும் அறம் போற்றுவதும், என்றும் தீது நினையாமையும், தம் நிலையில் தாழாமையும் அனைவரிடத்திலும் அன்பு பாராட்டுதலும் தமிழர் பண்பாடாகும். அப்பண்பாட்டு நெறியைப் பின்பற்றி வாழ்வதே தமிழர் கடமையாகும்.

## அருஞ்சொற்பொருள்

உறையுள் – தங்குமிடம், வீடு; அணிகள் – ஆபரணங்கள்; ஊர்தி – வாகனம்; உரை – பேச்சு; இயல்பு – தன்மை; சீரியது – சிறப்புடையது; நாடு வான்

– விரும்புவான்; ஈவது – கொடுப்பது; இரப்பது – பிச்சையெடுப்பது; இசைபட – புகழ்பெற; விழுப்பதும் – சிறப்பு; இழுக்கு – குற்றம்; ஒவ்வாது – பொருந்தாத நாணி – வெட்கி; பொருதான் – போரிட்டாள்; கிட்டும் – கிடைக்கும்; கேளிர் – உறவினர்; இறைப்பற்று – கடவுள்பக்தி; வடக்கிருத்தல் – உண்ணா நோன்; மேற்கொண்டு வடக்குத் திசை நோக்கி அமர்ந்து உயிர்விடுதல்.

## பயிற்சி வினாக்கள்

1. நாகரிகம், பண்பாடு இவற்றை விளக்குக.
2. நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும் உள்ள வேற்றுமை யாது?
3. கல்வியின் சிறப்புக் குறித்து ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கூறுவது யாது?
4. தமிழரின் விருந்தோம்பல், ஈகைப் பண்புகளை விளக்குக?
5. பழந்தமிழர் ஒழுக்கம், மானம் இவற்றைப் போற்றுவதில் சிறந்திருந்தன என்பதை எவ்வாறு அறியலாம்?
6. இளவெயினி என்னும் பெண்பாற்புலவர் கூறும் பண்பாட்டின் கூறுகள் யாவை?
7. சான்றோர் யாவர்? அவர் பண்புகள் யாவை?
8. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே "ஒரே உலகம்" என்னும் பரந்த மனப்பான்மை தமிழரிடம் இருந்தது என்பதை எவ்வாறு அறியலாம்?
9. தமிழர் கடமை யாது?
10. பிரித்தெழுதுக.

    உண்பதில்லை, ஒழுக்கமற்ற, இறைப்பற்று, இன்னாதென, மெம்பாடெய்துவர்.

# பாடம் 17
# தேசிய விளையாட்டு வாரம்

(தாமரைத் திரு நெ.து.சுந்தரவடிவேலு)

சுவரை வைத்தே சித்திரம் எழுதவேண்டும். உடலை வைத்தே உயிரை ஓம்ப இயலும். இவை நம் எல்லோருக்கும் தெரியும். இன்று மட்டுமன்று; நெடுநாளைக்கு முன்னரே, நம் முன்னோர்களுக்கே தெரியும்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்;
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்;
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்;

என்றார் திருமூலர்.

இந்நூற்றாண்டின் கவிஞராகிய பாரதியாரும் தோளை வலியுடையதாக்கி, உடற்சோர்வும் பிணிபலவும் போக்கி, அரிவாளைக் கொண்டு பிளந்தாலும் கட்டுமாறா உடல் உறுதி வேண்டினார். அவரது வேண்டுகோள் நமது இலட்சியமாக வேண்டும்.

உடல் நலமும் உடல் வலிமையும் எக்காலத்திற்கும் எந்நாட்டவர்க்கும் தேவை. எனினும் இத்தலைமுறைக்கும், சிறப்பாக நம் நாட்டிற்கும் மிகவும் தேவை ஏன்? சில நூற்றாண்டுகின்ன தேக்கத்திற்குப் பின் சென்ற சில ஆண்டுகளாகப் பல்வேறு துறைகளிலும் பல முன்னேற்றங்களையும் சாதனைகளையும் கண்டு, இன்று சுதந்திர இந்திய வெற்றிநடை போடுகின்றது. இத்தோடு நில்லாமல், நாம் மேலும் வளர்ந்து முன்னேறத் திட்டமிட்டுப் பணி புரிகின்றோம். இப்பெரும் பொறுப்பில் பங்கு கொள்ளும் இந்தியர் எல்லோருக்கும் இளையோராயினும் முதியோராயினும் உடல் ஊக்கமும், உடல் நலமும் தொடர்ந்த பயிற்சிகளால் விளைவன. பலவகை உடற்பயிற்சிகளின் தேவையை வற்புறுத்திக் காட்டவே "தேசிய விளையாட்டு வாரம்" கொண்டாடப்படுகிறது. இவ்வாரத்தில் நம் நாட்டில் சிற்றூர்களிலும் நகரங்களிலும் வாழும் கோடிக்கணக்கான மக்கள் உடல்நலம் பேணும் விளையாட்டுக்களில் பங்கு

பெறவேண்டும் என்பது நம்நோக்கம். இத்தகைய பங்கு ஒரு வாரத்தோடு நிற்கக்கூடாது. விளையாட்டை மறந்தவர்களுக்கு அதைப் புதுப்பித்துக் கொடுக்கவே இவ்வாரம் துணை செய்யும். இத்தகைய விளையாட்டுக்களின் மூலம் மக்களின் உடல்வலிமை, தாக்குப் பிடிக்கும் திறன், செயலாற்றும் திறன் ஆகியவற்றை வளர்க்க இயலும். ஒருவனுடைய ஆளுமையில் அறிவு வளர்ச்சி ஒழுக்க வளர்ச்சியோடு உடல் வலிமையும் இடம் பெறுகின்றது. இவ்வுண்மையைப் பொதுமக்களுக்கு அறிவுறுத்த இவ்வாரக் கொண்டாட்டம் பயன்படுவதாக!

விளையாட்டுக்கள் பெரியவர்களுக்கு மட்டுமா? அல்ல, பள்ளி செல்லும் எல்லாச் சிறுவர் சிறுமியரும் உடற்பயிற்சி விளையாட்டுக்களில் ஈடுபடவேண்டும். இதுவரை ஈடுபடாதவர்கள் இவ்வாரத்திலிருந்தாவது ஈடுபட இக்கொண்டாட்டம் தூண்டுவதாக! அத்தகைய ஈடுபாடு இவ்வாரத்தோடு நிற்கக்கூடாது. இவ்வாரத்தில் விளையாட்டுக்களில் பங்கு பெறுவதோடு மட்டும் நில்லாமல், தொடர்ந்து அவைகளில் ஈடுபடவேண்டும். உடற்பயிற்சி வழக்கமாகி நம் எல்லோருடைய வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துவிட வேண்டும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" உழைப்பே மகிழ்ச்சியின் ஆணிவேர், நோயற்ற வாழ்வும் உழைப்பிற்கு வலிமையும் பெற தொடர்ந்த உடற்பயிற்சியும் விளையாட்டுக்களும் தேவை. இவ்வுண்மையை நம் முன்னோர்கள் அறிந்தவர்கள் என்பதைக் கண்டோம். நம்மவர்கள் மட்டுமா அறிந்தவர்கள்? பிற நாட்டவரும் நெடுநாளைக்கு முன்னமே உணர்ந்தனர். அவர்களுள் முக்கியமானவர்கள் பண்டைய கிரேக்கர்கள்.

"ஒலிம்பிக் விளையாட்டுக்கள்" என்பவற்றைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் அவற்றை தொடங்கியவர் யார்? பண்டைய கிரேக்க நாட்டில் கி.மு. 776 ஆம் ஆண்டில் தொடங்கினர். எந்த ஊரில் தொடங்கினர். கிரேக்க நாட்டிலுள்ள "ஒலியா" என்னும் ஊரில் தொடங்கினர். இவ்விளையாட்டுக்களை நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை கோடையின் இறுதியில் நடத்தினர்; இவ்விளையாட்டுக்கள் மிக முக்கியமானவை என்று கருதினர். ஆகவே, போரில் ஈடுபட்ட காலங்களில் இவ்விளையாட்டுக்களுக்காகப் போரை நிறுத்தி வைப்பர்; நாடு முழுவதிலும் அமைதி நிலவச் செய்வர். இவ்விளையாட்டுக்களைப் பற்றி நாடு முழுவதும் முரசறைந்து அறிவிப்பர்.

ஒலிம்பிக்கு விளையாட்டுக்களில் ஓட்டப்பந்தயம், தாண்டும் பந்தயம், எறியும் பந்தயம், குதிரையேற்றம், முற்போர், குத்துச்சண்டை, கவசமணிந்து சண்டையிடும் பந்தயம், உடல் வலிமைக் காட்டும் போட்டிகள் ஆகியவை இடம் பெற்றன. இவை ஐந்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும். இப்போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு ஒலிவமர இலைகளாலான மகுடத்தைப் புனைவர். இலைமுடிக்கு என்னபோட்டி! என்ன சிறப்பு? பேரிச்ச மரத்தின் கீற்றொன்றையும் வெற்றிச் சின்னமாக அணிவிப்பர்; வெற்றி பெற்றவர்களை ஊர்வலமாக மரியாதையுடன் வீட்டிற்கு அழைத்துச் செல்வர்; இசைவல்லவர் பரணி பாடிப்போற்றுவர். கைதேர்ந்த சிற்பிகள் வெற்றி வீரர்களின் வடிவங்களை கல்லில் வடிப்பதும் உண்டு.

புகழ்பெற்ற ஒலிம்பிக்கு விளையாட்டு விழா கி.பி.593 க்குப் பிறகு நின்றுவிட்டது. அவ்விழாவைக் கிரேக்க நாட்டைக் கைப்பற்றிய உரோமானிய அரசர்கள் தடை செய்து விட்டார்கள். ஏன் ? பாமரர்களின் கூத்தாம், அடக்குபவ்கள் அடக்கப்பட்டவர்களின் வலிவைக் குறைக்க ஒரு சாக்கு இது.

ஒரு பத்து நூற்றாண்டுக் காலம் இவ்வாறு நடக்கவில்லை. பின்னர் 1894ரன கேபேர்ட்டின் என்ற பிரான்ஸ் நாட்டவர் எர்பர்ட்டு என்ற ஆங்கிலேயரின் துணையோடு, இது பற்றி ஒரு சர்வதேச காங்கிரசைக் கூட்டினார். அதன் விளைவாக, சர்வதேச ஒலிம்பிக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவினர் ஒலிம்பிக் விளையாட்டுக்களை உயிர்ப்பித்தனர். 1896 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8 ஆம் நாள் இவ்விளையாட்டுக்கள் மீண்டும் தொடங்கின. எவ்விடத்தில் தொடங்கின ? கிரேக்க நாட்டின் முக்கிய நகரமாகிய ஏதேன்ஸ் நாட்டில் தொடங்கின. அன்று முதல் இவ்விளையாட்டுக்கள் நான்காண்டிற்கு ஒருமுறை தவறாது நடத்தப்படுகின்றன. இரண்டாவது உலகப் பெரும் போர் நடந்த காலத்தில் மட்டும் இவை நடக்கவில்லை.

இவ்விளையாட்டு விழாவில் முன் சொன்ன விளையாட்டுகளோடு பல்வேறு புதுப்பந்தயங்களும் இடம்பெற்றன. அவையாவன: நீச்சல் துப்பாக்கியிற் சுடுதல், கால்பந்து, ஹாக்கி, கூடைப்பந்து, சைக்கிள் விடுதல், எடை தூக்குதல் என்பவை.

இப்போட்டிகளில் உலகத்தின் பல்வேறு நாடுகளும் பங்கு பெறுகின்றன. இப்போட்டிகளில் குறிப்பிடத்தக்க சிறப்புடையது மாரத்தான் ஓட்டப்பந்தயம் ஆகும்.

இருபத்தாறு மைல் முன்னூற்று எண்பத்தாறு கெஜம் ஓடவேண்டிய இப்போட்டி ஓடுபவரின் தாக்குப்பிடிக்கும் திறனை நன்கு சோதிப்பதாகும்.

ஒலிம்பிக்கு விளையாட்டு விழாவில் சில சடங்குகளும் சில சம்பிரதாயங்களும் உண்டு. இவ்விழாத் தொடங்கு முன்னர், ஒலிம்பியா என்ற ஊரிலிருந்து ஒரு தீப்பந்தத்தை ஏற்றிக்கொண்டு விழா நடக்கும் இடத்திற்கு அது எத்தனை ஆயிரம் மைல் தொலைவில் இருந்தாலும் ஓட்டமாகப் போய்ச் சேர்வர். ஒருவரே அவ்வளவு தூரம் ஓட இயலுமா ? இயலாது. ஆகவே குறிப்பிட்ட தொலைவு வரை ஒருவர் ஓடுவது என்பதே ஏற்பாடு. ஓடுபவர், குறிப்பிட்ட தொலைவை அடைந்ததும் வேறொருவரிடம் தீப்பந்தத்தை கொடுப்பர். அது இப்படியே பலரிடம் கைமாறி விழாவிடத்திற்கு வந்து சேரும். அப்பந்தம் வழியிலும் விழா இடத்தில் போட்டிகள் முடியும் வரையிலும் அணையாது இருக்கும்படி பார்த்துக்கொள்வர். விழா முடிந்தபிறகே அதனை அணைத்துவிடுவர்.

இந்தியப் பெருநாட்டிலும் வழிவழியாகப் பல உடற்பயிற்சிகளும் விளையாட்டுகளும் புகழ் பெற்றுள்ளன. ஓடுதல், மற்போர், வாட்போர், சிலம்பம், ஈட்டி எறிதல், குதிரையேற்றம் என்பவை குறிப்பிடத்தக்கவை. முற்காலத்தில் சிலம்பக் கூடங்களும் உடற்பயிற்சிக் கூடங்களும் பல ஊர்களில் பரவியிருந்தன. தமிழ்நாட்டில் சிலம்புப் பயிற்சி அண்மையில் கூடச் சிறந்து விளங்கியது.

தமிழ்நாட்டின் சில பகுதிகளில் பொங்கல் விழாவின்போது "மஞ்சு விரட்டு" இன்றும் நிகழ்கிறது. கொழுத்து வளர்ந்து முறுக்கேறிய காளையொன்றின் கழுத்திலோ, கூரிய கொம்புகளிலோ, வேட்டியையோ, வேறு பொருளையோ முடிந்து அதைத் திறந்த வெளியில் விரட்டி விடுவர். நெஞ்சுரமும், உடல் உறுதியும் மிக்க இளைஞர்கள் அக்காளையோடு மல்லாடி, அதை அடக்கிப் பிடித்து கழுத்திலோ கொம்பிலோ கட்டப்பட்டுள்ள பொருளைப் பறித்துக் கொள்வார்கள். வீரத்தையும் வலிமையையும் சோதிக்கும். இவ்விளையாட்டு பல நூற்றாண்டுகளாய் நடந்து வருவது.

"எவன் ஒருவனுடைய உணவும் வேலை முறையும் உடற்பயிற்சியும் ஒழுங்காய் அமைக்கப்பட்டுள்ளனவோ, எவன் ஒருவனுடைய அமைப்பும் ஒய்வும் பொருந்துவனவாக உள்ளனவோ, எவன் ஒருவனுடைய தூங்கும் நேரமும் உழைக்கும் நேரமும் முறைப்பட வரையறுக்கப்பட்டிருக்கின்றனவோ, அவனுக்கே இந்த உலகில் சிறந்த பயன்கள் கைகூடும் என்பது கீதாபதேசம்.

இந்த நல்லுரைகளை அறிதல் மட்டும் போதாது. பின்பற்றுவது மிக முக்கியமானது. எனவே நாம் உழைக்கவும் தெரிந்து, விளையாடவும் தெரிந்து, உடல்

நலமும், உள்ள வீரமும், அறிவுத் தெளிவும் பெற்று இன்புற்று வாழ தேசிய விளையாட்டு வாரம் தூண்டுவதாக!

## அருஞ்சொற்பொருள்

ஓம்ப - பாதுகாக்க; உடம்பா, உயிரார் - உடம்பும் உயிரும் உருவாக உயர்திணை போலக் கூறும் மரபு பற்றி இவ்வாறு உரைக்கப்பட்டுள்ளன. மெஞ்ஞானம் - உண்மையறிவு; உபாயம் - வழி; பிணி - நோய்; தலைமுறை - பரம்பரை; திறன் - வலிமை; மகுடம் - கிரிடம்; சின்னம் - அடையாளம்; பரணி - போரில் வெற்றி பெற்றமையைப் புகழ்ந்து பாடும் நூல்; பேணும் - காக்கும்; கீதாபதேசம் - பகவத்கீதை கூறும நல்லுரை.

## பயிற்சி வினாக்கள்

1. உடலோம்பலின் இன்றியமையாமை குறித்து திருமூலவர் யாது கூறுகிறார்.
2. உடல் உறுதி பற்றிய பாரதியார் கருத்து யாது?
3. தேசிய விளையாட்டு வாரம் கொண்டாடப்படுவதன் தேவை யாது?
4. தேசிய விளையாட்டு வாரம் எதற்குப் பயன்பட வேண்டுமென ஆசிரியர் கருதுகிறார்?
5. ஒலிம்பிக் விளையாட்டு எங்கு, எப்போது, யாரால் தொடங்கப்பட்டன?
6. ஒலிம்பிக் விளையாட்டுக்களை எவ்வாறு நடத்தினர்?
7. ஒலிம்பிக்கில் இடம்பெற்ற விளையாட்டுக்கள் யாவை?
8. ஒரு பத்து நூற்றாண்டுக் காலம் தடைப்பட்டிருந்த ஒலிம்பிக் விழா எப்போது யாரால் உயிர்ப்பிக்கப்பட்டது?
9. மாரத்தான் பற்றி நீவிர் அறிவது யாது?
10. ஒலிம்பிக் விளையாட்டின் போது பின்பற்றப்படும் சடங்குகள் சம்பிரதாயங்கள் யாவை?
11. இந்தியப் பெருநாட்டில் வழிவழியாகச் சிறந்து விளங்கும் உடற்பயிற்சிகள் விளையாட்டுகளை குறிப்பிடுக.
12. "மஞ்சுவிரட்டு" பற்றி எழுதுக.
13. கீதாபதேசம் யாது?
14. தேசிய விளையாட்டு வாரம் எவற்றைத் தூண்ட வேண்டும்?

# பாடம் - 17

## 8. நாளிதழின் பயன்

### (உரையாடல்)

(இரா. சொ.சீனிவாசன் எம்.ஏ.,)

பாரி : நண்பா, வணக்கம்! இந்தப் பக்கம் உன்னைக் காண்பது அரிதாயிற்றே ஏன் இவ்வளவு தொலைவு வந்துவிட்டாய்?

பழனி : வணக்கம்! பாரி! இன்றைய நாளிதழ் எங்கள் தெருக்கடையில் கிடைக்கவில்லை! ஏதோ சுடச்சுடச் சுவையான செய்தியாம்! அதனால் அந்நாளிதழ் வந்த உடனேயே விற்று விட்டதாம்!

பாரி : எனக்குக் கதைப்புத்தகம் கிடைத்தாலே போதும், பத்திரிக்கையைப் பற்றி என்றால் கவலைப்படுவதே இல்லை!

பழனி : என்ன இப்படிச் சொல்லுகிறாய்! இளைஞர்களாகிய நாம் நாளிதழைப் படிப்பதன் மூலம் எவ்வளவோ பயனைப் பெறலாமே!

பாரி : ஒரு பயனும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லையே!

பழனி : நீதான் அடிக்கடி திரைப்படத்திற்கு போவாயே! எந்த கொட்டகையில் என்ன படம் ஓடுகிறது என்பதை நாளிதழை பார்த்து தெரிந்து கொள்ளலாமே!

பாரி : சுவரொட்டியைப் பார்த்தாலே அது தெரியுமே!

பழனி : பொது அறிவை வளர்க்கும் பணியை நாளிதழ் செய்துவருகிறது. சிறிது சிறிதாக மக்களுக்குக் கருத்துக்களை எடுத்துரைக்கிறது. உள்நாட்டுச் செய்திகளையும் அறிந்து, அயல்நாட்டுச் செய்திகளையும் அறிந்து கொள்வதற்கு நாளிதழைத் தவிர சிறந்த கருவி வேறில்லை.

பாரி : ஏனில்லை? வானொலி தான் இருக்கிறதே!

பழனி : வானொலியின் மூலம் முக்கியமான செய்திகளைத் தவிர மற்றவற்றைத் தெரிந்து கொள்ள இயலாது. மற்றும் முக்கியமான செய்திகளைக் கூடச் சுருக்கியன்றோ வானொலியில் அறிவிக்கிறார்கள்.

பழனி : மேலும், உனக்குத் தேவையான செய்திகள் எல்லாம் வானொலியில் கிட்டுமா!

பாரி : எனக்குத் தேவையானவை என்ன இருக்கின்றன ? ஒன்றும் இல்லையே!

பழனி : என்ன பாரி, இப்படிச் சொல்லுகிறாய் ? நாளைக்கு உனக்கு ஒரு வேலை காலி இருக்கிறது என்பதையும் நாளிதழைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாமே.

பாரி : அஃது எப்படி ?

பழனி : அதைப் பற்றியெல்லாம் விளக்கமான விளம்பரங்கள் நாளிதழில் வருவதை நீ பார்த்ததில்லையா ?

பாரி : நீ சொல்வதைப் பார்த்தால் நாளிதழ் நமக்கு பெரிதும் பயன்படும் போலத் தோன்றுகிறதே ?

பழனி : இன்னும் எத்தனையோ பயன்கள் உண்டாகின்றன. நாட்டு மக்கள் அரசுக்கோ பிற நிறுவனங்களுக்கோ ஒரு கருத்தை தெரிவித்து முறையிட வேண்டுமானால், நாளிதழ் வாயிலாக வெளியிட்டுத் தெரிவிக்கலாம். நாளிதழ் வாயிலாக வாணிகத்தை வளர்ச்சியடையச் செய்யலாம். ஒருவர் அதில் விளம்பரம் செய்வதனால் நாட்டில் பல பகுதிகளில் உள்ளவர் தம்முடைய பொருளை வாங்குமாறுத் தூண்டலாம்.

பாரி : அப்படியா இன்று முதலே நாளிதழை நான் படிக்கத் தொடங்குகிளேன். நீயும் நாளிதழை வாங்கப் போகலாம்.

## வினாக்கள்

1. செய்தித்தாள்களின் பயன்கள் யாவை ?
2. திரைப்படத்தின் நன்மைகள் தீமைகள் குறித்து ஓர் உரையாடல் எழுது ?

# பாடம் - 18
# வங்கியின் பணிகள்

(பண்டித சு.வே. நடராசன் எம்.ஏ., பி.ஓ.எல்.,)

மக்களின் நலனுக்கு வங்கிகள் நற்பணியாற்றி வருகின்றன. அவைகளின் பணிகளை, அவற்றால் உள்ள நன்மைகளை மக்கள் இப்போது மிகுதியாக உணரத் தொடங்கியுள்ளனர். தற்போது சிற்றூர்களிலும் அவைகள் சிறந்து பணிபுரியத் தொடங்கியுள்ளன. அவற்றால் உள்ள நன்மைகளைக் கிராம மக்களும் இப்போது நன்கு உணர்ந்து வரு கின்றனர்.

### வங்கிகள்

நம் நாட்டில் உள்ள வங்கிகள் பல. அவை பாரத ஸ்டேட் பாங்க், இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கனரா வங்கி, சிண்டிகேட் வங்கி, யூனியன் வங்கி, சென்ட்ரல் வங்கி, பஞ்சாப் நே னல் வங்கி, பாங்க் ஆப் பரோடா முதலிய பலவாகும். 1969 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 19 ஆம் நாள் பாங்குகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. அதன் பின்னர் வங்கிகள் அரசுடைமை ஆக்கப்பட்டன. அதன் பின்னர் வங்கிகள் அரசுடைமை ஆக்கப்பட்டன. நம் தமிழகத்தில் மாநிலக் கூட்டுறவு வங்கி ஒன்று உள்ளது. அதன் கிளைகள் மாவட்டங்கள் தோறும் இருக்கின்றன. பாங்க் ஆப் மதுரை, கரூர் வைசியா பாங்க், தமிழ்நாடு மெர்க்கன்டைல் பாங்க் போன்ற வங்கிகளும் செயல்பட்டு வருகின்றன.

### இந்திய நாட்டில் வங்கியின் தோற்றம்

நம் நாட்டில் ஆங்கிலேயர் வருகை புரிந்து கிழக்கிந்தியக் கம்பெனி என்ற வணிக நிறுவனத்தைத் தொடங்கினர். அது வேரூன்றிய காலத்தில் அதற்கு வங்கியின் தேவை ஏற்பட்டது. ஆகவே 1000 ஆம் ஆண்டில் "பாங்க் ஆப் பெங்கால்" என்னும் வங்கி பணியாற்றத் தொடங்கியது. அப்பணி இப்போது இந்திய நாடு முழுமையும் பல்கிப் பெருகலாயிற்று.

### வங்கியின் முக்கிய பணியும் அதன் வருமானமும்

கொடுக்கல், வாங்கல்தான் ஒரு வங்கியின் முக்கியமான பணி. சேமிப்பு (டெபாஸிட்டுகள்) அதனுடைய மூலதனமாகும். வங்கிகளில் மக்கள் சேமிக்கும்

பணமே அதனுடைய ஆதார வருமானம் எனலாம். ஒரு வங்கி எவ்வளவுக்கெவ்வளவு சேமிப்பைப் பெருக்கிக் கொள்கின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு அதன் வளர்ச்சியைக் கணக்கிடலாம். வருமானத்தில் 60 சதவிகிதந்தான் ஒரு வங்கி வெளியில் கடனாகக் கொடுக்க இயலும். எடுத்துக்காட்டாக, ஒரு வங்கியின் வருமானம் ஒரு லட்சம் ரூபாய் என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால், அந்த வங்கி ரூபாய் அறுபதினாயிரம் மட்டுமே வெளியில் கடனாகக் கொடுக்க முடியும். வங்கிகள் வெளியில் கொடுக்கும் கடன்களுக்காகப் பெறும் வட்டி, பாதுகாப்புப் பெட்டகங்களால் பெறும் வருமானம், காசோலை (இட்ங்வ்ன்ங்), உறுதிக்காசோலை (ஈழ்ஹறச்ற்) போன்றவைகளால் கிடைக்கும் கழிவு (கம்ி ன்) ஆகியவைகளை ஒரு வங்கியின் இதர வருமானங்களாகும்.

## சேமிப்புக் கணக்கும் நடப்புக் கணக்கும்

வங்கிகளில் மக்கள் பணத்தைச் சேமித்து வைக்கும் வழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். நகரங்களிலும் மாநகரங்களிலும் மக்கள் பெரும்பாலும் வங்கிகளில் பணத்தைச் சேமித்து வைக்கின்றனர். சிலர் அஞ்சல் அலுவலகங்களிலும் பணத்தைச் சேமித்து வைக்கின்றனர். கிராமங்களில் பெரும்பாலும் இந்நிலை நன்கு வளர்ச்சி அடையவில்லை என்றே சொல்லலாம். சேமிக்க விரும்புகின்றவர் வங்கியில் தங்கள் பெயரில் சேமிப்புக் கணக்கு (ஓஹஸ்-ண்ய்ஞ் ஹஐஐஸ்ர்ன்ய்ற்) வைத்துக் கொள்ள வேண்டும். சேமிப்புக் கணக்கு வைப்பதற்கு ரூ. 20 மட்டும் முதலில் வங்கியில் வட்டி சேமிப்புக் கணக்கைத் திறக்கலாம். பின்பு தங்களின் வசதிக்கு ஏற்ப எவ்வளவு தொகை வேண்டுமாயினும் கட்டிக் கொண்டே வரலாம். சேமிப்புக் கணக்கில் இருக்கும் தொகைக்கு வங்கி வட்டி கொடுக்கின்றது. சேமிப்புக் கணக்கில் இருந்து நாம் விரும்பும்போது பணத்தை எடுத்துக் கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு என்றும் நிலையான சேமிப்புக் கணக்கும் (Fixed Deposit). வைத்துக் கொள்ளலாம். இதற்கு வட்டி கூடுதலாக கிடைக்கும். நிலையான சேமிப்புக் கணக்கு வைத்தால் அந்த குறிப்பிட்ட காலம் வரை அந்தப் பணத்தை எடுக்காமல் இருக்கவேண்டும். வணிகர்கள் நடப்புக் கணக்கு (Current Account) வைத்துக் கொள்கின்றனர். அவர்கள் தங்களுக்குத் தேவையான போதெல்லாம் பணத்தை எடுக்கலாம்; பணம், காசோலை போன்றவைகளைப் போடலாம். நடப்புக் கணக்கிற்கு வட்டி குறைவாகவே கிடைக்கும். ஒரு நடப்புக் கணக்கு திறப்பதற்குக் குறைந்தது ரூபாய் 100 கட்ட வேண்டும்.

## சேமிப்புத் திட்டங்கள்

மக்களின் நலனுக்காகப் பல சேமிப்புத் திட்டங்கள் பல வங்கிகளில் இப்போது செயல்படத் தொடங்கியுள்ளன. பிள்ளைகளின் கல்வி, திருமணம் போன்றவைகளுக்குப் பணம் சேமிக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. வீடுகள் கட்டிக் கொள்வதற்கும் சேமிப்புத் திட்டங்கள் உதவுகின்றன. மேலும் புதுப்புது சேமிப்புத் திட்டங்களை வகுத்து, அவைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## கடன் வழங்கலும் உதவி புரிதலும்

தொழில்கள் தொடங்குவதற்கும் கல்வி, திருமணம் போன்றவைகட்கும், வீடுகள் கட்டுவதற்கும் வங்கிகள் கடனாகத் தொகைகள் நல்கி வருகின்றன. சில்லறை வியாபாரம் செய்வோருககும் கடன் கொடுத்து வருகின்றது. காய்கறி வியாபாரம், பழ வியாபாரம், பூ வியாபாரம், வடகம், அப்பளம், ஊறுகாய் முதலியன போடுதல், செருப்பு தைத்தல், பெட்டிக்கடை வைத்தல், இஸ்திரிப் பெட்டிகள் வாங்குதல் போன்றவைகளுக்கும் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. மாவு அறைக்கும் இயந்திரங்கள் வாங்குவதற்கும், டாக்டர்கள் கிளினிக் வைப்பதற்கும் கடன்கள் கொடுக்கப் பெற்று வருகின்றன. வேலையற்ற பட்டதாரிகளுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணம் கடனாகக் கொடுத்து உதவுகின்றன. தையல் மிஷின்கள், தட்டெழுத்துக் கருவிகள் வாங்குவதற்கும் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. சில வங்கிகள் நகைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளின்மீது கடன் கொடுத்து வருகின்றன.

வங்கிகள் கிராமங்களைத் தன்னுடைமையாக்கி அக்கிராமங்களின் முன்னேற்றத்திற்கும் பல வழிகளில் உதவிபுரிந்து வருகின்றன. அக்கிராமங்களில் தொழில்கள் தொடங்குவதற்கும், கல்வி நிலையங்களைத் தோற்றுவிப்பதற்கும், சாலைகள் அமைத்தல், குடிநீர் வசதி செய்தல் போன்றவைகளுக்கும் பணஉதவி புரிகின்றன. ஆடு மாடுகள் வாங்குவதற்கும் கோழிப்பண்ணை போன்றவைகளுக்கும் பணஉதவி புரிந்து வருகின்றன. ஸ்டேட் பாங்கு சில கல்வி நிலையங்களைத் தன்னுடைமையாக்கி, அந்நிலையங்களில் உள்ள ஏழை மாணவ மாணவியர்க்குத் துணிமணிகள், புத்தகம் போன்றவைகளுக்குப் பணஉதவி புரிகின்றது.

வங்கிகளால் கடன் பெறுவோர் அக்கடனைத் திரும்பச் செலுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். அதனைத் தங்கள் கடமையாகக் கொண்டு செயல்பட்டு வருவது மக்களுக்கு நற்பயன் அளிக்கவல்லதாகும்.

**வங்கி ஊழியர்கள்**

வங்கிகளில் பணிபுரிவோருக்கு நல்ல ஊதியம் கிடைக்கின்றது. அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் ஊழியர்கட்கும் வேலைப்பாதுகாப்பும் இருக்கிறது. வங்கிகளில் பெண்களும் பணியாற்றி வருகின்றனர். பெண்கள் பணிபுரிவதால் வங்கிகளுக்கு வரும் பெண்கள் அவர்களை எளிமையாக அணுகித் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளமுடிகின்றது. வங்கிகளில் பணிபுரியும் ஊழியர்கள் பெரும்பாலும் நல்லவர்களாக மக்களை இனிய முகத்தோடு வரவேற்று அவர்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கு உதவுகின்றவர்களாக, கனிவான உள்ளம் உடையவர்களாக ஆனால், கடமையில் தவறாதவர்களாக இருந்து வருகின்றனர். இதற்கு அவர்கட்குக் கொடுக்கப்பட்டு வரும் பயிற்சியே காரணம் எனலாம்.

**பயன் பெறுக**

பொது மக்கள் வங்கிகளால் உள்ள பயன்களை நன்கு அறிந்து கொள்ளவேண்டும். படித்துவிட்டு தொழில் இல்லையே என்று ஏக்கங் கொள்ளும் பட்டதாரிகள் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வசதிகளை நன்முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சிறுதொழில் புரிகின்றவர்களும், விவசாயிகளும் பிறரும் அவைகளின் பணியை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

**அருஞ்சொற்பொருள்**

ஆற்றி – செய்து; பணி – வேலை; திங்கள் – மாதம்; பல்கி – பறந்து; நல்கி – கொடுத்து; தோற்றுவித்தல் – தொடங்குதல்; அளிக்கவல்லது – கொடுக்கும் வல்லமை உடையது; கனிவான – இளகிய.

**வினாக்கள்**

1. வங்கிகள் சிலவற்றின் பெயர்கள் தருக.
2. இந்திய நாட்டில் வங்கி தோன்றியது எவ்வாறு?
3. வங்கியின் முக்கிய பணியும் அதன் வருமானங்களும் யாவை?
4. "சேமிப்புக் கணக்கு" என்பது பற்றி நீவிர் அறிவன யாவை?
5. "நடப்புக் கணக்கு" – குறிப்பு வரைக.

6. சேமிப்புத் திட்டங்கள் பற்றி எழுதுக.

7. வங்கிகள் கடன் வழங்குதல் குறித்து அறிந்த செய்திகளைக் கூறுக.

8. வங்கி புரிந்து வரும் பிற உதவிகள் பற்றி எழுதுக.

9. வங்கியில் பெண்கள் பணிபுரிவதால் உள்ள நன்மை என்ன ?

10. வங்கி ஊழியர்களின் நற்பண்புகளைக் கூறுக.

## 10. காகிதத்தின் வரலாறு

(இராம. சுப்பிரமணியன் பி.ஏ.,)

காகிதத்தை முதன்முதலில் கண்டுபிடித்தவர்கள் சீனமக்களே. கந்தைத்துணு, சணல், நார், வைக்கோல், முகக்கட்டை மரம் முதலியவற்றைக காகித உற்பத்தியில் பயன்படுத்தினார்கள். அந்த மூலப்பொருட்களை உரலில் இட்டுத் தண்ணீர்விட்டு இடித்துத் தேய்த்துக் கூழாக செய்தனர். பதம் செய்யப் பெற்ற கூழை மூங்கிற் கம்புகளாலும், பட்டு நூல்களாலும் அமைந்த வலைக் கம்பிச் சட்டத்தில் ஊற்றிக் குலுக்கினார்கள். நார்கள் ஒன்றுகூடிப் பாய் போல அமைந்தன. தண்ணீர் வலைக்கண்கள் வழியே வெளியேறியது. பாய்போலமைந்த நாளை மிகவும் கவனமாக எடுத்து வெயிலில் உலர்த்தினார்கள். உலர்ந்த நாளை தாள்கள் மீது பாரம் வைத்து அமுக்கிப் பாடம் செய்தனர்.

பதினான்காம் நூற்றாண்டில் காகித உற்பத்திமுறை ஐரோப்பாவில் பெருவழக்கமாயிற்று. அதேபோல் மறுமலர்ச்சி இயக்கமும் பரவியது. பதினைந்தாம் நூற்றாண்டில் அச்சடிக்கும் தொழில் தோன்றியதால் ஏராளமாக எளிதில் கிடைக்கத்தக்க காகிதம் தன்னகரில்லா நிலைக்கு உயர்ந்தது. அறிவுப்பெருக்க இயக்கம் பதினெட்டாம் பெருக்காக வியாபிப்பதற்குக் காகிதமே அச்சுமே உரிய கருவிகளாய் அமைந்தன.

ஐரோப்பாவில் ஒவ்வோர் எழுத்துக்கும் ஓர் அச்சை செதுக்கிச் சொற்களுக்குத் தக்க எழுத்துக்களைக்கூட்டி அச்சடிக்கும் முறையைக் கண்டுபிடித்தனர். இந்த முறையில் செதுக்கப்பட்ட எழுத்துக்ளை மீண்டும் மீண்டும் பயன்படுத்தலாம். முதலில் மரத்தில் செதுக்கிய எழுத்துக்களையே பயன்படுத்தினர். பின்னர் எழுத்துக்களை உலோகத்தில் வார்த்தெடுத்தனர்.

## தொழிற்சாலைகள்

காட்டில் வெட்டுப்படும் மரம் ஆற்றில் வந்து அதன் கரையுள்ள காகித ஆலையை அடைகின்றன. அங்கு அது துண்டு துண்டாக வெட்டப்படுகிறது. பட்டைகளை நீக்கிய பின் அத்துண்டுகளை நீரில் அரைத்துக் கூழாக்கினார்கள். அதனைச் சுத்தம் செய்து துணுக்குகளை அகற்றுவர். கூழை மேலும் இறுகச் செய்வர். அதன்பின் இயங்கிக் கொண்டேயிருக்கும் சல்லடையில் கூழைவார்த்து நீரை நீக்குவர். சல்லடை அதன் பக்கவாட்டில் அதிர்ந்து கொண்டே இருப்பதால் நார்கள் ஒழுங்காக ஒன்றையொன்று நெருங்குகின்றன. மேலும் பல இயந்திரங்கள் வழியே சென்று காகிதம் உலர்ந்து மிருதுவாகி வெளிவரும்.

## காகிதத்தின் பயன்

காகிதத்தின் பயன் பெரிது. புத்தகத்தாள், செய்தித்தாள், மை உறிஞ்சும் தாள், பொருட்களை மடித்துக்கட்டும் தாள், சிகரெட்டுத்தாள் முதலிய பல வகையான காகிதங்களை நாம் பயன்படுத்துகிறோம். ஜப்பானியர் ஆடைக்கும், மிதியடிக்கும், வீடுகள் கட்டவும் காகிதத்தை பயன்படுத்தினர்.

## விந்தைக் காகிதங்கள்

காகிதங்கள் தற்போது புத்தகங்கள் அச்சிடவும், செய்தித்தாள் அச்சிடவும் உபயோகமாகும். வெறும் தாள்களாக மட்டுமல்லாமல் பல இரசாயணப் பொருட்கள், பிளாஸ்க்குகள், ரப்பர்கள், கண்ணாடிப் பொருட்கள் ஆகியவைகளுடன் இணைந்து நினைத்தற்குரிய பலபொருள்கள் செய்வதற்கும் பயன்படுகிறது.

இன்று வீட்டில் நாற்காலிகளுக்கும், காரில் மெத்தைகட்டும் உறையாகவும் மேலை நாடுகளில் சுவர்களில் ஈயும் தூசும் அண்டாதபடி பாதுகாக்கும் ஒட்டி விரிப்புகளாகவும் காகிதம் பயன்படுகிறது. வினைல் (ஏநலேட) என்ற பசை தடவிய தாளை லியோனத்தைப் போலத் தரையில் விரிக்கலாம். இது லியோனத்தைப் போலவே அழகாக இருப்பதோடு நீண்ட நாட்களுக்கும் உழைக்கிறது.

இப்போது காகிதத்தால் இதைச் செய்யமுடியும். இதைச் செய்யமுடியாது என்பதில்லை; எதுவும் செய்ய முடியும். 1942ல் கண்டுபிடிக்கப்பட்ட மேலமைன் பிசினை (Malamin Pesin) கொண்டு பதனிடுவதால் காகிதம் எளிதில் கிழியாத

உறுதியைப் பெறுகிறது. இவ்வாறு செய்யப்படும் தாள் படைகட்குப் போர்க்காலங்களில் உதவக் கூடிய பலவகை படங்களை அச்சிட மிகவும் பயன்படுகிறது.

வெப்பத்தாலும் குளிராலும் கெடாத காகிதங்கள் தற்போது செய்யப்படுகின்றன. இரு பக்கங்களிலும் அலுமினியத் தாள்கள் பொருந்திய இவ்வித காகிதப்பெட்டிகள் சமையல் செய்யும் பாத்திரங்களாகவும், சாப்பிடும் பாத்திரங்களாகவும் பயன்படுகின்றன. இப்பெட்டிகள் சுமார் நானூற்றைம்பது டிகிரி வரை வெப்பம் தாங்கக் கூடியவை.

குறைந்த விலையில் கிடைக்கும் ப ' மொலிதின் என்ற பசை பூசப்பட்ட புதுவிதமான ஈர உறதிக் காகிதம் இப்போது பல மருத்துவமனைகளில் உபயோகிக்கப்படுகிறது. ரப்பர் விரிப்புகளுக்குப் பதிலாக எல்லா இடங்களிலும் இது பயன்படுகிறது. ஒரு பக்கத்தில் நீர் உறிஞ்சும் குணமும் மற்ற பக்கத்தில் ஈரம் பிடிக்காத குணமுள்ள இக்காகிதம் நீர் கசியும் புண்களைக் கட்டவும் உபயோகிக்கப்படுகிறது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள, பல இரசாயன திருத்தங்கள் புகுத்தப்பட்ட இத்தாள் தீப்பிடிப்பதில்லை. விருந்துகளில் அலங்காரம் செய்யும் தாள்களும், காகித உடைகள், போர்வைகள், தொழிற்சாலைகளில் பயன்படும் விரிப்புக்கள் முதலியவைகளும் இந்த முறைகளில் செய்யப் பயன்படுகின்றன. சாம்பலே மிஞ்சாமல் எரியக்கூடிய காகிதமும், துருப்பிடித்தலைத் தடுக்கும் ஆவியை வெளியிடும் காகிதமும் இரசாயனத்தின் விந்தையே காா்பன் காகிதமும் (இஹற்—க்ஷர்ய் ல்ஹல்ங்ழ்) காகிதத்தின் விந்தையே.

### அருஞ்சொற்பொருள்

பெருவழக்கமாயிற்று – மிகுதியாக வழக்கத்தில் இருந்தது; நேரில்லா – ஒப்பு இல்லாத; வியாபிப்பதற்கு – பரப்புவதற்கு; இணைந்து – கலந்து; மேலைநாடு – மேல் நாடு (மேற்கு நாடு).

### வினாக்கள்

1. காகிதம் உற்பத்தி செய்யப்படுவது எவ்வாறு?
2. எழுத்துக்களைக் குறித்து நீவிர் அறிவது யாது?
3. தொழிற்சாலைகளில் காகிதம் எவ்வாறு வெளிவருகிறது?
4. காகிதத்தின் பயன் என்ன?
5. விந்தைக் காகிதங்கள் குறித்து நீங்கள் அறிந்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

# பாடம் - 16

# 11. படக்காட்சியும், வானொலியும்

(புலவர் க. தமிழரசி பி.லிட்.,)

"கல்வி சிறந்த தமிழ்நாடு" எனப் புகழ்பெறும் நம் நாட்டில் எங்கு நோக்கினும் கல்விச் சாலைகள் காட்சி தருகின்றன. கோயில், அரண்மனை, இல்லம் இவற்றில் காவிய நிகழ்ச்சிகளை ஓவியமாக்கி உலகு அறியச் செய்தவர் தமிழர். கல்லாதவரும் எளிதில் அறிந்து மகிழ ஓவியங்களை உருவாக்கினர். அதன் வளர்ச்சியில் தோன்றியதுதான் திரைப்படக்காட்சி ஆகும்.

## படக்காட்சியின் தொடக்கநிலை

தொடக்கத்தில், படக்காட்சியின் வழியாகக் கதைகளையும், நாவல்களையும் நாடகங்களையும் மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். அதைத் திரைப்படம் என்று அழைத்தனர். நாளடைவில் பிற நாடுகளைப் போலவே நம் நாட்டிலும் படக்காட்சியின் வழியாகக் கல்வி கற்பிக்கலாம் என்று எண்ணினர். அந்த எண்ணம் வீணாகவில்லை. ஆங்கிலம், தமிழ், அறிவியல் முதலிய பாடங்களையும் உலகநாடுகளின் சிறப்புக்களையும் மாணவர்கட்குப் படக்காட்சியின் வழியாகக் கற்பித்தனர். அதில் ஓரளவு வெற்றியும் கண்டனர்.

## பள்ளியும் படக்காட்சியும்

பள்ளியில் ஒரு திங்களுக்கு ஒருமுறை படக்காட்சி காட்டப்பட்டு வருகிறது. இதனால், மாணவர்கள் கல்வியில் தனி ஆர்வம் கொள்கின்றனர். படக்காட்சி வழியாகப் பெறும் கல்வி, நெஞ்சை விட்டு அகழ்வதில்லை. விளங்காத பாடங்களையும் படக்காட்சியின் வழியாக எளிதில் விளக்கி விடலாம். நாட்டு முன்னேற்றம் பற்றிய படக்காட்சிகளையும், பெரியோர்களையும் வரலாறுகளையும் கண்டு தெளிவு பெறலாம். செய்திப் படங்கள் மூலம் பல நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளலாம்.

## படக்காட்சியும் வெளி உலகும்

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முன்னைய பழமொழி. படக்காட்சி அரங்கம் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது

இன்றைய பழமொழி. இளைஞர் உலகம் திசை மாறுவதற்கு இப்போதுள்ள திரைப்பட உலகும் ஒரு காரணமாகும். படம் எடுப்போர் இளைஞர் முன்னேற்றத்திற்குரிய படங்களை எடுக்கவேண்டும். நல்ல கதைகளையும், திருத்துவதற்கான வழிகளையும் அமைக்க வேண்டும். வெளிநாட்டினர் படக்காட்சி மூலம் பெரிதும் முன்னேறியுள்ளனர். நம்நாட்டிலும் கல்விப்படக்காட்சி இன்னும் முன்னேற்றம் அடையவேண்டும்.

பட உலகத்தால் முன்னேறியவர் சிலர்; பின்னடைந்தவர்கள் பலர். சமுதாய வளர்ச்சியில் பங்கு கொள்ள விரும்பும் இளம் தலைமுறையினருக்குச் செய்தித்துறை வெளியீட்டினர் சிறந்த செய்திப் படங்களை உருவாக்கி அளிக்க வேண்டும். வெளிநாட்டுச் செய்திப் படங்களையும் தருவித்துக் காட்டுதல் நலம் தரும்.

படக் காட்சியால் கல்வி அறிவு வளர்கிறது. மாணவர்கள் தூரத்துக் காட்சிகளையும் கண்டு பயன் அடைகின்றனர். பாடம் பற்றிய படங்கள் மிகுதியாக நம்நாட்டில் தயாரிக்கப்பட வேண்டும். படக்காட்சியால் பள்ளிக் கல்வி மேலும் வளர ஆவன செய்ய வேண்டும்.

### வானொலி

வானொலி உலகில் எல்லா நாடுகளிலும் பயன்படுத்தப்படுகிறது. சிற்றூர்களிலும் சிறிய கடைகளிலும் வானொலியைக் கேட்க முடிகிறது. உலகச் செய்திகளை மிக விரைவில் வானொலிப் பொறி மூலம் கேட்டு மகிழ்கிறோம். இந்த வாய்ப்பினை அறிவியல் உலகம் மக்களுக்கு வழங்கியுள்ளது. மானிடன் செய்த மாண்புறு செயல்களில் வானொலியும் ஒன்றாகும்.

வானொலியைக் கண்டுபிடித்தவர் இத்தாலிய நாட்டு மார்க்கோனி என்னும் விஞ்ஞானியாவார். இவர் இத்தாலியில் பெலோனோ என்னுமிடத்தில் கி.பி. 1874 ஆம் ஆண்டில் பிறந்தவர். இவரது முழுப்பெயர் குக்லி பெல்மோ மார்க்கோனி என்பது. இவர் தமது நுண்ணறிவால் வானவெளியில் உள்ள ஈதர் என்னும் பொருளைக் கண்டறிந்தார். இதன் மூலம் மின் அலைகள் எங்கும் பரவக்கூடும் என்பதைக் கண்டறிந்தார். கம்பியின்றிச் செய்தியனுப்பும் கருவிகளை அவர் ஆராய்ந்தார். அந்த ஆராய்ச்சியின் பயனாக ரேடியோ என்னும் வானொலியை உருவாக்கினார்.

### செய்முறை

வானொலிக்கு ஒலிபரப்பு நிலையம் இன்றியமையாதது. ஒலிபரப்பும் நிலையம் ஓரிடத்தில் அமைக்கப்பட்டுச் செயல்படும். இந்தியாவில் இந்தியச் செய்திகளை

ஒலிபரப்புகின்ற ஒலிபரப்பு நிலையம் டெல்லியில் உள்ளது. அங்கே ஒலிபரப்பும் வானொலிச் செய்திகளை இந்தியாவிலும் வேறு நாடுகளிலும் அமைக்கப்பட்டிருக்கும் ஒலிபெறு வானொலி நிலையங்களிலும் கேட்டறியலாம். தமிழ் நாட்டில் தமிழ்நாட்டுச் செய்திகளை ஒலிபரப்புகின்ற ஒலிபரப்பு நிலையங்கள் சென்னை, திருச்சி, நெல்லை, கோவை, மதுரை நகரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஒருவர் பேசுவதையோ, பாடுவதையோ வானொலிப்பெட்டி மூலம் கேட்டு இன்புறுகிறோம்.

## செயல்படும் முறை

ஒருவர் பேசுவதினாலோ, பாடுவதினாலோ உண்டாகும் ஒலிகளை மின்காந்தத்தால் ஆகிய கருவி மின் அலைகளாக மாற்றி வானில் செலுத்துகின்றது. அந்த அலைகள் வானில் உள்ள ஈதரின் வழியாகப் பல திசைகளுக்கும் பரவுகின்றன. அலைகளை ஏற்றுக்கொள்ளும் ஒலி வாங்கியானது அலைகளை எளிதில் ஏற்று ஒலிபெருக்கியில் செலுத்துகிறது. அப்போது அந்த அலைகள் பழைய ஒலி போலவே தெளிவுறக் கேட்கிறது. இந்தக் கருவிகள் அனைத்தும் சேர்ந்ததே வானொலிப் பெட்டியாகும். இப்பெட்டிகள் நம் நாட்டில் தயாரிக்கப்படுகின்றன.

## பயன்

வானொலியால் மக்கள் அடையும் பயன்கள் பலவாகும். இதன் உதவியால் விமானம், கப்பல் இவற்றில் செல்லும் உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன. பல்லாயிரக்கணக்கான கி.மீ. தொலைவில் நடந்தவற்றை உடனே கேட்க முடிகிறது. பொருள்களின் விலைகளையும், வானிலை விபரங்களையும் உடனுக்குடன் தெரிவிக்கின்றது. வெள்ளப்பெருக்கு, பூகம்பம், புயல் இவற்றினை அறிந்து தப்பித்துக் கொள்ள முடிகிறது. கவலையை இசையால் போக்கி மகிழ்விக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக செய்திகளை உடனே அறிய முடிகிறது. கல்வி சம்பந்தமான பாடங்களையும் வானொலி மூலம் கற்கலாம். மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பல பாடங்களை வானொலி மூலம் கற்பிக்கின்றது. இதனால், அஞ்சல்வழி மூலம் கற்கும் மாணவர்கள் நல்ல பயனை அடைந்து வருகின்றனர்.

## முடிவுரை

வானொலி, அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. இதைக் கண்டுபிடித்த அறிவியல் அறிஞருக்கு உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

அறிவியல் வளர்கிறது. விஞ்ஞானிகளின் முன்னேற்றத்தைக் கண்டு உலகம் வியப்படைகிறது. மேலும் அவர்தம் முயற்சிகள் வளர்க! உலகம் வாழ்க!

### வினாக்கள்

1. திரைப்படக் காட்சியின் தொடக்க நிலை பற்றி எழுதுக.
2. பள்ளியில் திரைப்படக் காட்சியில் விளையும் பயன் யாது?
3. எத்தகைய திரைப்படங்கள் தேவை?
4. மனிதன் செய்த மாண்புறு செயல்கள் யாவை?
5. வானொலியைக் கண்டுபிடித்தவர் யார்? எவ்வாறு கண்டுபிடித்தார்.
6. வானொலி செயல்படும் முறையினை விளக்குக.
7. வானொலியின் பயன் குறித்துப் பத்து வரிகள் எழுதுக.
8. திரைப்படமும் வானொலியும் பற்றி இரண்டு பக்க அளவில் ஒரு கட்டுரை வரைக.

## 12. நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ்

(திரு. தணிகை உலகநாதன்)

பரம்பரை பரம்பரையாய் அடிமைத்தளையில் சிக்கியிருந்த நம் பாரதநாடு தற்போது உரிமைபெற்ற திருநாடாக விளங்குகிறது. தாயின் மணிக்கொடி தகதகவென வானவீதியில் பட்டொளி வீசிப் பறக்கிறது. "ஆடுவோமே பள்ளிப்பாடுவோமே" என்னும் உரிமைகீதம் திக்கெட்டும் முழங்குகிறது. நாம் "எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம்" என்னும் ஒற்றுமை மனப்பான்மையோடு வாழ்கிறோம். நம்நாடு உரிமை பெறுவதற்கும் நாம் இந்நிலையை அடைவதற்கும் பெருந்தொண்டுபுரிந்த தேசியப் பெருமக்களில் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. அவர் தொண்டுகள் இந்திய வரலாற்றுப் பொன்னேடுகளில் வைர எழுத்துக்களால் பொறிக்கத்தக்க பெருமை உடையனவாகும்.

முற்காலத்தில் இருபத்து நான்கு பர்கானாக்கள் என்னும் மாவட்டத்தில் கோதலியா என்னும் சிற்றூர் உண்டு. அச்சிற்றூரில் வாழ்ந்தவர் ஜானகிநாதர் என்பவர். அவர் மனைவியார் பிரபாவதி என்னும் அம்மையாவார். இருவருக்கும்

அருந்தவ மைந்தராய் 1892–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23–ஆம் நாள் கடக் என்னுமிடத்தில் நம் நேத்தாஜி பிறந்தார். குழந்தைப் பருவத்திலிருந்தே அவர் மதிநுட்பம் மிக்கவராய் விளங்கினார். தெய்வபக்தியும் தேசப்பற்றும் மிக்கவராய்த் திகழ்ந்தார்.

நம் சுபாஷ் எப்போதும் எளிமையாகவே இருப்பார். ஒருவேலை உணவுதான் உண்பவர். இரவில் தரையில் தான் படுத்துக் கொள்வார். ஒருசமயம் அவர் தம் அன்னையார் அவரைக் கட்டிலில் படுத்துக் கொள்ளுமாறு கூறினார்.

அதற்கு அவர் அன்னையே சிவபெருமான் கைலாயத்தில் பாறை மீது தானே இருக்கின்றார் என்றார்.

சிறுவயதிலேயே அவர் புராண இதிகாசக் கதைகளைத் தம் அன்னையாரிடம் கேட்டு இன்புற்றார். ஏழைக்குச் செய்யும் உதவியே இறைவனுக்குச் செய்யும் வழிபாடு என்று கருதினார்; உலக ஆடம்பரங்களை அறவே வெறுத்தார். கல்கத்தாவில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய சொற்பொழிவுகளைக் கேட்டார். அவரைப் போலவே தமக்கும் ஒரு ஞானகுரு வேண்டுமெனத் தேடி டில்லி, ஆக்ரா, மதுரை, காசி முதலிய இடங்களில் அலைந்தார். மெய்யான குருவைக் காணாமல் வீடு திரும்பினார். சுபாஷ் முறையாகக் கல்வி பயின்று எம்.ஏ., படிக்கத் தொடங்கினார். அவர் தந்தையார் அவரை ஐ.சி.எஸ் படிப்புக்காக இங்கிலாந்துக்கு அனுப்பினார். ஆனால், சுபாஷ் நாட்டுப்பணிக்காக அந்த படிப்பை உதறித் தள்ளிவிட்டுத்தாயகம் திரும்பினார். சுதந்திர வீரரும் தியாகியும் ஆன சி.ஆர்.தாஸுடன் சேர்ந்து விடுதலைப் போரில் ஈடுபட்டார். காந்தியடிகளின் எளிய வாழ்க்கையும், உயர்ந்த ஒழுக்கமும் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அவரையே தம் அரசியல் குருவாக ஏற்றார். வங்காளத்தில் சத்தியாகிரக இயக்கம் தீவிரமாக, நடைபெற்றது. சி.ஆர்.தாஸ், போஸ் ஆகிய இருவரையும் ஆங்கிலேயே அரசு கைது செய்தது. போஸுக்கு ஐந்து மாதம் வெறுங் காவல் தண்டனை கிடைத்தது. தண்டனையைக் கேட்ட அவர் புன்னகை புரிந்தார். நான் என்ன கொழித்திருடனா ? இவ்வளவு குறைந்த தண்டனை கொடுத்திருக்கிறார்களே ? வாழ்க்கையின் பெரும் பகுதியைச் சிறையில் கழிக்கப் போகிறோம் என்பதை அவர் அப்போது உணரவில்லை.

சுபாஷ் 1922-ஆம் ஆண்டில் "இளைஞர் கட்சி" என்னும் ஒரு கட்சியைத் தொடங்கினார். உழவர்களுக்கு உதவி செய்வதும் நாட்டு விடுதலைக்குப் பாடுபடுவதுமே இக்கட்சியின் நோக்கங்கள் ஆகும். உழவர்களுக்கு மரம் வெட்டுதல், குளம், கிணறு தோண்டுதல், வீடுகட்டுதல் ஆகியவற்றில் முழு உரிமை வேண்டுமென்று அவர் ஓயாமல் பேசி வந்தார். தன்னலமற்ற அவரது தூய தொண்டினால் அவரது புகழ் நாடெங்கும் பரவலாயிற்று.

தொழிலாளர்களுக்கும் உழவர்களுக்கும் தேசிய உணர்ச்சியை ஊட்டி வந்தமையால் அவரை அரசாங்கம் விசாரணையின்றி அலிப்பூர் சிறையில் வைத்தது. சிறையில் அவரது உடல்நலம் குன்றியது. வயிற்றுக் கோளாறும் முதுகுவலியும் ஏற்பட்டன. இவ்வாறு போஸ்நாட்டு விடுதலைக்குத் தம் உடல்நலத்தை முதற்பலியாக்கினார். சில நாட்களில் உடல் நலம் பெற்றார்.

1927-இல் பாரத நாட்டுக்குக் குடியேற்ற நாட்டு உரிமையுடன் கூடிய சுயாட்சி வழங்குமாறு மோதிலால் நேரு ஓர் அறிக்கை வெளியிட்டார். ஆனால் நம் போஸ் அதை விரும்பவில்லை. அவர் மைந்தரான ஜவஹர்லால் நேருவுக்கும் அது பிடிக்கவில்லை. முழு உரிமையே வேண்டுமென விரும்பினார். ஆனால் மகாத்மாகாந்தி நடுத்தரமான ஒரு தீர்ப்பைக் கூறினார். 1929-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31ஆம் நாளுக்குள் ஆங்கில ஆட்சியினர் மோதிலால் நேருவின் அறிக்கையை ஏற்கத் தவறினால் முழுசுயராச்சியமே கோரிக்கையாகும் என்று அறிக்கை வெளியிட்டார். அதனை நாட்டுத் தலைவர்கள் அனைவரும் ஏற்றனர்.

காந்தியடிகளின் கோரிக்கை ஏற்கப்படவில்லை. மகாத்மா உப்புச் சத்தியாகிரகம் தொடங்கினார். மக்கள் உப்புச் சட்டத்தை மீறி சிறை சென்றனர். சிறைகள் எல்லாம் நிரம்பி வழிந்தன. அப்போது நடந்த கிளர்ச்சியின் பலனாகப் போஸ் பலமுறை சிறை சென்றார். மாண்ட்லே சிறையில் அவர் முன்போல் முதுகுவலியால் துன்பப்பட்டார். மருத்துவத்துக்காக சுவிட்சர்லாந்துக்கு அனுப்பப்பட்டார்.

அங்கு அவர் உடல் நலமுற்றார். அங்கிருந்து ரோமாபுரி, அயர்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார். மூன்று ஆண்டுகள் வெளிநாடுகளில் தங்கியிருந்தார். அவர் தாய் நாட்டுக்குத் திரும்ப அரசு இயலவில்லை. வெளிநாடுகளிலும் இந்திய விடுதலைப் போரைப் பற்றிச் சொற்பொழிவுகள் புரிந்தார். 1936 ஆம் ஆண்டு நடைபெற்ற "லக்னோ" காங்கிரஸ் பேரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள சுபாஷ் புறப்பட்டார். இவர்

இந்திய மண்ணில் கால் வைத்ததும் ஆங்கில அரசு அவருக்குப் பதினெட்டு திங்கள் சிறைத் தண்டனை அளித்தது.

1935–இல் பிரிட்டன் இந்தியாவுக்கு மாகாண சுயாட்சி வழங்கியது. காங்கிரஸ் பொதுத்தேர்வில் கலந்து ஏழு மாநிலங்களில் வெற்றி பெற்றது. சுபாஷ் விடுதலை ஆனார். 1940–இல் நடைபெற்ற திரிபுரா காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆறு திங்களுக்குள் பிரிட்டன் இந்தியாவுக்கு விடுதலை வழங்கவேண்டும். இன்றேல் பிரிட்டனுக்கு எதிராக மக்களைத் திரட்டவேண்டும் என்று சுபாஷ் அறிக்கை வெளியிட்டார். அதனை காந்தியடிகள் போன்ற பெருந்தலைவர்கள் விரும்பவில்லை. காங்கிரசுக்குள் பிளவை விரும்பாத சுபாஷ் தலைமைப் பதவியிலிருந்து விலகி பார்வர்டு பிளாக் (முன்னணிக்கட்சி) என்னும் கட்சியை நிறுவினார். நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். கட்சிக் கிளைகளை நிறுவினார். அலைச்சல் காரணமாக மீண்டும் அவரது உடல்நலம் குன்றியது.

கல்கத்தாவில் ஹால்வெல் என்னும் ஆங்கிலேயரின் நினைவுச் சிலையை அகற்றவேண்டும் என்னும் கிளர்ச்சி நடைபெற்றது. கிளர்ச்சியில் முன்னணியில் நின்ற சுபாஸுக்கு மீண்டும் சிறைதண்டனை கிடைத்தது.

சிறையில் அவருக்கு ஒரு சிந்தனை தோன்றியது. அவர் வரலாற்றின் ஏடுகளைப் புரட்டினார். அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டனை எதிர்த்து விடுதலைப்போர் நடத்திய போது பிரான்ஸ் உதவி புரிந்தது. சொந்த நாட்டின் சுதந்திரத்தைப் பெறுவதற்கு வெளிநாடுகளின் துணையைப் பெறுவது தவறு அல்ல என்பதை உணர்ந்தார். வெளிநாடு செல்வதென்று முடிவு செய்தார். சுபாஷ் சிறையில் ஆறுநாள் பட்டினி கிடந்தார். அரசாங்கம் அவரை விடுதலை செய்தது. உடல்நலம் பெற்ற பின்னர் மீண்டும் அவரை சிறைப்படுத்த எண்ணியது. ஆனால், விடுதலை பெற்ற சிறைப்பறவையாகிய நம் சுபாஷ் மாஸ்கோவுக்குச் செல்ல விரும்பினார். ரஹமத்கான், உத்தமசந்த் முதலிய நண்பர்கள் உதவியால் ஜெர்மனியின் தலைநகர் ஆன பெர்லின் சென்றார். அங்கு ஹிட்லரிடம் அளவளாவினார். ஹிட்லர் அவரை இந்தியாவின் பெருந்தலைவர் எனக் கொண்டாடினார். பின்னர் சுபாஷ் இத்தாலிக்குச் சென்றார். அங்கும் அவருக்குச் சிறந்த வரவேற்பு கிடைத்தது. ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் அவர் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். ஜெர்மனியில் 4000 வீரர்களைக் கொண்டே சுதந்திர இந்தியப் படையை நிறுவினார்.

சுபாஷ் சென்ற இடமெல்லாம் பட்ட வழித்துன்பங்களுக்கு அளவே இல்லை. கரடுமுரடான மலைப்பாதைகள், கல்லும் முள்ளும் செறிந்த காடுகள், கடும்பனி, தாங்கமுடியாத குளிர் இவற்றையெல்லாம் தாங்கிச் செல்ல வேண்டியவரானார்.

இதற்கிடையே இரண்டாம் உலகப்போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. ஜப்பான், சிங்கப்பூரை எளிதாகக் கைப்பற்றியது. தாய்லாந்து, மலேசியா, அந்தமான் தீவுகள் எல்லாம் ஜப்பானியர் வசமாயின. பிரிட்டிஷ் வீரர்கள் பின்வாங்கினார்கள். தூரக்கிழக்கில் வாழ்ந்த முப்பது இலட்சம் இந்தியர்களைக் காக்க அவர்களால் முடியவில்லை. அவர்களுக்காக போராடிய இந்திய ராணுவத்தைக் கூட அவர்களால் போற்றவில்லை.

அவ்வமயம், ராஷ்பிகாரிபோஷ் என்பவர் இந்திய யுத்தக் கைதிகளைக் கொண்டு முதல் இந்திய ராணவத்தைக் காப்டன் மோகன்சிங் தலைமையில் நிறுவினார். ஜப்பானில் நிகழ்ந்து கொண்டிருந்த செய்திகளை அறிந்த சுபாஷ், ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பலில் தந்திரமாக ஜப்பானை அடைந்தார். டோக்கியோவில் அவருக்கு சிறந்த வரவேற்பு கிடைத்தது. அங்கிருந்து சிங்கப்பூர் சென்றார். இந்திய தேசிய ராணுவத்தலைவர்களைச் சந்தித்தார். சுபாஷ் கூறிய போர்த் தந்திரங்களும் நுட்பங்களும் கானகப் போர் முறைகளும் அவர்களுக்குப் பெரும் வியப்பைத் தந்தன. அவரிடம் அவர்களுக்கு முழுநம்பிக்கை உண்டாயிற்று. மரணத்துக்கு அஞ்சாத மாவீரர்களாக அவர் ஆணையை மேற்கொண்டு நடக்க ஆயத்தமானார்கள் 1913 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சுபாஷ் சந்திரபோஸ் சுதந்திர இந்திய அரசைச் சிங்கப்பூரில் அமைத்தார். இந்திய தேசிய இராணுவம் இந்திய எல்லையைக் கடந்து இந்தியாவுக்குள் நுழைந்து பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்தை நீக்கவேண்டும் என்பது அவரது திட்டம்.

இந்திய வீரர்களை நோக்கி, "இறைவன் மீது ஆணை"! பாரத நாட்டை விடுவிப்பதற்காக இறுதி மூச்சு வரை போராடுவேன்; என்றைக்கும் பாரதத்தின் ஊழியனாக இருப்பேன்; பாரதத்தின் நலனே என் வாழ்வின் குறிக்கோள். உரிமை பெற்ற பின்னரும் சுதந்திரத்தைக் காக்க என் சேவை தேவைப்படின் என் செந்நீர் இறுதிச் சொட்டையும், அன்னையின் காலடிகளில் ஒப்படைப்பேன் என்று சூளுரைத்தார்.

வீரர்களும் அவரை பின்பற்றிச் சூளுரை கூறினார்கள். எல்லோரும் தேசியகீதம் பாடினார்கள். 1943 ஆம் ஆண்டு ஜனவரி 7 ஆம் நாள் இந்திய தேசிய அரசின் தலைமைச் செயலகம் சிங்கப்பூரிலிருந்து இரங்கூனுக்கு மாற்றப்பட்டது. 28ம் நாள் சுபாஷின் ஆணைப்படி இந்திய தேசிய ராணுவம் இந்தியாவை நோக்கிப் புறப்பட்டது. மார்ச் 18 ஆம் நாள் பாரத அன்னையை எண்ணி, அன்னையே நின் அடிமை விலங்குகளை உடைத்தெறிந்து இந்தியரைச் சுதந்திர மக்களாக்கும் வரை உறங்க மாட்டோம். இஃது உறுதி எனச் சூளுரைத்தார். தேசிய ராணுவத்திற்கும் பிரிட்டிஷ் ராணுவத்திற்கும் போர் நடந்தது. பிரிட்டிஷ் இந்தியப்படை பல இடங்களில் தோற்றது. தேசியப்படையினர் மணிப்புரி கோஹிமா முதலிய நகரங்களில் புகுந்தனர். 1944ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் படையினர் அவற்றை மீட்டுக் கொண்டனர். அப்போது பெய்த அடைமழையே தேசிய படையினரின் பக்கம் வலுத்தது. ஜப்பானியப்படை பர்மாவிலிருந்து வெளியேறியது. தேசிய ராணுவப் படையின் தலைமைத் தளபதி நேத்தாஜியும் வெளியேறினார். வெளியேறுமுன் அவர் தேசிய வீரர்களுக்குக் கூறிய செய்தியை படிக்கப்படிக்க உள்ளம் உருகும் கண்ணீர் பெருகும்.

வீரர்களே, ஒளி தோன்றுவதற்கு முன் இருள் அடைகிறது என்பதை நம்புங்கள். பாரதம் விடுதலை பெறுவது உறுதி. மிக விரைவில் விடுதலையடையும். இறைவன் உங்களை வாழ்த்துவானாக, என்பதே அச்செய்தியாகும்.

இந்திய தேசிய வீரர்கள் இறுதிவரை போராடினார்கள். அமெரிக்கா, ஜப்பான் மீது அணுக்குண்டு வீசியது. அதை தொடர்ந்து 1945 ஆகஸ்டு 15ஆம் நாள் ஜப்பான் நேச நாடுகளில் சரணடைந்தது.

சுதந்திர இந்தியத் தற்கால அரசின் தலைவரான நேத்தாஜி 1945 ஆகஸ்டு 16ஆம் நாள் ஜப்பானிய அரசிடம் பேச்சு நடத்துவதற்கு விமானத்தில் சென்றார். 18ஆம் நாள் பிற்பகல் 2 மணிக்கு, பார்மோசாவைச் சேர்ந்த ஹோக்கு என்னும் விமான நிலையத்தில் அவர் விமான விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்தார். அவர் ஜப்பானில் உள்ள மருத்துவநிலையம் ஒன்றில் சேர்க்கப்பட்டார். மருத்துவம் பயனளிக்கவில்லை. வாழ்நாள் எல்லாம் பிறந்த பொன்னாட்டை எண்ணித் தியாகங்கள் பல புரிந்த அப்பெருமகனாரின் பேச்சு அடங்கியது; மூச்சு ஒடுங்குகியது; உயிர்ப்பறவை பறந்து விட்டது; வீர விளக்கு அணைந்து விட்டது. தேசிய மாவீரர், ஒருவரின் கதை முடிந்து விட்டது. எனினும் நாட்டு மக்களின் உள்ளத்தே அவர்

ஏற்றிவைத்த உரிமை விளக்கு என்றும் அணையா விளக்காகக் கொழுந்து விட்டு ஒளிவீசும் என்பதில் ஐயமில்லை.

## அருஞ்சொற்பொருள்

கோரிக்கை – வேண்டுகோள்; சத்தியாகிரகம் – அறப்போர்; டோக்கியோ – ஜப்பானின் தலைநகரம்; ஆயத்தமானார்கள் – தயாரானார்கள்; செந்நீர் – இரத்தம்; சூளுரைத்தார் – சபதம் செய்தார்.

## வினாக்கள்

1. சுபாஷ் சந்திர போஸின் இளமை பருவத்தில் காணப்பட்ட அருங்குணங்கள் யாவை?
2. இளைஞர் கட்சியின் இலட்சியங்கள் யாவை?
3. சுபாஷ் சந்திரபோஸ் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளைத் தொகுத்துப் பதினைந்து வரிகளில் எழுதுக.
4. நேத்தாஜி வெளிநாடு செல்ல விரும்பியது ஏன்?
5. தேசிய ராணுவத்தின் திறமைகளைக் குறித்து நீவிர் அறிவன யாவை?
6. பிரிட்டிஷ் இந்தியப் படையினருக்கும் தேசிய ராணுவப்படையினருக்கும் நடந்த போர் நிகழ்ச்சியை விளக்குக.
7. சுபாஷ் சந்திரபோஸ் மறைவைப் பற்றி நீவிர் அறிவன யாவை?
8. நேத்தாஜி சுதந்திரப் போராட்டத்தில் அடைந்த துன்பங்கள் யாவை?

# பாடங்கள் 20 & 21
# இலக்கணம் - எழுத்து

## 1. முதல் எழுத்துக்கள், சார்பு எழுத்துக்கள்

உயிர் எழுத்துப் பன்னிரெண்டும், மெய் எழுத்துப் பதினெட்டும் ஆக முப்பதும் முதலெழுத்துக்களாகும்.

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம் என்னும் பத்தும் சார்பெழுத்துக்களாகும்.

## 2. ஐகாரக் குறுக்கம்

ஐ என்பது உயிர்நெட்டெழுத்து, இதற்கு மாத்திரை இரண்டு. அந்த எழுத்து சில இடங்களில் தன் மாத்திரையில் குறைந்து ஒலிக்கும். அது ஐகாரக்குறுக்கமாகும். இக்குறுக்கம் சொல்லின் முதல், இடை, கடை என்னும் மூவிடங்களில் வரும்.

எடுத்துக்காட்டு ஐப்பசி – முதல் வந்த ஐகாரக் குறுக்கம்

வலைஞர் – இடையில் வந்த ஐகாரக் குறுக்கம்

குவளை – கடையில் வந்த ஐகாரக் குறுக்கம்

## 3. ஔகாரக் குறுக்கம்

ஔ என்பது உயிர்நெட்டெழுத்து இதற்கு மாத்திரை இரண்டு. இது மொழிக்கு முதலில் தன் மாத்திரையில் குறைந்து ஒலிக்கும். எடுத்துக்காட்டாக ஔவை; இதில் உள்ள ஔ என்பது தன் மாத்திரையின் ஒலிப்பதால் ஔகாரக் குறுக்கமாகும்.

## 4. போலியும் வகையும்

ஒரு சொல்லில் ஓரெழுத்து உள்ள இடத்தில் இவ்வெழுத்துக்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து நின்று பொருள் மாறுபடாமல் இருப்பது போலி எனப்படும். போலி மொழி முற்போலி, மொழியிடைப் போலி, மொழியிறுதிப் போலி என மூன்று வகைப்படும்.

முதற்போலி : பசல்—பைசல், மஞ்சு—மைஞ்சு, மயல்—மையல்
இடைபோலி : அமச்சு—அமைச்சு, இலஞ்சு—இலைஞ்சி
இறுதிப்போலி : அகம்—அகன், முகம்—முகன், நலம்—நலன்

சொல்

ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துக்கள் தொடர்ந்தோ பொருளை உணர்த்துவது சொல் எனப்படும்.

மூவகை மொழிகள் : தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என்பன மூவகை மொழிகள் ஆகும்.

தனிமொழி : சொற்கள் தனியே நின்று தத்தம் பொருளை உணர்த்துவது தனிமொழியாகும். (எ—டு) பூ, தாய், நிலம் வந்தார்.

தொடர் மொழி : பல தனிமொழிகள் தொடர்ந்து பொருள் தருவது தொடர்மொழியாகும். (எ—டு) பஞ்சுமெல்லியது, கபிலர் பரணர், நனியழகு

பொது மொழி : தனிமொழிக்கும், தொடர் மொழிக்கும் பொதுவாய் அமையும் சொற்கள் பொதுமொழி எனப்படும்.
(எ—டு) தாமரை, இது மலரைக் குறிக்கும் போது தனிமொழி தா+மரை எனப் பிரித்து, தாவுகின்ற மான் என்னும்போது தொடர்மொழி. எனவே
தாமரை பொதுமொழி.

பகுபத உறுப்புக்கள்

பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என்னும் ஆறும் பகுபத உறுப்புகளாகும்.

பகுதி : சொல்லின் முதலில் நிற்கும் உறுப்பு
விகுதி : சொல்லின் இறுதியில் நிற்கும் உறுப்பு
இடைநிலை : பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்கும் உறுப்பு
சந்தி : பகுதியுடன் பிறவுறுப்புகள் சேரும் போது புணர்ச்சிவிதிப்படி இடையில் தோன்றும் உறுப்பு
சாரியை : பகுதியோடு இடைநிலையும், இடைநிலையோடு விகுதியும் பொருத்தமாகச் சார்ந்து இயையும் உறுப்பு
விகாரம் : பகுதி, சந்தி திரிந்து வருதலும், செய்யுள் இலக்கணத்திற்கு ஏற்ப வரும் வலித்தல் மெலித்தல் முதலியனவும் விகாரம் எனப்படும்.

எடுத்துக்காட்டு : கண்டனன் : காண்ட + ட் + அன், காண்—பகுதி, காண்—விகாரம், ட்—இறந்தகால இடைநிலை, அன் சாரியை; அன் விகுதி.

## முக்கால இடைநிலைகள்

இறந்தகால இடைநிலைகள் த்,ட்,ற்,இன்

எ—டு. : படி + த் + த + ஆன் – படித்தான்(த்)

உண் + ட் + ஆன் – உண்டான் (ட்)

நில் + ற் + ஆன் – நின்றாள்(ற்)

போ + இன் + ஆள் – போயினாள்(இன்)

நிகழ்கால இடைநிலை ஆ நின்று, கின்று, கிறு

நடவாநின்றான் – நட + ஆ நின்று + ஆன்

நடக்கின்றான் – நட + கின்று + ஆன்

எதிர்கால இடைநிலைகள் : ப், வ்

உண்பான் – உண் + ப் + ஆன்

செல்வான் – செல் + அ + ஆன்

### முற்றெச்சம்

வினைமுற்று எச்சப் பொருளை உணர்த்தி வருமானால் அது முற்றெச்சம் எனப்படும்.

எ—டு : கண்டனன் வாங்கினான்; இதில் கண்டனன் என்னும் வினைமுற்று கண்டு எச்சப் பொருளைத் தருதலால் இது முற்றெச்சம் எனப்படும்.

### வியங்கோள் வினைமுற்று

வாழ்க, வருக, வாழிய, வாழியர் இவை வியங்கோள் வினைமுற்றுக்கள். இதன் விகுதிகள் க, இய, இயர், அ, அல், உம் முதலியன. ஐந்து பால்களிலும் மூன்று இடங்களிலும் வியங்கோள் வினைமுற்று வரும். வாழ்தல். வைதல், வேண்டல், விதித்தல், உறுதிகூறல் முதலிய பொருள்களில் வரும் ஏவலுக்கும் வியங்கோளுக்கும் உள்ள வேறுபாடுகள்.

ஏவல் : ஏவல் பொருளில் தான் வரும்.

முன்னிலையில் மட்டும் வரும்.

ஒருமை பன்மை போன்ற வேறுபாடு உண்டு.

அதிகாரத்தோடு வரும்.

எ–டு : வா, உண், படி, செல்

வியங்கோள் : வாழ்தல், வைதல், வேண்டல் முதலிய பொருள்களில் வரும் திணை இருதிணை, மூவிடங்களில் வரும்.

ஒருமை பன்மை உணர்த்தும் தனிவிகுதிகளில் இல்லை.

எ–டு : வருக, உண்க, படிக்க, செல்க.

## இடைச்சொல்

பெயரும் வினையும் போலத் தனித்து இயங்காது பெயரோடும் வினையோடும் சேர்ந்து வரும் சொல்லிற்கு இடைச்சொல் என்று பெயர். மன், மற்று, அம்ம, ஆங்கு என, என்று ஆகியவை இடைச்சொற்கள்.

எ–டு :கோவென அழுதான், பொகுக்கென எழுந்தான்.

பண்டு காடு மன்

மற்று அறிவோம் நல்வினை

அதுமாற்றம்ம, அம்மவாழி தோழி,

ஆங்காங்கு ஆயினும் மாக

என, என்பது என்று என வரும். கோவென்று அழுதான். என என்னும் இடைச்சொல் அசைநிலை, ஒழியிசை, ஆக்கம், கழிவு, மிகுதி, நிலைபேறு என்னும் ஆறு பொருள்களில் வரும்.

## உரிச்சொல்

பெயர், வினை போல் தனித்து இயங்காது. பெயரையும் வினையையும் சார்ந்து, பலவகைப்பட்ட பண்புகளை உணர்த்தி செய்யுட்கு உரியதாக வரும் சொல் உரிச்சொல் எனப்படும். ஒரு குணம் தழுவிய பல உரிச் சொல். பலகுணம் தழுவிய ஓர் உரிச்சொல் என உரிச்சொல் இருவகைப்படும்.

(அ) சால, உறு, தவ, நனி, கூர், கழி என்பவை மிகுதி என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாகும்.

(எ–டு) சாலப்பேசினான், தவப்பிந்கு

உறு புகழ், நனி தின்றான்.

(ஆ) கடி என்னும் உரிச்சொல் காவல், மணம், விளக்கம், முதலாவது பல குணங்களை உணர்த்தி வரும். ஆதலால் கடி என்பது பலகுணம் தழுவிய ஓர் உரிச்சொல்லாகும்.

எ—டு : கடு மதில் – (காவல்); கடிமலர் – (மணம்)
கடி நுனைக்கனை – (கூர்மை), கடிமார்பன் – (விளக்கம்)
சினைவினை, முதல்வினை
மரம் – முதற்பெயர்
கிளை – சினைப்பெயர்

சினைப்பெயரும் அதற்குரிய முதற்பெயரும் சேர்ந்து வரும் தொடர்களில், சினைப்பெயருக்கு உரிய வினை சினைவினை எனவும் முதற்பெயருக்குரிய வினை முதல்வினை எனவும் கூறப்படும்.

எ—டு : கொம்பு ஒடிந்து யானை வருந்தியது.

இத்தொடரில் ஒடிந்து என்பது கொம்பு என்னும், சினைப்பெயருக்கு பயனிலை. ஆதலால் இவ்வினை சினைவினை, வருந்தியது என்பது யானை என்னும் பெயருக்கு பயனிலை ஆதலால் இது முதல்வினை.

கிளை ஒடிந்து வீழ்ந்தது – சினைவினை
மரம் வீழ்ந்தது – முதல்வினை

**ஒன்றொழி பொதுச் சொல்**

இரு திணையிலும் ஆண், பெண் பால்களுக்குப் பொதுவான சொல் அல், ஆன், பெண் பால்களுள் ஒரு பாலை ஒழித்து ஒரு பாலைக் குறிப்பினால் உணர்த்துமாயின் அச்சொல்லிற்கு ஒன்றொழி பொதுச் சொல் என்று பெயர்.

எ—டு : ஆயிரம் மக்கள் போர் செய்தனர். போர் செய்தனர் என்ற வினை பெண்பாலை ஒழித்து ஆண்பாலை உணர்த்தியது.

மரபு : எப்பொருளை எவ்வாறு எந்த சொல்லால் சான்றோர் சொன்னார்களோ அப்பொருளை அந்தச் சொல்லால் அவ்வாறு சொல்வது மரபாகும்.

**இடைபிறவரல்**

வேற்றுமை உருப்பெற்ற பெயர்களும், வினை முற்றுக்கும், பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் ஆகிய இவைகட்கும், இவற்றை முடிக்கும்

சொல்லாகிய பெயர் வினைகட்கும் இடையில் அவ்விடத்திற்குப் பொருத்தமாக வரும் பிற சொற்களுக்கு இடைப்பிறவரல் என்று பெயர். எ–டு : முருகன் (வயிறு நிரம்ப) உண்டான்.

## ஒரு பொருட் பன்மொழி

சொல்லின்பம் தோன்றும் பொருட்டு ஒரு பொருள் மேல் பல சொற்கள் தொடர்ந்து வருதல் உண்டு. அது வழிவாகாது; அது வழுவமைதி.

எ–டு : மிமிசை ஞாயிறு – மீமேல், மிசை – மேல்.

நாகிளங் கழுகு – நாகு – இளமை

வெங்கி கொடும்போர் – வெம் – கொடும்

## இரட்டைக் கிளவி அடுக்குத்தொடர்

இரட்டைக்கிளவி : இரட்டைச் சொற்களாக இருக்கும். இரண்டிலிருந்து பிரிந்து தனித்து ஒலிக்கமாட்டா. பிரிக்க முடியாதது. பிரித்தால் பொருள் இல்லை. இரட்டையாகக் கூறலே மரபு. கிளவி – சொல்.

எ–டு : சள சள என மழை பெய்தது

கல கலவெனச் சிரித்தான்

குறு குறுவெனச் நடந்தான்.

சல சல என நீர் ஓடிற்று.

அடுக்குத் தொடர் : விரைவில், கோபம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் முதலிய காரணங்களால் ஒரு சொல், இரண்டு, நான்கு முறை அடுக்கி வரும்.

எ–டு : போபோ – விரைவு

எறி எறி எறி – கோபம்

பாம்பு பாம்பு, தீ தீ – அச்சம்

அன்றே அன்றே – அசைநிலை

## பயிற்சி வினாக்கள்

1. முதல் எழுத்து, சார்பு எழுத்து – விளக்குக.
2. ஐகாரக் குறுக்கம் – எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. போலி என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
4. தனி மொழி, தொடர் மொழி – விளக்குக.
5. பகுபத உறுப்புகள் யாவை?
6. முக்கால இடநிலைகளை எழுதுக.
7. முற்றெச்சம் என்பது யாது?
8. ஏவல் வினைமுற்றுக்கும், வியங்கோள் வினைமுற்றுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
9. இடைச்சொல்லை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
10. உரிச்சொல்லின் இலக்கணம் யாது?
11. பலபொருள் குறித்த ஓர் உரிச்சொல்லிற்கு எடுத்துக்காட்டுத் தருக.
12. சினை, வினை முதல் வினையை விளக்குக.
13. ஒன்றொழி பொதுச்சொல், மரபு, ஒரு பொருட் பன்மொழி, இடைப்பிறவரல் – இவற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
14. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் வேறுபாடுகளை எழுதுக.

# பாடம் - 22
# யாப்பு

யாப்பு என்பது செய்யுள் இயற்றுவதற்குரிய இலக்கணம், யாக்கப்படுவது (கட்டப்படுவது) யாப்பு ஆயிற்று. கருங்கல், செங்கல், சுண்ணாம்பு முதலியவற்றால் கட்டப்படுவது கட்டடம். அதைப்போன்றே எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறு உறுப்பினையும் கொண்டு யாக்கப்படுவது "யாப்பு" எனப்படும்.

## (அ) எழுத்து

உயிரெழுத்து 12, மெய்யெழுத்து 18, உயிர்மெய்யெழுத்து 216, ஆய்த எழுத்து 1, ஆக 247 எழுத்துக்கள்.

உயிர் பன்னிரண்டில் குறில் ஐந்து : அ, இ, உ, எ, ஒ

18 மெய்யின் மீதும் 5 உயிர்க்குறியிலும் தனித்தனியாக ஊர்ந்துவரின் மெய்க்குறில் (18 ஜி 7) 126 ஆகும்.

உயிர்மெய்நெடில் (18 × 7) 126 ஆகும்.

## (ஆ) அசை

மேற்கூறிய குறில், நெடில், மெய் ஆகியவற்றில் அமைக்கப்படுவது (கட்டப்படுவது) அசை, அது, நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

| எழுத்து | | | அசை |
|---|---|---|---|
| 1) | க | – தனிக்குறில் | |
| 2) | கல் | – குற்றொற்று | நேராசை |
| 3) | கா | – தனிநெடில் | |
| 4) | கால் | – நெட்டொற்று | |
| 5) | பல | – குறிலிணை | |
| 6) | படல் | – குறிலிணையொற்று | நிரையசை |
| 7) | பலா | – குறில்நெடில் | |
| 8) | பாடம் | – குறில்நெடில் ஒற்று | |

**எடுத்துக்காட்டு (1)**

உலகம், வாழ்க, திருக்குறள்! இவற்றை அசை பிரித்துப் பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| உல | – நிரையாசை | திருக் – | நிரையசை |
| கம் | – நேரசை | குறள் – | நிரையசை |
| வாழ் | – நேரசை | | |
| க | – நேரசை | | |

**எடுத்துக்காட்டு (2)**

நாலடியார், பாட்டு, தொல்காப்பியர்

| | | | |
|---|---|---|---|
| நா | – நேரசை | தொல் | – நேரசை |
| லடி | – நிரையசை | காப் | – நேரசை |
| யார் | – நேரசை | பியம் | – நிரையசை |
| பாட் | – நேரசை | | |
| டு | – நேரசை | | |

## (இ) சீர்

அசைகளுள் இரண்டும் மூன்றும் சேர்ந்து அமைவது முறையே ஈரசைச்சீர், மூவகைச் சீர் எனப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஓரசைச்சீர் | 2.நேரசை | – | நிரையசை | |
| ஈரசைச்சீர் | 4.நேர் நேர் | – | தேமா | மாச்சீர் 2 |
| | நிரை நேர் | – | புளிமா | |
| | நிரை நிரை | – | கருவிளம் | விளாச்சீர் 2 |
| | நேர் நிரை | – | கூவிளம் | |

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம், நான்கும் ஈரசைச்சீர்களுக்கு உரிய வாய்ப்பாடுகளாகும்.

மூவகைச்சீர் 8 ஈரசைச்சீர் நான்கோடும் நேரசை, நிரையசை இரண்டினையும் தனித்தனியே சேர்த்தால் மூவகைச்சீர் (4 × 2 = 8)

அவை :

| | |
|---|---|
| தேமாங்காய் | தேமாங்கனி |
| புளிமாங்காய் | புளிமாங்கனி |
| கருவிளங்காய் | கருவிளங்கனி |
| கூவிளங்காய் | கூவிளங்கனி |

என்பனவாம்.

காய் ஈற்று மூவகைச்சீர் "காய்ச்சீர்" எனவும் "வெண்சீர்" எனவும் வழங்கப்படும் காய்ச்சீர் நான்கும் வெண்பாவுக்கு உரியவை.

கனி ஈற்று மூவகைச்சீர் கனிச்சீர் எனப்படும்.

கண் / ஊம் / மை - நேர் நேர் நேர் - தேமாங்காய்

மரு / தப் / பன் - நிரை நேர் நேர் - புளிமாங்காய்

சொக் / கலிங் / கம் - நேர் நிரை நேர் - கூவிளங்காய்

அரு / ணா / கி - நிரை நிரை நேர் - கருவிளங்காய்

**கனிச்சீர்**

கா / ணக் / குயில் - நேர் நேர் நிரை - தேமாங்கனி

பதி / னா / யிரம் - நிரை நேர் நிரை - தேமாங்கனி

தேன் / மொழி / யனள் - நிரை நிரை நிரை - கருவிளங்கனி

நல / னுறு / மொழி / நிரை நிரை நிரை - கருவிளங்கனி

இவை நான்கும் வஞ்சிப்பாவுக்குரியவை. எனவே. இவை வஞ்சி உரிச்சீர் எனப்படும்.

**நாலசைச்சீர் 16**

"ஞதேமாந்தண்பூ, புளிமாந்தண்பூ, கூவிளந்தண்பூ, கருவிளந்தண்பூ" என "நண்பூ" சீர்.

தேமாதறும்பூ, புளிமாநறும்பூ, கூவிளநறும்பூ, கருவிளந்தண்பூ என "நறும்பு சீர்" தேமாந்தண்ணிழல், புளிமாந்தண்ணிழல், கூவிளந்தண்ணிழல், கவிளந்தண்ணிழல் என "தண்ணிழல்" சீர்.

தேமாநறுநிழல், புளிமாநறுநிழல், கூவிளநறுநிழல், கருவிளநறுநிழல் என "நறுநிழல்" சீர்.

இவ்வாறு பூச்சீர் 8, நிழற்சீர் 8, பதினாறு சீர்களும் நாலசைச் சீர்களாம்.

**(ஈ) தளை**

செய்யுளில் நின்ற சீரின் ஈற்றசையும், வருஞ்சீரின் முதலசையும் ஒன்று சேர்ந்து ஒலிக்கும்போத தோன்றும் ஓசைப் பொருத்தமே "தளை" என்று கூறப்படும் தளை ஏழு வகைப்படும்.

1. நேரொன்றாசிரியத்தளை 2. நிரையொன்றாசிரியத்தளை
3. இயற்சீர் வெண்டளை 4. வெண்சீர் வெண்டளை
5. கலித்தளை 6. ஒன்றியவஞ்சித்தளை 7. ஒன்றா வஞ்சித்தளை

**1. நேரொன்றாசிரியத்தளை : மா முன் நேர் வருவது**

நேர் → நேர் நேர் → நேர் நேர் வி நேர்
தே மா ↓ ↓ தே மா

நேரொன்றாசிரியத்தளை நேரொன்றாசிரியத்தளை

இதில் நின்ற சீர் (மக்கள் என்பது) மாச்சீர் ஆகும். வருஞ்சீரின் முதலில் நேரசை வருதலின் "மாமுன் நேர்" ஆயிற்று.

இரண்டாவதாக "தொண்டர்" என்பது மாச்சீராக நிற்க "நிற்க வாழ்க" என்னும் சீரின் முதலில் நேரசை வருதலின் "மாமுன் நேர்" ஆயிற்று.

**2. நிரையொன்றாசிரியத்தளை : விள முன் நிரை வருவது.**

எ.கா :

| | | |
|---|---|---|
| குன் + றகச் | சிறு + குடிக் | கிளை + யுடன் |
| நேர் நிரை → | நிரை நிரை → | நிரை நிரை |
| கூவிளம் / | கருவிளம் / | கருவிளம் |
| ↓ | ↓ | |

விளமுன்நிரை விளமுன்நிரை

நிரையொன்றாசிரியத்தளை நிரையொன்றாசிரியத்தளை

நேரொன்றாசிரியத்தளை நிரையொன்றாசிரியத்தளையும் ஆசிரியப்பாவுக்கு உரியவை.

**3. இயற்சீர் வெண்டளை : மா முன் நிரைவருவதும் விளமுன் நேர் வருவதும்.**

எ-டு :

பிற விப் பெருங் / கடல் / நீந் / துவர் நீத் / தார்
நி தே நி நி தே நி தே நேர்
புளிமா / ↑ கருவிளம் / ↓ கூவிளம் / ↓ தேமா
மாமுன் நிரை விளமுன் நேர் விளமுன்நேர்
இயற்சீர் வெண்டளை : இயற்சீர் வெண்டளை இயற்சீர் வெண்டளை

4. வெண்சீர் வெண்டளை : **(காய் முன் நேர் வருவது)**

(எ-கா)

யா / த்ட் / ஹும் நா / டா / மால்ஊ ரா / மால் என் / னொரு / வன்

நே நே நே → நே நே தே → நே நே நே → நே நி நே

தேமாங்காய் / ↓ தேமாங்காய் / ↓ தேமாங்காய் / ↓ கூவிளங்காய்

காய்முன்நேர் காய்முன்நேர் காய்முன்நேர்

இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வெண்பாவுக்குரியவை.

5. கலித்தளை : **(காய் முன் நிரை வருவது)**

எ-கா : செல்வப் போக்கு கதக்கண்ணன் செயித்தெறிந்த சினவாழி

கலித்தளை கலிப்பாவுக்கு உரியது.

6. ஒன்றா வஞ்சித்தளை : **(கனி முன் நேர் வருவது)**

எ-கா : (பூந்தாமரைப் போதமலர்)

7. ஒன்றிய வஞ்சித்தளை : **(கனி முன் நிரை வருவது)**

எ-கா : விணைத்திண் பகை விழச் சென்றவன்

ஒன்றிய வஞ்சித்திணையும் ஒன்றா வஞ்சித்தளையும் வஞ்சிப்பாவுக்கு உரியவை.

## (உ) அடி

செய்யுளில் ஒரு வரி ஓர் அடி எனப்படும். அஃது இரண்டு முதலிய சீர்கள் இணைந்து வருவதாகும். அவ்வடி ஐந்து வகைப்படும்.

1. குறளடி : ஓரடியில் இரண்டு சீர்வரத் தொடுப்பது
   (எ-கா) "கல்லால் நிழல்வலை"
2. சிந்தடி : ஓரடியில் மூன்று சீர் வரத் தொடுப்பது
   (எ-கா) "கருது வேற்றடக்கையினாய்"
3. அளவடி அல்லது நேரடி : ஓரடியில் நான்கு சீர் வரத் தொடுப்பது
4. நெடிலடி : ஓரடியில் ஐந்து சீர் வரத் தொடுப்பது
   எ.கா : மிக்க மாதவம் வீட்டுல கடைதலை விளக்கும்/

5. கழிநெடிலடி : ஓரடியில் ஆறுசீறும் அதற்கு மேலும் வரத்தொடுப்பது.

எ.கா : பொருள் தரும் தமிழே நீ ஓர் பூக்காடு நானோர் தும்பி

இஃது (அறுசீர்கழி நெடிலடி)

### (ஊ) தொடை

அடிகளிலும் சீர்களிலும் எழுத்து முதலானவை ஒன்றுமாறு தொடுக்கப்படுவது தொடையாகும். இஃது எதுகை தொடை, மோனைத் தொடை, முரண்தொடை, இயைபு தொடை, அதபெடைத்தொடை என ஐந்து வகைப்படும். இவை தவிர இரட்டைத் தொடை, அந்தாதித் தொடை, செந்தொடை என்றும் தொடைகளும் உண்டு.

### (எ) யாப்பு

**வெண்பா**

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிலை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் – கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ யெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

மேற்கண்ட பாடலைக் கவனியுங்கள். இதிலிருந்து நாம் சில பொது விதிகளை உணரலாம்.

1. இறுதி அடி மூச்சீராக அமைந்துள்ளன.
2. ஏனைய அடிகள் நாற்சீராக அமைந்துள்ளன.
3. மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர் பெறறு வந்துள்ளது.
4. இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளைகளே அமைந்துள்ளன.
5. பிறதளைகள் வரவில்லை.
6. இறுதி அடியின் இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாட்டுச் சீர்களுள் ஒன்றாக அமைந்துள்ளது.
7. எதுகை, மோனை பெற்று வந்துள்ளது.
8. செப்பலோசை உடையது

இந்த இலக்கணங்களுடன் வருவதே வெண்பா ஆகும்.

### வெண்பாவின் வகை

குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என வெண்பா ஐந்து வகைப்படும்.

### ஆசிரியப்பா

பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டீண் டுலகுபுரப்பதுவே

இப்பாடலில் (1) ஒவ்வோரடியும் நான்கு சீர்களைப் பெற்றுள்ளது. (2) இறுதி அடிக்கு முந்திய அடி (ஈற்றயலடி) மூன்று சீர்களைப் பெற்றுள்ளது. (3) பெரும்பாலும் நேரொன்றாசிரியத்தளை, நிறையொன்றாசிரியத்தளை மற்றும் இயற்சீர் வெண்டளை பெற்று வந்துள்ளது. (4) ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் ('ஏ') முடிந்துள்ளது. (ஓ, ஈ, ஆய், என், ஐ) என்பவற்றுள் ஒன்றைக் கொண்டு முடிவதும் உண்டு. ஏகாரத்தில் முடிவதும் உண்டு. ஏகாரத்தில் முடிவதே சிறப்பு. (5) அகவலோசை கொண்டுள்ளது.

இவை ஆசிரியப்பாவிற்குரிய விதிகளாகும். மேலும் ஆசிரியப்பாவில் (6) பிறதளைகள் விரவி வருதலும் உண்டு. (7) கூவிளங்கனி, கருவிளங்கனிச்சீர்கள் பாரா. (8) மூன்று அடிகள் முதல் நூற்றுக்கணக்கான அடிகள் வரை அமைக்கலாம். (9) ஈற்றயலடி முச்சீர் பெறின், அவ்வாசிரியப்பா நேரிசை ஆசிரியப்பா எனவும் எல்லா அடிகளும் நாற்சீர் பெறின் அது நிலை மண்டில ஆசிரியப்பா எனவும் பெயர் பெறும். (10) முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை வருவது சிறப்பு. (11) இரண்டு இரண்டு அடிகளுக்கு ஓர் எதுகை அமைத்தும் எதுகை இன்றியும் இயற்றப்படுவதும் உண்டு. இவ்விலக்கணங்களுடன் அமைக்கப்படுவது ஆசிரியப்பா ஆகும்.

### ஆசிரியப்பா வகை

நேரிசை ஆசிரியப்பா, நிலை மண்டில ஆசிரியப்பா, இணைகுறள் ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என ஆசிரியப்பா நான்கு வகைப்படும்.

# பாடம் - 23
# பொருள்

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐவகைப்படும். தமிழ் இலக்குணத்துள் நடுநாயகமாய் விளங்கும் பொருள் இலக்கணம், தமிழர்களின் சிறந்த நாகரிகத்தை எடுத்துக்காட்டும் பெருமை வாய்ந்தது. இஃது அகப்பொருள், புறப்பொருள் என இருவகைப்படும்.

## அகப்பொருள்

ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் உள்ளத்து உணர்வால் அறிந்து அனுபவிக்கும் இன்பம் அகப்பொருள் எனப்படும். மற்றவர்களுக்கு இத்தன்மையது என எடுத்துக்கூற இயலாததாய்த் தம் மனத்தாலேயே அனுபவிக்கப்படும் ஒழுக்கமாதலின் அகத்திணை எனப்பட்டது. (அகம்–மனம்) சுருங்கச் சொன்னால் காதல் வாழ்வை 'அகம்' எனலாம்.

அகப்பொருள் ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை என ஏழு வகைப்படும். குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தல்திணை, பாலைத்திணை என்பன ஐந்திணைகளாகும். இவ்வைந்திணையுள் ஒவ்வொரு திணைக்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று பொருள்கள் உண்டு.

## உரிப்பொருள் விளக்கம்

ஐந்திணையில் குறிஞ்சித்திணை என்பது தலைவி முதலில் ஒருவரையொருவர் கண்டு மனம் கலந்து உறவு கொள்வதைக் கூறுவது (கூடலும் கூடல் நிமித்தமும்) முல்லைத்திணை என்பது. தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் குறித்த காலம் வரும் வரை, தலைவி தன் இல்லத்தில் அவன் பிரிவை ஆற்றியிருத்தல் (இருத்தலும் இருத்தல் நிமித்தமும்)

மருதத்திணை என்பது தலைவி தலைவனிடத்தில் ஊடல் கொள்வதைக் கூறுவது (ஊடலும் ஊடல் நிமித்தமும்)

நெய்தல் திணை என்பது பிரிந்து சென்ற தலைவன் குறித்த காலத்தில் வராராது காலம் தாழ்த்தினால், தலைவி வருந்துவதைப் பற்றிக் கூறுவது (இரங்கலும் இரங்கல் நிமித்தமும்) பாலைத்திணை என்பது. தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வதைப் பற்றிக் கூறுவது: பொருள் தேடல், தூது, கல்வி கற்றல், முதலிய காரணங்களால் பிரிவு நிகழும் (பிரிதலும் பிரிதல் நிமித்தமும்) இவ்வைந்திணைகள் ஒவ்வொன்றுக்கும் உரிய கூடலும் கூடல் நிமித்தமும் முதலியன உரிப்பொருள் என்று கூறப்படும்.

கைக்கிளை என்பது தலைவன், தலைவி ஆகிய இருவருள் ஒருவரிடையே தோன்றும் அன்பு. இஃது ஒரு தலைக்காமம் எனப்படும்.

பெருந்திணை என்பது ஒத்த தலைவனும் தலைவியும் அல்லாத இருவரிடத்துத் தோன்றும் பொருந்தாத அன்பு. இது பொருந்தாக்காமம் எனப்படும்.

**முதற்பொருள் விளக்கம்**

முன்னர் குறிப்பிட்டவாறு, ஐந்திணையுள் ஒவ்வொன்றுக்கும் உரிய முதற்பொருள் முதலானவற்றை இங்கே காண்போம். நிலமும் அதற்குரிய பொழுதும் முதற்பொருள் எனப்படும்

**நிலம்**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலம் ஐவகைப்படும்.

குறிஞ்சி – மலையும் மலைசார்ந்த இடமும்

முல்லை – காடும் காடு சார்ந்த இடமும்

மருதம் – வயலும் வயலும் சார்ந்த இடமும்

நெய்தல் – கடலும் கடல் சார்ந்த இடமும்

பாலை – மணல் வெளியும் அதைச் சார்ந்த இடமும், குறிஞ்சி நிலமும், முல்லை நிலமும் வெயில் கொடுமையால் தன் இயல்பு திரிந்துள்ள நிலம்.

**பொழுது**

பெரும்பொழுது, சிறுபொழுது எனப் பொழுது இருவகைப்படும். பெரும்பொழுதாவது, ஓர் ஆண்டுக்குரிய ஆறு பருவங்கள், அவை கார் முதலானவை.

| | | |
|---|---|---|
| வார் | – | ஆவணி, புரட்டாசி |
| கூதில் (குளிர்) | – | ஐப்பசி, கார்த்திகை |
| முன்பனி | – | மார்கழி, தை |
| பின்பனி | – | மாசி, வைகாசி |
| இளவேனில் | – | சித்திரை, வைகாசி |
| முதுவேனில் | – | ஆனி, ஆடி |
| சிறுபொழுதாவது | – | ஒரு நாளிதற்குரிய ஆறு கூறுபாடுகள் |
| காலை(விடியல்) | – | காலை 8 முதல் 10 மணி வரை உள்ள நேரம் |
| நண்பகல் | – | காலை 10 முதல் பிற்பகல் 6 மணிவரை உள்ள நேரம் |
| மாலை | – | பிற்பகல் 2 முதல் மாலை 6 மணிவரை உள்ள நேரம் |
| ஏற்பாடு | – | மாலை 6 முதல் இரவு 10 மணி வரை உள்ள நேரம் |
| யாமம் | – | இரவு 10 முதல் காலை 2 மணி வரை உள்ள நேரம் |
| வைகறை | – | காலை 2 மணி முதல் 6 மணிவரை உள்ள நேரம் |

| ஐந்திணைக்கும் | உரிய பெரும்பொழுதும் | சிறுபொழுதும் |
|---|---|---|
| நிலம் | பெரும்பொழுதும் | சிறுபொழுது |
| குறிஞ்சி | கூதிர், முன்பனி | யாமம் |
| முல்லை | கார் | மாலை |
| மருதம் | ஆறுபெரும்பொழுதும் | வைகை, விடியல் |
| நெய்தல் | ஆறுபெரும்பொழுதும் | ஏற்பாடு |
| மாலை | இளவேனில்,<br>பின்பனி | முதுவேனில்<br>நண்பகல் |

| கருப்பொருள் | முல்லை | குறிஞ்சி | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| 1. தெய்வம் | திருமால் | முருகன் | இந்திரன் | வருணன் | துர்க்கை |
| 2. உயர்ந்தோர் | தோன்றல்<br>மனைவி, கிழந்தி | சிலம்பன்,வெற்–<br>பன், பொருப்பன்<br>குறத்தி | ஊரன்,மகிழ்தன்<br>கிழத்தி, மனைவி | சேர்ப்பன் புலம்பன்<br>துறைவன்;<br>நுழைச்சி, பரத்தி | மீளி,விடலை<br>காளையிற்றி |
| 3. அல்லோர் | இடையர் இடைச்சி<br>ஆயர், ஆய்ச்சியர் | குறவர், கானவர்<br>குன்றவர், குறத்–<br>தியர் | உழவர், உழத்தியர்<br>கடையர் | பரதர், பரத்தியர்<br>நுழையர், நுளழச்–<br>சியர், அளவர்,<br>அளத்தியர் | எயிற்றியர்<br>மறவர்,மறத்தியர் |
| 4. பறவை | கோழி,காகம் | கிளி,மயில் | நீர்க்கோழி, தாரா,<br>அன்னம், குருகு | கடற்காகம்<br>அன்னம் | கழுகு,புறா<br>பருந்து எருவை |
| 5. விலங்கு | முயல்,மான் | புலி,கரடி<br>யானை, சிங்கம் | எருமை,நீர்த்தாய் | கறா,முதலை; | செந்நாய்,வலி–<br>யிழந்த புலி |
| 6. ஊர் | பாடி சேரி | சிறுகுடி | பேரர் | பட்டினம்,பாக்கம் | குறும்பு |
| 7. நீர் | காட்டாற்று நீர் | அருவிநீர்,<br>களை நீர் | மனைக்கிணறு,<br>பொய்கை, ஆறு | மனைக்கிணறு,<br>உயர் நீர்க்கேணி | நீர் வற்றியகிணறு |
| 8. பூ | முல்லை<br>தோன்றி | குறிஞ்சி,காந்தள்<br>வேங்கை | தாமரை,குவளை<br>செங்கழு நீர்ப்பூ | தாழை நெய்தல்<br>முண்டகம் | மா,அம்பு,குரா<br>அம்பு,பாதிரிப்பூ |

| கருப்பொருள் | முல்லை | குறிஞ்சி | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| 9. மரம் | கொன்றை, காயா குருந்தை | அகில்,சந்தனம் வேங்கை மூங்கில் தேக்கு, அசோகு | மருதம்,வஞ்சி காஞ்சி | புன்னை,தழை | இலுப்பை,ஓமை பாலை, உழிஞை |
| 10. உணவு | வரகு,சாமை குதிரை | மலைநெல், தினை மூங்கிலரிசி | செந்நெல் வெண்ணெய் | மீன்,உப்பு விற்ற விலை | ஆறலைத்தல் குறை கொண்டன |
| 11. பறை | ஏறுகோட்பறை | தொண்டகம் | மணமுழா, நெல்லரிகிணை | மீன் கோட்பறை | ஊர் எறியை |
| 12. யாழ் | முல்லையாழ் | குறிஞ்சியாழ் | மருதயாழ் | விளரி யாழ் | பாலையாழ் |
| 13. பண் | சாதாரிப்பண் | குறிஞ்சிப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| 14. தொழில் | கொல்லேறு தழுவல், குரவை-யாடல் ஆநிரை மேய்த்தல் | வெறியாடல் தினை காத்தல், தோண்டுதல் | நெல்லறிதல்-களை பறித்தல், புது நீராடல் விழாச்செய்தல் | மீன்பிடித்தல், உப்பு விளை-வித்தல் | சூறையாடுதல் |

## புறப்பொருள்

அகப்பொருள் அல்லாத வாழ்க்கைக்கு அரண் செய்யும் அறம், பொருள், வீடு என்னும் மூன்றையும் புறப்பொருள் என வழங்குவர். சுருங்கச் சொன்னால், போர் முதலிய வாழ்வைப் "புறம்" எனலாம்.

புறப்பொருள் வெட்சி முதலாகப் பன்னிரெண்டு திணைகளாக வகுக்கப்படும். அவை வருமாறு.

1) வெட்சித்திணை : பகைவர் நாட்டின் மீது போர்த்தொடுக்க விரும்பிய அரசன், அந்நாட்டுப் போரில் பசுக்கள் இறந்துவிடாமல் இருக்க எண்ணி அவற்றைக் கவர்ந்து வருவர். பசுக்களைக் கவர்ந்து வரச்சொல்லும் வீரர் வெட்சிப் பூவைச்சூடிக் செல்வர்.

2) கரந்தைத் திணை : பகைவர் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்டு வருதல். இப்போருக்குரிய படையினர் கரந்தைப் பூவைச் சூடிச் செல்வர்.

3) வஞ்சித்திணை : பகைவர் நாட்டைக் கைப்பற்ற எண்ணிப் போருக்குச் செல்லுதல் இப்போருக்குரிய வீரர் வஞ்சிப் பூவைச் சூடிச்செல்வர்.

4) காஞ்சித்திணை : போர் மேற்செல்லும் பகையரசனைத் தன் நாட்டு எல்லையில் தடுத்துநிறுத்துல், இப்போரில் ஈடுபடும் வீரர் காஞ்சிப் பூவைச் சூடிச்செல்வர்.

5) உழிஞைத் திணை : பகை நாட்டு மதில் வளைத்தல், வீரர் உழிஞைப் பூச்சுடுவர்.

6) தும்பைத் திணை : பகையரசர் இருவரும் போர் செய்தல், இதற்குரிய வீரர் தும்பைப் பூவைச் சூடிச்செல்வர்.

7) வாகைத்திணை : போரில் வென்ற அரசனது வெற்றியினைச் சிறப்பித்தல், வென்றவீரர் வெற்றிக்கு அடையாளமாக வாகைப்பூச்சூடுவர்.

8) பாடாண்திணை : பாடப்படுகின்ற ஆண்மகனுடைய புகழ், கொடை, வீரம், வலிமை முதலிய குணங்களைப் புகழ்ந்து கூறுதல்.

9) பொதுவியல் : பிற திணைகளுக்கெல்லாம் பொதுவாக உள்ள அத்திணைகளில் கூறப்படாதனவும் ஆகிய செய்திகளைக் கூறுவது.

10) கைக்கிளை ; ஒரு தலைக்காமம், ஆண், பெண் ஆகிய இருவர்களில் ஒருவரிடத்தில் மட்டும் உண்டாகும் அன்பு இஃது ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை, பெண்பாற்கூற்றுக் கைக்கிளை, என இருவகைப்படும்.

11) பெருந்திணை : பொருந்தாக்காமம். இது பெண்பாற் கூற்று, இருபாற்கூற்று என இருவகைப்படும். (ஒத்த தலைவியும், தலைவனும் அல்லாதாரிடத்துத் தோன்றும் அன்பு).

இவ்வாறு கூறப்பட்ட திணைகளுள் ஒவ்வொன்றும் துறைகள் பலவற்றைக் கொண்டிருக்கும்.

**(குறிப்பு : பண்டைக்கால போர் முறைகளையும், தமிழ் மக்கள் ஒழுக்கங்களையும் புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூலில் விரிவாகக் காணலாம்).**

# பாடம் - 24
# அணி

செய்யுளுக்கு அழகு தருவது அணி எனப்படும். அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம்.

## 1) எடுத்துக்காட்டு உவமை அணி

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

இதன் பொருள்

தோண்டிய அளவிலே மணற்கேணியில் நீர் ஊறும், மக்களுக்குக் கற்ற அளவிலே அறிவு பெருகும்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி என்பது உவமை (உவமையாவது விளக்க வந்த பொருள்), "மாந்தர்க்குக் கற்றனைந்தூறும் அறிவு" என்பது உவமேயம் (சொல்ல வேண்டிய பொருள்) இவ்வுவமை, உவமேயத்தை இணைக்கக்கூடிய ("போல" என்னும்) உவமை உருபு, இங்கு மறைந்துள்ளது.

இவ்வாறு உவமையும் உவமேயமும் தனித்தனியே நிற்க உவமை உருபு மறைந்து வருவது எடுத்துக்காட்ட உவமை அணி ஆகும்.

## 2. இல்பொருள் உவமை அணி

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

## இதன் பொருள்

"உள்ளத்தில் அன்பு இல்லாமல் வாழும் இல்லற வாழ்க்கை வலிய பாலை நிலத்தில் பட்டமரமானது தளிர்த்தது போலாகும்" என்பதாகும். இதில் வலிய

பாலை நிலத்தில், பட்டமரமானது தளிர்த்தல் என்னும் இல்லாத பொருள் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு உலகில் இல்லாத ஒன்றை அல்லது நடைபெறாத நிகழ்ச்சியை உவமையாக்கிக் கூறுவது இல்பொருள் உவமை அணி ஆகும்.

அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் "குதிரைக்கு கொம்பு போல்" என்பது போன்ற தொடர்கள் இல்பொருள் உவமைகளே.

### 3) தற்குறிப்பேற்ற அணி

"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி"
"வாரல் என்பனபோல் மறித்துக்கை காட்டி"

கோவலன் மதுரை நகரத்தினுள் சென்று கொலையுண்ண நேர்கின்றதே எனக் கருதும் இளங்கோவடிகள், "கோவலனைப் பார்த்து, நீ வராதே, என்று அந்நகர் மதில் மீதுள்ள கொடிகள் கையசைத்துத் தெரிவிப்பன போல் அசைவதாகப்" புனைந்து கூறுகிறார். இவ்வாறு உலகில் இயல்பாக நிகழும் ஒரு, நிகழ்ச்சியின் மீது கவிஞர் தமது குறிப்பை ஏற்றி அழகுடக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும்.

### 4) வேற்றுமை அணி

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

இக்குறட்பாவில் தீயினால் சுடுதலையும், நாவினால் (நாக்கினால்) சுடுதலையும் ஒப்புமைப்படுத்திப் பின்னர்த் தீயினாற் சுட்டதைப் புண் என்றும், நாவினால் சுட்டதனை வடு என்றும் வேறுபடுத்திக் காட்டியுள்ளமையை அறியலாம்.

இவ்வாறு, ஒப்புமையுடைய இரு பொருள்களுக்கும் முதலில் ஒப்பு கூறிப் பின்னர் ஏதேனும் ஒரு காரணம் காட்டி, ஒன்றின் ஒன்று (உவமைப் பொருளிலும் உவமேயப் பொருள் சிறந்ததென) வேறுபடுத்திக் கூறுவது வேற்றுமை அணி ஆகும்.

### 5) வேற்றுப் பொருள் வைப்பணி

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப – நரைமுடித்துச்

சொல்லாமல் முறை செய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

"இந்த இளைஞனான கரிகாலன் நீதி வழங்கும் திறமை உள்ளவனோ? என்று சந்தேகப்பட, நரைத்த முடியுடைய முதியோர் மனம் மகிழும்படி அவர்களுக்குத் தெரியாமல் தான் நரைமுடி சூடி, முதியவன் போல வேடம் பூண்டு சோழன் நீதி வழங்கினான் என்பது இந்தப்பாடலில் சொல்லப்பட்ட சிறப்புப்பொருளாகும். குலத்திற்குரிய கல்விபடிக்காமலே பாதி அமைந்துவிடும் என்பது உலகம் அறிந்த பொதுப் பொருளாகும்.

இவ்வாறு கவிஞர் தாம் சொல்ல நினைத்த, பொருளை நிலைநிறுத்த உலகம் அறிந்த வேறொரு பொருளை எடுத்துக்காட்டி வற்புறுத்துவது வேற்றுப்பொருள் வைப்பணியாம். அவ்வாறு கூறும்போது பொதுப்பொருளை சிறப்புப் பொருளாலும் சிறப்புப் பொருளைப் பொதுப் பொளாலும் வற்புறுத்திக் கூறுவது மரபாகும்.

### 6) வஞ்சப்புகழ்ச்சி அணி

தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுகலான்

இக்குறட்பாவில், "கீழ் மக்களைத் தேவருக்கு ஒப்பானவர்" எனப்புகழ்வது போலக்கூறி அவர்கள் தம் மனம் போனவாறு வாழும் இயல்புடையவர் எனக் குறிப்பாகப் பழித்துக் கூறியமையால் இது புகழ்வது போலப் பழித்தல் வஞ்சப் புகழ்ச்சி அணி ஆகும்.

பாரி பாரி என்று பல வேத்தி
ஒருவற் புகழ்வார் செந்தாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்(டு) உலகு புரப்பதுவே.

இந்தப் புறநானூற்றுப் பாடலில் பாரியை இகழ்வது போலக் கூறி அவன் மாரி (மழை) யைப் போன்று கைம்மாறு கருதாமல் அளவின்றிக் கொடுக்கும் வள்ளல் எனப் புகழ்கிறார். இது பழிப்பது போலப் புகழ்ந்த வஞ்சப் புகழ்ச்சி அணி ஆகும்.

இவ்வாறு ஒன்றனைப் புகழ்வது போலக் கூறிக் குறிப்பாக பழிப்பதும் பழிப்பது போலக் கூறிக் குறிப்பாகப் புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி அணி எனப்படும்.

## வினா - 1

1) யாப்பு என்பது யாது? அதன் உறுப்புகள் யாவை?

2) அசையின் வகைகளை விளக்குக.

3) ஈரசைச் சீர்கள் யாவை?

4) எவ்வெச்சீர்கள் எவ்வெப் பாக்களுக்கு உரியவை?

5) தளை என்பது யாது? அஃது எத்தனை வகைப்படும்? விளக்குக.

6) வெண்பா, ஆசிரியப்பாவுக்குரிய தளைகளைக் கூறுக.

7) அடி எத்தனை வகைப்படும்? விளக்குக.

## வினா - 2

1) வெண்பாவின் பொது இலக்கணம் யாது?

2) ஆசிரியப்பாவின் இலக்கணத்தைக் கூறுக.

3) அகப்பொருள், புறப்பொருள் – இவற்றை விளக்குக.

4) ஐந்திணைகள் யாவை?

5) ஐவகை நிலங்கள யாவை?

6) குறிஞ்சி, மருதம் இவற்றிற்குரிய பெரும்பொழுது, சிறு பொழுதுகளைக் குறிப்பிடுக.

7) முல்லைக்குரிய பறவை, உணவு, பண், தொழில் ஆகியவற்றை எழுதுக.

8) வெட்சித்திணை, காஞ்சித்திணை – இவற்றை விளக்குக.

## வினா - 3

1) எடுத்துக்காட்டு உவமை அணி, தற்குறிப்பேற்ற அணி இவற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

2) வஞ்சப்புகழ்ச்சி அணி, வேற்றுப்பொருள் வைப்பு அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

3) இல்பொருள் உவமை அணி என்றால் என்ன ? எடுத்துக்காட்டுடன் தந்து விளக்குக.

4) கீழ்வரும் பாடலில் பயிலும் அணியினை எழுதி அஃது அவ்வணியாமாற்றை

(அ) "அகரமுதல வெழுத் தெல்லாம் ஆதி
பகவன முதற்றே யுலகு".

(ஆ) "தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு".

# பாடம் 25

## 1. வாக்கிய மாற்றம்

### (அ) செய்வினை - செயப்பாட்டுவினை

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார் இது செய்வினை வாக்கியம்

திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.

– இது செயப்பாட்டு வினை வாக்கியம்

'இயற்றினார்' என்பது செய்வினை.

இயற்றப்பட்டது என்பது செயப்பாட்டு வினை. செய்வினைக்குச் செய்பவன் எழுவாயாக வரும். செயப்படுபொருள் உண்டு. செயப்பாட்டு வினைக்குச் செய்பவன் எழுவாயாகவாராது, செயப்படுபொருளும் இல்லை.

செய்வினை வாக்கியத்தைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்ற.

1) செய்வினை வாக்கியத்தின் செயப்படுபொருள் எழுவாயாக மாற வேண்டும்.

2) செய்வினை வாக்கியத்தின் எழுவாய், செயப்படுபொருளாக மாற வேண்டும் மூன்றாம் வேற்றுமை உருபு சேர்த்து மூன்றாம் வேற்றுமையாகக் கருத்தாவாக்க வேண்டும்.

3) செய்வினைப் பகுதியுடன் படு என்னும் செயப்படுபொருளைத் தரும் துணை வினையைச் சேர்க்க வேண்டும்.

எடுத்துக்காட்டு

| செய்வினை வாக்கியம் | செயப்பாட்டு வினைவாக்கியம் |
| --- | --- |
| 1) கண்ணன் கதவைத் தட்டினான் | 1) கதவு கண்ணனால் தட்டப்பட்டது |
| 2) வள்ளி கனியைக் கொய்கிறாள் | 2) கனி வள்ளியால் கொய்யப்படுகிறது |
| 3) கொத்தனார் வீடு கட்டுவார் | 3) வீடு கொத்தனாரால் கட்டப்பட்டது. |
| 4) பாரதியார் விடுதலைப்பாடல்கள் பாடினார் | 4) விடுதலைப் பாடல்கள் பாரதியாரால் பாடப்பட்டது. |
| 5) நான் சட்டை தைத்துக் கொண்டி-ருக்கிறேன் | 5) சட்டை என்னால் தைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. |
| 6) அமைச்சர் நாட்டை ஆண்டிலர் | 5) நாடு அமைச்சரால் ஆளப்பட்டிலது |

| செயப்பாட்டு வினை | செய்வினை |
| --- | --- |
| 1) கோலம் கண்ணகியால் நன்கு போடப்பட்டது. | 1) கண்ணகி நன்கு கோலம் போட்டாள் |
| 2) முத்தான முத்தமிழ் பாண்டியரால் வளர்க்கப்படட்டது. | 2) பாண்டியர் முத்தான முத்தமிழை வளர்த்தனர். |

குறிப்பு

அ. கண்ணன் வந்தான்
கண்ணகி சென்றாள்.

இவை செய்யப்படுபொருள் குன்றிய வினைகளைக் கொண்டுள்ளன. இத்தகைய செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்றுவது இயலாது.

ஆ. செய்வினை வாக்கியத்தில் செயப்படுபொருள் இருந்தாலொழிய அவ்வாக்கியத்தைச் செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்றுவது இயலாது.

(ஆ) உடன்பாடு – எதிர்மறை

| உடன்பாட்டு வாக்கியம் | எதிர்மறை வாக்கியம் |
| --- | --- |
| 1) நான் வந்தேன் | 1) நான் வந்திடுவேன் |
| 2) நான் வருகிறேன் | 2) நான் வருகின்றிலேன் |
| 3) நான் வருவேன் | 3) நான் வாரேன் |

இவற்றுள் 'வந்தேன், வருகிறேன், வருவேன்' என்பவை இறப்பு நிகழ்வது என்னும் முக்கால நிகழ்ச்சிகளைப் பற்றி உணர்த்துவதால், அவை உடன்பாட்டு வினைகளாம், 'வந்திலேன், வருகின்றிலேன், வாரேன்' என்பது நிகழாதவற்றை உணர்த்துவதால் அவை எதிர்மறை வினைகளாம்.

உடன்பாட்டு வினையை எதிர்மறை வினையாக்கத் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய இடங்களிலும் இருதிணை, ஐம்பால்களிலும் முக்காலங்களிலும் மாற்றலாம்.

### மேலும் சில எடுத்துக்காட்டுக்கள் வருமாறு

| உடன்பாட்டு வாக்கியம் | எதிர்மறை வாக்கியம் |
|---|---|
| 1) பொன்னன் வந்தான் | 1) பொன்னான் வந்தானிலன் |
| 2) பொன்னன் வருகிறான் | 2) பொன்னான் வருகிறானிலன் |
| 3) பொன்னான் வருவான் | 3) பொன்னான் வருவானிலன் |
| 4) வண்டிகள் விரைவாகச் செல்லும் | 4) வண்டிகள் விரைவாக செல்லா |
| 5) பறவை பறந்தது | 5) பறவை பறந்திலது. |
| 6) பறவைகள் பறந்தன | 6) பறவை பறந்தில |

(இ) நேர்கூற்று – அயற்கூற்று

ஆசிரியர் 'கந்தா, உன் பாடநூலை எடுத்து வா' என்று கூறினார். இது நேராகக் கந்தனைப் பார்த்து ஆசிரியர் கூறுவதால், இதனை நேர்கூற்று என்பர்.

ஆசிரியர் கந்தனிடம் அவனது பாடநூலை எடுத்து வருமாறு கூறினார்– இது அயற்கூற்று.

நேர்க்கூற்றை அயற்கூற்றாகவோ, அயற்கூற்றை நேர்கூற்றாகவோ மாற்றுவதற்கு ஆங்காகங்கே வரும் கூற்று வகைக்கட்கு ஏற்பமாற்ற வேண்டும்.

இக்கூற்று வகைகளில் வினா,விடை,ஆணை,வேண்டுகோள்,சொல்லுதல் உரைத்தல், விளக்குதல், விளம்புதல், முதலிய பல வினை முடிவுகளை இடத்திற்கு ஏற்பக் கையாள வேண்டும்.

## பயிற்சி

அ) கீழ்வரும் செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்றுக.

1) இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.
2) நாங்கள் வீடு வாங்கினோம்.
3) ஆடுகள் தழை மேய்தன.
4) நீங்கள் பந்து ஆடினீர்கள்.
5) அவன் பாட்டுப் பாடுகிறான்.

ஆ) கீழ்வருவனவற்றைச் செய்வினை வாக்கியங்களாக மாற்றுக.

1) மாளிகை உங்களால் கட்டப்பட்டது.
2) சேலை என்னால் நெய்யப்படுகிறது.
3) வெற்றி செங்குட்டுவனால் பெறப்பட்டது.
4) பறவைகள் வேடனால் பிடிக்கப்படுகின்றன.
5) என்னால் நாளை திரைப்படம் பார்க்கப்படும்.

இ) உடன்பாட்டு வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1) நான் பால் குடித்தேன்.
2) நீ நிறைய உணவு உண்டாய்
3) ஐயன் மெய்யே பேசுவான்.
4) பூனை எலி பிடித்தது.
5) நாங்கள் கள்ளரைத் துரத்தின.

ஈ) எதிர்மறை வாக்கியங்களை உடன்பாட்டு வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1) அரசர் நாட்டை ஆண்டிலர்.
2) நான் இதைச் செய்யேன்.
3) பசு இங்கு மேயாது.
4) நீர் அதனை அடைந்திலர்
5) நாங்கள் உணவு உண்டிலேம்.

உ) கீழ்வரும் நேர்கூற்று வாக்கியங்களை அயற்கூற்று வாக்கியங்களாக மாற்றுக.

1) 'திருக்குறளை ஆழ்ந்து கற்க வேண்டும்' என்று ஆசிரியர் வளவனிடம் கூறினார்.

2) 'நான் மீண்டும் வருவேன்' என்று கற்பகம் கூறினான்.

3) 'தயவு செய்து தண்ணீர் தருக' என்ற முருகனிடம் வள்ளி கேட்டாள்.

4) ஆசிரியர் முருகனை நோக்கி நீ நேற்று ஏன் பள்ளிக்கு வரவில்லை? என்று கேட்டார்.

5) 'தமிழ் என் தாய்' என்றார் பாரதிதாசன்.

ஊ) கீழுள்ள அயற்கூற்று வாக்கியங்களை நேர்கூற்று வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1) தான் வகுப்பில் முதல்பரிசு பெற்றதாகக் கலைமகள் கூறினாள்.

2) நான் முயற்சி செய்தால் முன்னுக்கு வருவது உறுதி என்று என் தாயார் கூறினார்.

3) திருக்குறளை மனப்பாடம் செய்யுமாறு நண்பர் என்னிடம் கூறினார்.

4) கந்தன் என்னிடம் நான் எங்கே செல்வதாகக் கேட்டான்.

5) கல்வி எவராலும் அழிக்க முடியாத செல்வமென்று தலைவர் கூறினார்.

## வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும்
## (வலி மிகும் இடங்கள்)

பிறருடைய எண்ணத்தில் தமிழறிவுக்கு மதிப்பேற்றுபடுவதும் தமிழ்த் தேர்வுகளில் நல்ல மதிப்பெண் பெறுவதற்கு வழி செய்வதும், பொதுவாக இப்புணர்ச்சியைப் பற்றித் தெரிந்திருப்பதேயாகும். ஒருவருக்கு ஆழ்ந்த தமிழறிவு இருப்பினும், அவருக்கு வல்லெழுத்து மிகும் இடங்களும் மிகா இடங்களும் தெரியாமல் இருந்தால், உண்மையில் அவர் இகழப்படுவார் என்பதில் ஐயமில்லை. ஆதலால், மாணவர்கள் இதனைப் புறக்கணியாமல் மிகவும் நன்றாகத் தெரிந்து கொள்வது இன்றியமையாதது.

வல்லெழுத்துக்கள் க,ச,த,ப என்பவை மொழிக்கு முதலில் வரும் க,ச,த,ப வருக்கு எழுத்துக்கள் வருமொழி முதலில் நிற்கும் போது சில இடங்களில் இவற்றின் மெய்யெழுத்துக்களே இடையிலே மிகும். அவ்வாறு மிகுவதையே, 'வல்லெழுத்து மிகுதல்' என்பர். சில இடங்களில் வல்லெழுத்து மிகுவது தேவை.

இல்லாமல் இருக்கும். இவ்வாறு வல்லெழுத்து மிகாத இடங்களை 'வல்லெழுத்து மிகா இடங்கள்' என்பர்.

முதலில் வல்லினம் மிகும் இடங்களைக் காண்போம்.

## அவ்வழிப் புணர்ச்சியியல்

1) அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களின் பின்னும் 'எ' என்னும் வினா எழுத்தின் பின்னும் க,ச,த,ப அமைந்த சொல் வருமொழியாக வந்தால் வலிமிகும்

(எடுத்துக்காட்டு)

அ + குருவி – அக்குருவி
இ + செடி – இச்செடி
உ + பக்கம் – உப்பக்கம் (பின்பக்கம்)
எ + தோழி – எத்தோழி

2) 'அந்த, இந்த, எந்த' என்னும் சுட்டு வினாத்திரிபுகளின் பின்வரும் வலிமிகும்.

(எ–டு) அந்த + கிணறு – அந்தக்கிணறு
இந்த + செயல் – இந்தச்செயல்
எந்த + புலவர் – எந்தப்புலவர்

3) அங்கு, இங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, யாங்கு, ஆண்டு, ஈண்டு, யாண்டு என்னும் இடப்பொருளைக் குறிக்கும் சொற்களின் பின்வரும் வல்லெழுத்து மிகும்.

(எ–டு) அங்கு + போ – அங்குப்போ
இங்கு + திரும்பு – இங்குத் திரும்பு
எங்கு + செல்கிறாய் – எங்குச் செல்கிறாய் ?
ஆங்கு + காண் – அங்குக் காண்
ஈங்கு + செய் – ஈங்குச் செய்
யாங்கு + போனாய் – யாங்குப் போனாய்
ஆண்டு + கண்டேன் – ஆண்டுக்கண்டேன்
ஈண்டு + செய்க – ஈண்டுச் செய்க
யாண்டு + போனய் – யாண்டுப் போனாய்

4) அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் பின்வரும் வலி மிகும்

(எ–டு) அப்படி + கேள் – அப்படிக்கேள்

இப்படி + செய் – இப்படிச்செய்

எப்படி + பேசினாய் – எப்படிப்பேசினாய்?

5) அத்துணை. இத்துணை, எத்துணை என்னும் சொற்களுக்குப் பின் வலிமிகும்.

(எ–டு) அத்துணை + பொருள் – அத்துணைப்பொருள்

இத்துணை + செல்வம் – இத்துணைச்செல்வம்

எத்துணை + கடுமை – எத்துணைக்கடுமை

6) இனி, தனி, என்னும் இகர ஈற்றுச் சொற்களின் பின்வரும் வலி மிகும்.

(எ–டு) இனி + கேள் – இனிக்கேள்

தனி + சிறப்பு – தனிச்சிறப்பு

7) மற்ற, மற்று, மற்றை, என்னும் சொற்களின் பின்வரும் வலிமிகும்.

(எ–டு) மற்ற + பொருள் – மற்றப்பொருள்

மற்று + செலவு – மற்றுச் செலவு

மற்றை + குறிப்புகள் – மற்றைக் குறிப்புகள்

**வேற்றுமைப் புணர்ச்சியியல்**

8) இரண்டாம் வேற்றுமை விரியலும், நான்காம் விரியலும் வலி மிகும்.

இரண்டாம் வேற்றுமை உருபு – ஐ

நான்காம் வேற்றுமை உருபு – கு

(எ–டு) தம்பியை + கண்டேன் – தம்பியைக் கண்டேன்

வீட்டுக்கு + போ – வீட்டுக்குப்போ

9) ஏழாம் வேற்றுமையில் வரும் வலி மிகும்.

(எ–டு) வாட்டிடை + சென்றேன் – காட்டிடைச்சென்றேன்

குடி + பிறந்தார் – குடிப்பிறந்தார்

10) நான்காம் வேற்றுமைத் தொகையில் அஃறிணைப் பெயர்களில் பின்வரும் வலிமிகும்.

(எ–டு) வேலி + கால் – வேலிக்கால்

11) ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணையாய் இருப்பின் வலி மிகும்.

(எ–டு) புலி + கால் – புலிக்கால்

நாய் + தலை – நாய்த்தலை

12) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வலி மிகும்.

(எ–டு) தயிர் + குடம் – தயிர்க்குடம்

சிற்றுண்டு+ சாலை – சிற்றுண்டிச்சாலை

13) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வலி வரும்

(எ–டு) வெள்ளி + தட்டு – வெள்ளித்தட்டு

பூ + பந்தல் – பூப்பந்தல்

14) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வலி மிகும்.

(எ–டு) குழந்தை + பால் – குழந்தைப் பால்

15) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வரும் வலி மிகும்.

(எ–டு) விழி + புனல் – விழிப்புனல்

16) ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வலி மிகும்.

(எ-டு) மலை + கள்ளன் - மலைக்கள்ளன்

17) வன்றொடர்க் குற்றியலுகரத்துக்குப்பின் அல்வழியிலும் வேற்றுமையிலும் வரும் வலி மிகும்.

(எ-டு) கட்டு + காவல் - கட்டுக்காவல்

கொக்கு + பறந்தது - கொக்குப்பறந்தது

(எழுவாய்த் தொடர்)

18) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்துக்குப் பின்வரும் வலி மிகும்.

(எ-டு) காணா + காட்சி - காணாக்காட்சி

19) பண்புத்தொகையில் வரும் வலி மிகும்.

(எ-டு) மெய் + கீர்த்தி - மெய்க்கீர்த்தி

20) இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வலி மிகும்.

(எ-டு) சாரை + பாம்பு - சாரைப்பாம்பு

21) உவமைத்தொகையில் வலி வரும்

(எ-டு) மலர் + கை - மலர்க்கை

22) அரை, பாதி என்னும் எண்ணுப்பெயர்ச் சொற்களின் பின் பண்புத்தொகையில் வரும் வலி மிகும்.

(எ-டு) பாதி + துணி - பாதித்துணி

23) முற்றிலுகரச் சொற்களின் பின் சிறுபான்மை வலி மிகும்.

(எ-டு) அணு + குண்டு - அணுக்குண்டு

புது + புனல் - புதுப்புனல்

24) தனிக்குற்றெழுத்தை அடுத்து நிற்கும் ஆகாரத்தினை பின்வரும் வலி மிகும்.

(எ–டு) கனா + கண்டேன் – கனாக்கண்டேன்

புறா + பறக்கும் – புறாப்பறக்கும்

25) ஆய், போய் என்னும் வினையெச்சங்களுக்குப் பின்வரும் வலி மிகும்.

(எ–டு) கோபமாய் + கூறினான் – கோபமாய்க் கூறினான்

போய் + சொன்னான் – போய்ச் சொன்னான்.

26) அன்றி, இன்றி என்னும் இகர ஈற்று வினையெச்சத்துக்குப் பின்வரும் வலி மிகும்.

அன்றி + கொடான் – அன்றிக்கொடான்

இன்றி + கெட்டது – இன்றிக்கெட்டது

27) அகர ஈற்று வினையெச்சத்துக்குப் பின்வரும் வலி மிகும்.

(எ–டு) மெல்ல + பேசினார் – மெல்லப்பேசினார்

தேட + தேட – தேடத்தேட

விதிவிலக்கும் பிறவும்

28) மென்றொடர்க் குற்றியலுகரத்தின் பின்வரும் வல்லெழுத்துச் சில இடங்களில் மிகும்.

(எ–டு) குரங்கு + கூட்டம் – குரங்குக்கூட்டம்

பண்பு + தொகை – பண்புத்தொகை

29) குற்றியலுகரச் சொற்களுக்குப் பின்வரும் வலி சிறுபான்மை மிகவதுண்டு.

(எ–டு) உணவு + பொருள் – உணவுப்பொருள்

கனவு + கன்னி – கனவுக்கன்னி

30) ஓரெழுத்தொரு மொழிக்குப் பின் வரும் வலி மிகும்.

(எ—டு) தீ + பிடித்தது — தீப்பிடித்தது

31) உரிச்சொற்றொடரில் சிறுபான்மை வலி மிகும்.

(எ—டு) கடி + கமலம் — கடிக்கமலம்

32) செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்திற்குப் பின்வரும் வல்லினம் மிகும்.

(எ—டு) பொய்யா + கொடுக்கும் — பொய்யாக்கொடுக்கும்

(பெயது கொடுக்கும் என்பது பொருள்)

33) புணர்ச்சியில் ட, ற ஒற்று இரட்டிக்கும் நெடி சொற்றொடர் உயரித் தொடர்க் குற்றியலுகரச் சொற்களுக்குப் பின்வரும் வல்லினம் மிகும்.

(எ—டு) ஆடு + கால் — ஆட்டுக்கால்

கிணறு + தவளை — கிணற்றுக்தவளை

34) முன்னர், பின்னர் என்றும் இடைச்சொற்களுக்குப் பின்வரும் வல்லினம் மிகும்.

(எ—டு) பின்னர் + போனார் — பின்னர்ப்போனார்

ஆ) வலி மிகா இடங்கள்

வலிமிகும் இடங்களைத் தெரிந்தும் எங்கெங்கு விலமிகக் கூடாதோ அங்கங்கே வலிமிகும்படி செய்வது ஒருவருக்கு ஏற்படக் கூடிய குறையாகும். ஆதலால், எங்கெங்கே வல்லெழுத்து மிகாது என்பதைத் தெரிந்து கொள்வது இன்றியமையாதது, இனி வல்லெழுத்து மிகாத இடங்கள் சிலவற்றை காண்போம்.

அது, இது, அவை, இவை, எது, ஏது, யாது, எவை, யாவை ஆகிய ஒருமைபான்மைச் சுட்டுக்குளுக்குப் பின்னும் ஒருமை பன்மை வினாக்களுக்குப் பின்னும் வரும் வலி மிகாது.

(எ—டு) அது + சிறிது — அதுசிறிது

இவை + பெரியவை — இவைபெரியவை

எது + போனது – எதுபோனது

எவை + போயின – எவைபோயின

யாவை+ சென்றன – யாவைசென்றன ?

2) அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்னும் சொற்களின் பின்வரும் வலிமிகாது.

(எ–டு) அவ்வளவு + பேச்சு – அவ்வளவுபேச்சு

எவ்வளவு + தருவாய் – எவ்வளவு தருவாய்

3) அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களின் பின்வரும் வலிமிகாது.

(எ–டு) இத்தனை + தேங்காயா – இத்தனை தேங்காயா ?

எத்தனை + கேள்விகள் – எத்தனைகேள்விகள் ?

4) 'படு' என்னும் இடைச்சொல் வினைச்சொல்லுடன் சேர்ந்து வருகையில் வரும் வல்லெழுத்து மிகாது.

5) 'பல, சில' என்னும் சொற்களின் பின்வரும் வலிவேற்றுமை அல்வழியாகிய இரு வழிகளிலும் மிகாது.

(எ–டு) சில + கற்றார் – சிலகற்றார்

பல + பொருள்கள் – பலபொருள்கள்

6) வினாவை உணர்த்தும் ஆ, ஓ, ஏ என்னும் வினா எழுத்தின் பின்வரும் வலி மிகாது.

(எ–டு) அவனா + செய்வான் – அவனாசெய்வான் ?

அவனோ + போனான் – அவனாபோனான் ?

இவனே + கண்டான் – இவனேகண்டான்.

7) ஏகாரம் பொருளில் வந்தாலும் வலிமிகாது.

(எ–டு) அவனே + செய்தான் – அவனே செய்தான்.

8) இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வரும் வலி மிகாது.

(எ-டு) தண்ணீர் + குடித்தான் - தண்ணீர்குடித்தான்

9) நான்காம் வேற்றுமைத் தொகையில் உயர்திணைப் பெயர்களின் பின்வரும் வலிமிகாது.

(எ-டு) சீதை + கணவன் - சீதைகணவன்

10) வினைத் தொகையில் விலமிகாது.

(எ-டு) தாழ் + குழல் - தாழ்குழல்

11) எழுவாய்த் தொடரில் வலி மிகையாது.

(எ-டு) புலி + பெரிது - புலிபெரிது

12) உம்மைத் தொகையில் வலிமிகாது.

(எ-டு) இரவு + பகல் - இரவுபகல்

13) விளித்தொடரில் வலி மிகாது.

(எ-டு) தம்பி + போ - தம்பிபோ

14) இரட்டைக் கிளவியும் அடுக்குத் தொடரிலும் வலி மிகாது.

சல + சல - சலசல (இரட்டைக்கிளவி)

போ + போ - போபோ (அடுக்குத்தொடர்)

15) மூன்றாம் வேற்றுமை உறுப்புகளாகிய ஒடு, ஓடு என்பனவற்றின் பின் வலி மிகாது.

(எ-டு) தலைமையனொடு + தம்பி - தலைமையனொடுதம்பி

குதிரையோடு + கழுதை - குதிரையோடு கழுதை

16) ஆறாம் வேற்றுமை உருபுகளாகிய 'அது, உடைய அ' என்பனவற்றின் பின் வலி மிகாது.

(எ-டு) வேலனது + சட்டை - வேலனதுசட்டை

முருகனுடைய + பைகள் - முருகனுடையபைகள்

என் + கைகள் - என்கைகள்

17) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், தவிர மற்ற எல்லாப் பெயரெச்சங்களுக்குப் பின்னும் வரும் வலி மிகாது.

(எ—டு) வந்த + சிறுவன் — வந்த சிறுவன்

வாராத + பெண் — வாராதபெண்

சிறிய + குடம் — சிறியகுடம்

நல்ல + பாம்பு — நல்லபாம்பு

18) பலவின் பால் வினையெழுத்துத் தொடரில் வலிமிகாது.

(எ—டு) ஓடின + குதிரைகள் — ஓடினகுதிரைகள்

உண்ணா + குதிரைகள் — உண்ணா குதிரைகள்

குறிப்பு

"உண்ணா குதிரைகள்" என்பது வினைமுற்றுச் தொடர், உண்ணாக் குதிரைகள் என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத் தொடர்.

19) செய்ய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்தின் பின்வரும் வலி மிகாது.

(எ—டு) காணிய + சென்றான் — காணியசென்றான்

20) அம்ம என்னும் இடைச் சொல்லின் பின்வரும் வலி மிகாது

(எ—டு) அம்ம + கொடிது — அம்மகொடிது

21) "கேண்மியா" என்பதிலுள்ள மியா என்னும் முன்னிலை அசைச்சொல்லின் பின்வரும் வலி மிகாது.

(எ—டு) கேண்மியா + கொற்றா — கேண்மியாகொற்றா

22) வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின் 'கள், தல்' என்னும் விகுதி சேரும் போது வலி மிகாது.

(எ—டு) வாக்கு + கள் — வாக்குகள்

வாழ்த்து + தல் — வாழ்த்துதல்

23) எட்டு, பத்து ஆகியவை தவிர மற்ற எண்களின் பின்வரும் வலி மிகாது.

(எ—டு) ஒன்று + கொடு — ஒன்றுகொடு

ஒரு + பெட்டி — ஒருபெட்டி

ஐந்து + பழங்கள் — ஐந்து பழங்கள்

ஏழு + கடல்கள் — ஏழுகடல்கள்

ஒன்பது + கவடிகள் — ஒன்பது கவடிகள்

24) இரு வடசொற்கள் சேர்ந்து வருகையில் வல்லெழுத்து மிகாது.

(எ—டு) ஆதி + பகவன் — ஆதிபகவன்

பாத + கமலம் — பாதகமலம்

## பயிற்சி

1) உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வலிமிகுவதற்கு நான்கு சான்றுகள் தருக.

2) மெய்க்கீர்த்தி, மெய்காவலர், உண்ணாக் குதிரை, உண்ணாகுதிரை இவற்றுள் வலி மிகுந்திருப்பதற்கும், வலி மிகாதிருப்பதற்கும் உரிய விதிகளை எழுதுக.

3) கீழ்வரும் வாக்கியங்களில் காணும் பிழைகளைத் திருத்துக.

(அ) அவன் புலிபோல பாய்கிறான்

(ஆ) என்மகன் கடை தெருவில் தெரிந்து கொண்டேன்.

(இ) கோடை காலத்தில் வெப்பம் மிகுதி

(ஈ) கடையில் காய்கறி வாங்கினேன்.

4) இவற்றுள் எது சரி ?

1) முரட்டு பையன் 2) குளிர்காலம்

3) நான்கு தேர்கள் 4) பிரம்புப் பெட்டி

5) பின்னாப் போனார் 6) கண்ணகிக்கோயில்

# பாடம் 26

## 3. வழூஉச் சொற்களைந் திருத்தி எழுதுதல்

தமிழ் மொழியில் பேச்சு வழக்கில் சில தவறான பழக்கங்களால் தமிழ்ச்சொற்கள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறு பயன்படுத்தும் சொற்களைப் பிழைபட்ட அல்லது வழூஉச் சொற்கள் என்பர். அவற்றை மாணவர் தெரிந்து, அவற்றை விலக்கிப் பிழையற்ற தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். ஆதலால், அவற்றுள் சிலவற்றை இங்குத் தந்துள்ளோம். மாணவர் மேலும் முயன்று இன்னபிற வழூஉச் சொற்களையும் கண்டு, பிழை திருத்தப் பயன்படுத்திடப் பழகிக் கொள்வாயக.

| பிழை | | திருத்தம் |
|---|---|---|
| அருகாமை | – | அருகண்மை |
| இசவு | – | இசைவு |
| இடைபோடு | – | எடைபோடு |
| இப்ப | – | இப்பொழுது |
| எண்ணை | – | எண்ணெய் |
| எல்கை | – | எல்லை |
| என்னமோ | – | என்னவோ |
| ஒருவன் | – | ஒருத்தி |
| கயறு | – | கயிறு |
| கழட்டு | – | கழற்று |
| கார்த்தாலை | – | காலை |
| திங்கிறான் | – | தின்கிறான் |
| கேழ்வி | – | கேள்வி |

| | | |
|---|---|---|
| துகை | – | தொகை |
| கொளம்பு | – | குழம்பு |
| சிகப்பு | – | சிவப்பு |
| சிலவு | – | செலவு |
| வென்னீர் | – | வெந்நீர் |
| தாப்பாள் | – | தாழப்பாள் |
| தாவாரம் | – | தாழ்வாரம் |
| துடங்கு | – | தொடங்கு |
| நிகளம் | – | நீளம் |
| பண்டகசாலை | – | பண்டசாலை |
| புண்ணாக்கு | – | பிண்ணாக்கு |
| முழித்தாள் | – | விழித்தான் |
| முழுங்கு | – | விழுங்கு |
| முனி | – | நுனி |
| ரொம்ப | – | நிரம்ப |
| வத்தல் | – | வற்றல் |
| வயறு | – | வயிறு |
| வாவருசி | – | வாழ்வரசி |
| வல்லுனர் | – | வல்லுநர் |
| வெக்கம் | – | வெட்கம் |
| வெத்தலை | – | வெற்றிலை |
| வெண்ணை | – | வெண்ணெய் |
| வெய்யில் | – | வெயில் |
| வேர்த்தது | – | வியர்த்தது |
| வேண்டாம் | – | வேண்டா |
| வலதுபக்கம் | – | வலப்பக்கம் |
| வெளக்கு | – | விளக்கு |

கீழ்வருவனவற்றுள் உள்ள பிழைகளை திருத்தி எழுதுக.

1) மாணம் பார்த்த பூமி
2) சுவற்றில் விளம்பரம் செய்யாதீர்
3) எண்ணைக் கடையில் வெண்ணைவிக்கிறான்
4) மாலை கோர்த்துப் படத்தின் அருகாமையில் வை.
5) கொளத்திலே தவக்களை இருந்ததா ?
6) தாப்பாள் முனியிலே தேளு போவுது.
7) கொளம்பு கொதிக்க வைக்க வெறகு இருக்கா ?
8) ஆத்துக்கு போவ யாத்து வேட்டி வேணுமோ ?
9) வெட்டிச் சிலவு செய்கிறான்.
10) தாவரத்திலே இருக்கிற கோடாலியை எடுத்தா.

## 4. அ) மரபும் மரபுத் தொடர்பும்

சொற்கள் இணைந்து வருதல் சொற்றொடர் எனப்படும். ஓசை இனிமையும், பொருட்செறிவும் உடையவனாய் கேட்போர் உள்ளத்தில் தெளிவாய்ப் பதியும் வகையில் நயத்துடன் கூடியவனாய் அமையும் தொடர்களே சிறந்த சொற்றொடர்களாகும். நம் முன்னோர் இத்தகைய சொற்றொடர்கள் பலவற்றைக் கையாண்டுள்ளனர். அவற்றை அப்படியே எடுத்தாளுதல் மரபாகும். அவற்றுள் இரண்டு இரண்டாய் இணைந்துள்ளவற்றைச் சொற்றொடர்கள் என்றும், இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து வருவனவற்றையும் மரபுத் தொடர்கள் என்றும் வழங்குகின்றோம். சொற்றொடர்களும் மரபுத் தொடர்களும் அவற்றை வாக்கியங்களில் பயன்படுத்தும் வகையும் இங்கு தரப்பட்டுள்ளது.

சொற்றொடர்

| | | |
|---|---|---|
| அல்லும் பகலும் | ஆடல் பாடல் | ஆடை அணிகலன் |
| ஈடும் எடுப்பும் | உற்றார் உறவினர் | ஏழை எளியவர் |

| | | |
|---|---|---|
| கங்குகரை | கண்ணும் கருத்தும் | கல்லும்முள்ளும் |
| கிள்ளுக்கீரை | சட்டதிட்டம் | சீரும்சிறப்பும் |
| சீராட்டிப்பாராட்டி | தங்குதடை | தவிடுபொடி |
| பழக்கவழக்கம் | பாலும்பழமும் | பேரும்புகழும் |
| முட்டிமோதி | வாடிவதங்கி | விருப்புவெறுப்பு |

**வாக்கியம் அமைத்தல்**

1) இந்திரா தேர்வைக் கருதி அல்லும்பகலும் அயராது படித்தாள்
2) மாதவி ஆடல்பாடல்களில் ஆற்றல் மிக்கவளாய் இருந்தாள்.
3) ஒன்றனைக் குறித்து ஆற அமர சிந்தித்தால் அதில் நல்ல தெளிவு பெறலாம்.
4) காந்தியடிகள் ஈடும் எடுப்பும் அற்ற தலைவர்
5) ஏழை எளியவர்களிடம் அன்பாகப் பழக வேண்டும்.
6) நாம் நம் நாட்டு சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.
7) என் நண்பருடைய பிறந்தநாள் விழாவிற்கு உற்றார் உறவினர் அனைவரும் வருந்தினர்.
8) ஒன்றனை விருப்புவெறுப்பு இல்லாமல் ஆராய்ந்தால்தான் உண்மை நிலையை உணரமுடியும்.
9) கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்த பெரியோர் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்வர்.
10) வளவனை அவன் பெற்றோர் சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர்.

**மரபுத் தொடர்**

| | |
|---|---|
| அடி முதல் முடி வரை | ஆக்கவும் அழிக்கவும் வல்ல |
| ஆசைகாட்டி மோசம் செய்து | இடம் பொருள் ஏவல் |
| இமயம் முதல் குமரி வரை | உடல் பொருள் ஆவி |
| ஊண் உறக்கம் இன்றி | எடுப்பார் கைப்பிள்ளை |

| | |
|---|---|
| ஏற இறங்கப் பார்த்து | கணக்கு வழக்கின்றி |
| கைகட்டி வாய் புதைத்து | தட்டுத் தடங்கலின்றி |
| மனம் போன போக்கு | வாழையடி வாழையாய் |

**வாக்கியம் அமைத்தல்**

1) மங்கையற்கரசி அடிமுதல் முடிவரை அழகழகான நகைகள் அணிந்திருந்தாள்.
2) கண்ணப்பன் தன் நண்பனை ஆசை காட்டி மோசம் செய்தான்.
3) அரசியல்வாதிகள் தேர்தல் நேரத்தில் தம் கட்சிகளின் வெற்றிக்காக ஊண் உறக்கமின்றிப் பாடுபட்டனர்.
4) இராமனைக் கண்ட குகன் கைகட்டி வாய் புதைத்து நின்றான்.
5) ஆளுக்கேற்ற வேடம் போடுபவன் ஆராவமுதன்
6) இடம், பொருள் ஏவல் அறிந்து செய்யும் முயற்சி உறுதியாகக் கூடும்.
7) பொய்யர்கள் அழிவழக்காடுவார்கள்.
8) தேர்தல் நேரத்தில் சந்து பொந்துகளிலெல்லாம் ஒலிபெருக்கிகள் முழங்கின.
9) இன்பவாணன் மனம் போன போக்கில் திரிகின்றான்.
10) உடல் நலம் குன்றிய என் தாத்தா மீண்டும் உடல் நலம் பெறுவதற்காக என் பெற்றோர் கணக்கு வழக்கின்றி மருத்துவச் செலவு செய்தனர்.

## பயிற்சி

1) உண்ட வீட்டுக்கு இரண்டகம்
2) உள்ளொன்று வைத்து புறமொன்று பேசி
3) கைக்கெட்டியது வாய்க்கு எட்டாமல்
4) சோற்றுக்கு கேடாய்ப் பூமிக்கு பாரமாய்

5) காலத்திற்கேற்ற கோலம்

6) கள்ளங்கடில்லாத

7) சாக்குப் போக்குச் சொல்லி

8) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்

9) மதில்மேல் பூனை

10) மணப்பால் குடித்தல்

## 4. ஆ. உவமைகளையும், பழமொழிகளையும் வாக்கியங்களில் அமைத்தல்

அவர் இருவரும் நெருங்கிப் பழகி வந்தனர் என்பதை அவர் இருவரும் நகமும் சதையும் போலப் பழகி வந்தனர் என்று கூறும் பொழுது பெருட்செறிவும், கருத்துத் தெளிவும் கொண்டு கேட்போர் நன்கு உணரும் வண்ணம் பொருள் விளங்குகிறது என்பது வெளிப்படை.

ஆசிரியர் கூறிய அறிவுரை என் மனதில் பதித்து விட்டது என்று கூறுவதைவிட, 'ஆசிரியர் கூறிய அறிவுரை என்மனதில் பசுமரத்தாணி போலப் பதிந்து விட்டது என்று கூறுவது நடமுடையதாகவும், கருத்துத் தெளிவுடையதாகவும் இருக்கிறதல்லவா? இவ்வாறு நமக்குத் தெரிந்தவற்றைக் கொண்டு நமக்குத் தெரியாத உண்மைகளை விளக்க நம் முன்னோர் உவமைகளையும் பழமொழிகளையும் எடுத்தாண்டுள்ளனர். நாமும் அவ்வாறே கையாளுதல் நமக்கு ஏற்றமும் சிறப்பும் ஆகும்.

### உவமைத்தொடர்

| | |
|---|---|
| அடியற்ற மரம் போல | செந்தமிழ் சுவையும் போல |
| அத்தி பூத்தாள் போல | நெருப்பிலிட்ட புழுப்போல |
| அன்றலர்ந்த மலர் போல | மழைகாணாப் பயிர் போல |
| ஆற்றில்கரைந்த புளிபோல | மழைமேகம் கண்ட மயில்போல |

| | |
|---|---|
| இஞ்சி தின்ற குரங்கு போல | பகலவனைக் கண்ட பனி போல |
| இலவுகாத்த கிளிபோல | நெருப்பிலிட்ட மெழுகு போல |
| இலைமறைகாய் போல | தாமரை இலைத்தண்ணீர் போல |
| உள்ளங்கை நெல்லிக்கனி போல | குன்றின் மேலிட்ட விளக்கு போல |
| எள்ளில் எண்ணெய் போல | இருதலைக்கொள்ளி எறும்பு போல |
| கடன்பட்டோர் நெஞ்சம் போல | ஊமை கண்ட கனவு போல |

வாக்கியம் அமைத்தல்

கோவலன் மறைவைக் கேட்டுக் கண்ணகி அடியற்ற மரம் போல படிமிசை வீழ்ந்தாள்.

இவ்வாக்கியத்தில் கணவனை இழந்த கண்ணகி செயலுக்கு அடியற்ற மரம் உவமையாய் வந்துள்ளதை காணலாம்.

1) தமிழாசிரியர் கூறிய இலக்கண விளக்கம் மாணவர் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தது.

2) புலவர் இலக்கியப் பேச்சோடு இசை கலந்த பாடலையும் பாடியது சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல இருந்தது.

3) வேடன் வலையில் சிக்கியமான் போலத் தவித்த இந்தியப் பெருநாட்டை காந்தியடிகள் அடிமைத் தளையிலிருந்து விடுவித்தார்.

4) அன்புக்குரிய ஆசிரியர், பணியிலிருந்து ஓய்வு பெற்ற நாளில் மாணவர் அனைவரும் தாயைப் பிரிந்த சேய்போலத் தேம்பிக் கலங்கினார்.

5) திருக்குறள் மிகச் சிறந்த கருத்துக்களைக் கொண்டு விளங்குவதால் அது குன்றின் மேலிட்ட விளக்கு போல திகழ்கிறது.

6) தீயவர்களுக்கு இரக்கம் காட்டி உதவி செய்வது பாம்புக்குப் பால்வார்த்து வளர்ப்பதைப் போன்றது.

7) பாரி வள்ளல் இறந்ததைக் கேட்ட ஒளவை நடுக்கடலில் கலம் கவிழ்ந்தாற் போலத் துன்புற்றார்.

8) தமிழ்ப் பேராசிரியர் பாடம் கற்பிக்கத் தொடங்கியதும் வகுப்பு ஓய்ந்த கடல் போலாயிற்று.

9) கோவலன் கொலையுண்ட செய்தி உணர்ந்த கண்ணகி அனலில் விழுந்த புழுப் போல துடித்தாள்.

10) உற்றாரும் உறவினரும் மணமக்களை மலரும் மணமும் போல வாழுமாறு வாழ்த்தினர்.

### பயிற்சி

பின்வரும் பழமொழிகளைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துப் பழகுக.

1) ஆடிக்காற்றில் அம்மி நகர்ந்தாற்போல
2) பகலவனைக் கண்ட தாமரை போல
3) குரங்கின் கைப்பட்ட பூமாலை போல
4) பாம்பும் கீரியும் போல
5) முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல
6) எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தாற் போல
7) எள்ளில் எண்ணெய் போல
8) கண்ணை இமை காப்பது போல
9) செவிடன் காதில் ஊதிய சங்கு போல
10) பற்றீசல் போல

### பழமொழிகள் -சில

1) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
3) ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்
4) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.

5) கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா?

6) சிறு துரும்பும் பல்குத்த உதவும்

7) சிறு துளி பெரும் வெள்ளம்

8) பழகப்பழகப் பாலும் புளிக்கும்.

9) சும்மா இருக்கின்ற சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி

## பழமொழிகளை வாக்கியத்தில் அமைத்தல்

1) கர்ணன் துரியோதனனிடம் காட்டிய நன்றி, உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பதை நன்கு நினைவூட்டுகிறது.

2) இளமை கழியாமுன் கல்வி கற்றுக் கொள்வது காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வதற்கு ஒப்பாகும்.

3) புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்பதற்கேற்பச் சான்றோர் வறுமையடைந்தாலும் இழிசெயல்களைக் செய்யார்.

4) கோழி மிதித்துக் குஞ்சு முடமாவதில்லை என்பது போல் ஆசிரியர் கடிந்து கொள்வதால் எந்த மாணவனும் கெட்டுப் போவதில்லை.

5) மாபெரும் மற்போர் வீரர் மணிவண்ணன். போட்டியில் கண்ட தோல்வி ஆனைக்கும் அடிசறுக்கும் என்பதை நினைவூட்டுகிறது.

6) 'பட்டகாலிலே படும்; கெட்ட குடியே கெடும்' என்பதற்கிணங்க பிணியுற்ற ஒருவருக்கு வேலையும் போய்விட்டது.

7) விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கிணங்க இராமனுசர் இளமை முதலே கணிதத்தில் வல்லவராக விளங்கினார்.

8) பிள்ளைகளிடம் தீய செயல்களைக் கண்டால், அவற்றை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

9) சிறுதுளி பெருவெள்ளம் என்பதை உணர்ந்து மாணவர் சிறுசேமிப்பில் ஈடுபட வேண்டும்.

10) நம் இந்திய வீரர்கள் போர்க்களம் சென்று, ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்பதை மனத்தில் இருந்தி, அஞ்சாது போரிட்டனர்.

கீழ்வரும் பழமொழிகளைக் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துப் பழகுக.

1) ஆத்திரகாரனுக்குப் புத்தி மட்டு

2) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

3) தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை

4) மரம் வைத்தவன் தண்ணீர் வாழ்துவான்.

5) கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும்.

6) ஆசைகாட்டி மோசம் செய்யாதே.

7) ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.

8) பணமில்லாதவன் பிணம்.

9) குப்பையில் கிடந்தாலும் குன்றிமணி நிறம் மாறுமா ?

10) கண்டைக்காய் காப்பணம் சுமை கூலி முக்கால் பணம்.

## 5. நிறுத்தக் குறியீடுகள்

நாம் பேசும்பொழுது நமது பேச்சின் ஓட்டம் சீராய் அமைவதில்லை. சில இடங்களில் நிறுத்தியும், சில இடங்களில் தொடர்ந்தும், சில இடங்களில் சிறிது தயங்கியும் மற்றும் சில இடங்களில் பெரிதும் தயங்கியும், நின்று நிறுத்திப் பேசுகிறோம். இவ்வாறு இடையிடையே நமது பேச்சின் ஓட்டம் வெவ்வேறு திசையில் செல்வதானாலேயே நமது பேச்சு பிறர் தெரிந்துகொள்ளுமாறு பேச இயல்கின்றது. இல்லாவிடில் நாம் கூறுவது கேட்பவர்க்கு விளங்காது.

இக்குறிகள் பேச்சு ஓட்டம் நிற்பதைக் குறிப்பதனால் இவற்றை நிறுத்தற் குறிகள் என்பர். கீழ்வருவனவே சிறப்பான நிறுத்தற்குறிகள்.

1) காற்புள்ளி (,)

2) அரைப்புள்ளி (;)

3) முக்காற்புள்ளி (:)

4) முற்றுப்புள்ளி (.)

5) உணர்ச்சிகுறி (!)

பிற நிறுத்தக் குறிகளும் இடையிடையே இடைப்படும் அவை

1) இடையீட்டுக் குறி (–)

2) பிறைக்குறி அல்லது அடைப்புக்குறி ( )

3) இரட்டை மேற்கோள்குறி (" ")

4) ஒற்றை மேற்கோள் குறி (' ')

## காற்புள்ளி ( , )

நாம் கூறும் தொடரின் பொருளை, விளங்க வைப்பதற்காக ஒரு சிறிது நிறுத்திச் செல்ல வேண்டும் பொழுது இக்குறி இடப்படும்.

அ) யானை, சிங்கம், புலி, கரடி என்னும் விலங்குகள் அக்காட்டில் வாழ்ந்தன.

ஆ) முருகன், கந்தன், கண்ணன் என்பவர்கள் நேற்று வந்திருந்தார்கள்,

இவற்றுள் பொருள்களைப் பிரிப்பதற்காகக் காற்புள்ளி இடப்பட்டது.

ஆனால். கடைசிப்பொருளுக்குப்பின் வேறு சொல் வருவதால் அங்கு இக்குறியிட வேண்டா.

அ) அன்புள்ள நண்பரே, வருக

பெரியோர்களே, தாய்மார்களே ! வணக்கம் !!

இவ்வாறு விளிப்பெயர்களை அடுத்து காற்புள்ளியிடப்படும்.

அ) ஆகையால், நான் வரமாட்டேன்.

ஆ) எனவே, இதுவே முறையாகும்.

இ) அவர் நல்லவரே, ஆனால் வல்லவரல்லர்

இவ்வாறு பொருளைத் தொகுத்தோ பிரித்தோ கூறுங்கால் அதற்காக வரும் சொற்களின் பின் இக்குறியிடப்படும்.

ஈ) சோழன் புலவரைப்பார்த்து புலவர் பெருமானே ! வணக்கம் ! உங்கள் வரவு நல்லவரவாகுக! என்று கூறினான்.

இதில் ஒரு கூற்றின்முன் உள்ள செய்திகளைக் கூற்றினின்றும் பிரிப்பதற்காகக் காற்புள்ளியிடப்பட்டது.

## அரைப்புள்ளி ( ; )

அரைப்புள்ளி, தொடர் வாக்கியங்களில் அமையும்.

கண்ணகி எழுந்தாள்; ஏங்கினாள் ; விழுந்தாள் ;

விம்மினாள் ; நிமிர்ந்தாள் ; நெட்டுயிர்த்தாள்.

இவ்வாறு பல செயல்களைக் குறிக்கும் ஓர் எழுவாய் வருங்கால் இக்குறி இடப்படும்.

(அ)அவர் அன்பும் பண்பும் நிறைந்தவர் ; ஆயினும், அவரை எனக்குப் பிடிக்கவில்லை.

(ஆ)மணியன் துணிவு மிக்க வரன் என்பதில் ஐயமில்லை ; ஆனால் அறிஞன் என்று கூறல் இயலாது.

ஒரே தொடரில் இரு வேறுபட்ட கருத்துக்கள் வருங்கால ஒன்றினின்றும் பிறிதொன்றைப் பிரிப்பதற்காகவும் இக்குறியிடப்படும்.

## முக்காற்புள்ளி ( : )

இஃது அரைப்புள்ளிக்குரிய காலத்திலும் சிறிது கூடிய காலம்வரை நிறுத்த வேண்டும் என்பதை குறிப்பது.

1) ஒருவரது கூற்றினை அறிமுகம் செய்தல்

பாரதியார் பின்வருமாறு கூறுகின்றனர்,

'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே நம்மில்

ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே'

இவ்வாறு ஒரு கூற்றினை அறிமுகப்படுத்துவதற்காக இக்குறி இடப்படும். சில வேளைகளில் இம்முக்காற் புள்ளியுடன் ஒரு சிறு கோடு தொடர்ந்து வருவதுண்டு.

(எ-டு).

பரிமேலழகர் பின்வருமாறு உரைவிரிக்கின்றார்.

நற்குணங்களாவன, துறந்தார்ப் பேணலும் விருந்து அயர்தலும், வறியார் மாட்டு அருளுடைமையும் முதலாயின.

2. பட்டியல்

அ) ஐம்பொறிகளாவன; மெய், வாய், கண், மூக்கு, என்பன

ஆ) மின் ஆற்றலின் பயன்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்; மின் ஆற்றலால் நாம் ஒலி பெறுகின்றோம்; உணவு சமைக்கின்றோம், காற்றைப் பெறுகின்றோம்; இசைகேட்டு இன்புறுகின்றோம்.

பலபொருள் அல்லது செய்திகள் அடங்கிய பட்டியலின் முன்னர் அல்லது பொருள் விளக்கங்களின் முன்னர் இம்முக்காற்புள்ளி இடப்படும்.

முற்றுப்புள்ளி ( . )

அன்பும் அருளும் என்ற அழகப்பா வந்தார், – செய்தி

உன் வேலை முடிந்ததும் நீ போ, – கட்டளை

ஒரு செய்தி வாக்கியம் அல்லது கட்டளை வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி இடவேண்டும். இக்குறிஇடின் நிறுத்திப் படிக்க வேண்டும்.

சிலப் அரங், 47

தொல், பொருள், செய்ய சூ. 64 சொற்குறுக்கம்

திரு.வி.க.

கா.சு.பிள்ளை பெயர்க்குறுக்கம்

'திருவாரூர் விருத்தாசல முதலியார் மகன் கலியாண சுந்தரனார்', என்பன குறுகித் 'திரு.வி.க.' ஆகியது.

'காந்திமதிநாத பிள்ளை மைந்தர், சுப்பிரமணியபிள்ளை' என்பது (குறிகிக்) கா.சு.பிள்ளை ஆகியது.

சொற்குறுக்கத்தையும், பெயர்குறுக்கத்தையும் குறிக்க முற்றுப்புள்ளி இட வேண்டும்.

## வினாக் குறி ( ? )

அவர் வந்தட்டாரா ?

எனது குடை எங்கே ?

இக்குறி வினாக்களின் பின் இடப்படும்.

உணர்ச்சிக்குறி ( ! )

அந்தோ ! ஆ! ஐயா! அம்மா !<br>
வெட்கம்! வெட்கம்! — உணர்ச்சி

என்னை அடியாதீர்கள் !<br>
அறும் வாழ்க !<br>
என்ன பணிவு ! — உணர்ச்சி<br>
ஐயோ பாவம்! — வாக்கியங்கள்<br>
அவன் மிகவும் நல்லவன் !<br>
எனக்கு மட்டும் இறக்கை<br>
முளைத்து விட்டால்!

'குழந்தைகளே! எழுந்திருங்கள் ! — ஏவல்<br>
முருகா ! ஓடி வா! — வினைமுற்று<br>
வாருங்கள் ஓடுங்கள் !

இக்குறி உணர்ச்சிப் பெருக்கால் வரும் சொற்குளுக்கும் வாக்கியங்களுக்கும் பின் இடப்படும் முற்றுப் புள்ளியை க்கும் . சில

வேளைகளில் ஏவல் வினைமுற்றின் பின்வரும் இடப்படும். விளிப்பெயரின் பின்வரும் இக்குறியிடுதல் உண்டு.

மேற்கோட்குறி ("........") ('.......')

திருவள்ளுவர்

"பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தா
ரிறைவ னடி சேராதவர்"

என்கிறார்.

கோலப்பர் எங்களைப் பார்த்து, "நீங்கள் சொல்லுவது, போர்த்திக் கொண்டு படுத்தாலும் ஒன்று தான்; படுத்துக்கொண்டு போர்த்தினாலும் ஒன்று தான் என்பது போல இருக்கின்றது" என்று கூறினார்.

இதில் மேற்கோளுள் மேற்கோள் வந்ததனால், உள்ளடங்கிய கூற்றின் இருபுறமும் ஒன்றை மேற்கொள் குறியிடப்பட்டது.

## இடைப்பிறை வைப்புக்குறி ( )

என் தாய் இப்பொழுது இருந்தால் (ஏன் அதைப்பற்றி பேச வேண்டும்)

இவ்வாறு, திடீரென எண்ணங்கள் இடையில் மாறுபட்டு வருங்கால் அதனைக் காட்ட இடைப்பிறை வைப்புக் குறியிட வேண்டும்.

## பிறைக்குறி ( )

இறைவன் அருள்பெற விரும்புகின்றவர்கள் இருவினை (நல்வினை, தீவினை)யும் செய்யமாட்டார்கள்.

ஒரு வாக்கியத்தில் இடையில் கருத்து விளக்கத்திற்காக வரும் தனிக் கருத்துச் சொற்களைப் பிரிப்பதற்காகப் பிறைக்குறியிடப்பட்டது. இக்காலத்தில் பிறைக்குறி வேண்டும் இடத்தில் சிறுகோடுகள் இடப்படுகின்றன. ஆகவே பிறைக்குறி இடையீட்டுக் குறியாயிற்று.

## பயிற்சி

கீழ்க்காணும் பத்தியில்

எந்த நிறுத்தக் குறிகளை இடுக.

பொதுவாக எல்லா வகையான கட்டுரைகளும் மேற்கொள்ள வேண்டிய முக்கிய விதிகள் மூன்றாகும் அவையாவன பிழையின்மை சுருங்கக் கூறல் விளங்க வைத்தல்.

பிழையின்மையாவது எழுத்துப்பிழை சொற்பிழை, சந்திப்பிழை, இலக்கணப்பிழை முதலியன இல்லாமை சுவையான உணவில் கற்கள் மிகுந்திருந்தால் அவ்வளவு சுவைக்குமா சுவைக்காதன்றோ அது போன்றதே எழுத்துப்பிழை முதலியவை மலிந்திருக்கும் கட்டுரை.

சுருங்கக் கூறி விளங்க வைத்தால்தானே ஒருவர் எழுதும் கட்டுரை இனிதாயிருக்கும், ஆதலால் சொற்பொழிவாளர் மாணவர்களை நோக்கி எதிர்கால எழுத்தாளர்களாக விரும்பும் மாணவர்களே இம்மூன்று விதிகளையும் மறவாமல் மேற்கொள்வீர்களாக என்று அறிவுரை கூறினார்.

## பாடம் 27

'கட்டுரை' என்பது 'கட்டப்பட்ட உரை' என விரியும். இது மலர்களால் கட்டப்பட்ட மாலை போன்றது. பல மணிகளைப் பொற்கம்பியால் கட்டிய பன்மணிக் கோவைபோலப் பல செய்திகளைக் கருத்தொருமையாகிய கம்பியால் கட்டி அமைப்பதே கட்டுரையாகும்.

இலக்கண முறையில் ஒரு பொருளைப் பற்றிப் பொருத்தமுறக் கட்டுரைப்பது 'கட்டுரை' என்று ஆங்கில சுருக்க அகராதி பொருள் கூறுகிறது. 'வியாசம்' என்னும் வட சொல்லுக்கு 'வகைப்படுத்தி அமைத்தல்' என்பது பொருள்.

தமிழ் மொழியில் கட்டுரைப்பது 'கட்டுரை' என்று பொருள்படும். ஆதலால், ஒரு பொருளைக் குறித்துச் சிந்திக்கும்போது தோன்றும் கருத்துக்களை ஒழுங்குபடுத்திப் பொருட்செறிவோடு விளக்கமாக பலரும் அறியும் வகையில் தெளிவாக உரைநடையில் வழுவின்றி எழுதுவதே கட்டுரை எனலாம்.

எந்தப் பொருளைக் குறித்துக் கட்டுரை எழுதினாலும் அதில் அழகிய தொடக்கமும், இனிய முடிவும் சிறப்பாக அமையவேண்டும். தொடக்கமும் முடிவும் நன்கு அமையாவிடின், கட்டுரை அவை பயலாது, ஆதலால் அறிஞர்கள் கட்டுரையில் தொடக்கத்திலும் முடிவிலும் மிகுந்த கவனம் செலுத்துகிறார்கள். கட்டுரையி, 'சுருங்கச் சொல்லல்' விளங்க வைத்தல், நவின்றோர்க்கு இனிமை, நன்மொழி புணர்தல், உள்ளிட்ட அழகுகள் இருக்க வேண்டும் : கூறியது கூறல், மறுசொன்னக் கூறல், மற்றொன்று விரித்தல், உள்ளிட்ட குற்றங்கள் இருத்தல் கூடாது. இலக்கணப் பிழைகள், சொற்பிழைகள், கொச்சை மொழிகள், அளவு கடந்த பிறமொழிச் சொற்கள் ஆகியவை இல்லாதவாறு கட்டுரை அமைய வேண்டும். உள்ளதை உள்ளவாறு கூறுவதைக் கட்டுரை எழுதுவோர் மேற்கொள்ள வேண்டும்.

கீழ்வரும் குறிப்புகள் நல்ல கட்டுரை எழுதுவதற்கு மிகவும் பயன்படும்.

1) முதலில் கட்டுரையின் தலைப்புக்குப் பொருத்தமான பல செய்திகளைத் தொகுக்க வேண்டும்.

2) தொகுத்த செய்திகளைப் பாகுபடுத்திப் பல பிரிவுகளாக பகுக்க வேண்டும்.

3) பகுத்த பிரிவுகளை அவரவர் திறத்திற்கேற்ப விரித்து எழுதவேண்டும்.

4) தலைப்புப் பொருளைப்பற்றி நன்கு எண்ணிப் பார்த்து அத்தலைப்புக்கேற்ற செய்திகளைப் பற்றிக் குறிப்பெழுதி வைத்துக் கொள்ளுதல் இன்றியமையாதது. தேர்வுகளிலும்கூட முன் குறிப்பு எழுதுவது மிகவும் நல்ல பழக்கமாகும். முதலில் குறிப்பு எழுதுங்கால் நினைவில் உள்ளவற்றையெல்லாம் எழுதிவிடலாம். பின்னர்க் கட்டுரை எழுதும் பொழுது குறித்தலை தவிர வேறு சில செய்திகளும் நினைவுக்கு வரும். அவற்றையும் சேர்த்து எழுதலாம். முதலில் குறிப்பு எழுதாவிடில், முதலில் நினைவில் நின்றவற்றுள் இரண்டொரு செய்திகளைக் கூடக் கட்டுரை எழுதிக் கொண்டு வரும் பொழுது மறந்து விடல் நேரும். ஆதலால், முதலில் நினைவில் வரும் செய்திகளையெல்லாம் குறித்து வைத்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு குறிக்கும் போது, முன்னுரை, செய்தி, முடிவுரை என்று பிரித்துக் குறிப்பெழுதுதல் வேண்டும் செய்திகளைப் பல பத்திகளாக எழுதலாம்.

5) குறித்து வைத்துள்ளவற்றுள் மிகமிக இன்றியமையாத செய்திகளை மட்டும் தேர்ந்தெடுத்து வகைப்படுத்தவேண்டும். நினைத்தவை எல்லாவற்றையும் கட்டுரையில் சேர்ப்பது கட்டுரைக்குச் சிறப்புத் தராது.

6) எடுத்துக் கொள்ளும் பொருளை நினைவிற்கொண்டு வகைப்படுத்திய செய்திகளை முன் பின்னாக வரிசைப்படுத்தி முடிவுரைக்கு ஏற்ற பத்திகளாகத் திட்டம் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

7) கட்டுரை எழுதத் தொடங்கும்போது, ஒவ்வொரு கருத்துக்கும் ஒவ்வொரு பத்தியாக எழுதவேண்டும். படிப்பவருடைய கருத்தைக் கவருமாறு முதற் பத்தியை அமைத்தல் நன்று. முடிக்கும்போது அவ்வாறே முடித்தல் நன்று. நன்கு எழுதிக் கொண்டேவரும் கட்டுரையின் முடிவு உப்புச்

சப்பில்லாமல் இருந்தால் முதலில் மேற்கொண்ட முயற்சியெல்லாம் வீணாகி விடுகின்றது.

8) எத்தகைய பெருமுயற்சியுடன் எழுதிய கட்டுரையாயினும், எழுதியபின் மீண்டும் ஒருமுறை அதனைக் கருத்தூன்றிப் படித்துப் பார்க்க வேண்டும். அப்பொழுது சில இலக்கணப் பிழைகள், சொற்கள் அல்லது சிறுதொடர்களின் இடமாற்றங்கள், எழுத்துப்பிழைகள் முதலியவற்றைத் திருத்திக் கொள்ள வாய்ப்பு உண்டு. அவ்வாறு திருத்தப்பட்ட கட்டுரையே நன்கு அமைந்த கட்டுரையாகும்.

9) விரித்து எழுதுங்கால் கட்டுரையில் வரும் சொற்றொடர்கள் நலமாகவும் திறமாகவும் அமைய வேண்டுமாயின் ஏற்ற சொல்லையோ, தொடரையோ ஏற்ற இடத்தில் அமைக்கும் சொல்லாட்சித் திறன் வேண்டும்.

10) இவ்வாறு அமைப்பதற்கு அறிவு மட்டுமில்லாமல், கற்பனையும் வேண்டும்.

இவற்றையெல்லாம் மனதில் கொண்டு கட்டுரை எழுதினால் அக்கட்டுரை செம்மையாக அமையும், கட்டுரைகள் வருணனைக் கட்டுரை, தலைப்பு விளக்கம் கட்டுரை, சிந்தனைக் கட்டுரை, கதைக் கட்டுரை, வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரை. கல்வி இயற்கட்டுரை முதலிய சில வகைப்படும்.

(1) வருணணைனைக் கட்டுரை

ஒரு பொருளையோ, இடத்தையோ, காலத்தையோ பற்றியது வருணனைக் கட்டுரை.

அவை கீழ்வருமாறு

1) நாடு, நகரம், அரண்மனை, கோயில் முதலியவை பற்றிக் கட்டுரை எழுதுவது, எடுத்துக்காட்டாக இந்தியா, தமிழ்நாடு, மதுரை, திருமலைநாயக்கர் மகால், தஞ்சைப் பெரிய கோயில், மாமல்லபுரம் முதலியன பற்றி எழுதுவது.

2) இயற்கையைப் பற்றிய பொருள்களாகிய இளவேனில், ஞாயிறு, வெண்ணிலா, எரிமலை முதலியன குறித்து எழுதுவது.

3) கருப்பொருளாகிய விலங்கு, பறவைகள், மலர்கள் முதலியன பற்றியும் கனிப்பொருள்களாகிய வைரம், செம்பொன் முதலியன குறித்தும் எழுதுவது.

4) மின்விசிறி, புகைவண்டி, எழுது கருவிகள் முதலியன பற்றி எழுதுவது.

மதுரை மாநகரம்

| | | | |
|---|---|---|---|
| 1. முன்னுரை | : | வரலாறும் மாண்புகளும் | |
| 2. பொருள் | : | (அ) | மதுரை நகரப் பரப்பும் மக்கள் தொகையும் |
| | | (ஆ) | கல்வி நிலையங்களும் தொழிற்சாலைகளும் |
| | | (இ) | மதுரையில் பார்க்கத்தக்கவை |
| | | (ஈ) | மதுரை மக்கட்பண்பு |
| 3. முடிவுரை | : | எனது கருத்து | |

**முன்னுரை**

வரலாற்றுப் புகழ்பெற்ற நகரம் மாநகரம், இனிய தமிழ் வளர்த்த மதுரை மாநகரம், பாண்டி நாட்டில் உள்ளது. இது தமிழகத்தில் உள்ள பழைய நகரங்களுள் மிகப்பழைய நகரமாகும். இதன் பழமை ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்குக் குறையாது. பாண்டியர் காலத்தில் இது பாண்டிய நாட்டின் தலைநகரமாய் இருந்தது. கி.பி. 1310இல் ஏற்பட்ட மாலிக்காபூர் படையெடுப்பாலும் மதுரை நாட்டு ஆட்சி முஸ்லீம்கள் வசமாயிற்று. மதுரையில் 48 ஆண்டுகள் முஸ்லீம் ஆட்சி நடைபெற்ற. விஜயநகர அரசர் காலத்தில் இரண்டாம் கம்பணர் என்பவர் முஸ்லீம் ஆட்சியை ஒழித்துத் தமிழகத்தை விஜயநகரப் பேரரசுக்குள் இணைத்துவிட்டார். இப்பேரரசின் சார்பில் மதுரை, விசுவநாத நாயக்கர் முதலியோரின் ஆட்சியில் இருந்து வந்தது. இந்த நாயக்கர் பரம்பரையில் வந்த திருமலை நாயக்கர் இன்றைய மதுரையைக் கலைமிகுந்த அழகிய நகரமாக்கினார். இன்று மதுரை கலைமிக்க நன்னகரமாகவும், விழா நகரமாகவும் கல்வி தொழில் மிக்க பொன்னகரமாகவும்

விளங்குகிறது. 'தமிழ்தெழுகூடல் எனப் புறநானூறும்' 'தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர்' மதுரை என்று சிலப்பதிகாரம் மதுரைப் பெருநன் மாநகர் என்று திருவாசகமும் இந்நகரை இனிது பாராட்டுகின்றன.

## நகரமைப்பு

ஆற்றங்கரையில்தான் நாகரிகம் வளர்ந்தது. ஆற்றங்கரையில்தான் சிறந்த நகரங்கள் தோன்றின. இந்த மாநகரும் பொய்யாக்குலக்கொடி என்று புலவர் பாராட்டும் வைகை ஆற்றங்கரையில் அழகாய் அமைந்திருந்தது. கி.பி. 865இல் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலைச் சுற்றி ஒரு கல் பரப்புடைய பட்டணமாய் இருந்த மதுரை, 1822 இல் முதன் முதல் நகரமாகும் நிலையை அடைந்தது. அப்போதிருந்த மக்கள் தொகை 40,000 ஆகும். இப்போது மதுரை 22 சதுர மைல் பரப்புக்கும் மேலாக விரிந்து ஏறத்தாழ எட்டு லட்சம் மக்கள் தொகையுடைய மாநகரமாய் விளங்குகின்றது.

## மக்கள்

மதுரை மாநகரில் சௌராட்டிரர்கள் வாழ்கிறார்கள் ; முஸ்லீம்கள் வாழ்கிறார்கள்; கிறித்தவர்கள் வாழ்கிறார்கள்; மதுரை நாயக்கர் இனத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். ஆங்கிலேய இந்தியர்களும் வாழ்கிறார்கள். இவர்கள் எல்லோரும் எந்த மாறுபாடும் இன்றி அமைதியாய் வாழ்வதைக் காணலாம்.

## கல்விநிலையங்களும், தொழிற்சாலைகளும்

மதுரையில் காமராசர் பல்கலைக்கழகம் இருக்கிறது. பல தொடக்கப் பள்ளிகளும் பல உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளும் சில கல்லூரிகளும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் இருக்கின்றன.

மதுரையில் பெரிய நூற்பாலைகளும் சிறிய நெசவாலைகளும் இருக்கின்றன. இவற்றில் ஆயிரக்கணக்கான மக்கள் பணிபுரிகிறார்கள். மதுரை சுங்குடிப் புடவை புகழ்பெற்றது.

**காணத்தக்கவை**

மதுரை மாநகரின் மையத்தில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலும் சித்திரைத் திருவிழா மற்றும் தைப்பூசத் தெப்பத்திருவிழா நிகழ்ச்சிகளும் பல்லோராலும் காணத்தக்க பெருஞ் சிறப்பு உடையவை. மேலும் திருமலை நாயக்கர் மகால், வண்டியூர்த் தெப்பக்குளம், காந்தி பொருட்காட்சியகம், மதுரைக்கு அருகில் உள்ள வைகை அணைக்கட்டு, திருப்பரங்குன்றம் முருகன் கோயில், அழகர்மலை முதலியன நம்மால் கண்டு மகிழத்தக்கவை.

**முடிவுரை**

சென்னைக்கு அடுத்த பெரிய நகரம் மதுரை மாநகரமாய், இதனைத் தமிழகத்தின் பண்பாட்டுத் தலைநகரம் எனலாம்.

## மயில்

1) முன்னுரை : அழகான பறவை – குறிஞ்சி பறவை – எங்கும் காணப்படுவது; இந்துக்களால் முருகன் ஊர்தி எனப் போற்றப்படுவது.

2) பொருள் : தோற்றம் – அழகான நீண்ட கழுத்து – தோகைக் கவர்ச்சி – பண்பு

3) முடிவுரை : இந்திய அரசின் தேசியப்பறவை

**முகவுரை**

பறவைகளுள் மிகவும் அழகான பறவை மயில். இஃது இந்தியா, இலங்கை, பர்மா, மலேசியா நாடுகளில் வாழ்கிறது. எனினும் இஃது இந்தியாவில் தான் மிகுதியாகக் காணப்படுகிறது. பழைய சங்க இலக்கியங்களில் மயிலைப் பற்றிய குறிப்புகளைப் பல இடங்களில் காணலாம்.

குறிஞ்சி நிலைப்பகுதிகளில் மயில் மிகுமியாகக் காணப்படுவதால் இது குறிஞ்சி நிலப்பறவையெனத் தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப்படுகிறது. குறிஞ்சி நிலத் தெய்வமெனக் கருதப்படும் முருகப் பெருமானின் ஊர்த்தியாம் என்பதைத் தமிழ் நூல்கள் கூறும். முருகனுக்கு ஊர்தி எனக் கருதப்படுவதால், மயில் தமிழ்நாட்டில் தெய்வத்தன்மை வாய்ந்த பறவையென இந்துக்களால் மிகவும்

போற்றப்படுகிறது இக்காரணத்தினால் முருகன் திருக்கோயில்களில் மயில்கள் வளர்க்கப்படுவதைக் காணலாம்.

### தோற்றம்

ஆண்மயிலுக்கு நீளக்கழுத்தும், தலையில் அழகான கொண்டையும் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணத் தோகையுமுண்டு. இத்தோகையின் நுனியில். கருமை., நீலம், பசுமை நிறங்கொண்ட கண் போன்ற சிறிய அழகாக வட்டங்கள் இருக்கும். இந்த வட்டத்தைக் கண் என்று கூறுவது வழக்கம் மகிழ்ச்சியடையும் போது மயில் இந்த அழகிய தோகையை விசிறிபோல விரித்தாடும். பெண்மயிலுக்கு தோகை இல்லை. வெள்ளை நிற மயில்கள் சில உண்டு.

### மயிலின் பண்புகள்

அடர்ந்த புதர்களிலும் மலைச் சாரல்களிலும் மயில்கள் சிறு கூட்டமாய் வாழும். தானியங்கள், பூச்சி, பல்லி, சிறுபாம்பு முதலியன மயிலுக்கு இரையாகும் மயிலுக்கு மிகக் கூர்மையான பார்வை உண்டு. இது பகைவர் வருவதைத் தொலைவிலிருந்து கண்டு ஓடி ஒளிந்து கொள்ளும். இதற்கு விரைந்து ஓடும் ஆற்றல் உண்டு. இடியிடிக்கும் போது மயில் மிக்க ஓசையிட்டு அகவும்.

### முடிவுரை

ஒவ்வொரு நாடும் அங்கு வாழும் சிறந்த பறவையைத் தன் தேசியப் பறவையாகக் கொள்கிறது. அது போல இந்தியாவும் இவ்வழகிய மயிலைத் தன் தேசியப் பறவையாகக் கொண்டிருக்கிறது. இத்தகைய அழகுமிக்க வண்ணத்தோகையை விரித்து நடனமாடி நம் உள்ளத்தை கொள்ளை கொள்ளும் மயிலை இதன் வண்ண இறகுகாகக் சிலர் வேட்டையாடிக் கொல்கின்றனர். அதனால் மயிலின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. ஆகையால் இந்தத் தேசிய பறவையைக் கொல்லும் கொடுமையைத் தடுத்து நாம் பாதுகாக்க வேண்டும்.

## பயிற்சி

பின்வரும் பொருள்களைப் பற்றிக் கட்டுரை எழுதிப் பழகுக.

| | |
|---|---|
| 1) மாமல்லபுரம் | 2) திருக்குற்றாலக் காட்சி |
| 3) ஆலமரம் | 4) காவிரியாறு |
| 5) தாமரை மலர் | 6) புலி |
| 7) தொல்பொருள் நிலையம் | 8) வானொலிப் பெட்டி |
| 9) தஞ்சை நகரம் | 10) வைகை அணை |

## சமுதாயவியல்

### குறிப்பு

| | |
|---|---|
| 1) முன்னுரை | 2) ஒற்றுமை இன்மைக்குக் காரணம் |
| 3) சான்றோர் கருத்து | 4) அரசு முயற்சி |
| 5) நமது கடமை | 6) முடிவுரை |

### முன்னுரை

நம்நாடு உயர்நிலை அடைந்திருந்த காலத்தில் பண்பாடு என்பது என்னவென்பதை அறியாமல், நாகரிகமற்றுக் காடாய்க் கிடந்த நாடெல்லாம் இன்று முன்னேற்றப்பாதையில் முன்னணியில் நிற்கின்றன. நம் நாடோ, முன்னேற்றம் அடைய இயலாமல் திணறிக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் பல இருந்தாலும், நம்நாட்டு மக்கள் பற்பல சாதியினராய்ப் பிரிந்து ஒற்றுமையற்று வேற்றுமைப்பட்டு நிற்பதே தலையாய காரணம் என்று கூறலாம்.

### ஒற்றுமையின்மைக்குக் காரணம்

சாதிக்குட் சாதியாய் எண்ணிக்கையில் பெருகிக் கிடக்கும் நம்நாட்டு மக்கள் தத்தம் சாதியின் முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். பிறருடன் போட்டியிடுகின்றனர். தத்தம் சாதியினர் உயர்வடைவதே போதும் என்று எண்ணுகின்றனர். இதனால் ஒற்றுமையுணர்ச்சி வளர்வதற்கு இடமின்றி வேற்றுமையுணர்ச்சி தலைதூக்கி நிற்கின்றது.

### சான்றோர் கருத்து

'இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்' என்று மக்கள் சமுதாயத்தை இரண்டே வகைக்குள் ஔவைப் பிராட்டி அடக்கி கூறியுள்ளார். வள்ளுவர்

பெருமான். 'பிறர்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்று கூறியுள்ளார். 'எல்லாரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம்' என்று அமர கவி பாரதியார் பாடியுள்ளார். சமயக் குரவரும், தாயுமானவர், இராமலிங்க வள்ளலார் முதலிய மெஞ்ஞானக் குரவரும், மகாத்மாகாந்தி, நேரு போன்ற அரசியல் தலைவரும் சாதியைப் போற்றவில்லை, மக்கள் சமுதாயம் ஒன்றுபட்டு உயர்வடைவதையே விரும்பினர்.

### அரசு முயற்சி

இந்தச் சாதிக் கொடுமை நம்நாட்டை விட்டு அகல அரசு பெருமுயற்சி மேற்கொண்டு தொண்டாற்றி வருகிறது. நாம் பல்வேறு சாதியினராய் பிரிந்துள்ளதை அரசு விரும்பவில்லை. நாம் அனைவரும் ஒரே இன மக்களாய் ஒரே நாட்டு மக்களாய் ஒன்றுபட்டு வாழ்வதையே விரும்புகிறது.

### நம் கடமை

சாதிவகை வளர்வதையும் அவற்றால் வேறுபாடு தோன்றுவதையும், பிணக்குப் பல எழ வழி பிறப்பதையும், இளைஞர் மனதிற் கொள்ள வேண்டும். தம் பெயர்களுக்குப் பின் சாதிப் பெயரைச் சாற்றிக் கொள்ளும் வழக்கத்தை அறவே கைவிடுதல் வேண்டும். எவரிடமும் எக்காரணம் பற்றியும் தம்மைச் சாதியின் பெயரால் குறிப்பிடுவதை வேண்டும்.

### முடிவுரை

வருங்காலச் சமுதாயத்தினரான இளைஞர் இவ்வாறு முனைந்தால் நம் நாட்டில் இன்னும் தலைகாட்டிக் கொண்டிருக்கும் சாதிப்பித்து நீங்கும். நாம் அனைவரும் ஒரே இனத்தவர்; ஒரே மொழியினர், ஒரே நாட்டவர் என்னும் நிலை தோன்றும்; ஒற்றுமை வளரும்; நாடு முன்னேறும். நாட்டு மக்கள் சமுதாயம் உயர்நிலை அடையும்.

### பயிற்சி

கீழ்வரும் தலைப்புகளில் ஒவ்வொரு கட்டுரை எழுதுக.

1) மாணவரும் சமுகத் தொண்டும்.
2) சிக்கன வாழ்வே சீரிய வாழ்வு
3) வரதட்சணைக் கொடுமை

4) பெண்கள் நிலை அன்றும் இன்றும்
5) நாட்டுக்கு நன்மை விளைப்பவன் செலவாளியா சிக்கனக்காரனா ?

## கல்வியியல்

முன்னுரை : கல்வி என்பது யாது?

இதுவரையிருந்த கல்வி முறை

பொருள் :(அ) எப்படிப்பட்ட கல்வி முறை வேண்டும் ?

(ஆ) அக்கல்வி பெற என்ன செய்ய வேண்டும் ?

(இ) பத்தாண்டு முறைக் கல்வியின் சிறப்பு

முடிவுரை : நாடு முன்னேற்றம் ஏற்படக் கூடும்

**முன்னுரை**

கல்வி நம்முடைய நரம்புத் தொகுதியில், மூளையில் ஏற்படும் மாறுபாடாகும். நம்முடைய மூளை அற்புதமான அமைப்புடையது. வெண்ணீல நிறமுடையது. ஒருகோடியே ஐம்பது லட்சம் முடிச்சுகளைக் கொண்டது; முதிர்ந்த நிலையில் ஒருவருடைய மூளை அவருடைய உடல் எடையில் 40இல் ஒரு பங்கு எடை இருக்குமாம். 70 ஆண்டுகள் படிக்கும் பழக்கமுள்ள ஒருவருக்கு 1800 கோடித் தனித்தனி செய்திகளை வைத்துப் பாதுகாக்கும் பெட்டகமாய் அரிய கருவூலமாய், மாளிட மூளை விளங்குவதாக அறிஞர் ஆர்வேடே என்பவர் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய அற்புதமான மூளையில் இயல்பாக ஒவ்வொருக்கும் இருந்துவரும் அரிய ஆற்றலை வெளிப்படுத்துவது தான் கல்வியின் பணியாகிறது.

கல்வி, காலத்திற்குக் காலம் மாறும். பண்டைக் காலத்தில் போர்க் கல்வியே சிறந்த கல்வியாய் விளங்கியது. இடைக்காலத்தில் நம் நாட்டில் தத்துவக்கல்வி சிறந்த இடம் பெற்றது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அலுவலகத்தில் எழுத்தர் ஆகும் திறமையளிக்கும் இலக்கியக் கல்வியும் பொத அறிவுக் கல்வியும் நாட்டுக் கல்வித் திட்டத்தில் முதலிடம் பெற்றன. விடுதலை பெற்ற இந்திய நாட்டிலும் இன்றும் அதேமுறைக் கல்வியே இருந்து

வருகிறது. இக்கல்வி முறையால் நாட்டில் நாளுக்கு நாள் வேலை இல்லாத் திண்டாட்டம் பெருகிவருகிறது. இந்த நிலையை இந்நாளில் மாற்ற வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டுள்ளது.

**பொருள்**

இன்று நாட்டுக்கு எத்தகைய கல்வி வேண்டும்? உற்பத்தியைப் பெருக்கி நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை பெரிய அளவு குறைக்கத்தக்க தொழில் திறன் அளிக்கும் கல்வியும், புதியவற்றைக் கண்டுபிடிக்கும் ஆற்றல் உண்டாக்கும் அறிவியல் தொடர்பான கல்வியும் இந்தியநாடு முழுவதும் ஒரே முறையில் அமைந்த உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் இன்றைக்கு விரைந்து வேண்டப்படும் கல்வியாகும். இத்தகைய கல்வியே ஜப்பான் முதலிய நாடுகளை இன்று முன்னேற்றப் பாதையில் கொண்டு செலுத்துவதாகப் பட்டறிவு மிக்க அறிஞர் பெருமக்கள் கருதுகிறார்கள்.

பத்தாண்டுக் கல்வித்திட்டம் இத்தகைய கல்வி முறையை அளிக்க வல்லது. இப்பத்தாண்டுக் கல்வித் திட்டத்தில் பல வகைத் தொழிற்பயிற்சிகள் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு அளிக்கப்படும். இதனால் அரசாங்க வேலையை எதிர்பார்க்கும் மனநிலை மக்களிடமிருந்து மாறும். மேலும் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையிலும் பத்தாண்டுக் கல்வி முறையே இருக்க வேண்டும். எல்லா வகையிலும் இப்பத்தாண்டுக் கல்வி முறை நாட்டின் தேவையை நிறைவேற்றும் நினைவாற்றல் ஒன்றையே எதிர்பார்க்கும் தேர்வு முறையும் மாறும். மாணவர்கள் விரும்பிய பாடங்களை எடுத்துப் படிப்பதோடு தொழிற்பயிற்சியும் பெறுவார்கள். வேலை வாய்ப்பும் மிகுதியாகும். இதனால், இன்றுள்ள வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும். நாட்டின் வறுமையும் மிகுந்த அளவு குறைந்து விடக்கூடும்.

**முடிவுரை**

இந்நாட்டில் கல்வி, காலத்துக்குக்காலம் நிலைமையை ஒட்டி மாறி வந்திருக்கிறது. அவ்வாறே நாட்டின் இக்கால நிலைக்கு ஏற்றவாறு பத்தாண்டுக் கல்வி முறை மாறுதலைப் பெறுவது நன்று என்பது சொல்லத்

தேவையில்லை. அறிவியல், கணக்கு முதலியவற்றில் பிறநாடுகளோடு ஒத்திருக்கக்கூடிய பெருமாற்றம் ஏற்படும். ஆகையால், நாம் இத்தகைய பத்தாண்டுக் கல்வியை ஏற்றுப்படித்து நாமும் பயனடைவதோடு நம் நாட்டையும் முன்னேறச் செய்வோமாக !

## தொழிற்கல்வி

**குறிப்பு**

முன்னுரை : கல்வி வரலாறு – தொழிற்கல்வி என்பதன் விளக்கம்

பொருள் : பலவகைத் தொழிற்கல்வி – முக்கால இடைக்காலத் தொழிற்கல்வி–இன்றைய நிலையில் தொழிற்கல்வி அடிப்படைக் கல்வி – ஏற்படும் நன்மைகள்

முடிவுரை : இனிச் செய்ய வேண்டுவது யாது?

**முன்னுரை**

கல்வி என்பது கற்கப்பட வேண்டிய நூல்களைக் கற்றல், முற்காலத்தில் போர்க்கல்வியே சிறந்த கல்வியாயிருந்தது. பரிமேலழகர் திருக்குறளுக்கு எழுதிய உரையில் கல்வியைப் பற்றி விளக்கும்போது, அஃதாவது அரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல், அவையாவன, அறநூலும், நீதிநூலும், யானை, குதிரை, தேர் படைக்கலம் என்ற இவற்றின் நூல்களும் முதலியான என்கிறார்.

புறநானூற்றில் உள்ள பொன்முடியார் பாடல், 'வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே' என்று கூறுவதாலும், 'களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' என்பதாலும் அக்காலக் கல்வியில் போர்க் கல்வியே சிறந்ததெனக் கருதப்பட்டது புலனாகும். 19ஆம் நூற்றாண்டில் ஆங்கில ஆட்சியில் எழுத்தர் வேலை செய்வதற்காகக் கலைக்கல்வி வற்புறுத்தப்பட்டது.

தொழிற்கல்வி என்பத, தொழிலைக் கற்பத, பாரதியார் வேலை பற்றிய பாடியிருக்கும் பாட்டில், 'பிரமதேவன் கலையிங்குநீரே' என்கிறார். பிரமதேவன் தொழிலே படைத்தல் என்கிறார். படைப்புத் தொழிலைச் செய்பவன் பிரமதேவன் என இந்துக்களால் கருதப்படுகிறான். பிரமதேவனைப் போலவே தொழிலும் படைக்கும் தொழிலைச் செய்கிறது வாளளாவும் உருவாக்குவது எது? கனரக

எந்திரங்களை உருவாக்குவது எது? வளமான உலகைப் படைப்பது எது? தொழிலே, ஆதலால் படைக்கும் தொழிலைச் செய்கிறது. தொழிலே வாழ வழி வகுக்கிறது. தொழிலே பல வகையில் நாட்டையும் வீட்டையும் நலமுற உருவாக்குகிறது. வாழ்வை வளமாக்க வழி வகுக்கும் தொழிலின் சிறப்பைக் கருதி 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்கிறார் பாரதியார்.

**பொருள்**

தொழிலில் மூவகை உண்டு. ஒன்று கனரகப் பெருந்தொழில்; பெரிய எந்திரங்களை உருவாக்கும் தொழில் கனரகத் தொழிலாகும். மின்னுற்பத்தி செய்யும் பெரிய எந்திரங்கள் மிகப்பெரிய கொதிகலங்கள் (Boilers) இரயில் பெட்டி செய்தல் போன்றவையும் கனரகத் தொழில்களே, பஞ்சாலைகள், சர்க்கரை ஆலைகள் போன்றவை மத்திய தரத்தொழில்கள் சிறிய அளவில் சவுக்காரம் செய்தல், நெசவு நெய்தல், தட்டுமுட்டுச் சாமான்கள் செய்தல், மட்பாண்டம் செய்தல் போன்றவை குடிசைத் தொழில் எனப்படும்.

முற்காலத்திலிருந்து ஏறக்குறை கி.பி. 19ஆம் நூற்றாண்டு வரையில் தொழில் வல்லுநர் வீடுகளே தொழிற்சாலைகளாயும் பயிற்சி கூடங்களாயும் இருந்தன. அக்காலத்தில் பெரிய எந்திரங்கள் நம்நாட்டில் செய்யப்படவில்லை. பயிற்சி பெறுபவர் அந்தத் தொழில் வல்லுநர்களிடம் அந்த அந்தத் தொழில்களைப் பல ஆண்டுகள் செய்து கொண்டு பயிற்சி பெற்றார்கள். தொழிற் கல்வி பரம்பரையாகக் குடும்பத்திலேயே கற்கப்பட்டு வந்தது.

இக்காலத்தில் பெருங்கனரகத் தொழில்களும், மத்தியதரத் தொழில்களும் குடிசைத் கைத்தொழில்களும் பெருங் கட்டிடத் தொழில்களும் நடைபெறுகின்றன. இத்தொழில்கள் பயிற்சி பெறுவதற்குப் பலப்பல தொழிற்பள்ளிகளும், தொழிற்கல்லூரிகளும் உள்ளன. நாடகத் தொழிற்பயிற்சிக்கும். திரைப்படத் தொழிற்பயிற்சிக்கும், இசைக்கலையும் ஓவியக்கலையும், சிற்பக்கலையும் பயில்வதற்கு நம்நாட்டில் பள்ளிகளும் கல்லூரிகளும் உள்ளன. இவை அந்த அந்தத் தொழிலை விரும்பும் மாணவர்களுக்கு அந்த அந்தத் தொழிலில், பயிற்சி அளிக்கின்றன.

எந்தத் தொழிலைக் கற்பதாயினும் அடிப்படைக் கல்வி இன்றியமையாத அடிப்படைக்கல்வி இன்றி, எந்தத் தொழிலும் சிறந்து விளங்குவது இயலாது. ஆதலால், இன்னின்ன தொழில் பயில்வதற்கு இன்னின்ன கல்வித்தகுதி வேண்டும் என்பது வற்புறுத்தப்படுகின்றது. ஆதாலால், மாணவர்கள் தாங்கள் விரும்பும் தொழிலைக் கற்பதற்கு வேண்டிய அடிப்படைக்கல்வியை முதலில் கற்றல் வேண்டும். பொதுவாகப் பல தொழிற்பள்ளிகளில் சேர்வதற்கு பள்ளியிறுதித்தேர்வில் தேறியிருப்பதே தேவைப்படுகிறது. எனவே, முதலில் உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் நன்கு கற்றுப் பள்ளியிறுதித் தேர்வில் சிறப்பாகத் தேற வேண்டும். வேலையில்லா திண்டாட்டம் மிகுந்திருக்கும் இக்காலத்தில் வேலை கிட்டுவதற்கு வாய்பளிப்பது தொழிற்கல்வியே, கலைக்கல்வி கற்றவர்களுக்கு தட்டச்சு வேலையோ, ஆசிரியர் வேலையோ, துறை அதிகாரி வேலையோ கிட்டும். எல்லோருக்கும் வேலை கிட்டும் என்பது உறுதியாகச் சொல்லதற்கில்லை. தொழிற்கல்வி கற்பவர்களுக்கே பெரும்பாலும் வேலை கிட்டும் வாய்ப்புண்டு. அவர்கள் எங்காவது வேலை செய்யாவிடினும் தங்களுக்குத் தெரிந்த சில தொழிற்கல்விகளைத் தாங்களே செய்து வாழவும் வாய்ப்புண்டு. எனவே, நூற்கல்வியைக் கல்லூரிகளில் கற்பதைக் காட்டிலும் தொழிற்பள்ளிகளிலோ, தொழிற்கல்லூரிகளிலோ சேர்ந்து கற்பதே இக்காலத்துக்கு ஏற்றதாகும்.

தொழிற்கல்வியால் வாழக்கை நடத்துவதற்குரிய ஊதியம் கிட்டும். அதனால் ஒவ்வொருடைய வறுமையும் நீங்கி வளம் பெருகும். இரண்டாவது; நாட்டுப் பொருளாதார நிலை உயரும். மூன்றாவது, இந்தநாட்டில் பல்லாண்டுகளாக மக்கள் உள்ளத்தில் இருந்து வரும் தொழிலைச் செய்வது பற்றிய இழிவுமனப்பான்மை அறிவே கதிரவனைக் கண்ட பனிபோல அகலும், இன்று இந்த மாபெரும் நாட்டில் இருந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். ஆதலால், எந்த் தொழிலாயினும் எற்று செய்து வந்தால், அதிலிருந்து உயர்ந்த தொழில் செய்யும் வாய்ப்பும் கிட்டலாம். நாலடியார் என்னும் நீதி நூல்.

— அறிவினால்

கால்தொழில் என்று கருதற்க, கையினால்
மேல்தொழிலும் ஆங்கே மிகும்.

என்று நமக்கு அறிவுரை நவில்கிறது.

ஜப்பானிலும், இங்கிலாந்திலும், ஜெர்மனியிலும், உருசியாவிலும் அமெரிக்காவிலும், தொழிற்கல்வியால் வயிற்றுப் பிழைப்புக்கு வளமான ஊதியம் கிட்டுவதால், இலட்சக்கணக்கான மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக்கல்வி கற்று பின்பு தொழிற்கல்லூரிகளில் சேர்ந்து படிக்கிறார்கள். கலைக் கல்லூரிகளில் கற்பவர்கள் மிக மிகக் குறைவு. அந்நாடுகளில் பொறியியற் கல்வி, மருத்துவக் கல்வி போன்ற கல்வியையே கற்று வளமாக வாழ்கின்றார்கள். இந்திய நாட்டில் தொழிற்கல்வி கற்றவர்களே வெளிநாடுகளுக்குச் சென்று வேலைகளைப் பெற்று வளமாகவும் வாழ்கிறார்கள். அவர்களுள் பெரும்பாலோர் தன் தாய் நாட்டையே மறந்தும் அங்கேயே நிலையாய் இருந்து விடுகின்றனர்.

## முடிவுரை

தொழிற்கல்வியினும் மிகச்சிறந்த கல்வி வேறு இல்லை. தொழிற்கல்வி நாட்டை வளம்படச் செய்கிறது. ஒவ்வொருவரும் செய்து ஊதியம் பெற்று வாழ்வதால், நாடு வறுமை குறைந்து வளமடைகிறது. நாட்டு பொருளாதாரம் நன்னிலையடைகிறது. ஆதலால்தான், பாரதியார், தமது புதிய ஆத்திசூடியில் இரத்தினச் சுருக்கமாக கூடித் தொழில் செய் என்கிறார். மேலும் அவர்,

'அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம்தொழில் செய்திடுவீரோ'

என்று நமக்கு அறிவுரை கூறுகிறார். எனவே. இக்காலத்தில் இந்திய நாட்டுக்கு ஏற்ற கல்வி, தொழிற்கல்வியே என்று துணிந்து கூறலாம்.

### பயிற்சி

**கீழ்வரும் தலைப்புகளில் கட்டுரை எழுதிப் பழகுக.**

1) தாய்மொழி வழிக் கல்வியின் பயன்கள்
2) தமிழக இளைஞர் வேலை வாய்ப்புக்கு ஏற்ற கல்வி
3) முதியோர் கல்வி
4) பெண்கல்வியின் இன்றியமையாமை
5) கல்வியும் செல்வமும்

# இளைஞர் இயக்கம்
# மாணவர் பொதுநலத் தொண்டர் அணி

## குறிப்பு

முன்னுரை : பொதுநலத் தொண்டின் தேவை

பொருள் : 'பொது நலத்தொண்டு என்பது யாது? – அத் தொண்டுகள் எவை ? – பிறநாட்டில் மாணவர் தொண்டு – நம் நாட்டில் மாணவர் தொண்டு

முடிவுரை : பொதுத் தொண்டு நமது கடமை

## முன்னுரை

'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது' என்றார் ஔவைப் பிராட்டியார். பெறற்கரிய மனித உடம்பைப் பெற்றவர்கள் தங்களுக்காக மட்டுமே வாழாமல், பிறருக்காகவும் வாழ்வதே மானிடப்பிறப்பின் பயனாகும். ஆதலால், மாணவர் பள்ளியிலேயே பிறருக்குத் தொண்டு செய்வதற்கு பயிற்சி பெற வேண்டும்.

## பொருள்

ஒருவர் அல்லது சிலர், பிறர் நன்மைக்காகப் பயன் கருதாது உதவி புரிவதைத் 'தொண்டு' என்பர். பொது மக்கள் நல்வாழ்வு கருதி உழைப்பதே பொதுநலத்தொண்டு என்னும் சொல் மிக இனிய தூயசொல். ஊதியம் கருதாது பணிபுரிவதையே இச்சொல் குறிக்குமேயன்றிப் பணம் பெற்று வேலைசெய்வதை குறிப்பிடாது.

பள்ளிக்கு அருகிலிருக்கும் சிற்றூர் ஒன்றைத் தேர்ந்து எடுத்து அங்கே உள்ள அரிசனக் குடியிருப்பிலும் மற்றவர்கள் இருக்கும் இடங்களிலும் வாரத்திற்கு ஒருநாள் ஞாயிற்றுக்கிழமையில் துப்புரவுப் பணி, உடல் நலப்பணி, முதலுதவிப்பணி, முதலியவற்றைச் செய்யலாம். ஆடவர் அணி குப்பைகளைக் கூட்டி அக்குப்பைகளை எருவாக்கும் விதத்தைக் கற்பிக்கலாம். பெண்டிற் அணி குடிசைப்பகுதிகளில் குளியா குழந்தைகளைக் குளிக்க வைத்துத் தலைவாரித் துப்புரவாக இருக்கும்படி வழி கற்பிக்கலாம். சுகாதாரத்தைப் பற்றி மக்களிடம் சிறு சிறு சொற்பொழிவுகளும் செய்யலாம். சாக்ரடீஸ் பேச்சுமுறையைப் பயன்படுத்தி

அவர்களுக்கு வினாவிடைகள் வாயிலாகச் சுகாதாரக்கருத்துகளை இவர்கள் மனத்தில் பசுமரத்து ஆணி போலப் பதியவைக்க வேண்டும். சிலர் செய்தால் பயனிராது. ஒன்று பட்டு செய்த அதனையும் அன்போடு செய்து அவர்கள் நன்மையடையுமாறு செய்வதே சிறந்தது.

இன்று நம்நாட்டிலுள்ள பெரிய நகரங்களில் வண்டிப் போக்குவரத்து மிகுதியாய் உள்ள இடங்களில் இருக்கும் பள்ளிகளில் மாணவர்கள் போக்குவரத்தைப் செம்மைப்படுத்தி மக்களுக்கு விபத்து நேராதவாறு சாலைப்பணி செய்து வருகிறார்கள். நகரங்களில் பெருவிழா நடக்கும் போது பள்ளி மாணவச்சாரணர்கள், மற்றவர்களோடு சேர்ந்து, சாலைப் பாதுகாப்புப் பணியும், காணமாற் போகும் குழந்தைகளைக் கண்டுபிடித்துச் சேர்க்கும் பணியும் செய்வதுண்டு.

**முடிவுரை**

பொது நலத் தொண்டர் அணி உறுப்பினர்கள் சுகாதாரத்தைப் பற்றிய நூல்களை நன்கு கற்றிருக்க வேண்டும். அறிவில்லாமல் செய்யும் பொது நலத் தொண்டு பெரும்பயன் அளியாது. மாணவர்கள் பொது மக்கள் பணத்தினாற் கல்வி கற்பதால், பொதுநலத் தொண்டு மாணவர்களுக்குரிய கடமையாகும்.

## இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்

குறிப்பு 1. முன்னுரை 4. உலகத்தொடர்பு
2. உடற்பயிற்சி 5. முடிவுரை
3. இடருற்றோருக்கு உதவி

இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் உலகமெங்கும் பரவிக் கிடக்கின்றது. உலகின் பெரிய நகரங்கள் ஒவ்வொன்றிலும், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கக் கிளையிருக்கிறது. பள்ளிக்கூடங்களிலும் மாணவர் செஞ்சிலுவைச் சங்கம் இருக்கிறது. இச்சங்கத்தின் பொது நோக்கம் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதேயாம். இச்சங்கத்தில் உறுப்பினராகும் ஒவ்வொருவரும் இக்குறிக்கோளுடன் இன வேறுபாடு கருதாமல் இடர் உற்றோர் அனைவருக்கும் இன்முகத்துடன் உதவி செய்தல் வேண்டும். தொண்டுள்ளம் அமையப்பெறுதல்,

உடல் உரம்பெறுதல், துன்புற்றோருக்கு உதவுதல், பிணி வாய்ப்பட்டோருக்குத் தொண்டாற்றுதல் முதலியவை இச்சங்கத்தின் கொள்கையாம்.

எங்கள் பள்ளியில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கக்கிளை ஒன்றினை எங்கள் தலைமை ஆசிரியர் தொடங்கி வைத்தார். மாணவரை அதில் சேர்த்தும் பல நல்ல பயிற்சிகளையும் பண்பாட்டினையும் மாணவர் பெறுமாறு செய்துள்ளார்.

## உடற்பயிற்சி

சங்கத்தலைவர் சங்க உறுப்பினராயுள்ள மாணவர் அனைவர்க்கும், வாரத்தில் மூன்று நாள் சிறந்த முறையில் உடற்பயிற்சி அளிக்கின்றார். அவர் யோகாசனம் பல பயின்றவராதலால் எங்களுக்கும் அவற்றைக் கற்பிக்கின்றார்.

நாங்கள் எங்கள் வீட்டையும் பள்ளியையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ளப் பழகியிருக்கிறோம். தூய்மையின்மையே பிணிகள் பலவற்றுக்கு காரணம் என்பதை நாங்கள் ஒவ்வொருவரும் நன்கறிந்துள்ளோம்.

நாங்கள் எங்கள் வீட்டையும், பள்ளியையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ளப் பழகியிருக்கிறோம். தூய்மையின்மையே பிணிகள் பலவற்றுக்கு காரணம் என்பதை நாங்கள் ஒவ்வொருவரும் நன்கறிந்துள்ளோம்.

ஓய்வுநாளில் நாங்கள் சுற்றுப்புற ஊர்களுக்குச் செல்கிறோம். அவ்வூர்களில் தெருக்கள் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதை அவ்வவ்வூர் மக்களுக்குச் செயல் முறையில் நாங்கள் எடுத்துக் காட்டுகிறோம். தொற்றும் பிணிகளுக்கு அடிப்படைக் காரணமாக இருப்பவை ஈமொய்த்த பண்டம் தின்பது, நகத்தைக் கடிப்பது, குளிக்காமல் அழுக்கு படிந்திருப்பது என்பதை அம்மக்களுக்கு நாங்கள் விளக்குகிறோம். இதனால் நல்ல பயன் ஏற்பட்டிருக்கிறது. மக்களும் இத்தீய பழக்கங்களைக் கைவிட்டுத்திருந்து விட்டனர் என்றே கூற வேண்டும்.

## இடருற்றோருக்கு உதவி

எங்கள் சங்க உறுப்பினர் அனைவரும் முதலுதவி அளிக்கப் பயிற்சி பெற்றுள்ளனர். எதிர்பாராமல் ஏற்படும் விபத்துக்களில் உண்டாகும் சிறுகாயங்களுக்கு மருந்து இட்டுக் கட்டுக்கட்டி முதலுதவி செய்வதில் எங்கள் சங்க உறுப்பினர் நல்ல திறமை உடையவராய், விளங்குகின்றனர். மாணவர்க்கோ, சுற்றுப்புறத்திலுள்ள மற்றவர்க்கோ தலைவலி, நீர்க்கோவை முதலியவை

தோன்றினால். உடனே நாங்கள் மருந்தளித்து உதவி செய்கிறோம். எங்களால் முடியாத நிலை ஏற்பட்டால் உடனே அப்பணியாளரையோ, காயம்பட்டவரையோ நாங்கள் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கிறோம்.

மருத்துவமனையில் உள்ள பிணியாளர் படுக்கையில் தம் பிணித்துன்பத்தை மறந்து மகிழ்ச்சியுடன் நேரத்தை கழிப்பதற்காக அவர்களுக்குப் படிக்க நூல்கள்கொடுத்து உதவி செய்கிறோம். இதற்காக அவர்களுக்கு நூல்நிலையம் ஒன்றனையும் நாங்கள் ஏற்படுத்தி பல நூல்களை அதில் சேகரித்துள்ளோம்.

### உலகத்தொடர்பு

நம்நாட்டின் பிறமாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் உள்ள இளைஞருடன் தொடர்பு கொண்டு நட்பேற்படுத்தி கொள்வது இச்சங்கத்தின் கொள்கைகளுள் ஒன்றாகும். இதற்கேற்ப நாங்கள் கடிதப் போக்குவரத்து வாயிலாகப் பிற மாநில இளைஞருடன் வெளிநாட்டு இளைஞருடன் தொடர்பேற்படுத்திக் கொண்டுள்ளோம். நம் நாட்டுச் சிற்பங்கள், கோட்டைகள், நீரருவிகள் இயற்கை எழில். செயற்கை அழகு முதலியவற்றின் படங்களை நாங்கள் அவர்களுக்கு அனுப்புகிறோம். அவர்களும் தத்தம் நாட்டுச் சிறப்பை வெளிப்படுத்தும் படங்களை எங்கட்கு அனுப்புகிறார்கள்.

### முடிவுரை

மக்களின் உயர்வுக்காகவும், மக்களிடை நற்பண்பு நட்புறவு தொண்டாற்றும் எண்ணம், எல்லாரும் இன்புற்று வாழவேண்டும் என்னும் நற்கருத்து முதலியவை ஏற்படவேண்டும் என்பதற்காகவும் இச்சங்கம் உழைத்து வருகிறது. இளைஞரிடையே இத்தகைய உயர் பண்பு வளர்ந்து விட்டால், வருங்காலத்தில் நம்நாடு உயர்ந்து விளங்கும் என்பதில் ஐயமில்லையன்றோ! எனவே ஒவ்வொரு பள்ளியிலும் இது போன்ற சங்கம் அமைத்து இளைஞர் தொண்டாற்ற முன் வரவேண்டும் என்னும் வேண்டுகோளுடன் இதனை முடிக்கின்றேன்.

## பயிற்சி

கீழ்வரும் தலைப்புகளில் கட்டுரை எழுதிப் பழகுக.

1. மாணவரும் சமூகத் தொண்டும்
2. பள்ளிச் சாரணர் இயக்கம்
3. பொது நலத் தொண்டர் படை

## தன் வரலாற்றுக் கட்டுரை

காந்தியடிகள், ஜவகர்லால்., நேரு, திரு.வி.க., டாக்டர் உ.வே.சா. ஐயர் முதலியோர் தம் வரலாற்றைத் தாமே எழுதியிருக்கின்றனர். ஒருவர் தம் வரலாற்றைத் தாமே கூறுதல் போல் கட்டுரை எழுதுதல், 'தன் வரலாற்றுக் கட்டுரை' எனப்படும். அஃறிணைப் பொருளும் 'தன் வரலாற்றுக் கட்டுரை' கூறுவது போலக் கற்பனை செய்து எழுதலாம். இங்கே காவிரியாறு வரலாற்றைத் தானே கூறுகிறது. கேட்டு மகிழுங்கள்.

## காவிரியாறு தன் வரலாறு கூறுதல்

என் பிறப்பிடம் மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள குடகு நாடு. நான் அந்த நாட்டில் ஒரு சிறு மலையில், சிறிய ஊற்றாகத் தோன்றுகின்றேன். குடகு நாட்டில் பெய்யும் பெரு மழையினால் நான் மிகுந்த நீரைப் பெறுகிறேன். நான் குடகு நாட்டினின்று புறப்பட்டு, அடுத்துள்ள மைசூர் நாட்டை அடைகிறேன். இந்நாட்டில் தோழிகளாகிய துணையாறுகள் பல ஆங்காங்கே என்னுடன் வந்து சேர்வதால் நான் வடிவத்தில் பெரியவளாக வளர்கிறேன்.

மைசூர் நாட்டில் கண்ணம்பாடி என்னும் ஊரருகில் என்பாதையின் குறுக்கே ஒரு பெரிய சுவரையெழுப்பி அணை கட்டப்பட்டுள்ளது. அதுவரை விரைந்தோடி வரும் நான், அங்கே சற்று ஓய்வாக அமர்கிறேன். ஓய்வாக ஓரிடத்தில் அமர்வதன் பயனாக சற்று பருத்துக் காணப்படுகிறேன். அங்கே என்னைப் பார்ப்போர் என் உருவமே மாறிவிட்டது என்று கூறுகின்றனர். பெருக்கெடுத்து வரும் வெள்ளமெல்லாம் அங்குத் தேக்கமாக நிற்கிறது. மக்கள் 'கிருஷ்ணராஜசாகரம்' என அதற்குப் பெயர் வழங்கியுள்ளார்.

நான் அங்கே ஓய்வெடுத்துக் கொண்டாலும் சோம்பியிருந்து விடவில்லை. கால்வாய் பலவற்றின் வழியே அந்நாட்டின் உட்பகுதியில் பல கிலோமீட்டர் தொலைவு சென்று வயல்களை வளப்படுத்தி வேளாண்மைக்கு உதவி செய்கிறேன். பொதுவாக அங்கு ஓய்வெடுப்பதன் பயனாக மைசூர் நாட்டைப் பெரிதும் வளமுடையதாக ஆக்குகிறேன்.

பிறகு அங்கிருந்து புறப்பட்டுச் 'சீரங்கப்பட்டணம்' என்னும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பட்டணத்தின் அருகில் நான் இரு பிரிவாய்ப் பிரிந்து அவ்வூரை

அணைத்துக் கொண்டு வருகிறேன். அவ்வூரில் எனது கரையில் அரங்கநாதப் பெருமாள் கோவில் இருக்கிறது. ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு அப்பட்டணத்தில் போர்கள் பல நிகழ்ந்துள்ளன. இன்னும் அவ்வூரிலுள்ள இடிபாடுகளைக் காணப் பலர் அங்குச் செல்கின்றனர்.

சீரங்கப் பட்டிணத்திற்கு அருகில் இரண்டாகப் பிரிந்த நான், அரங்கநாதப் பெருமாளை வணங்கிய பிறகு. மீண்டும் சேர்ந்து காடுகளில் புகுந்தும் மலைகளையடுத்தும் கடுகி வந்து சிவசமுத்திரம் என்னுமிடத்தில் பீடபூமியினின்று அருவியாகச் சமதரையில் குதிக்கிறேன். இங்கு என் நீரைக் கொண்டு நீர் மின்னாற்றல் உற்பத்தி செய்யும் வேலை பெரிய அளவில் நடைபெறுகின்றது.

சிவசமுத்திரத்திற்கு அருகில் சமதரைக்கு வந்த நான், தர்மபுரி, சேலம், கோவை மாவட்டங்களுக்கு இடையே சிறிது தொலைவு வரை அவற்றின் எல்லையாக அமைந்து இருக்கிறேன். தர்மபுரி மாவடத்தில் 'ஒகேனக்கல்' என்னும் இடத்தில் பாறையாக பலவற்றுக்கிடையே சென்று அருவியாகக் குதிக்கிறேன். அந்த இடம் புனிதமுடையதாகக் கருதப்பட்டு அங்குக் குளிக்கவும் அங்குள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கவும் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு வருகின்றனர்.

பின்பு அங்கிருந்து நான் பாய்ந்தோடி வருகையில் சேலம் மாவட்டத்தில் மேட்டூர் என்னுமிடத்தில், எனது பாதையின் குறுக்கே மற்றொரு பெரிய அணை கட்டப்பட்டிருக்கிறது. இஃது தமிழ் நாட்டிலுள்ள மாபெரும் அணைகளுள் ஒன்றாகும். இங்குத் தேங்கி நிற்கும் என் வெள்ள நீர் கடல் போல காட்சியளிப்பதாகப் பார்ப்போர் கூறுகின்றனர். நான் இங்கிருந்து கால்வாய்கள் பலவற்றின் வழியாக நெடுந்தொலைவிலுள்ள வயல்களுக்கெல்லாம் நீரளித்து அவற்றையெல்லாம் வளப்படுத்துகிறேன். இதனால் திருச்சி, தஞ்சை மாவட்டங்களின் வயல்களும் உரம் பெற்று மிக்க விளைவைத் தருகின்றன.

மேட்டூரில் நீர் மின்னாற்றல் உற்பத்திக்குரிய பெரிய பொறிகள் அமைக்கப்பட்டு என் வெள்ள நீரைக் கொண்டு மின்னாற்றல் எடுக்கப்படுகிறது. இம்மின்னாற்றல் பல்லாயிரக்கணக்கான ஊர்களை ஒளிபெறச் செய்கிறது.

திருமணிமுத்தாறு, நொய்யல், பவானி, அமராவதி, நந்தி முதலிய என் தமிழ்நாட்டுத் தோழிகளாகிய துணையாறுகள் பல ஆங்காங்கே என்னுடன் வந்து

சேர்ந்து கொள்கின்றனர். பிறகு நான் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள திருவரங்கம் என்னும் ஊர் அருகில் மீண்டும் இரண்டாகப் பிரிகிறேன். இவ்வூரிலே உள்ள மாபெரும் கோவிலில் திருப்பள்ளி கொண்டிருக்கும் திருவரங்கநாதப் பெருமானைப் பணிந்து வணங்கிய பின், அவ்வூரை அணைத்தவாறு ஒன்று கூடித் தஞ்சை மாவட்டத்தை அடைகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் நான் வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி அரசலாறு, திருமலைசோழன் முதலிய பல கிளையாய் பிரிந்து இம்மாவட்டம் முழுவதையும் வளப்படுத்துகிறேன். கொள்ளிடம் எனும் பெயரால் என்னிடமிருந்து ஒரு கிளை பிரிந்து திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களின் எல்லையாக அமைந்து அவற்றினை வளப்படுத்தியபின் வந்து கடலில் கலக்கிறேன்.

நான் பிறந்த இடத்திலிருந்து ஏறத்தாழ எழுநூற்றுபத்து கிலோமீட்டர் தொலைவு மெல்ல நடத்தும், விரைந்து வந்தும் இடையிடையே தேக்கங்களாக ஒய்வெடுத்துக் கொண்டும், பாய்ந்தோடியும் வந்து தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த காவிரிபூம்பட்டிணத்திற்கு அருகில் என் தலைவனாகிய கடலுடன் கலந்து விடுகிறேன்.

நான் வரும் இடங்களிலெல்லாம் மக்களுக்கும் பிற உயிர்களுக்கும் நன்மையே செய்து வருகிறேன். என் இருமருங்கிலும் உள்ள வயல்களையெல்லாம் என் வண்டல் மண்ணாலும் வெள்ள நீராலும் வளப்படுத்துகிறேன். சிவசமுத்திரத்திலும் மேட்டூரிலும் மின்னாற்றல் எடுக்கப் பயன்படுகிறேன். என் கரைகளில் உள்ள புனிதத்தலங்கள் பலவற்றின் இறைவன் எழுந்தருளியுள்ளான். நான் நாட்டை வளப்படுத்துவதால் அரங்கநாதப் பெருமான் கவலை இல்லாமல் திருவரங்கத்தில் கண்துயில்கின்றார்.

நான் தமிழ்நாட்டிடத்தும், இந்திய நாட்டு மக்களிடத்தும் கொண்டுள்ள அன்புக்கு எல்லையே இல்லை. இப்போது போதிய அளவு குடிநீரின்றித் தவிக்கும் சென்னை மாநகர மக்களுக்கு நீரைக் கொடுத்து உதவி செய்ய எண்ணியுள்ளேன். என் வரலாறு மிக நீண்டதாகும். எனவே, இதனோடு அமைகின்றேன்.

# பயிற்சி

பின்வரும் தலைப்புகளில் (இரண்டு பக்க அளவில்) தன் வரலாற்று கட்டுரைகள் எழுதிப் பழகுக:

1. மலை தன் வரலாறு கூறுதல்
2. காடு தன் வரலாறு கூறுதல்
3. கடல் தன் வரலாறு கூறுதல்
4. நிலக்கரி தன் வரலாறு கூறுதல்
5. பேனா தன் வரலாறு கூறுதல்

# பாடம் 2

## (2) செய்யுள் திரண்ட பொருள் எழுதுதல்

செய்யுளின் திரண்ட பொருள் எழுதத் தொடங்குமுன் கொடுக்கப்பட்டுள்ள செய்யுளை இரண்டு மூன்று முறை நன்றாகப் படித்துக் கருத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். கொடுக்கப்பட்டுள்ள செய்யுள் தெரிந்திராத செய்யுளாய் இருந்துவிட்டால் அதற்காக ஏக்கங்கொள்ளுதல் கூடாது. அதனை ஆழ்ந்து கவனித்துப் படித்துப் பார்க்கவேண்டும். அதன் உட்கருத்தையும் அருஞ்சொற்களின் பொருளையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். பின்னர் அக்கருத்துக்களை முறைப்படுத்தி தொடர்பறாமலும் வாக்கியப்பிழை ஏற்படாமலும் எழுதுதல் வேண்டும். பொதுவான கருத்தை அறிந்து கொண்டால் திரண்ட பொருளை எழுதலாம். இங்கே இரண்டு பாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள திரண்ட பொருளை நன்கு படித்துப் பயிற்சியில் உள்ள பாக்களுக்குத் திரண்ட பொருள் எழுதிப் பழகிக் கொள்க.

### (அ) தமிழுக்குப் பணி செய்வாய்

உயர் தமிழ்த்தாய் இந்நிலத்தில் அடைகின்ற
வெற்றியெல்லாம் உன்றன் வெற்றி
அயராதே எழுந்திரு நீ இளந்தமிழா
அறஞ்செய்வாய் நாமடைந்த
துயரத்தைப் பழிதன்னை வாழ்வினி லோர்
தாழ்மையினைத் துடைப்பாய் இந்நாள்
செயல்செய்வாய் தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் சீறி வந்தே.

இளந்தமிழா! நீ சோர்வு கொள்ளாதே ; எழுந்திரு. இவ்வுலகில் உயர்ந்த தமிழ்த்தாய் அடைகின்ற வெற்றிகள் எல்லாம் உன்னுடைய வெற்றிகள் ஆகும். ஆதலால், நீ அறச்செயல்களைச் செய்வாயாக. நாம் அடைந்த துன்பத்தையும், பழியையும், வாழ்வினில் அடைந்த தாழ்ந்த நிலையினையும் நீக்குவாயாக. நீ இப்போது விரைந்து வந்து எல்லாத் துறைகளிலும் தமிழ் மொழிக்கு தொண்டு செய்வாயாக.

## ஒற்றுமையே உயர்நிலை

ஒற்றுமையாக உழைத்திடுவோம் – நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்
வெற்றுரை பேசித் திரிய வேண்டாம் – இன்னும்
வீணாய்ப் புராணம் விரிக்க வேண்டாம்
கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டுச் – சாதி
கீழென்றும் மேலென்று நாட்டிவிட்டு
பாரதத்தாய் பெற்ற மக்களென்றும் நிதம்
பல்லவி பாடி பயன் ஏதுவோ ?
சாதி இரண்டல்லால் வேறாவதோ ? – ஔவைத்
தாயின் உரையும் மறந்திரோ ?
ஆதி இறைவன் வகுத்ததுவோ ? – மக்கள்
ஆக்கிய கற்பனைதான் இதுவோ ?
மன்னுயிர் காக்க முயல்பவரே – இந்த
மாநிலத் தோங்கும் குலத்தினராம்
தன்னுயிர் போற்றித் திரிபவரே என்றும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தோர் அம்மா.

### திரண்ட பொருள்

நாம் ஒற்றுமையாக உழைத்திடுவோம். நாம் நாட்டில் பொருந்திய நல்ல நண்பர்களாக வாழ்ந்திடுவோம். பொருளற்ற உரைகளைப் பேசித் திரிய வேண்டாம் மேலும் வீணாகப் பொருளற்ற கதைகளையும் பேச வேண்டா.

நாம் கீரியும் பாம்பும் போலச் சண்டை போட்டுக் கொண்டு, கீழ்ச் சாதி என்றும் மேல்சாதி என்றும் கூறிக்கொண்டு 'நாங்கள் அனைவரும் பாரதத்தாய் பெற்ற மக்கள்' என்று திரும்பத் திரும்பக் கூறுவதால் என்ன பயன்?

சாதி இரண்டு அல்லாமல் வேறு சாதியும் உண்டோ ? ஔவையாரின் நீதியை மறந்து விட்டீர்களோ ? இது முன்பு கடவுளால் ஆக்கப்பட்ட பிரிவுகளா ? மக்கள் இடைக்காலத்தில் உண்டாக்கிய கற்பனைதானே ?

பிற உயிர்களைக் காப்பதற்கு முயலுகின்றவர்களே இந்தப் பெரிய உலகில் உயர்ந்த குலத்தவர் ஆவார். தன்னுயிரைப் பேணித் திரிகின்றவர்களே எப்போழுதும் தாழ்ந்த குலத்தில் பிறந்தவராவர்.

### பயிற்சி

கீழ்வரும் பாடல்களின் திரண்ட பொருளினை எழுதுக

## 1. நினைவும் முடிவு

இருளும் அகலும் இரவியும் தோன்றும்
பொருவில் இத்தாமரைப் பூவும் மலரும்
மலரும் பொழுதில் வன்சிறை நீங்கி
உலகில் எங்கும் உலவித் திரிந்து
பூ எழு பற்பல புதுவனங் கண்டு
நா எழு சுவைதரு நன்றுமிக உண்டு
வாழ்குவன் என்றொரு மதுகரம் இருப்பத்
தாழுமத வேழம்ஒன் றாழ்கயம் இறங்கிப்
பாசிலை பூவெலாம் பிறித்து
வீசி எறிந்து வெறிகொண் டதுவே.

— கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

இரவி – சூரியன், பொருவுஇல் – ஒப்பில்லாத; வனம் - சோலை; மதுகரம் – தேனீ; வேழம்–யானை; கயம்–குளம்; பாசிலை – பசுமை இலை).

## 2.ஆல்

கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவி
கீழுள்ள விழுதை யெல்லாம்
துளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்

— பாரதிதாசன்

## 2. பாரத மக்களின் நிலைமை

நெஞ்சு பொறுக்கு திலையே – இந்த
 நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார்; – இவர்
 அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சனைப் பேய்க ளென்பார் – இவர்
 மரத்திலென்பார்; அந்தக் குளத்திலென்பார்
துஞ்சது முகட்டி லென்பார்; – மிகத்
 துயர்ப்பாடு வார் எண்ணிப் பயப்படுவார்.

– பாரதியார்

## 3. எங்கள் காந்தி

மந்திரங்கள் ஏவாமல் மயங்க வைத்தான்
 மாயங்கள் புரியாமல் மலைக்கச் செய்தான்
தந்திரங்கள் இல்லாமல் தலைவன் ஆனான்
 தண்டனைகள் பேசாமல் தணியச் செய்தான்
அந்தரங்க ஒற்றரில்லா அரசன் ஆனான்
 அண்ணலெங்கள் காந்தி செய்த அற்புதங்கள்
எந்தவொரும் சக்தியினால் இயன்ற தென்று
 எல்லோரும் கூர்ந்தறிய எண்ண வேண்டும்.

– நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்க பிள்ளை

## (3) வாழ்த்தும் வரவேற்பும் பிரிவுரையும்

### திருமண வாழ்த்து மடல்

| மணமகன் | மணமகள் |
|---|---|
| செல்வன் : பொன்னப்பன் | செல்வி : முல்லைக்கொடி |

இடம் : திருவருள் திருமண மண்டபம், மதுரை – 1

திருவள்ளுவராண்டு 2016, தைத்திங்கள் 14–ஆம் நாள் (27–1–1985) அன்று நடைபெற்ற திருமண விழாவில் திருநகர் தமிழ் வளர்ச்சி மன்றத்தார் மகிழ்தளித்தது.

## திருமண வாழ்த்து

**நல்லியல்புகளின் உருவாய் அமைந்த நண்பரே!**

நீவிர் இல்லறமென்னும் நல்லறத்தை மேற்கொள்ளும் இந் நன்னாளில், முல்லைக்கொடி என்னும் மாண்புறு மங்கையை மனைத்தலைவியாய் ஏற்கும் இப்பொன்னாளில், மனையறங்காத்து மாப்புகழ் எய்தி, அன்பைப்போற்றி, பழியஞ்சிப் பகுத்தாண் உடையராய், வையத்துள் வாழ்வாங்க வாழ்ந்து விழுப்பம் பெறுக என்று வாழ்த்துகிறோம்.

**அன்பே வடிவான அறஞ்சால் அணங்கே !**

அருள்மிகு தோன்றலாம் பொன்னப்பனாரை வாழ்க்கைத் துணைவராக ஏற்கும் மாண்புறு மங்கையர் திலகமே! நீவிர் மனத்தக்க மாண்புடையராகித் தற்காத்துக் தற்கொண்டான் பேணி தகைசான்று சொற்காத்துச் சோர்விலாகிக் கருத்தொருமிக்கக் கற்றோர் போற்றும் நல்வாழ்வு வாழ்க என்று வாழ்த்துகின்றோம்.

**இல்லறமேற்கும் நல்லற மணமக்களே !**

நீவிர் இருவரும் மலரும் மணமும் போல, மணியும் ஒலியும் போல, நகமும் சதையும் பேல என்றும் இணை பிரியாமல் அறத்தாற்றின் இல்லறம் ஆற்றிச் சான்றோர் நெறிநின்று சுற்றம் பேணி விருந்தினர் ஓம்பித்தத்காங்கு வாழ்ந்து மனைமாட்சியாம் மங்கலத்தின் நன்கலமாய் நன்மக்கட்பேற்றை அளவோடு அடைந்து தன்னலம் துறந்து தாயகம் போற்றி வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

திருநகர்
ம்துரை–6
27–1–1985

இங்ஙனம்,
தமிழ் வளர்ச்சி மன்றத்தார்

## வரவேற்புரை எழுதுதல்

மதுரை மாவட்டம் திருநகர் தமிழ் வளர்ச்சி மன்றத்தின் சார்பில் நடைபெற்ற தமிழர் திருநாள் விழாவிற்குத் தலைமை தாங்கிய மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல் துறை இணைப் பேராசிரியரும் தமிழறிஞருமான.

டாக்டர் கோ. விசயவேணுகோபால் அவர்களுக்கு

அன்புகனிந்து வழங்கிய வரவேற்பிதழ்

**அருந்தமிழ் போற்றும் அறிஞர் ஏறே!**

வருக! வருக! நும்வீரவால் நம் மன்றம் பேருவகை எய்துகின்றது! நும் ஆராய்ச்சிச் செல்வம் எம் மன்றத்திற்குப் பயன்படுவதாகுக ! இன்று ஞாயிறு கண்ட தாமரை போல எங்கள் பள்ளித் தடாகமே பூத்துப்பொலிகின்றது! அகமும் முகமும் மலர நெஞ்சார நினைத்து வாயார வாழ்த்தி உங்களை வரவேற்கின்றோம்!

**பொதுமை அறத்தைப் புகுத்திடும் புலவர் மணியே !**

நீவிர் பெற்ற கல்விச் செல்வத்தை நாட்டுக்கு சிறப்பாக மாணவர் உலகுக்கு வழங்கி, உம்மைப் போலவே நுண்மான் நுழைபுலம் மிக்கவர்கள் ஆக்கும் உம்திறன் கண்டு வியந்து செயல் மறந்து பாராட்டுகிறோம்! நாட்டுக்கேற்ற உம் அறிவு சான்ற ஆராய்ச்சி நூல்கள், சிந்தனைக் கட்டுரைகள், மொழி நூல் முதலியவற்றைக் கற்றும், இனிய நடையில் மயங்கியும் அறிஞரானோர் எண்ணிறந்தோர்.

**எளிமைகொள் ஏந்தலே ! எல்லோருக்கும் இனியவரே!**

பட்டங்கள் பல எய்தியும், கற்றுணர்தடங்கலே கற்றதன் பயன் என்னும் கொள்கைக்கேற்ப அடக்கத்தின் திருவுருவமாய் விளங்கும் நீங்கள் எம்போன்ற இளைஞர்களுக்கோர் எடுத்துக்காட்டாய் இலகுகின்றீர்கள். புதியதொரு சமுதாயத்தை உருவாக்கும் புத்துலகச் சிற்பியாகிய உங்களை நாடும் ஏடும் போற்றுவதை நனி உணர்ந்து பெருமிதம் கொள்கிறோம்.

**இலக்கிய இலக்கணம் தேரும் இன்றமிழ் வண்டே !**

சங்க நூல்க்ள சிலப்பதிகாரம், திருக்குறள், தொல்காப்பியம், நன்னூல் முதலிய நன்மலர்களிலே தேங்கிக்கிடக்கும் தமிழ்த் தேனினைத் தேடித் திரட்டிக் கொணர்ந்து கொடுக்கும் உங்கள் செயலால் வண்டானீர்கள் ! நீங்கள் செல்லுமிடமெல்லாம் தமிழ் ஒலியும் தமிழ் ஒளியும் தழைக்கின்றன. உம் தலைமை சான்றது என்பதை நாடே அறியும் அன்றோ ?

### தமிழன்னை ஈன்ற தனிப்பெருஞ் செல்வரே !

முதல் நூல் பொருளுணர்ந்த நீங்கள் எங்கள் மொழித்திறன் முட்டறுக்கவும் நன்க நல்வழி காட்டவும் பூண்டிர்கள். கருத்து மணிகளை உதிப்பீர்கள்; அம்மணிகளை மாலையாக்கிச் சூடத் துடிக்கின்றோம்! செந்தமிழ் தழைக்கச் சீருற நீங்கள் பல்லாண்டு வாழப் பரம்பொருளை வேண்டி மீண்டும் ஒரு முறை வருக ! வருக என வரவேற்கின்றோம்!

திருநகர், மதுரை – 6 இங்ஙனம்

28–1–1985 தமிழ் வளர்ச்சி மன்றத்தார்

## பிரிவுரை எழுதுக

எழிலூர் அரசினர் மேல்நிலைப் பள்ளித் தமிழாசிரியராய்ப் பணியாற்றிய ஓய்வு பெறும் புலவர் உயர்திரு. அமுதனார் அவர்களுக்குப் பள்ளியின் மாணவ மாணவியர் மனம் நெகிழ்ந்து வழங்கும் பிரிவுரை மடல்:

### கடமையே கண்ணெனக் கருத்து சான்றீர்!

நீவிர் இருப்பந்தைந்து ஆண்டுகள் வேறு சில பள்ளிகளிலும் இப்பள்ளியிலும் தொடர்ந்து தமிழ்ப்பணியாற்றி வந்துள்ளீர்கள், உங்கள் பால் முன்னால் பயின்ற மாணவ மாணவியர், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், பிற துறைகளிலும் உயர்பதவியில் பணியாற்றி வருவதோடு, அவர்களுள் சிலர் எங்கள் அழைப்பிற்கிணங்கி இங்கு வந்திருப்பது உங்கள் பால் அவர்களுக்குள்ள பெருமதிப்பையும் பேரன்பையும் காட்டுவதாய் உள்ளது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? நீங்கள் கடமை உணர்ச்சியோடு வகுப்புக்கு வந்து கன்னி தமிழமுதை எங்களுக்கு ஈந்த பாங்கினை எம்மால் மறக்க இயலுமோ?

### முத்தமிழ் அறிவை முனைந்து தரும் முதறிஞரே !

எங்களுக்குப் பாடநூலோடு நில்லாமல், பண்டைத் தமிழர் வாழ்வியலையும் நினைவூட்டிய பழமையும் புதுமையும் கலந்து வாழ்வில் வாழவேண்டுமென்பதை அடிக்கடி சுட்டிக்காட்டியுள்ளீர். அவ்வாறே வாழ்ந்து காட்டுவோம் என்று இப்போது உமக்கு உறுதி கூறுகிறோம். தத்தம் தாய் மொழி வளர்ச்சியில் பாடுபடுபவரே தம்மை வளர்த்துக் கொள்பவர் ஆவர் என்றும், நல்லமொழி வளர்ச்சியே நல்ல மன

வளர்ச்சிக்குக் காரணம் என்னும் நீவிர் கூறிய அறிவு சான்ற உரைகள் எங்கள் மனத்தில் பசுமரத்தாணிபோலப் பதிந்து, எங்கள் வாழ்க்கையை வளமாக்கும் அல்லவா !

**ஒழுக்கமே உயிரெனக் கொண்டு உயர்ந்தீர் !**

நாங்கள் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோயாரகிய நீவிர் பொறுத்தருளினீர்; தாயினும் கனிந்து, சாலப் பரிந்து, தமிழ்பாலை ஊட்டினீர், வளர்த்தீர், ஊட்டம் தந்தீர், எங்கள் வாழ்க்கை சிறந்த வாழ்க்கையாக அமைய வேண்டுமென்பதிலேயே நாடோறும் கண்ணும் கருத்துமாய் இருந்து வந்தீர்; கோல் எடாது கடுஞ்சொல் கூறாது, ஒவ்வொருவர் குறையும் கண்டாராய்ந்து, தனிப்பட்ட முறையில் தனிக்கவனம் செலுத்திக் களைந்து வந்தீர், முறையோடு செய்யும் ஒழுங்கு, ஐம்புலன் அடக்கம், ஒழுக்கம் முதலியன பற்றி எங்களுக்குப் பலமுறை வற்புறுத்திக் கூறி வத்தீர் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்றும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும் கூறி ஆசிரியர் குழுவினரிடையேயும் நீவிர்; அன்புடன் பேசிப் பழகி வந்தது மற்றவருக்கு ஓர் எடுத்துக்காட்டாகுமன்றோ ?

**நாநலம் மிக்க நாவலரே !**

கற்றறிந்து அடங்கலுக்கு இலக்கணமாய் அமைந்த உம்மை ஆவினைப் பிரியும் கன்றுகளைப் போலப் பிரிந்து தவித்துக் செயலற்றுக் கண் கலங்கி நிற்கின்றோம்! பிரிவுத் துன்பம் எத்தகையது என்பதை உம் பிரிவால் உணர்கிறோம். எங்களை நீவிர் பிரிந்தாலும் உம், பொன்னுரைகளைப் போற்றிப் பின்பற்றுவோம். எங்கள் உள்ளக் கோவிலில் உம்மை வைத்து வழிபடுவோம். நீவிர் நம் பள்ளியை விட்டு ஓய்வு பெற்றாலும் ஓய்வு நேரங்களில் நம் பள்ளிக்கு வருகைதந்து, பட்டறிவால் பெற்ற அறிவை ஈந்து வழிகாட்டுவீர் என்று நம்புகிறோம். நீவிர் செந்தமிழ் போலச் சீருற வாழத் திருவருள் சுரக்குமாறு இறைவனை வேண்டி உமக்குப் பிரியா விடை கூறுகிறோம்.

வணக்கம் !

எழிலூர்
28–1–1985

உங்கள் பணிவன்புமிக்க
அரசினர் மேனிலைப்பள்ளி
மாணவ மாணவியர்

1. உம் நண்பர் ஒருவரின் திருமண வாழ்த்து மடல் ஒன்றை எழுதுக.
2. உம் பள்ளி ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைமை தாங்கும் உங்கள் மாவட்ட ஆட்சியாளருக்கு வரவேற்புரை எழுதுக.
3. (அ) மாற்றலாகிச் செல்லும் ஆசிரியர் (ஆ) பதவி உயர்வு பெற்று செல்லும் ஆசிரியர் (இ) பிரிந்து செல்லும் நண்பர் ஆகியோர் பிரிவிற்கு இரங்கும் வகையில் ஒவ்வொரு பிரிவுரை எழுதுக.

## (4) கடிதங்கள் வரைதல்

கடிதம் எழுதுதலும் ஒருவகைக் கட்டுரைப் பயிற்சியேயாகும். ஒவ்வொரு மாணவரும் கடிதம் எழுதத் தெரிந்தவர் என்று உலகம் கருதுகின்றது. அறிவு வளர வளர இத்தகைய கடிதங்களை அடிக்கடி மாணவர் தம் நண்பர்கட்கு எழுத அவர் தம் அறிவு தூண்டுவது இயல்பே. ஒரு நல்ல கடிதம் சில வேளைகளில் நல்ல பயனைத் தரும். அது பெறுதற்குரிய பேறுமாம். சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்கு எழுதிய கடிதம் அத்தகைய சிறப்புடையதே.

தனிப்பட்ட ஒருவர்க்கோ, கூட்டாய்ச் சேர்ந்த ஒரு நிறுவனத்திற்கோ தான் கடிதங்கள் எழுதப்படுகின்றன. அவற்றைக் கருத்துடன் தெளிவாக எழுத்துத் தெரியும்படி எழுதவேண்டும். எழுத்துத் தெரியவில்லையெனில் சில வேளைகளில் பொருள் மாறுபாடு கொள்ள ஏதுவாகும். கொச்சைச் சொற்களையும் பேச்சு வழக்குச் சொற்களையும் நீக்கிவிட்டு, நல்ல நடையில் கடிதம் எழுத வேண்டும்.

பெற்றோர்க்கும், உற்றோர்க்கும், நண்பர்கட்கும், ஆசிரியர்கட்கும், கடிதம் எழுதுவதையே தனிக்கடிதம் என்று குறிக்கின்றோம். சில வேளைகளில் முன்பின் தெரியாத ஒருவருக்கு எழுதுவதையும் தனிக்கடிதம் என்பர். இந்தத் தனிக்கடிதங்கட்குக் குறிப்பிட்டதொரு வடிவம் இல்லை. எத்தனை பக்கங்கள் வேண்டுமானாலும் எழுதலாம். ஒரே பத்தியிலும் அல்லது ஒரிரு வாக்கியங்களிலும் கூட முடிக்கலாம். ஆனால் எழுதும் பொழுது செய்திகளை எளிய நடையில் இலக்கணப் பிழையின்றி நேரில் பேசுவது போல எழுதினாலும் செய்திகளை ஒழுங்காக வரிசைப்படுத்தியே எழுத வேண்டும்.

பின்வரும் மாதிரிக் கடிதத்தைக் கவனிக்க

12, நெடுந் தெரு
திண்டுக்கல்–1
18–12–1984

அன்பர் அவர்களே,

அன்பு வணக்கம், உங்களுடன் புகைவண்டியில் உரையாடிய பொழுது சில பொருள்களைப் பற்றிய உங்களுடைய விளக்கங்கள் என் உள்ளத்தைக் கவர்ந்தன. நமது பண்பாடு பற்றிய நீங்கள் கூறிய மரபுகள், நம் தொல்லோர் தம் சான்றாண்மையை நன்கு தெரிவிப்பனவாயும் தமிழ் மக்களின் தனிச்சிறப்பை எடுத்துக் கூறுவனவாயும் எனக்குத் தோன்றின.

உங்களது இணிமையான உரையாடல் என் மனத்தை விட்டு அகலாது. இங்குள்ள நண்பர் பலரிடம் உங்கள் உரைகளை கூறினேன். அவர்கள் உங்களை நேரில் காணாவிட்டாலும் நீங்கள் கூறிய விளக்கங்களை வியந்து பாராட்டியதோடு எப்படியும் உங்களைக் காண வேண்டுமென்று விரும்புகிறார்கள். நீங்கள் எப்படியும் தைத்திங்கள் பிறந்தவுடன் எங்கள் ஊருக்கு வருவதாகக் கூறியிருந்ததை அவர்களிடம் கூறினேன். அப்படியானால் நீங்கள் இங்குவந்து தங்கும் பொழுது எங்கள் இலக்கிய மன்றத்தில் 'தமிழ்மரபு' என்னும் தலைப்பில் ஒரு சிறப்புச் சொற்பொழிவாற்ற வேண்டும் என்று அவர்கள் சார்பில் நான் வேண்டிக்கொள்கிறேன்.

பிறநாட்டு மரபுகளை நம் நாட்டார் பின்பற்றுவது தவறு என்று நான் கருதுவில்லை. ஆனால் எத்தகைய மரபுகளைப் பின்பற்ற வேண்டும் என்பது உண்டன்றோ ? மேலும் நம்நாட்டு மரபுகள் அறிவிக்கும் பண்பிற்கும் ஒவ்வாதனவாயிருந்தால், அவற்றைப் பின்பற்றகூடாது என்று கருதுபவன் யான், ஆனால் நீங்கள் கூறிய நம் தமிழ் மரபுகள் உலகில் வேறெங்கும் இருக்க இயலாது என்றே கருதுகின்றேன்; ஏனெனில் நீங்கள் கூறிய மரபுகட்கு ஏற்ற சூழ்நிலை தமிழ்நாடு தவிர வேறெங்குமில்லை. என் நண்பர்கள் இதனைப் பற்றியே பேசிப்பேசி இந்த முடிவுக்கே வந்துள்ளார்கள்.

நீங்கள் வருவதற்கு முன்பே எனக்கு மடல் வரையுமாறு வேண்டுகிறேன்.

உங்கள் அன்புள்ள

சி.கண்ணப்பன்

பெறுநர் முகவரி

திரு. கட. அண்ணாமலை அவர்கள்,

179. வணிகர் தெரு,

ஈரோடு – 631001.

மேற்கண்ட கடிதத்தின் பகுதிகளை இப்பொழுது ஒவ்வொன்றாகக் காண்போம்.

1) கடிதம் எழுதிய இடம்

2) எழுதிய நாள் (பொழுது)

3) விளி

4) கடிதச் செய்தி

5) எழுதியவர் கையொப்பம்

5) பெறுநர் முகவரி

**1,2 : இடமும் பொழுதும்**

இவை கடிதத்தின் வலப்புறம் மேலே குறிக்கப்படவேண்டும். முதலில் இடத்தையும், அது எழுதி முடித்தபின் அதற்கடுத்த வரியில் நாளையும் குறிக்க வேண்டும். இடத்தை ஒரே வரியிலும் குறிக்கலாம். இரண்டு வரிகளிலும் குறிக்கலாம்; அதற்கு மேலும் குறிக்கலாம்.

திருநெல்வேலி – 627003
மார்ச் 18, 1984

**3. விளி**

இதைச் சற்று கீழே இறங்கி வந்து இடப்புறம் விடு கோட்டினை (மஹார்ஜ்– ஞ்ண்ய்) ஒட்டித் தொடங்க வேண்டும். விளிப்பது, நாம் யாருக்கு எழுதுகிறமோ அவருக்கும் நமக்கும் உள்ள உறவை ஒட்டி அமையும்.

தேவரீர் தந்தையார் அவர்களே,

தேவரீர் தாயார் அவர்களே,

என வயதில் மூத்தோரையும்;

அன்பு மிக்க தம்பி,

அன்பு மிக்க மாப்பிள்ளை,

என வயதில் இளையவரையும்;

அன்பு மிக்க ஐயா,

அன்பு சால் ஐயா,

என நெருங்கிப் பழகாதவரையும்;

அன்பு மிக்க திரு. மணியன் அவர்களே,

அன்பர் திரு. வேலன் அவர்களே,

என நெருங்கிப் பழகிய நண்பர்களையும.

அன்பு மிக்க நெல்லையப்பா,

அன்புள்ள கணபதி

என மிக-மிக நெருங்கிய நண்பர்களையும் விளிக்க வேண்டும். விளிப்பது அவரவர் தகுதிக்கேற்ப அமைதல் வேண்டும்.

## 4. கடிதச் செய்தி

இதுவே கடிதம் எழுதுவதற்குக் காரணமாய் அமைவது இதற்கே கடிதம் எழுதுகிறோம். பிறவெல்லாம் இதை ஒட்டி வருவனவே, எழுதும் தாளின் இடப்பக்கத்தில் சிறிது ஒதுக்கிடம் விடுக. புதுப்பத்தி தொடங்குங்கால் முதல்வரி சிறிது வலப்புறம் உள்ளடக்கிய தொடங்க வேண்டும்.

இப்பொருள் ஒரு நிகழ்ச்சியாகவோ புனைந்துரையாகவோ. கருத்துரையாகவோ இருக்கலாம். செய்தி அறிவிப்பாகவோ, கடிதத் தொடர்புடைய இருவருக்கும் பொதுவான ஆர்வமுள்ள செய்தியாகவோ இருத்தல் வேண்டும். ஒரு வேண்டுகோள், மறுமொழி, விளக்கம், நினைவூட்டல் முதலிய எதுவாயினும் இருக்கலாம். ஒரு செய்தியை மட்டுமல்லாமல் பல வகைச் செய்திகளையும் எழுதலாம். எதையும் உரையாடல் நடையில் இலக்கணப் பிழையின்றி எழுதவேண்டும்.

## 5. கடிதம் எழுதுபவர் கையொப்பம்

உங்கள் அன்புள்ள (மகன், மகள்)
உங்கள் உண்மையுள்ள (அலுவலன், நண்பர்)
உங்கள் நன்றியுள்ள (மாணவன், மாணவி)
உங்கள் கீழ்படிதலுள்ள (மாணவன், மாணவி)

இவற்றுள் ஏற்றதைப் பயன்படுத்தலாம்.

6. முகவுரை

இறுதியில் இடப்பக்கத்தில் பெறுநர் முகவரியைக் குறிக்க வேண்டும்.

மேலே தந்துள்ள கடிதம் ஓர் எடுத்துக்காட்டே ஆகும். அது முதலில் அறிமுகமான ஒரு பெரியவருக்கு எழுதியது. ஆனால் நண்பருக்கோ, நெருங்கிய உறவினர்க்கோ எழுதும் பொழுது நடையை உரையாடல் நடையாகக் கொள்ளலாம். சில வேளைகளில் நாள் குறிக்கும் பகுதியில் கிழமையையும் எழுதலாம். நெருங்கியவர்களுக்கு வேளையையும் எழுதலாம்.

வியாழக்கிழமை இரவு 3–30 மணி, 15–5–1983 என்று கூட எழுதலாம். எழுதும் மொழிநடை, படிப்பவர்கட்கு ஏற்ப எழுதலாம்.

## அலுவலகக் கடிதம்

அலுவலகக் கடிதங்கள், தனிக்கடிதங்கள் போன்றவை அல்ல. தனிக் கடிதங்களில் தம் உணர்ச்சிகளையும் உள்ளக் கிளர்ச்சிகளையும் எளிய உரையாடல் போன்று எழுதலாம். ஆனால் அலுவலகக் கடிதங்களில் உணர்ச்சிகளைப் மனம் விட்டுத் தெரிவியாமல், செய்திகளை மட்டும் முறைப்படுத்தி எழுதவேண்டும். அலுவவகக் கடிதங்களில் ஒரு முறையீடோ, வேண்டுகோளோ, நட்புநிலை பற்றிய அறிவிப்போ, கேட்டிருந்த கேள்விகளுக்கு மறுமொழியோ, எழுதும் பொருளாக அமைந்திருக்கும், அலுவலகக் கடிதங்கள் சுருக்கமாகவும் நயமாகவும், மதிப்பளிப்பனவாகவும் அமையவேண்டும்.

அலுவலக கடிதங்களுள் அலுவருக்கு ஒருவர் ஒரு பணியில் அமர்த்துவதாக எழுதுவதாகு ஒன்றாகும். இவ்வாறு பணிவேண்டி எழுதும்போது அக்கடிதத்தில் பணி வழங்கும் அலுவலரை உயர்த்தி எழுதுவது தவறாகாது. ஆனால் அளவுக்கு மீறி உயர்த்தி எழுதுவது தவறு. மேலும் பணி வேண்டுபவர் தமது ஏழ்மைநிலை, குடும்பநிலை பற்றி எழுதுவதனால் பணி வழங்குபவருடைய பணியைப் பெற இயலும் என எண்ணுவதும் தவறு. ஏனெனில் அது தம்மையே தாழ்த்திக் கொள்வதாகும். பணி வழங்குபவர் பணி வேண்டுபவருடைய தகுதிக்காகவே பணிவழங்குவாரேயன்றி, ஏழ்மைநிலை கருதியோ, பணி

வேண்டுபவருடைய பிற தகுதிகளைக் கருதியோ பணி வழங்குவதற்குச் சட்டப்படி உரிமை உடையவர் அல்லர். ஆகையால், பணி வேண்டுபவர் தம் தகுதிகளை ஒழுங்காக முறைப்படுத்தி எழுத வேண்டுமே ஒழியத் தமது தனிப்பட்ட அவலநிலைகளை எழுதுவது தமக்கே இழிவைத் தரும், மேலும் கருதிய பயனையும் தராது.

மதுரை

1-9-1985

விடுநர்

கோ. மணிவண்ணன்,

174, ஐந்தாவது குறுக்குத் தெரு,

மதுரை-625002.

மாவட்ட ஆணையாளர் அவர்கள்,

வருவாய்த்துறை

மதுரை-625 002.

மதிப்பிற்குரிய ஐயன்மீர்

பொருள் : எழுத்தர் பணியிடத்தில் நியமனம் வேண்டி விண்ணப்பித்தல்

உங்கள் அலுவலகத்தில் எழுத்தர் பணியிடங்களுக்காகச் சிலரைப் பணியில் அமர்த்தி வருவது தெரிகின்றது. அப்பணிக்காக நானும் விண்ணப்பம் செய்கிறேன்.

நான் கல்லூரிப் பட்டப்படிப்பில் வரலாற்றுப் பாடத்தை விருப்பப் பாடமாக ஏற்று, முதல் வகுப்பில் தேறியுள்ளேன். தட்டச்சு தேர்வுகளிலும் சுருக்கெழுத்துச் தேர்வுகளிலும் ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளேன். என்னுடைய சான்றிதழ்களின் படிகளை அரசிதழ் பதிவு பெற்ற அலவலரின் சான்றிட்டு இவ் விண்ணப்பத்துடன் இணைத்துள்ளேன்.

நீங்கள் என் சான்றிதழ்களிலுள்ள தகுதியைச் சீர்தூக்கிப் பார்த்து, என்னை உங்கள் அலுவலகத்தில் ஓர் எழுத்தராகவோ தட்டச்சளராகவோ அமர்த்தினால்

என் பணிகளை உங்களுக்கு மனநிறைவு தரும் வகையில் ஆற்றவேன் உறுதியளிக்கிறேன்.

உங்கள் உண்மையுள்ள

கோ. மணிவண்ணன்

**கடிதம் எழுதும்போது கவனித்தற்குரியவை**

1. முதலில் பெயரும், அடுத்துத் தெருவும், அதை அடுத்து ஊரும், அதன் பின் மாவட்டமும் ஒழுங்காக எழுதவேண்டும். அஞ்சல் குறியீட்டு எண்ணையும் மறவாது குறித்தல் வேண்டும்.
2. தெருப்பெயரை எழுதும்போது வீட்டு எண்ணை தெருப்பெயருக்கு முன்பு எழுதவேண்டும்.
3. முகவரிக்கு உரியவர் உயர்ந்தவராயின் அவர் பெயருக்கு முன் உயர்திரு என்றும் அடுத்துப் பெரியவராயின் 'திருவாளர்' என்றும் எழுதுக.

திருமண வாழ்த்தில் மணமகனாயின் 'செல்வன்' என்றும். மணமகளாயின் 'செல்வி' என்றும் எழுதுக. திருமணமாவதற்கு முன்பு வாழ்த்துக் கிடைப்பதாயின் 'திருநிறைச்செல்வன்' 'திருநிறைச் செல்வி' என்றும் எழுதுக. பட்டம் பெற்றவர்களுள் 'டாக்டர்' முதலிய பட்டங்களைப் பெயருக்கு முன்னரும் பட்டப்படிப்பில் பெற்ற பி.ஏ.,எம்.ஏ., முதலிய பட்டங்களைப் பின்னரும் எழுதுக. பெரும்புலவர், டாக்டர் என்று எழுதுவதற்கு முன்னோ பின்னோ 'திரு' அல்லது 'உயர்திரு' எனச் சேர்த்து எழுதுதல் ஆகாது.

4. முகவரியை எழுதும்பொழுது மேல் உறையின் உச்சியிலிருந்து தொடங்கக்கூடாது. அஞ்சல்தலையை வலப்புறம் ஒட்டுவதற்கு மேலே இடம் விட்டுக் கீழே முகவரியை எழுதுக. முகவரியின் கடைசி வரி உறையின் கீழ் விளிம்புப் பக்கமாக அடையும் படி எழுதுக. நம் முகவரியைப் பதிவஞ்சற்கடித உறையில் எழுதுவேண்டுமாயின் இடப்புறம் கீழ்ப்பகுதியில் எழுதுக. எழுதும் பொழுது கருத்துடன் மை சிந்தாமல் அடித்தலின்றி முகவரியை அழகாக எழுதுக. அவ்வாறு எழுதிய பலர் தம்முடைய பணிநிலைகளில் உயர்ந்திருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்க.

## தம்பிக்கு கடிதம்

98, பவளக்காரத் தெரு,
சென்னை-1
15-1-85

அன்பு கெழுமிய தம்பி மதிவாணனுக்கு,

என் வாழ்த்து உரியதாகுக. நான் இங்கே நலமாயிருக்கிறேன். உனது நலத்தையும் பெற்றோர் நலத்தையும் அறிய விழைகின்றேன்.

தம்பி ! உன்னை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். ஏனெனில் படித்துப்பட்டம் பெற்ற நீ கழனிக்காட்டில் அப்பாவுடன் உழைத்துக் கொண்டிருப்பதாக உன் கடிதத்தில் எழுதியிருந்ததைப் படித்து, மட்டற்ற மகிழ்ச்சி கொண்டேன்.

நமது நாட்டில் படித்த அனைவரும் வேலை தேடி உயர்பதவி பெற்றுத் திகழ விழைகின்றனரேயொழிய நாட்டின் நிலையை உயர்த்தி மக்களின் மகிழ்ச்சியைப் பெருக்கும் உழவுத் தொழிலில் ஈடுபடத் தயங்குகின்றனர். உழைப்பை மதிக்காத எந்த நாடும் இது வரை முன்னேறியதில்லை.

தம்பி! படித்தவனால் தான் உழைப்பின் பெருமையும் நுணுக்கத்தையும் தெளிவாக உணரமுடியும், படித்தவரே உழைப்பை புறக்கணித்தால் தொழில எப்படி முன்னேற்றம் அடையும் ? நாடு எப்படி நலமடையும் ? வெளிநாடுகளில் கல்லூரி மாணவர் ஓய்வு நேரங்களில் தெருக்களை கூட்டுகின்றனர். உணவு விடுதிகளில் எச்சில் தட்டுகளைக் கழுவுகின்றனர். செய்தித்தாள் விற்கின்றனர். இவ்வாறு நம் முன்னேற்றத்துக்கும் கல்விக்கும் தாமே பொருள் தேடிக்கொள்கின்றனர். பெற்றோர்க்கும் சுமையைக் குறைக்கின்றனர்.

நம்நாட்டில் கல்லூரி மாணவருள் எத்தனை பேர் மேல் குறிப்பிட்ட வேலைகளைச் செய்ய முன்வருவர்? ஒரு சிலர் உளர் எனக் கூறுவதற்குக் வகை இல்லையே!

தம்பி! ஒருவன் தன்னைத் திருடன், சோம்பேறி கொள்ளைக்காரன், சூதா, குடிகாரன் என்றெல்லாம் கூறத் தான் வெட்கப்பட வேண்டும். தன்னை உழைப்பாளன் என்று கூறிக்கொள்வதில் பெருமை கொள்ள வேண்டும். இந்த மனப்பண்பு நம்மிடை வளர்ந்தால்தான் தொழில் முன்னேறும்; நாடு வறுமையின் பிடியிலிருந்து விடுபடும்.

தம்பி! நாடு விரும்பும் நல்லதொரு பணியில நீ ஈடுபட்டிருக்கிறாய் பிறரைப்பார்த்து 'அதைசெய் இதைசெய்' என்று கட்டளையிடுவதை விட நாமே முதலில் அதைச்செய்வதில் இறங்குவதே சிறப்பாகும். நீ சிறந்ததொரு பணியில் முன்னோடியாக விளங்குகிறாய் உன்னை உள்ளக்களிப்போடு வாழ்த்துகிறேன்.

உன் அன்புள்ள அண்ணன்
பாண்டியன்

முகவரி

செல்வன். ஆ.கி. மதிவாணன்
24, அபிராமி கோவில் தெரு,
திருமங்கலம்.

## கூட்டு விண்ணப்பம்

விடுநர்

நடராசபுரம் மக்கள்,
நடராசபுரம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

பெறுநர்

ஊராட்சி ஒன்றியத் தலைவர் அவர்கள்,
காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியம்,
காளையார் கோவில்.

ஐயன்மீர்,

பொருள் : குடிநீர் வசதியும், மருத்துவ நிலையமும் ஏற்படுத்த வேண்டுகோள்.

காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட எங்கள் ஊரில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் இருக்கின்றன. ஆனால் அவற்றுக்கேற்ப குடிநீர் வசதிகளோ மருத்துவ வசதிகளோ இல்லாதது பெருங்குறையாகும்.

குடிநீருக்கென்று தெருவோரங்களில் குழாய்கள் அமைக்கப்பட்டிருப்பினும் அங்குக்கூடும் கூட்டம் ஒரு போதும் கலைவதில்லை. குழாய்களின் எண்ணிக்கை எங்கள் ஊர் மக்களின் எண்ணிக்கைக்குப் போதுமானதாய் இல்லை. எனவே இயலுமானால் எல்லா இடங்கட்கும் குடிநீர்க் குழாய் வசதி செய்து கொடுக்க வேண்டுகிறோம். அல்லது தெருவோரக் குழாய்களின் எண்ணிக்கையையாவது உயர்தத வேண்டும்.

ஐயாயிரவர்க்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட எங்கள் ஊரில் ஒழுங்கான மருத்தவ வசதி ஏதும் இல்லை. இவ்வூரைச் சுற்றி ஐந்து கிலோ மீட்டர் தொலைவுக்குள்ளும் வேறு மருத்துவமனையும் இல்லை. ஆதலால் இவ்வூர் மக்கள் படும் தொல்லை அளவிடற்கரியது.

எனவே அறிவியலில் சிறந்து விளங்கும் இவ்விரு பாதம் நூற்றாண்டில் மக்களின் அடிப்படைத் தேவையான குடிநீர்க் குழாய்களும், மருத்துவ நிலையங்களும் விரைவில் அமைத்துத் தரும்படி பணிவுடன் வேண்டுகிறோம்.

நன்றி.

நடராசபுரம்
19–1–1985

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள

முத்தையா
அழகிரி
வீரப்பன்
முனியன்
கந்தப்பன்
(நடராசபுரம் பொதுமக்களுக்காக)

முகவரி

தலைவர் அவர்கள்,
காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியம்.
காளையார் கோவில்

## பயிற்சி

1) மின்வசதி வேண்டி மாநகராட்சி ஆணையர்க்கு ஒரு கூட்டு விண்ணப்பம்
2) தெருக்களைச் செப்பனிட்டுத் தருமாறு ஊராட்சி ஒன்றியத் தலைவர்க்கு ஒரு கடிதம் எழுதுக.
3) காணாமல் போன உனது மிதிவண்டியைத் தேடித்தருமாறு காவல்துறை ஆய்வாளருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.
4) நூல்கள் சில அனுப்புமாறு வேண்டி நூல் விற்பனையாளர்க்கு ஒரு கடிதம் வரைக.

5) கோடை விடுமுறையைக் கழிக்க உனது ஊருக்கு வருமாறு உன் நண்பனுக்கு ஒருகடிதம் எழுதுக.

6) குற்றாலத்தில் நீ கண்ட இயற்கைக் காட்சிகளை விளக்கி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக

7) உன் பள்ளியிலிருந்து செல்லவிருக்கும் இன்பச் சுற்றுலாவில் பங்கு கொள்ள அனுமதியும் பணமும் கேட்டு உன் தகப்பானார்க்கு ஒரு கடிதம் எழுதுக.

8) உன் பிறந்த நாள் பரிசாகக் கடிகாரம் ஒன்று வழங்கிய உன் மாமாவுக்கு ஒரு நன்றிக் கடிதம் எழுதுக.

9) கல்வியில் பின் தங்கியிருக்கும் உன் தம்பிக்கு அறிவுரை கூறி ஒரு கடிதம் எழுதுக.

10) தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் தங்கையைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதுக.

## (5) மொழி பெயர்த்தல்

'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்'

என்றார் பாரதியார்

மொழிபெயர்ப்பு ஒரு சிறந்த கலை அரியகலை ஆகும். இந்நாளில் நம்நாட்டில் தாய்மொழி வழிக்கல்வி ஏற்றம் பெற்று எல்லாப் பாடங்களும் தமிழ்மொழி வாயிலாக கற்பிக்கப்படுவதால் மொழி பெயர்க்கும் ஆற்றல் கற்றோர்க்கு இன்றியமையாததாகும். மேலும் பல்வேறு கலைகளையும் பன்னாட்டுக் கலைகளையும் கற்றிடவும் கற்றவற்றைத் தம் தாய்மொழியில் பெயர்த்தெழுதி அறிவுக் கருவூலங்களை மக்களுக்கு வழங்கிடவும், தாய்மொழியில் தோன்றி நூல்களைப் பிறமொழிகளில் மொழிபெயர்த்து தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை, செய்திடவும் மொழி பெயர்க்கும் திறன் ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாததாகும்.

மொழி பெயர்க்குமுன் மூல நூலைப் பன்முறை ஆழ்ந்து படிக்க வேண்டும். பின்மொழிபெயர்க்கும் போது. மொழிபெயர்ப்பு இயல்பாக அமையவேண்டும். சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தல் சரியான மொழி பெயர்ப்பு ஆகாது. பழமொழிகள், மரபுத் தொடர்களை மொழி பெயர்க்குங்கால், எம்மொழியில் மொழி பெயர்க்கப்படுகிறதோ அம்மொழி அமைப்பிற்கும் பண்பாட்டிற்கும் ஏற்ப மொழிபெயர்க்க வேண்டும். எடுததுக்காட்டாக ஈர் ன்ன் தர்ம்ங் ஹன் தர்ம்ஹய்ன் க்ர் என்பதை 'ஊருடன் ஒத்து வாழ்' என்று மொழி பெயர்க்கப்படுவதை கூறலாம்.

மேலும் நுட்பமான தொணிப்பொருளை உணர்ந்து மொழிபெயர்த்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக கீழ்வருவனவற்றைக் காண்போம்.

இனிய தமிழில் மொழி பெயர்த்திடுக.

1) Long ago there lived an old farmer. He and this wife lived a small hut. They loved each other and were happy. The old farmer was no very clever. He did many foolish things. But his wife said every time "My old man is right".

### தமிழாக்கம்

ஒரு காலத்தில் ஒரு வயது முதிர்ந்த விவசாயி தன் மனைவியுடன் ஒரு சிறிய குடிசையில் வசித்து வந்தான். அவர்கள் இருவரும் ஒருவர்க்கொருவர் அன்பு பாராட்டுப் பண்பினராய் இருந்ததால், மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்தினர். வயது முதிர்ந்த விவசாயி அறிவுக் கூர்மையற்றவனாய் இருந்தான்; அதனால் அவன் பல முட்டாள்தனமான செயல்களைச் செய்து வந்தான். ஆனால் அவன் மனைவியோ, அவன் அவ்வாறு முட்டாள்தனமான செயல்களைச் செய்தபோதெல்லாம், அவனது செயல்கள் சரியானவை என்று கூறினால்.

2) Ponnan was a poor man. He lived in village. There was a forest near in a village. Every day he went to the forest and cut wood there. He sold the wood in the village. One day he was cutting down a tree. It stood near a river. His axe fel into the river. Ponnan set on the bank and wept.

**தமிழாக்கம்**

பொன்னன் என்ற ஏழை ஒரு சிற்றூரில் வாழ்ந்து வந்தான். அவன் வாழ்ந்த அச்சிற்றூருக்கு அருகில் ஒரு காடு இருந்தது. பொன்னன் நாள்தோறும் அக்காட்டுக்குச் சென்று விறகு வெட்டி அதனைச் சிற்றூரில் விற்றுவந்தான். ஒரு நாள், ஓர் ஆற்றுக்கு அருகில் நின்று கொண்டிருந்த மரத்தை வெட்டியபோது அவனுடைய கோடாரி ஆற்றுக்குள் விழுந்து விட்டது. அதனால், அவன் ஆற்றங்கரையில் அமர்ந்து அழுது கொண்டிருந்தான்.

3) There once a lived man who was well known for his habit of talking to himself. He would ask himself questions and answers them. Sometimes it sounded as if two people were talking to each other. One day the king visited man's village and heard him talking to himself."Why are you doing that?" he asked. The man replied. For two reasons I like to talk with a wise man and I also like to hear a wise man talking"

ஓர் ஊரில் தனக்குத்தானே பேசிக்கொள்ளும் பழக்கமுடைய ஒருவன் வசித்து வந்தான். அவன் தானே கேள்விகள் கேட்டு அதற்குரிய விடைகளையும் கூறுவான். சில வேளைகளில் இருவர், ஒருவர் மற்றவரோடு போன்று குரலில் அவன் ஒருவனே பேசுவதுண்டு. ஒரு நாள் அரசர், அவனுடைய ஊருக்குச் சென்று அவன் தனக்குத்தானே பேசிச் கொள்வதைக் கேட்டார். அரசர் அவனிடம் அவன் அவ்வாறு செய்வது ஏன் என வினவினார். அதற்கு அவன் அறிவாளியுடன் பேசுவதும் அறிவாளி பேசுவதைக் கேட்பதும் ஆகிய இரண்டையுமே விரும்புவதே காரணமென்றும் மறுமொழி கூறினான்.

## பயிற்சி

இனிய தமிழில் மொழிபெயர்க்க

1) A crow was once a thristy that he would die if he did not find water. After some time he saw a jug of water, but, when the flew down to in it he found the water was too low in the jug him to be able to reach it. He thought of a good plan. He pick up some stones from the

grond and dropped them one by one into the jug. This made the water rise enough for him to reach it and be thus saved his life by his cleverness.

2) A fat man one went to hotel and ordered a meal of three pepole. After waiting for some time he called out to know when it would be ready. The hotel-keeper said he had it quiready Then why don't you bring it? asked the fatman 'I am waiting for your friends' replied the hotel-keeper. "What friends, asked the man, "are you waiting for? The meal is for me".

3) A poor villager went to buy sweets. The seller tried to cheat him by giving less than the proper weiget. The customer complained that the sweet seller was trying to cheat him. the seller boldly said "you will have less to carry". After the customer had paid for the sweets and was about to leave the shop the keeper called him back saying that he had paid one rupee les than the proper amount. I just through that as you are busy man you should have less corns to count said, the customers.

4) In England, all children get free education. They have to attend school untill they have completed fourteen years. It is a law in their country. Thye schools supply them with a mid-day meal. Nearly all modem countries have to give free education to their children. Baratha Matha also is doing so.

5) Everybody knows who a policeman in by his uniform. In the day time the policeman direct the cars and buses on busy streets. Many of them work in the night also. The constantly look out for thieves and other bad people. We should be thankful to the policeman who work so hard to save us from trouble and danger.

# கண்ணகி

## ஆசிரியர்: காமாட்சி சீனிவாசன்

பெண்கல்வி நாட்டில் பெருகி வருகின்றதெனினும் பெண்கள் படிப்பதற்கு என்ற நோக்கில் சிறந்த தனி நூல்கள் பல வரவில்லை. எனவே அக்குறையை நீக்கும் பணியில் கண்ணகி என்னும் நூல் வெறிவருவதாகக் கூறும் பதிப்புரையோடு நூல் தொடங்குகிறது. கண்ணகியின் வரலாறு பேசப்படுகின்ற இந்நூலில், திருமணம் முதலாக இலக்கியச் சுவை ஈறாகப் பதினாறு தலைப்புகள் உள்ளன. முதல் பதின்மூன்றும் கண்ணகியின் குணநலத்தையும், சிலப்பதிகாரத் காலச் சமூக நிலையையும், சிலப்பதிகார இலக்கியச் சுறையையும் சுவைபடக் கூறுகின்றன. (இக்கண்ணகி, நூலுக்கு மூலமாக இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் விளங்குகிறது.)

### திருமணம்

ஏறக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த கதை இது. சோழநாட்டின் தலைநகரமாகிய காவிரிப்பூம்பட்டிணம் வாணிபத்திலும் தொழிலும் சிறந்து விளங்கியது. அவ்வூரில் வாழ்ந்த பெருங்குடி வணிகனான மாநயகனுக்கு மகளாகப் பிறந்த கண்ணகி என்பவள் திருமகளைப் போன்ற அழகுடையவளாகவும், கற்பில் அருந்ததிக்கு நிகரானவளாகவும் விளங்கினாள். அந்நகரில் வாழ்ந்து மாசாத்துவான் என்பானின் மகனான கோவலன் நற்குணங்களால் புகழ் பெற்றிருந்தான்.

கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் செய்ய அவர்தம் பெற்றோர் தீர்மானித்தனர். திருமணம் சிறப்புற நிழந்தது. மங்கல மகளிர் பலரும் கண்ணகியை அணுகி, காதலர் பிரியாமல் கலவுக்கை நெகிழாமல் நெடுங்காலம் நீதின்றி வாழ்வாயாக என்று வாழ்ததினர்.

கண்ணகியால் அளவற்ற அன்பு கொண்டு, கோவலன் மாசறு பொன்னே ! வலம்புரி முத்தே! காசறு விரையே ! தேனே ! மலையிற் பிறவா அமுதே!

யாழிற்பிறவா இசையே! என்று பலபலப் பாராட்டினாள். கண்ணகியோ இயல்பான நாணத்தில் இப்புகழ்ச்சிரைக்குப் பதில் ஒன்றும் கூறவில்லை போலும்! கோவலனும் கண்ணகியும் நிலாமுற்றில் உலவியும் தென்றல் காற்றை நுகர்ந்தும் இன்பமாகப் பொழுது போக்கினர். இல்வாழ்க்கையில் இன்பத்தோடு அறமும் சேர வேண்டுமல்லா ? ஆகவே கோவலனின் பெற்றோர். கோவலனும் கண்ணகியும் வேறாக ஒரு மாளிகையில் வசிக்க ஒழுங்கு செய்தனர். அவர்கள் இருவரும் இல்வாழ்க்கையில் தாம் செய்ய வேண்டிய அறங்களைச் செய்து வந்தனர்.

## மாதவி நடனம்

அக்காலத்தில் நாட்டிய மகளில குலத்தில் பிறந்த மாதவி ஒரு நாள் நடனக் கலையை அரங்கேற்றினாள். பொன்னலாகிய பூங்கொடி ஒன்று அசைந்தாடுவது போல் அவள் நடனமாடினாள். இத்துடன் விருந்தினைச் சுவைக்க கோவலனும் சென்றிருந்தான.

மாதவியின் கலைத் திறமையைப் பாராட்டிச் சோழமன்னன் அவளுக்குத் 'தலைக்கோல்' என்ற ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னும் ஒரு மாலையும் அளித்தனன். மாதவியின் தாய் சித்திராபதி, இம்மாலையை ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் கொடுத்து வாங்குவோன் மாதவியை அடைவதற்கு உரியவன் என்று கூறினாள். அதை அறிந்த கோவலன் அப்பெரு விலை கொடுத்து வாங்கிக் கொண்டு மாதவியின் வீட்டை அடைந்தான். அங்கு மாதவியும் கோவலனும் இளவேனிற் காலத்தை மகிழ்ச்சியுடன் கழித்தனர்.

கண்ணகியோ துயரம் மிகுந்தவளாய்த் தனியே இருந்தாள். 'செங்கோல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப....கையறு நெஞ்சத்துக்கண்ணகி' என்று கண்ணகியின் பிரிவுக் கோலத்தை இளங்கோவடிகள் எடுத்துக் காட்டுகின்றார்.

சில ஆண்டுகள் கழிந்தன. வழக்கம் போல் சித்திரை மாதத்தில்இந்திரவிழா வந்தது. அக்காலத்தில் ஆண்டுதோறும் புகார் நகரத்தில் கொண்டாடப்பட்ட மிகச் சிறந்த பெரிய விழா அதுவே, நகரம் முழுவதும் விழாக்கோலம் பூண்டது.

கோவலன் தன்னுடன் வாழ்ந்ததால் மாதவி மகிழ்ச்சியுடன் இருந்தாள். கண்ணகியோ தனித்து இருந்ததால் துயரத்தில் உழன்று கொண்டிருந்தாள். மாதவி,

கண்ணகி ஆகிய இருவர் கண்களுமே கண்ணீர் துளிகளைக் கொண்டிருந்தன என இளங்கோ அடிகள் கூறுகிறார். மாதவியின் கண்களிலிருந்து இன்பக்கண்ணீர், கண்ணகியின் கண்களில் துளிர்ந்ததோ துயரக் கண்ணீர், ஆனால் விழா நாளன்று மாதவியின் வலக்கண்ணும் கண்ணகியின் இடக்கண்ணும் துடித்தனவாம் (பெண்களுக்கு வலக்கண் துடித்தால் தீமை, இடக்கண் துடித்தால் நன்மை) விழாவின் பின் மாதவியின் துயரமும் கண்ணகிக்கு மகிழ்ச்சியும் ஏற்படப்போகிறது என்பதை இளங்கோவடிகளின் கண்ணகி கருங்கணும்......விழைவு நான் அகத்தென்றல்' என்னும் அடிகள் நமக்கு குறிப்பால் வார்த்துகின்றன.

## 3. இந்திர விழா

காவிரிபூம்பட்டிணத்தில் நிகழ்ந்த இந்திரவிழாவைக் கண்டுகளிக்க ஆண்டுதோறும் அந்நகரத்தில் பெருங் கூட்டம் கூடும். சோழநாட்டின் பல பகுதிகளினின்றும் மக்கள் அங்கு வருவர். இந்திர விழாவின் போது மாதவி அரங்கேறி நடனம் செய்தாள்; கொடுகொட்டி, அவ்வியத்தொகுதி, துடி, துடி முதலிய பதினாறு வகை ஆடல்களைச் சிறந்த முறையில் பாட்டுடன் ஆடிக்காட்டினாள். அவள் பல் முன்னிலையில் அரங்கேறி நடனமாடியது கோவலனுக்கு பிடிக்கவில்லை. அவன் கோபம் கொண்டான்.

கோவலனின் இவ்வருத்தம் நீக்க விரும்பி, மாதவி மணப் பொருளாலும் வண்ணக் குழம்புகளாலும், பல வித அணிகலன்களாலும் தன்னை அலங்கரித்துக் கொண்டு கோவலன் மனத்தை மகிழ்வித்தாள்.

இந்திரவிழா முடிந்தபின் நகர மக்களும், விழாக்காண வந்தோரும் கடற்கரைக்குச் சென்று நீராடுவது அக்காலத்து வழக்கம். இதனை 'கடலாட்டு' என்பர். கோவலனும் மாதவியும் இக்கடலாட்டு காணப்புறப்பட்டனர். அன்றைய பொழுதைக் கழிக்க ஓர் இடத்தில் புன்னை மரத்தின் நிழலிலே வெண்மணற் பரப்பில் சென்று அமர்ந்தனர். சில பணியாளர்களுக்கும் கூட வந்திருந்தனர்.

## 4. மாதவி கடிதம்

மாதவி கொடுத்த யாழைக் கையில் ஏந்திக் கோவலன் தானே புனைந்த கானல்வரி எனப்படும் ஒருவகைப் பாடல்களை இசைக்கக் கொள்ள பற்றி அமையும் அகத்துறைப் பாடல்கள். ஆண்மகன் ஒரு பெண்ணை விரும்பி அவள் அழகை

வியந்த பாடுவது போல் கற்பனையாக அமைத்து அவன் பாடிய பாடலைக் கேட்ட மாதவி, அவன் வேறு யாரோ ஒரு பெண்ணை மனத்தில் நினைத்துப் பாடுகின்றான் போலும் எனத் தவறாகப் புரிந்து கொண்டு, அவளும் கானல்வரி பாடினாள், அவள் பாடிய வரிப்பாடல் தலைவியின் கூற்றாக அமைந்தன. மாதவியும் அவற்றை கற்பனையாகத்தான் பாடினாள்.

விதியோ வேலை செய்தது. அப்பாடலைக் கேட்ட கோவலனும் அவள் தன்னையன்றி வேறு யாரோ ஆடவனை விரும்புகிறாள் எனத்தவறாகப் புரிந்து கொண்டு 'மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள்' என்று எண்ணி உடனே எழுந்து புறப்பட்டு விட்டாள் தன் வீட்டிற்கு 'இப்போது மாலை ஆகிவிட்டது; வா; வீடு திரும்புவோம், என்று கூறி அவளோடு எழுந்து செல்லாமல், நிலவு போன்ற முகத்தானாகிய மாதவியைத் தனியே விட்டு அவன்மட்டும் எழுந்து சென்றான்.

உடைந்த உள்ளத்தோடு தன் இல்லம் திரும்பிய மாதவி, மேல் மாடத்தில் சென்று அமர்ந்து யாழை எடுத்து மீட்டினாள். அது அவளுக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. தன் நிலைமையை விளக்கிக் கோவலனுக்கு ஒரு கடிதம் எழுத நினைத்தாள்.

வெண்நிறம் பொருந்திய தாழம்பூவின் மடலை எடுத்துப் பித்திகை மொட்டைச் செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்துக் கடிதம் ஒன்றை எழுதினாள். அதனைத் தன் தோழி வசந்தமாலையிடம் கொடுத்து அனுப்பினாள்.

வசந்தமாலை கோவலனைக் கண்டு அக்கடிதத்தை நீட்டினாள். அவனோ அதை வாங்குவதற்கே மறுத்து விட்டான். இதனை அறிந்த மாதவி நம்பிக்கை இழக்கவில்லை. 'மாலைவாரார்' ஆயினும் மாணிழை காலை காண்குவன் என்று அமைதி கொண்டாள்.

## 6. தோழி தேவந்தி

தேவந்தி என்பாள் தீர்த்தத் துறைகளில் சென்று நீராடுவதும் கோயில் வழிபாடு செய்வதுமாகக் காலத்தை கழித்தாள். அவள் கண்ணகிக்கு ஏற்பட்ட குறையை அறிந்து அவளுக்காக வழிபாடு செய்து பின் கண்ணகியைக் கண்டு 'உன் கணவனைத் திரும்பப் பெறுவாயாக' என்று வாழ்த்தினாள். கண்ணகி,

'பெறுவேனாயினும் என் உள்ளத்தில் ஓர் அச்சம் உண்டாயிற்று. நான் ஒரு கனவு கண்டேன. அதில் அவனும் நானும் வேறொரு நகரத்துக்குச் சென்றோம். அங்கு என் கணவனுக்குத் தீங்கு நேரவே, நானும் மன்னனிடம் சென்று வழக்குரைத்தேன். ஊருக்கும் ஒரு தீங்கு நேர்ந்தது, அது தீக்கனா ஆதலின் அதை விரிவாகக் கூற விரும்பவில்லை. அதன் பயனாய் ஏதேனும் தீங்கு நேருமோ'? என்றாள்.

தேவந்தி அவளுக்கு ஆறுதலாக. உன் கணவனைத் திரும்பவும் நீ அடைவாய், சோமகுண்டம்; சூரிய குண்டம் என்னும் பொய்கையில் நீராடி காமவேள் கோட்டம் சென்று வழிபடும் பெண்கள் கணவனுடன் நீடவாழ்வார்; 'நாமும் ஒருநாள் அங்கு சென்று நீராடினாள்' என்றாள்.

கண்ணகி 'அது பீடன்று' என்று மறுத்துவிட்டாள். தேவந்தி திரும்பிச் சென்றாள். சிறிதுநேரம் கழித்து, ஓர் ஏவற் பெண் வந்து கோவலன் வாசலில் நிற்கிறான் என்று கூறினாள். அவனும் உள்ளே வந்தான். அவன் கண்ணகியின் வாடியமேனி கண்டு, 'நான் கணிகையோடு காலத்தைப் போக்கி என் முன்னோரிடமிருந்த பெற்ற மலை போன்ற செல்வத்தை அழித்தேன்; அது எனக்கு நாணத்தைத் தருகின்றது என்று வருத்திக் கூறினான். கண்ணகியோ புன்முறுவலுடன் சிலம்புள் கொளனம் என்று கூறினாள்.

கோவலன், மதுரைக்கு சென்று இச்சிலம்புகளை முதற்பொருளாகக் கொண்டு வாணிபத்தின் மூலம் இழந்த செல்வத்தை மீண்டும் பெறுவேன் என்றான். கண்ணகியும் உடன்படவே, இருவரும் புறப்பட்டனர்.

## 6. கவுந்தியடிகள்

பின்னிரவு வேளையில் கோவலனும் கண்ணகியும் தங்கள் மாளிகையை விட்டுப் புறப்பட்டுச் கால்நடையாக மதுரை நோக்கி சென்றனர். ஒரு காத தூரம் சென்ற பின்னர் கண்ணகி மதுரை மூதூர் யாது? என்று வினவ, கோவலனும் இன்னும் ஐந்து காதம் என்று (இன்னும்) முப்பது காதம் இருந்தும் அவளுக்கு ஆறுதலாக இருக்கவே இவ்வாறு கூறினான்.

பின்னர்,இருவரும் கவுந்தி என்னும் சமயத்துறவியைக் கண்டு வணங்கினர். 'மேற்குடிப் பிறப்பும் நல்லொழுக்கமும் உடைய நீர் இவ்வாறு வீட்டை விட்டுக் கால்நடையாகச் செய்வது ஏன்'? என்று கேட்ட கவுந்தியடிகளுக்குக் கோவலன் மதுரை சென்று பொருள் ஈட்டுவதற்காக என்றான். நானும் அருகனை வழிபட மதுரை செல்ல விரும்புகிறேன். என்று கூறிக் கவுந்தியடிகள் அவர்களுடன் புறப்பட்டாள். மதுரைக்குக் செல்லும் வழியில் இவர்கள் சாரணர் என்னும் அருக சமயத் துறவிகளைக் கண்டனர். கவுந்தியும் அருகக் கடவுளைத் தொழுது வாழ்த்தினர். பின்பு பயணத்தைத் தொடர்ந்தனர்.

## 7. தெய்வச் சாலினி

மூவரும் உறையூர் வரை சென்று அங்குச் தங்கி இளைப்பாறி மீண்டும் புறப்பட்ட போது, குடமலையிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்த மரங்காட்டு மறையவனைச் சந்தித்தனர். அவன் பாண்டிய நாட்டைக் கடந்த பொழுது, அந்நாட்டின் சிறப்பை வியந்து பாண்டிய அரசனை வாழ்த்திக் கொண்டே வந்தான். அந்த அந்தணன் கூறிய மூன்று வழிகளில் இடைப்பட்ட வழியில் மூவரும் மதுரையை நோக்கி நடந்தனர்.

அவர்கள் காட்டுவழியே சென்றபோது ஓரிடத்தில் அமர்ந்து இளைப்பாறினர். கோவலன் தண்ணீர் கொண்டு வரத் தனியே ஒரு பொய்கைக் கரைக்குச் சென்றான். காட்டிலிருந்த ஒரு தெய்வம் வசந்தமாலை வடிவில் வந்து அவனை மயக்க முயன்றது. அவன் துர்க்கையின் மந்திரத்தைக் கூறவே, அத்தெய்வம் தான் ஒரு வானதேவதை என்பதை ஒப்புக்கொண்டதோடு, கண்ணகியின் கற்புத் திறனை அறிந்து அவளுக்கு அஞ்சி மறைந்தது. பின்பு கோவலன் தாமரை இலையில் நீர் கொணர்ந்து கண்ணகியின் களைப்பு நீக்கினான். ஆயினும் வெயில் வேளையில் அக்கோட்டைக் கடக்க முடியாதவர்களாய் அம்மூவரும் வேடர்களின் சிற்றூர் ஒன்றை அடைந்து கோயில் அருகே மரநிழலில் அமர்ந்தனர்.

அப்பொழுது, அக்கோயிலில் வழிபாடு செய்யும் உரிமையை அடைய சாலினி என்னும் பெண் தெய்வமேறப் பெற்றவளாய் கோவில் அருகே அமர்ந்திருந்த கண்ணகியைச் சுட்டிக்காட்டி, இவளோ கொங்கச் சொல்லி சூடாமாமணியாய் உலகிற்கோங்கிய திருமாமணி என்று கூறினாள். இது கேட்ட கண்ணகியோ ராணி 'இப்பெண் மயக்கத்தால் ஏதோ கூறினாள்' என்று சொல்லிப் புன்முறுவலுடன் தன் கணவன் பின் சென்று மறைந்து கொண்டாள்.

அக்காலத்து வெயில் கடுமையாக இருந்தது. ஆகவே கோவலன் கவு நோக்கி, வேனிற் காலத்து வெப்பத்தை கண்ணகி தாங்கமாட்டாள். பாற்களவன் நிறைந்த கொடிய நிலத்தில் பாதங்களைப் பதித்து நடக்க அவளால் முடியவில்லை. எனவே செங்கோலர்கள் என்ற பெரும்புகழுக்கு உரிய பாண்டியரின் நாட்டில் இரவில் நிலவெளியிலேயே நடந்து செல்வதில் தவறில்லை அல்லவா ? என்றான். கவுந்தியம் சம்மதிக்கவே கதிரவன் மறைந்து நிலவும் தோன்றும் வரை காத்திருந்தனர். பின் பயணத்தைத் தொடர்ந்து அந்தணர் வாழும் ஒருரை அடைந்தனர்.

## 8. மாதவியின் மறுகடிதம்

கண்ணகியையும் கவுந்தியையும் சோலை ஒன்றில் இளைப்பாறவிட்டுக் கோவலன் தண்ணீர் தேடிச் சென்றான். காவிரிப்பூம்பட்டிணத்னிலிருந்தும் கோவலனைத் தேடிவந்த கோசிகன் என்னும் அந்தணன் நீர்த்துறை அருகே அவனைக் கண்டு புகார் நகரத்துச் செய்திகளை அவனிடம் கூறினான்.

கோவலன் நகரத்தை நீத்துச் சென்றதை அறிந்து அவன் பெற்றோர் மணி இழந்த நாகம் போல் வருந்தினர். சுற்றத்தார் துயரில் ஆழ்ந்தனர். புகார் நகரமே பொலிவிழந்தது. எல்லோரையும் விட அதிகம் வருந்தியவள் மாதவிதான். அவள் துயரை அறிந்து ஆறுதல் கூறச் சென்றபோது அவள் ஒரு கடிதத்தையும் எழுதிக் காப்பிட்டு அதனைப் பின்பு கோவலனிடம் கொடுக்குமாறு கொடுத்து அனுப்பினாள், அதைப் படித்த கோவலன் மாதவி குற்றமற்றவள் என்று நினைத்தான். ஆயினும் அவன் அவளிடம் திரும்பிச் செல்ல எண்ணினான் இல்லை. கோவலன் கோசிகனை அனுப்பிவிட்டு கண்ணகியும் கவுந்தியும் இருக்குமிடம் சென்றான்.

சிறிது நேரத்தில் அவ்வழியே வந்த பாணரிடம் கோவலன் மதுரைக்கு எவ்வளவு தூரம்? என்று கேட்க அவர்கள் மதுரையிலுள்ள மணப்பொருள்களின் வாசத்தையெல்லாம் கவர்ந்து கொண்டு வரும் மதுரைத் தென்றல் இதோ வீசுகிறது. பாண்டியனது நகரம் அருகில் தான் உள்ளது என்றனர்.

மறுபடியும் அவர்கள் மூவரும் இரவில் நடந்து சென்றனர். நெடுநாள் பயணத்தின் பின் வைகை ஆற்றைக் கடந்து காலை வேளையில் மதுரையை

அடைந்தனர். ஆனால் அவர்களுக்கு அங்கு எத்தகைய வரவேற்பு காத்திருந்தது? மதிலின் மேல் ஓங்கி நின்ற வெற்றிக் கொடிகள் இங்கு வராதீர் என்று கையினால் சைகை காண்பிப்பன போல் அசைந்தன. ஆனால் கோவலனும் கண்ணகியுமோ இவற்றை அறியாதவர்களாய் மதுரையை அடைந்த மகிழ்ச்சியுடன் அந்நகருக்குப் புறத்தே இருந்த புறஞ்சேரியுள் புகுந்தனர்.

## 9. மாதரி மனையில்

கோவலன் கவுந்தியை நோக்கி 'நான் நகரினுட் சென்று தெரிந்தவர்களைக் கண்டு என் நிலையைக் கூறி வரும்வரை கண்ணகிக்குத் தங்கள் பாதமே காப்பு என்று கூறிச் சென்றான்.

கோவலன் மதுரை நகரினுள் சென்று நகரின் பல்வேறு வளங்களைக் கண்டு திரும்பியபோது அவனை முன்ற அறிந்தவனாகிய மாடலமறையோன் அங்கு வந்தான். அவன் கோவலனைக் கண்டு அவன் அடைந்த துன்பத்திற்காக வருந்தினான். முன்பு புகார் நகரில் வாழ்ந்த போது துயருற்றவர்களுக்காக இரங்கிக் கோவலன் செய்த மூன்று நற்செயல்களைக் எடுத்துக்கூற 'இம்மைச் செய்தன யானறி நல்வினை உம்மைப் பயன்கொல்' என்று மாடலன் கூற கோவலனும் தான் கண்ட தீக்கனவினைக் கூறி அதனால் ஏதோ தீங்கு நிகழும் போலும் என்று வருந்தினான்.

மாடலனும் கவுந்தியும் கோவலனை அவன் மனைவியோடு மதுரை நகருக்குள் சென்று விடுமாறு கூறினர். அப்பொழுது ஆயர் குலத்தினளான மாதரி என்னும் முதியவள் அவ்வழியே வந்தாள். கவுந்தியைக் கண்டு வணங்கினாள். பசுக்களை வளர்த்து அவற்றின் பயனை பிறர்க்குத் தரும் ஆயர்களது வாழ்க்கை குற்றமில்லாதது என்று கருதி கவுந்தி மாதரியை நோக்கி நெடுவழிப் பயணத்தினால் நாப்புலா வாடு மிகத் துன்புற்றும், தன் துயர் காணாது தன் கணவன் அடைந்த துன்பத்தின் பொருட்டு மனம் வருந்தினான். மகளிர்க்கு இன்றியமையாகக் கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது வேறு தெய்வம் யாம் கண்டதில்லை. இவருக்கு ஆயமும் காலும் நீயோயாகித் தாங்கு, தவத்தோர் அடைக்கலம் தான் சிறியதாயினும் மிகப் பேரின்பம் தரும் என்று கூறிக் கண்ணகியை அவளிடம் அடைக்கலமாக அளித்தாள்.

அடுத்த நாள் காலை மாதரி வீட்டில் ஆய்ச்சியர் கண்ணகியைப் புதுநீரில் நீராட்டினார். உணவு ஆக்க புது மண்கலங்கள் அவளுக்கு அளித்தனர். அரிசி,

காய் கனிகள், பால், நெய் முதலியன கொடுத்தனர். மாதரி தன் மகள் ஐயை கண்ணகிக்கு உதவுமாறு பணித்தனர்.

கண்ணகி கண்கள் சிவக்க முகம்வியர்க்க உணவாக்கினாள். ஓலைப் பாயை விரித்தாள். நிலத்தில் நீர் தெளித்து வாழைக் குருத்து விரித்தாள். கணவன் பாதங்களை கழுவினாள்! அடிகளை, அமுது உண்ணுக என்று இன்மொழி கூறி உணவு பரிமாறினாள்.

கோவலன் கண்ணகி ஆகியோரின் பண்பைக் கண்ட மாதரியும் ஐயையும் அவர்களைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

## 10. இறுதிப் பேச்சு

கோவலன் உணவருந்திய பின் கண்ணகி அவனுக்கு மெல்லிய வெற்றிலையும் பாக்கும் அளித்தாள். அப்பொழுது அவன் அவளை அருகில் அழைத்து, தான் நல்லொழுக்கத்தைக் கைவிட்டமையைக் கூறி, பெரிய புகார் நகரத்தை விட்டுப் புறப்படு என்று தான் கூறியவுடன் அவளும் துணிந்து புறப்பட்டு விட்டாள் என்று வருந்திக் கூறினான்.

அப்பொழுது கண்ணகியும், நீங்கள் என்னைப் பிரிந்ததனால் தான் இல்லற அறங்கள் செய்ய முடியாதவள் ஆயினேன், எந்நிலையிலும் உங்கள் சொற்படி நடப்பது என் நோக்கம், ஆகவே உங்கள் விருப்பப் படியே மதுரைக்கு வர உடன்பட்டேன் என்று பலவாறாக மனம் திறந்து பேசினாள்.

பின்பு கண்ணகியைப் பாராட்டி கோவலன். அவளிடம் உன் சீறடி சிலம்பு ஒன்று கொண்டு யான் போய் விற்று வருவேன். மனங்கலங்காதிரு என்று கூறி, அவள் அப்போது தனியே இருக்கும் நிலையை எண்ணி வருந்தியவனாய் புறப்பட்டான். வழியில் ஏறு எதிரே பாய்ந்து வந்தது. அது தீச்சகுனம் என்பதை அவன் அறியக் கற்றிருக்கவில்லை.

கோவலன் கடைத்தெருவில் பொற்கொல்லன் ஒருவனைக் கண்டு, அவன் அரண்மனைக் கொல்லன் போலும் என்று கருதியவனாய் அவனிடம் சென்று அரசி அணியத்தக்க கார்சிலம்பு ஒன்றை நீ விலை மதிக்கவல்லையோ ? என்றான். அவன்

'அடியேன் அறிவேன்' என்று கூற கோவலனும் சித்திரக் சிலம்பை அவனிடம் காட்டினான். அவனைக் கண்ணுற்ற பொற்கொல்லன் கோப்பெருந்தேவிக்கு இது பொருந்தும். அரசனிடம் இது குறித்துக் கூறி வருவேன். அதுவரை என் சிறுகுடிலில் இரும்' என்று கூறிச் சென்றான்.

பொற்கொல்லனோ அரசியின் சிலம்பு ஒன்றைக் களவாடியவன். கோவலன் காட்டிய சிலம்பே வெளித்தோற்றத்தில் அவன் களவாடிய சிலம்பை ஒத்திருந்தது. நான் அரண்மனை சிலம்பைக் கவர்ந்து கொண்டதை ஏனையோர் அறிவதன்முன் குற்றத்தை இவன்மேல் சுமத்தித் தப்பித்துக் கொள்வேன்' என்று எண்ணியவாறு கொல்லன் அரசனிடம் சென்றான்.

அரண்மனையில் பாண்டிய மன்னனிடம் அரசி ஊடல் கொண்டிருந்த நேரம் அது. தேவியின் ஊடலில் அவன் நெஞ்சு அறிவு கலங்கி மயங்கியிருந்தான். பொற்கொல்லன் அரசனை அணுகி 'அரண்மனைக் சிலம்பைத் திருடிய கள்வன் இப்போது என் சிறு குடிலில் அகப்பட்டு இருக்கிறான்' என்று கூறினான். பாண்டியன் இச்சேதியை நன்கு ஆராயமல் அரசியின் சிலம்பு அக்கள்வன் கையில் இருந்ததால் அவனைக் கொன்று அச்சிலம்பை கொண்டு வருக என்று உத்தரவிட்டான். இது தீவினை தன் பயனை விளைவிக்கும் காலம். ஆகையினால் பாண்டியன் இவ்வாறு கூறினான் என்பார் இளங்கோ.

காவலர் கோவலன் இருக்குமிடம் அடைந்தனர். பொற்கொல்லன் கோவலனிடம் இருந்த சிலம்பு அரசியின் திருட்டுப்போன சிலம்போடு ஒத்திருப்பதைக் காவலரிடம் விளக்கினான். காவலர் சற்று தூரத்தில் நின்று கோவலனைப் பார்த்த அளவில் 'இவன் நம்மால் கொல்லத்தக்கவன் அல்லன்' என்றனர். அவர்களுள் ஒருவன் திருடர்களைப் புரிந்து கொள்வது அரிதுதான். இவனைக் கொல்லாது விட்டுவிட்டால் அரசன் நம்மைத் தண்டிக்கக்கூடும். என்று கூறிச் சட்டெனத் தன் வாளை உருவிக் கோவலனை வெட்டினான். உடலின்றும் குருதி சோர்ந்தது. அரசனது வளையாத செங்கோல் வளைந்தது. கோவலன் வீழ்ந்தான் இறந்தான்.

இச்செய்திகள் இங்கு நிகழ்ந்து கொண்டிருக்க ஆயர்கள் இருப்பிடத்தைச் சிலவற்றை பார்ப்போம்.

மாதரி ஐயையை அழைத்துக்கொண்டு தயிர் கடையச் சென்றாள். முதல் நாள் உறையிட்டப்பட்ட பால் தோய்ந்து தயிராகவில்லை. வெளியில் பெரிய எருது கண் கலங்கி நின்று கொண்டிருந்தது. பசுக்கள் மெய் நடுங்கிக் கதறிக் கொண்டிருந்தன.

இது போன்ற தீ நிமித்தங்களைக் கண்ட மாதரி, தீமை நீங்குமாறு குரவை கூத்தாடி கண்ணபிரானை வழிபட எண்ணினாள். ஆயர்குல மங்கையர் தெய்வம் நம் பசுக்களின் துன்பத்தைப் போக்குவதாக; அரசனுக்கு வெற்றி உண்டாவதாக என்று வேண்டிக் குரவை ஆடினர். மாதரி பூவும் புகையும் கண்ணியும் கொண்டு அவற்றை வைக்க ஆற்றில் இட்டு நீராடிச் சென்றாள். அப்போது குரவை ஆடிய பெண்களில் ஒருத்தி ஊரார் பேசிக் கொண்ட ஒரு செய்தியைக் கேட்டுக் கண்ணகி இருந்த இடத்துக்கு விரைந்து வந்த "கோவலனை அரண்மனைச் சிலம்பைத் திருடிய கள்வன் என்று எண்ணி அரசனது வீரர்கள் கொலை செய்ய எண்ணினர்" என்றாள் கோவலன் இறந்துவிட்டான் ஆனாலும் அச்செய்தியைக் கண்ணகியிடம் நேரடியாகச் கூறமுடியாதவளாய் அந்த ஆயர்மகள், கொலை செய்ய எண்ணினர் என்றாள்.

## 11. கண்ணகியின் கண்ணீர்

கண்ணகி பொங்கி எழுந்தாள் 'அரசன் செய்த தவறினால் தான் கணவனை இழந்து கைம்மை நோன்பு நோற்று என் காலத்தை கழிக்க வேண்டுமா? என்று கதறி அழுதாள். சூரியனே என் கணவன் கள்வனோ? என்று கேட்டாள்.

"அவன கள்வன் அல்ல அவனைக் கள்வன் என்று பழிகூட்டிய இவ்வூரை நெருப்புப் பற்றும்" என்று ஒரு குரல் வானத்தில் ஒலித்தது.

கண்ணகி தன் கையில் இருந்த மற்றைச் சிலம்பை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். மதுரை நகர மக்கள் கண்ணகியின் அவல நிலையைக் கண்டு வருந்தி, இக்காரிகைக்கு களையாக துன்பத்தை உண்டாக்கி அரசனது வளையாக செங்கோல் வளைந்தது அழுது ஏங்கி அரற்றும் இப்பெண் தெய்வம் ஏறியவள்போல் காணப்படுகிறாள். இது என்னவோ? என்றெல்லாம் கூறினர்.

இவ்வாறு கவலை அடைந்த மதுரை மக்கள் அழைத்துச் சென்று காட்ட உயிரிழந்த தன் கணவனை அவள் கண்டாள். அப்பொழுது உலகம் முழுவதும் இருள் பரவத் தன் செந்நிறக் கதிர்களைக் சுருக்கிக் கொண்டு மேற்கில் சென்று மறைந்தான்.

கண்ணகி கணவனது உடலைத் தழுவிக் கொண்டு 'இத்துன்பம் விளைந்த என்ன வினைப்பயனோ? என்றெல்லாம் கூறி அழுதாள்? கோவலனின் திருவடிகளைப் பற்ற அவள் எழுந்தாள். என்ன வியப்பு 'உனது மதிமுகம் கன்றியதே' என்று அவளது கண்ணீரைத் தன் கையால் துடைத்தான். 'நீ இங்கு இருப்பாயாக' என்று சொல்லித் தேவர்கள் அழைத்துச் செல்ல மறைந்து போய்விட்டான். பின் கண்ணகி அரண்மனை நோக்கி புறப்பட்டாள்.

அங்கு பாண்டிமாதேவியும் ஒரு தீக்கனவு கண்டிருந்தாள். இதனால் ஏதோ துன்பம் நிகழும் என அறிந்த தேவி அதனை, அரசனுக்குக் கூற அரசன் நெடுஞ்செழியன் அரியணையில் அமர்நதவாறே அதனைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

## 12. கண்ணகி வழங்கும் வஞ்சினம்

'சிலம்பொன்றைக் கையில் ஏந்திக் கணவனை இழந்த பெண் ஒருத்தி கடைவாயிலில் நிற்கின்றாள்' என்று வாயிற்காப்போன் கூற அரசன் அவளை அழைத்து வர கட்டளை இட்டான். அவளிடம் நீ யார் என வினவிய அரசனுக்கு அவள், உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலனின் மனைவி என்று மொழிந்தாள்.

பாண்டியன், 'கள்வனைக் கொல்வது கொடுங்கோல் அன்று' என்றான். இதனைக் கேட்டுச் சினமுற்ற கண்ணகி, 'நல்வழியில் செல்லாத பாண்டியனே! என்காற் சிலம்பு மாணிக்கப் பரலை உடையது என்றாள். பாண்டியன் எம் சிலம்பின் உள்ளிடு பால்முத்து' என்பதாகக் கூறி கோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பைக் கொண்டுவரச்செய்து கண்ணகி முன் வைத்தான். கண்ணகி அதனை எடுத்து உடைத்தாள். உள்ளிருந்து தெறித்த மாணிக்கம் மன்னன் முகத்தில் தெறித்தது.

அதிர்ச்சியைத் தாங்கமுடியாத பாண்டியன், 'யானோ அரசன் யானே கள்வன்' என்று கூறி மயங்கி விழுந்து இறந்தான். 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்று கூறி அரசன் திருவடி வணங்கிப் பாண்டிமாதேவியும் உயிர்விட்டாள்.

இயல்பான பணிவு அடக்கம் நாணம் ஆகிய குணங்களைக் உடைய கண்ணகி பாண்டிய அரசனது மாபெருஞ்சபையின் முன்னே வீரமகளாக நின்றாள்; நானும் ஒரு பத்தினியேயாகில் அரசனை மட்டுமின்றி மதுரையையும் அழிப்பேன் என்று

வஞ்சினம் கூறி மதுரையை அழிக்குமாறு அக்கினித் தெய்வத்தை வேண்டினாள். மதுரை தீப்பற்றி கொண்டது.

கண்ணகி துயரம் நிறைந்தவளாய்த் தெரு வழியே நடந்து சென்றாள். அப்போது அவ்வழியே வந்த மதுராபரித் தெய்வம் அவளிடம் கோவலன் பொய்க்குற்றம் சாட்டப்பெற்று தொலையுண்டது முன்வினை என்பதை முற்பிறப்பு வரலாற்றை கண்ணகிக்கு விளக்கமாகக் கூறி கண்ணகியாகிய நீயும் பதினான்கு நாட்கள் துயருற்று வருந்தி பின்பு கோவலனைத் தேவன் வடிவில் காணக்கூடும் என்று கூறி மறைந்தது.

அது கேட்ட கண்ணகி, வைகைக் கரை வழியே சென்று பதினான்கு நாட்கள் கழிந்தபின் திருச்செங்குன்றை அடைந்து வேங்கைமரம் ஒன்றின் கீழ் நின்றாள். அப்பொழுது தேவர்கள் கோவலனோடு வானவூர்த்தியில் வந்து கண்ணகி மீது மலர்களைத் தூவி வாழ்த்தி அவளை அழைத்துச் சென்றனர்.

## 13. தெய்வ கண்ணகி

கண்ணகி சோழநாட்டின் புகார் நகரத்தில் பிறந்து பாண்டிய நாட்டின் மதுரையில் கணவனை இழந்து வழக்குரைத்து வென்றாள். சேரநாட்டில் தேவர்களால் அழைத்துச் செல்லப்பட்டாள்.

திருச்செங்குன்றில் வாழ்ந்த குறவர்கள். கண்ணகி வேங்கை நிழலில் நின்றதையும், தேவர்கள் வானவூர்த்தியில் கோவலனுடன் வந்து அவளை அழைத்துச் சென்றதையும் நேரே கண்டு வியந்து, இவள் தெய்வத் தன்மை உடையவள் என்று தொழுதனர்; குறமகளிர் குரவையாடினர்.

அந்நாட்களில் சேரன் செங்குட்டுவன் அரசி வேண்மாளுடன் மலைவளம் காணச் சென்று பேராற்றங் கரையில் தங்கியிருந்த பொழுது செங்குன்றைச் சேர்ந்த குறவர்கள் அரசனைக் கண்டு வழிபட்டு, தாம் கண்ட செய்தியை வியப்பாக எடுத்து மொழிந்தனர்.

அப்பொழுது மதுரையைச் சேர்ந்த தமிழ்ப் புலவர் சாத்தனார் அரசனுடன் இருந்தார். அவர்க்குக் கண்ணகியின் வரலாறு தெரிந்திருந்தது. அவர் அரசனுக்குக் கண்ணகி குறித்து விரிவாகச் சொன்னார். அது கேட்ட அரசன் தன் மனைவியை நோக்கி, "கணவன் இறந்தவுடன் இறந்த பாண்டிமாதேவி கற்பிற்சிறந்தவளா? தன் கணவனுக்காகச் சினங்கொண்டு வழக்குரைத்த

கண்ணகி கற்பிற் சிறந்தவளா ? என்று வினவினான். அதற்கு அரசி பாண்டிமாதேவி வானுலகில் சிறப்படைவாள். ஆனால் கண்ணகி நம்நாட்டிற்கு வந்தாள். அவளை வழிபடுதல் நம் கடன் என்றான்.

அது கேட்ட அரசன் கண்ணகிக்குச் சிலையெடுத்து வழிபடக் கருதியவனாய், இமயம் சென்று சிலைக்கல் கொண்டுவரப் புறப்பட்டான். கங்கைக்கு வடக்கே அரசாண்ட கனக விசயர் ஏற்கனவே தமிழ் மன்னரின் வீரத்தை இகழ்ந்தவர்கள். சேரன் அவர்களை வென்றான். பின்பு அவன் தன் படைவீரர்களை ஏவி இமயத்தினின்றும் கல்லெடுத்து. கங்கையில் நீராட்டிவரச் செய்தான்.

செங்குட்டுவன், போரில் தோற்ற அரசர் விலரைச் சிறை செய்து தன்னுடன் கொண்டு வந்ததை அறிந்த சோழ, பாண்டியர் தோற்று ஓடிய அரசரைச் சிறைசெய்வதுதான் வீரமோ ? என்று கேலி செய்தனர். இதனைக் கேள்வியுற்றதும் சேரன் சினம் கொண்டான். அரசவையிலிருந்து மாடலன் அரசரை அமைதிப்படுத்தி அறஞ்செயல்களில் ஈடுபடுமாறு அறிவுரை கூறினான். அரசனும் அதற்கிசைந்தான். இமயக்கல்லால் கண்ணகிக்குச் சிலைசெய்து பொன்னணிகள் பூட்டி வழிபாடு செய்தனர்.

அப்பொழுது மின்னல்கொடி போன்ற ஒரு பெண்ணின் உருவம் விண்ணில் தோன்றிற்று. சேரன் அதனை கண்டு மற்றவர்க்குக் காட்டினான். கண்ணகியின் தெய்வ வடிவம்தான் அது.

தெய்வக் கண்ணகி 'பாண்டியன் குற்றம் அற்றவன்; அவன்தேவர் உலகில் நல்விருந்து ஆனான். நான் அவனுக்கு மகள் போல்வேன், என்று பாண்டியனைப் பாராட்டினாள். அங்கு கூடியிருந்த வேற்று நாட்டு அரசர்கள் அவளை வணங்கி, 'கற்புத் தெய்வமே எங்கள் நாட்டிலும் நீ எழுந்து அருளுதல் வேண்டும்' என்று வேண்டிக் கொண்டனர். 'வரம் தந்தேன்' என்றே வான்குரல் இளங்கோ.

இவ்வாறு கண்ணகி கற்புத்தெய்வமாக எந்நாடும் வழிபடும் தெய்வமாகச் சிலப்பதிகாரக் கதையை முடிக்கின்றார் எழுந்தது.

பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தோர் பேணுமின்

## குறிப்பு

மேலே கொடுக்கப்பட்டுள்ளவை துணைப்பாட நூலிற்கான குறிப்புகள். இவைதவிர கண்ணகியின் குணநலன், (சிலப்பதிகார காலச் சமூகநிலை, சிலம்பிகள்) இலக்கியச்சுவை என்ற மூன்று தலைப்புகளில் செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன. எனவே, மாணவர் `கண்ணகி' என்னும் துணைப்பாட நூலினைப் பெற்றும் விரிவாகப் படித்துத் தேர்வுக்கு ஆயத்தம் செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## கண்ணகி

ஆசிரியர் : காமாட்சி சீனிவாசன்
பேகன் பதிப்பகம்
சுப்பிரமணியபுரம், காரைக்குடி – 2
விலை ரூ 4–50

பயிற்சி வினாக்கள்

1) கோவலன் – கண்ணகி திருமண நிகழ்ச்சி குறித்து எழுதுக.

2) மாதவியின் கலைத் திறன் குறித்து எழுதுக.

3) இந்திர விழாவும், கோவலன் மாதவி இவர்களிடையே பிரிவு உண்டாக்கிய நிகழ்ச்சியும் குறித்து ஒரு கட்டுரை வரைக.

4) மாதவி கோவலனுக்கு எழுதிய இரு கடிதங்களுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?

5) தேவந்தி, கவுந்தி, தெய்வச் சாலினி, மாதரி, மாடல முறையோன் இவர்கள் யாவர்? இவர்களைப் பற்றி நீவிர் அறிவன யாவை?

6) மாதரி மனையில் நிகழ்ந்தன யாவை?

7) மதுரை மக்கள் நோக்கிக் கண்ணகி கூறியன யாவை? மதுரை மக்களின் செயல் யாது ?

8) கண்ணகி வழக்குரைத்து வென்றமையை விவரிக்க.

9) கண்ணகியின் வரலாற்றைச் சாத்தனார் வாயிலாகக் கேட்ட சேரன் அரசனின் பொறுப்பைப் பற்றி யாது கூறினான்.

10) சேரன் கண்ணகிக்குச் சிலை வடித்து வழிபாடு நிகழ்த்தியமை குறித்து நீவிர் அறிவன யாவை ?

11) கண்ணகியின் பண்பு நலன்களை எழுதுக.

12) சிலப்பதிகாரக் காலத்தில் தமிழகத்தின் சமூக நிலை எவ்வாறு இருந்தது.

13) சிலப்பதிகாரம் வாயிலாக நீவிர் துய்த்த இலக்கியச் சுவைகள் யாவை ?

14) 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்பது எவ்வாறு அந்நூலுக்குப் பொருந்தும் ?

# மாதிரி வினாத்தாள்

# OPEN UNIVESITY SYSTEM

# PRE FOUNDATION, PART I - TAMIL

Time : Three hours　　　　　　　　Maximum marks : 100

1. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்தினுக்கு, ஒவ்வொன்றுக்கும் ஆறு வரிகளில் விடை தருக.

1) இராமலிங்க அடிகளார் இறைவனை எவ்வாறு போற்றுகிறார் ?

2) ஒப்புரவாளனின் செல்வம் பயன்படும் வழியை வள்ளுவர் எவ்வாறு எடுத்துரைக்கின்றார் ?

3) மெய்ப்பொருள் கண்டு வாழ்வார் மூவர் எவர் எனத் திரிகடுகம் கூறுகின்றது.

4) ஆபத்திரனின் இரக்க சிந்தனையை எவ்வாறு அறியலாம் ?

5) தேம்பாவணி – குறிப்பு வரைக

6) நடராசன் தனிமொழியில் பரிதியின் உதயம் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது.

7) நிலவின் எழில் கண்டு வாணிதாசனார் யாது கூறினார் ?

II. கீழ்வரும் வினாக்களுள் ஒன்று பற்றிப் பதினைந்து வரிகளில் மிகாத விடை தருக.

1) 'யாரையோ நீ மடக்கொடியோய்' என்று வினவிய பாண்டியனுக்கு கண்ணகி கூறிய மறுமொழி யாது ?

2) மெய்ப்பொருள் நாயனாரின் ஆட்சித்திறன், சிவபத்தி மாண்பு குறித்து எழுதுக.

3) அரக்கியர் கூட்டத்திடையே இருந்த சிறையின் நிலையினைக் கம்பர் எவ்வாறு காட்டுகிறார் ?

III. ஏதேனும் இரண்டினுக்கு இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

1) 'கெடுவல் யான் என்பதறிக' $2 \times 3 = 6$

2) 'குறையே இழைத்து வினையே விளைத்த குடிவைத்திருந்தும் அறியேம்'

3) 'மன்னர் பெருமை மடையர் அறிவரோ'

4) 'சிறப்பின் பாலால் தாயு மனந்திரியும்'

IV. அடிபிறழா தெழுதுக :

1) 'அரிது' திரு என முடியும் குறட்பாக்கள்

2) உதிக்கின்ற என்று தொடங்கும் அபிராமி அந்தாதிப் பாடல்

V. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்தினுக்கு ஒவ்வொன்றுக்கும் ஆறுக்கும் ஆறுவரிகளில் விடை தருக. $3 \times 5 = 15$

1) பெற்றோர்களை எவ்வாறு போன வேண்டும் ?

2) விளையாட்டின் நன்மைகள் யாவை ?

3) நாளிதழின் பயன்கள் யாவை ?

4) நேதாஜி போசின் நாட்டுப்பற்றினை விளக்குக.

5) காகிதம் எவ்வாறு செய்யப்படுகின்றது ?

6) கல்விச் செல்வத்தின் பெருமையை விளக்குக.

7) பழந்தமிழர் பண்பாட்டினை ஆசிரியர் வழி நின்று விளக்குக.

VI. கீழ்வரும் வினாக்களுள் ஒன்று பற்றிப் பதினைந்து வரிகளில் மிகாது விடை எழுதுக.

1) காந்தியடிகள் தம் தந்தையாரைத் தெய்வமெனப் போற்றினார் என்பதற்கு சான்று தருக.

2) வங்கியின் பணிகள் யாவை?

3) திரைப்படமும் வானொலியும் பற்றி எழுதுக.

**VII.1) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். இதனைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக.**

(அல்லது)

அரசர் நாட்டை ஆண்டார். இதனை எதிர்மறை வாக்கியமாக மாற்றுக.

2) வாழையடி வாழையாக கண்ணும் கருத்துமாய், குன்றின் மேலிட்ட விளக்குப் போல, மலரும் மணமும் போல இவற்றுள் இரண்டனைப் பொருத்தமுறத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

3) கீழ்வரும் சொற்றொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

(அ) சனிக்கெளமை தோறும் எண்ணனை தேச்சுக் குளிக்கனும்.

(ஆ) மாந்தோட்டத்தில் குயில் கத்துகிறது.

4) பிரித்தெழுதுக : தமிழினிமை, செழுஞ்சுடர், எந்நன்றி, வேற்றிசை

5) தடித்த எழுத்துச் சொற்கள் நான்கினுக்கு இன்றியமையா இலக்கணச் குறிப்புத் தருக

கடிநகர், வேல்விழி, வருசேனை, சலசல, வாழ்க பந்தர்

**VIII. 1) இரட்டைக் கிளவிக்கும் அடுக்குத் தொடருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**

2) வல்லினம் மிகும் இடங்கள் நான்கினைக் சுட்டுக.

3) அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை? விளக்குக.

4) குறிஞ்சித் திணைக்குரிய முதற்பொருளும் கருப்பொருளும் யாவை?

5) இல்பொருள் உவமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்கு

(அல்லது)

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு

–இத் திருக்குறளில் பயின்றுவரும் அணியினைச் சுட்டி விளக்குக.

IX. கீழ்வருவனவற்றுள் ஒன்று பற்றி ஒரு பக்க அளவில் ஒரு கட்டுரை வரைக (துணைப்பாடம்)

1) மாதவியின் இரு கடிதங்கள்

2) கண்ணகியின் பண்பு நலன்கள்

3) சிலப்பதிகாரத்தின் இலக்கியச் சுவை

X. கீழ்வருவனவற்றுள் ஒன்று பற்றி ஒருபக்க அளவில் எழுதுக.

1) நிலக்கரி தன் வரலாறு கூறுதல்

2) வானொலியும் அதன் பயன்களும்

3) நீவிர் கலந்து கொண்ட இன்பச்சுற்றுலா குறித்து நும் நண்பர்க்கு ஒரு கடிதம்.

4) நும்பள்ளி இலக்கிய மன்றத் தொடக்க விழாவிற்குத் தலைமை ஏற்கும் தமிழறிஞர் ஒருவர்க்கு ஒரு வரவேற்புமடல்.

XI. இனிய தமிழில் மொழி பெயர்க்க

TamilNadu is not a hilly region like Sri Lanka. But there are few hill stations. People go to these places in summer to escape from the hot sun. These places are much cooler than the plains. The lovellest of the hill stations is Uthagamandalam. It is rightly called. The queen of India's hill stations.

# PRE-FOUNDATION EXAMINATION

## OCTOBER 2003

## Part I - TAMIL

Time : Three hours Maximum: 100 marks

**1. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஐந்தனுக்கு ஆறு வரிகளில் விடை தருக.** (5 x 3 = 15)

அ) திரு. வி.க. தமிழ்த்தாயின் பெருமைகளை எவ்வாறு விதந்து ஓதுகிறார்?

ஆ) 'கற்றலில் கேட்டலே நன்று' என்ற பழமொழியை முன்றுறை அரையனார் எங்ஙனம் விளக்குகிறார்

இ) சாலி பெற்ற குழந்தைக்குப் பசு பாலூட்டியது ஏன்?

ஈ) தாவீது போருக்குப் புறப்பட்ட காட்சியை எழுதுக.

உ) சடகோபர் தம் மனத்திற்குக் கூறிய அறிவுரைகள் யாவை?

ஊ) மாணிக்கவாசகர் எது குறித்து வருந்துகிறார்?

எ) காட்டின் அழகைக் கவிஞர் வாணிதாசன் எவ்வாறு வருணிக்கிறார்?

**2. ஏதேனும் ஒன்று குறித்துப் பதினைந்து வரிகளில் விவரி.** (1 x 6 = 6)

அ) கண்ணகி 'உரைசால் பத்தினி' என்பதை எவ்வாறு உறுதிப்படுத்தினாள்?

ஆ) சீதை-திரிசடை இவர்களுக்கிடையே நிகழ்ந்த உரையாடல் குறித்து எழுதுக.

இ) மாறுவேடத்தில் நளன் இருந்தபொழுது சமையல் அறையில் நடந்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

ஈ) இறந்த மகனைக் கண்டு சந்திரமதி எவ்வாறு புலம்பினாள்?

**3. ஏதேனும் இரண்டனுக்கு இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**(2 x 3 =6)**

அ) தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி

ஆ) பொன்னிறத் தும்பி வந்துரதிப் போயதால்.

இ) தோற்ற பாங்கினர் தொழும்பரென் றாகுவர்.

ஈ) உயிர்த்திலன்; மறுகி வீழ்ந்தாள்

**4. அடி பிறழாமல் எழுதுக.** **(3 x 2 = 6)**

அ) 'தன்னை வியந்து' - என்று தொடங்கும் திரிகடுகப் பாடல்

ஆ) 'குலம் தரும்' - என்று தொடங்கும் திருமங்கை மன்னனின் பாசுரம்.

இ) 'களியானை மன்' என்று முடியும் நளவெண்பாப் பாடல்

**5. ஏதேனும் ஐந்தனுக்கு ஆறு வரிகளுக்குள் விடை தருக.**

**(5x3=15)**

அ) நச்செள்ளையாரைப் பற்றி சிறு குறிப்பு வரைக.

ஆ) மனிதர் சமுதாயமாக அமையத் தேவையானவை யாவை?

இ) சான்றோரின் பண்பு நலன்கள் யாவை?

ஈ) காகிதத்தின் பயன்கள் யாவை?

உ) சுபாஷ் துவக்கிய இளைஞர் கட்சியின் நோக்கங்கள் யாவை?

ஊ) ஈதர் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

**6. ஏதேனும் ஒன்று குறித்துப் பதினைந்து வரிகள் எழுதுக.**

**(1x6=6)**

அ) கல்வி கற்கும் முறை குறித்து எழுதுக.

ஆ) 'தேசிய விளையாட்டு வாரம்' கொண்டாடப்படுவதன் தேவை யாது?

இ) கடன் வழங்குவதால் சமுதாயத்திற்கு வங்கி ஆற்றி வரும் உதவி குறித்து விவரி.

7. (அ) முதல் எழுத்துக்கள் யாவை? (2)

(ஆ) உரிச்சொல்லின் இலக்கணம் யாது? (2)

(இ) ஆசிரியப்பா - தெளிவுபடுத்துக. (2)

(ஈ) அகப்பொருள் - விளக்குக. (3)

(உ) இலக்கணக் குறிப்புத் தருக. (4)

(i) சலசல

(ii) வாழ்க

(iii) பந்தர்

(iv) வேல்விழி

(ஊ) எடுத்துக்காட்டு உவமையணி (அல்லது) வேற்றுப்பொருள் வைப்பணி குறித்து விளக்குக.

8. (அ) பின்வருவனவற்றை செயப்பாட்டு வினைகளாக மாற்றுக.

(i) கண்ணன் கதவைத் தட்டினான்.

(ii) அமைச்சர் நாட்டை ஆண்டிவர்

(ஆ) வல்லினம் மிகுமிடங்கள் இரண்டனைச் சுட்டுக. (2)

(இ) பிழை நீக்கம் செய்து எழுதுக.

(i) வெட்டிச் சிலவு செய்யறான்.

(ii) தாவரத்தில் இருக்கிற கோடாலிய எடுத்தா.

(ஈ) வாக்கியத்தில் அமைத்து எழுதுக. (2)

(i) சாக்குப் போக்குச் சொல்லி

(ii) மனப்பால் குடித்து

9. ஏதேனும் ஒன்றனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.
(1 x 8 = 8)

(அ) மாதவி நடனம்

(ஆ) கவுந்தியடிகள்

(இ) கண்ணகியின் கண்ணீர்

10. ஏதேனும் ஒன்று குறித்து ஒரு பக்க அளவில் விடை தருக.
(1 x 8 = 8)

(அ) தொல்பொருள் ஆய்வு நிலையங்களின் சிறப்பு

(ஆ) கல்வியும் வேலை வாய்ப்பும்

(இ) ஆறு தன் வரலாறு கூறுதல்

11. இனிய தமிழில் மொழி பெயர்க்க (6)

Ponnan was a poor man. He lived in village. There was a forest nearby his village. Everyday he went to the forest and cut wood there. He sold the wood in the village. One day he was cutting down a tree. He stood near a river. His axe fell into the river. Ponnan sat on the bank and wept.